# ஈராறு இயற்றமிழ்க் கட்டுரைகள்

தொகுப்பாசிரியர்
சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர்
தி.ந. இராமச்சந்திரன்

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

பஎ 7182

# ஈராறு இயற்றமிழ்க் கட்டுரைகள்

# ஈராறு இயற்றமிழ்க் கட்டுரைகள்

சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர்
தி.ந. இராமச்சந்திரன்

பவள விழாச் சிறப்பு வெளியீடு

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 010

ISBN : 978-81-7090-388-8

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 345

திருவள்ளுவராண்டு 2040, ஆவணி - செப்டம்பர் - 2009

| | | |
|---|---|---|
| நூல் | : | ஈராறு இயற்றமிழ்க் கட்டுரைகள் |
| தொகுப்பு | : | முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற்பதிப்பு - செப்டம்பர் 2009 |
| பக்கம் | : | 202 + 10 = 212 |
| தாள் | : | டிஎன்பிஎல் மேப்லித்தோ 16 கிலோ |
| அளவு | : | டெம்மி 1/8 |
| நூற்கட்டு | : | சாதாக்கட்டு |
| படிகள் | : | 1200 |
| விலை | : | உரூ. 80.00 |
| ஒளியச்சு | : | முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், தெற்கு வீதி, தஞ்சாவூர். |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர். |

# பதிப்புரை

இத் தொகுப்பு நூலில் பன்னிரண்டு கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. முதல் இரண்டும் தனிச்செய்யுட் சிந்தாமணி பற்றியவை. தனிச் செய்யுட் சிந்தாமணி (முதற் பாகம்) என்ற நூல் 1908இல் வெளிவந்தது. இந்நூல் வெளிவரக் காரணமாயிருந்தவர் மதுரை மாவட்டம் முறையூரைச் சார்ந்த புரவலர் பழ. சி. சண்முகஞ் செட்டியாரவர்கள். நூலைத் தொகுத்தவர் மதுரை விவேகபாநு பத்திராதிபர் மு.ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள். இந்நூலுக்கு முகவுரை வழங்கியவர் செந்தமிழ்ப் பத்திராசிரியரான மு. இராகவையங்கார் அவர்கள். இம்முகவுரை இத்தொகுப்பில் இடம் பெறுகிறது. அரிய செய்திகளைத் தாங்கிவரும் இம்முக வுரையை ஊன்றிப் படித்தல் வேண்டும். நம் நாட்டில் பல்வேறு இடங்களில் சிதறிக் கிடந்த தனிப்பாசுரங்களை இயன்றவரையில் ஒன்று திரட்டி ஒரு தொகுப்பு நூலை வெளியிட நமக்கு வழிகாட்டி யவர் இராமநாதபுரம் சமஸ்தானம் ஸ்ரீமான் பொன்னுசாமித் தேவர் அவர்களாவார். அவர் வெளியிட்ட நூல் பல பதிப்புகள் பெற்றது. அந்நூலில் ஏற்பட்டுவிட்ட குறைகளைத் தவிர்த்துச் சீரிய முறையில் ஒரு தொகுப்பு நூலை வெளியிட விழைந்தவர் முறையூர் பழ.சி. சண்முகஞ் செட்டியார் அவர்கள். அவரது விழைவை நிறை வேற்றித் தந்தவர் பெரும்புலவரான மு.ரா. கந்தசாமிக் கவிராயர் ஆவார். இத்தொகுப்பில் அடங்கிய பாடல்களின் எண்ணிக்கை 3815 ஆகும். பாடிய புலவர்கள் தொகை 180 ஆகும். தொகுப்புப் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட போதும், இத்தொகுப்பின் இரண்டாம் பாகம் வெளிவந்ததாகத் தெரியவில்லை.

கவிராயர் வரைந்த பதிப்புரையே இத்தொகுப்பில் இரண்டாம் கட்டுரையாகும். பதிப்புரை மூலம் நாம் அறிந்து கொள்ளும் செய்தி இதுவே. இச்சிந்தாமணியிலுள்ள பாடல்களுள் 3036 பாடல்கள் முற்காலப் புலவர்களாலும், 779 பாடல்கள் ஒரு நூறாண்டுக்கு முன்பிருந்த வித்துவான்களாலும் இயற்றப்பட்டவை. பிற்காலப் புலவர் பாடல்கள் டாக்டர் உவே. சாமிநாதய்யர் இயற்றிய பாடல்களுடன் தொடங்குகின்றன. நூலுள் கவிராயர் சரித்திர பேதமுதலிய விசேடக் குறிப்புகளையும் பாட பேதங்களையும் விளக்கிக் காட்டியிருப்பது போற்றற்குரியது.

ஸ்ரீ வத்ஸசக்ரவர்த்தி ராஜகோபாலார்யன் என்னும் அறிஞர் 1926 ஆம் ஆண்டு அகநானூற்றின் முதல் பகுதியாகிய களிற்றியானை நிரையைப் பழைய உரையுடன் வெளியிட்டார். அதன் பின்னர் ஏழு ஆண்டுகள் உழைத்து முழு நூலையும் பழைய உரையுடன் 1933இல் வெளியிட்டார். இந்நூலைப் பரிசோதித்து உதவியவர் ரா. இராகவையங்கார் அவர்கள் ஆவார். இத்தொகுப்பில் ராஜகோபாலார்யன் அவர்களின் இரண்டாம் பதிப்பின் முகவுரை இடம் பெறுகிறது. மேலும் சேது சமஸ்தான வித்வான் ரா. இராகவையங்கார் வரைந்த முகவுரையும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இம்முகவுரை அரிதின் முயன்று வரையப்பட்ட ஓர் ஆய்வுரையாகும். அகநானூற்றைப் பயில விரும்புவோர் இம் முகவுரையில் ஆழங்கால்பட்டு அதில் பதிவாகியிருக்கும் அற்புதச் செய்திகளை விளங்கிக் கொள்ளல் வேண்டும் என்பதற்காகவே இவ்வரிய முகவுரை இத்தொகுப்பில் இடம் பெறுகிறது.

நெடுந்தொகையை மூலத்தோடும், பழைய உரையோடும் அச்சிற் பதிப்பிக்க, பதிப்பாசிரியர் ராஜகோபாலார்யன் பட்ட பாடு ஒரு பெரும் பாரதமாகும். இப்பெருந்தகையைப் பதிப்பாசிரியர்களின் வழிகாட்டி என்று துணிந்து கூறலாம். தாம் மேற்கொண்ட இன்னல்கள் பற்றி, 'ஒரு விஞ்ஞாபனம்' என்ற தலைப்பில் இப்பதிப்பாசிரியர் வரைந்திருக்கும் கட்டுரையும் இத்தொகுப்பில் இடம் பெறுகிறது.

1939ஆம் ஆண்டு நவயுகப் பிரசுராலயம் 'கம்பன் கவிதை' என்ற தலைப்பில் ஒரு தொகுப்பு நூலை வெளியிட்டது. இந்நூல்

பிரமாதி, பங்குனி 8,9,10,11ஆம் நாள்களில் காரைக்குடியில் நடைபெற்ற கம்பன் திருநாளில் வெளியிடப் பெற்றது. இத் தொகுப்பில் முதலிடம் பெறும் கட்டுரை தேசபக்தராகிய வ.வெ.சு. ஐயரால் வரையப்பட்டதாகும். இது ‘கம்ப ராமாயண ரசனை’ என்று பெயர் பெற்று இலங்குகிறது.

ஐயரவர்கள் பெல்லாரி சிறைச் சாலையில் 'KAMBA RAMAYANA A STUDY' என்ற தலைப்பில் அரும்பாடுபட்டு ஆங்கிலத்தில் ஒருநூலை இயற்றினார். இது பின்னாளில் தில்லித் தமிழ்ச் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது. இதன் மீள்பதிப்புகள் பாரதீய வித்யாபவனால் வெளியிடப்பட்டன. ஐயரவர்கள் பன்மொழிப் புலவர். தமிழ் இலக்கியங்களில் ஊறித் திளைத்தவர். தமிழில் பல கட்டுரைகளும், சிறு கதைகளும் மொழிபெயர்ப்பு நூல்களும் இயற்றியவர். திருக்குறளை விவிலிய நடையில் மொழி பெயர்த்தவர். ஊடல் என்ற சொல்லுக்கு இணையான சொல் ஆங்கிலத்தில் இல்லை என்றும், பிரெஞ்சு மொழியில் உள்ள 'BOUDERIE' என்ற சொல்லே ஊடலுக்கு நேரான பொருளைத் தரும் பிரெஞ்சுச் சொல் என்றும் அறிவித்தவர். மேலும், மடலேறுதல் என்பதை நினைவூட்டும் வகையில் ஷேக்ஸ்பியர் வரைந் திருந்த ஆங்கில அடிகளை உலகிற்கு அறிவித்தவர். ஐயருடைய கம்ப ராமாயண அறிவு ஈடு இணையற்றது. இதிகாசக் கட்டமைப்பைக் காட்டக்கூடிய ஆங்கிலச் சொல் 'ARCHITECTONICS' என்று எம்போலியருக்கு அறிவித்தவர். கம்பராமாயணம் முழுவதையும் உள்வாங்கிச் செறிவோடு ஐயர் எழுதிய இக்கட்டுரை இத்தொகுப்புக்கு ஒரு தனிச் சிறப்பு வழங்குகிறது.

கம்பன் கவிதை என்ற தொகுப்பு நூலிலிருந்து மேலும் ஒரு கட்டுரை இத்தொகுப்பில் இடம் பெறுகிறது. இக் கட்டுரையின் ஆசிரியர் வைத்தமாநிதி முடும்பை கோபாலகிருஷ்ணமாசாரியர் ஆவார். இவர் மிகச் சிறந்த உரையாசிரியர் ஆவார். 14 ஆண்டுகள் மிகவும் முயன்று கம்பராமாயணப் பாடல்களுக்கு அற்புதமான உரை வரைந்தவர். அயோத்தியா காண்டத்தில் இடம் பெற்றுள்ள பாடல் ஒன்றில் கருப்பேந்திரம் என்ற சொல் இடம் பெறுகின்றது. இச்சொல்லுக்குச் சாதாரணமாகக் கரும்பாலை என்று பலரும் கொண்ட பொருளையே உரையாசிரியரும் கூறியுள்ளார். ஆனால்,

அது பிழை என்று பின்னாளில் உணர்ந்தார். ஆகவே அச்சொல்லுக் கான சரியான பொருளை விளக்கி, 'கம்ப ராமாயணத்து ஒரு செய்யுட்குக் கூறப்படும் சிறப்புப் பொருள்' என்ற கட்டுரையை வரைந்தார். என்றாலும், இன்று வரையிலும் வருகின்ற கம்ப ராமாயண உரைக் குறிப்புகளில் தவறான பொருளே தொடர்ந்து இடம் பெறுகிறது.

1949இல் செ.சதாசிவம் அவர்கள் எழுதிய 'சேரநாடும் செந்தமிழும்' என்ற நூல் வெளிவந்தது. இந்நூலுக்கு முகவுரை வழங்கியவர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள் ஆவார். இந்நூலில் பல அற்புதச் செய்திகள் சான்றாதாரங்களோடு தரப்பட்டுள்ளன. மலையாளம் தனி மொழியானது 13 ஆவது நூற்றாண்டிற்குப் பின்னரே என்றும், 14,15ஆம் நூற்றாண்டுகளில் மலையாளத்தில் சமஸ்கிருத உச்சரிப்பு ஏறவில்லை என்றும், மலையாளம் வடிவு பெற்றது 16 ஆம் நூற்றாண்டில்தான் என்றும், வடிவமைத்தவர் எழுத்தச்சன் என்றும் இந்நூல் மூலம் நாம் அறிகிறோம். இந்நூலில் இடம்பெற்ற 'பழைய சுவடிகள்' என்ற பகுதியே இத் தொகுப்பில் இடம் பெறுகிறது.

1958இல் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் திங்கள் வெளியீடான 'தமிழ்ப்பொழில்' என்ற இதழில் பேரறிஞர் பள்ளியகரம் நீ. கந்தசாமிப் பிள்ளை அவர்கள் வரைந்த 'கால்டுவெலும் அவர் வாழ்ந்த காலமும்' என்ற கட்டுரை வெளிவந்தது. மிகச்சிறந்த ஆய்வுக் கட்டுரையாக இஃது அந்நாளில் பல அறிஞர்களாலும் போற்றப் பெற்றது. பிள்ளையவர்களின் நூல் நிலையம் ஆய்வாளர் களுக்குப் புகலிடமாக அமைந்திருந்ததைப் பலரும் அறிவர். கால்டுவெல் அவர்கள் அயர்லாந்தில் பிறந்து இங்கிலாந்தில் கல்வி பயின்று தமிழ்நாட்டில் பணி செய்து இடையன்குடியில் வாழ்ந்து கொடைக்கானலில் மறைந்தார். அவர் உடல் இடையன்குடி யிலேயே நல்லடக்கம் பெற்றது. இக் கட்டுரையில் தமிழ் வல்ல ஆங்கிலேயர், ஜெர்மானியர் போன்றோர் பற்றிய பற்பல அற்புதச் செய்திகள் ஆதாரத்தோடு தரப்பட்டுள்ளன.

சாமுவேல் வேதநாயகம் தாமஸ் என்பார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ., பட்டம் பெற்ற முதல் பட்டதாரி ஆவார். இப்பெரியவர் 'துறக்க நீக்கம்' எனப் பெயரிய ஜான்

மில்டன் அவர்களின் 'PARADISE LOST' என்ற நூலின் முதல் இரண்டு காண்டங்களைத் தமிழில் செய்யுள் வடிவில் மொழி பெயர்த்தார். இவர் தம் நூலுக்கு அளித்த பெயர் 'பூங்காவனப் பிரளயம்' என்பதாகும். இந்நூல் வெளிவந்த ஆண்டு 1887 ஆகும். இவர் பற்பல ஆய்வுகளை நிகழ்த்தியவர். விவிலியத்தில் கூறப்பட்டிருக்கும் ஓஃபிர் (OPHIR) என்ற ஊர் உவரி என்று உணர்ந்தார். உவரியின் மூன்று கல் தொலைவிலே இடையன் குடியில் குடியிருந்து திருநெல்வேலிச் சீமையின் தொல்பொருள் களை ஆராய்ந்து அதன் பழஞ்சரிதம் எழுதிவரும் கால்டுவெல் அவர்களே தாம் கூறியதுபற்றி உறுதியான முடிவு கூற வல்லவர் என்று கூறினார். கால்டுவெல் அவர்களும் நீண்ட ஆய்வின் பிறகு இவருடைய முடிவை உறுதி செய்திருக்கிறார். ஆய்வாளர் ஒவ்வொருவரும் பிள்ளையவர்களின் கால்டுவெல் பற்றிய இக்கட்டுரையை ஓதிப் பயன் கொள்ள வேண்டும்.

'உடையார்குடி கல்வெட்டு ஒரு மீள்பார்வை' என்ற கட்டுரை முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன் எழுதியது. இக்கட்டுரை இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இக் கல்வெட்டு பற்றி முதலில் செய்தி வெளியிட்டவர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி ஆவார். சாஸ்திரியாரின் தவறான முடிவுகளால் மதுராந்தக சோழனுக்கும், ராஜராஜ சோழனுக்கும் தவறான அவப்பெயர் விளைந்து விட்டது. சோழமன்னர்களுக்கு ஏற்பட்டு விட்ட களங்கம் முனைவர் குடவாயில் பாலசுப்பிரமணியன் மேற்கொண்ட கள ஆய்வினால், நீக்கப்பட்டிருக்கிறது. சோழர் வரலாற்றில் இக்கட்டுரை மிக முக்கியமான இடம் வகிக்கின்றது.

சேக்கிழார் அடிப்பொடி தி.ந. இராமச்சந்திரன் அவர்கள் சைவசித்தாந்தம் பயிலத் தொடங்கிய ஓராண்டிற்குள்ளாகவே சைவ சித்தாந்த மகாசமாஜம் அவருக்கு அழைப்பு விடுத்து அதனுடைய 70ஆம் ஆண்டு நிறைவு விழாவில் சொற்பொழி வாற்றக் கேட்டுக் கொண்டது. அதை ஏற்றுச் சிவகங்கையில் நடைபெற்ற அவ்விழாவில் 24.04.1976 அன்று 'ஷேக்ஸ்பியரும் சைவ சித்தாந்தமும்' என்ற தலைப்பில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவு கட்டுரை வடிவில் இத்தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறது.

பாரத நாட்டில் பல்வகை அத்வைத தத்துவங்கள் நிலவி வருகின்றன. அவற்றுள் மிகச் சிறந்த அத்வைத தத்துவம் சைவ சித்தாந்தத்தில் மட்டுமே காணப்படுகின்றது. தாயுமானவரும்,

''ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோடு அத்துவித மாகுநாள் எந்நாளோ?''

என்று அருளியுள்ளார். ஷேக்ஸ்பியர் வரைந்த பல பிரயோகங்கள் சைவ சித்தாந்த அத்வைதத்தை விளக்கப் பெரிதும் உதவுகின்றன என்பதை இக்கட்டுரை தெளிவாகக் காட்டுகிறது. ஷேக்ஸ்பியர் பனுவல் தொகுப்பில் இடம் பெற்றுள்ள கடைசிப் பாடலான "THE PHOENIX AND THE TURTLE" என்ற பாடல் தத்துவப் பெட்டகமாக விளங்குவதையும் இக்கட்டுரையில் சேக்கிழார் அடிப்பொடி நன்கு விளக்கியுள்ளார்.

பேரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டு விழாவை அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகிறோம். பேரறிஞர் அண்ணாவுடன் நெருங்கிப் பழகியவரும், அண்ணா நடத்திய ஆங்கில இதழான ஹோம்லேண்டின் துணை ஆசிரியருமான திருச்சி வழக்கறிஞர் திரு. எம்.எஸ். வெங்கடாசலம் எழுதிய 'குறள் நெறியும் அண்ணாவும்' என்ற கட்டுரை நிறைவுக் கட்டுரையாக இத்தொகுப்பில் இடம் பெறுகிறது.

இத்தொகுப்புநூல் சேக்கிழார் அடிப்பொடி முதுமுனைவர் தி.ந. இராமச்சந்திரன் அவர்களின் பவள விழாவையொட்டித் தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடாக வெளியிடப்பட்டுள்ளது.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பலவித்துவான்களியற்றிய தனிச்செய்யுட் சிந்தாமணி முதற்பாகம் முகவுரை<br>- மு. இராகவையங்கார் | 1 |
| 2. | தனிச்செய்யுட் சிந்தாமணி பதிப்புரை<br>-மு.ரா. கந்தசாமிக் கவிராயர் | 9 |
| 3. | எட்டுத்தொகையுள் நெடுந்தொகை ஆகும் அகநானூறு மூலமும் பழைய உரையும் இரண்டாம் பதிப்பின் முகவுரை<br>-ராஜகோபாலார்யன் | 15 |
| 4. | அகநானூறு முகவுரை<br>- ரா. இராகவையங்கார் | 19 |
| 5. | அகநானூறு ஒரு விஞ்ஞாபனம்<br>-வே. இராஜகோபாலன் (ராஜகோபாலார்யன்) | 33 |
| 6. | கம்பராமாயண ரசனை<br>-ஸுப்ரஹ்மண்ய ஐயர் | 39 |
| 7. | கம்பராமாயணத்து ஒரு செய்யுட்குக் கூறப்படும் சிறப்புப் பொருள்<br>-வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் | 97 |
| ' | சேரநாடும் செந்தமிழும் பழைய சுவடிகள்<br>-செ. சதாசிவம் | 101 |
| 9. | கால்டுவெலும் அவர் வாழ்ந்த காலமும்<br>-நீ. கந்தசாமிப் பிள்ளை | 113 |
| 10. | உடையார்குடி கல்வெட்டு ஒரு மீள்பார்வை<br>-டாக்டர் குடவாயில் பாலசுப்பிரமணியன் | 165 |
| 11. | ஷேக்ஸ்பியரும் சைவ சித்தாந்தமும்<br>-முதுமுனைவர் டி.என். இராமச்சந்திரன் | 179 |
| 12. | குறள்நெறியும் அண்ணாவும்<br>-எம்.எஸ். வெங்கடாசலம் | 193 |

பலவித்துவான்களியற்றிய

# தனிச்செய்யுட் சிந்தாமணி

முதற்பாகம்

## முகவுரை

இந்நிலவுலகில் வழங்கும் தொள்ளாயிரத்துக்கு மேற்பட்ட பாஷைகளிலே, பழமைபெருமைகளாற் பாராட்டப்படுபவை மிகச் சிலவே என்பதும், அவற்றுள் தமிழ்ப் பாஷையும் அங்ஙனம் சிறந்ததொன்றென்பதும், அறிஞர்களால் ஆராய்ந்து தெளியப்பட்ட உண்மையாம். இப்பழைய பாஷைகளின் அழகும் வளமும் அவ்வக்காலத்துத் தோன்றிய புலவர் பெருமக்களாலேயே போற்றப்பட்டுச் செழித்தன வென்பது சொல்லவேண்டா. இம் மொழிகளில் அமைந்து விளங்கும் கவிஞர் சிகாமணிகளது காவியாதி நூல்கள், கற்றோருள்ளங்களைக் கவர்ந்து நிற்பதை நாம் நன்கறிவோம். இத்தகைய இலக்கியங்களாற்றான், அக் கவி வேந்தர்களது பெரும்புகழ் நிலைத்துள்ளதென்பதும் மறுக்கப் படாத உண்மையே. கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பநாடரது புகழ் அவரியற்றிய இராமாயணத்தாலன்றோ நிலைத்து நிற்பது; ஆயினும், அன்னோர் அருமை பெருமைகள் கற்றவகுப்பாருள் மாத்திரமன்றிக் கல்லாதவர் பலராலும் பெரிதும் பாராட்டப்படு கின்றன. இதனால், அறிஞர்கள் மட்டும் அறிந்து சுவைத்ததற்குரிய அவர் பெருநூல்கள் தவிர, எங்கும் அவர் புகழ் எளிதிற் செல்லுதற்கு ஏற்றதோர் ஏதுவுமிருத்தல் வேண்டுமன்றோ? கற்றோரும் மற்றோருமான நம்மவரில் கம்பர், புகழேந்தி,

காளமேகம் போன்ற கவிஞர் சிகாமணிகளது அருமை பெருமைகளை அறிந்து பாராட்டாதவர் யாவர்? இவ்வாறு, எல்லாவுள்ளங்களையும் ஒப்பக் கொள்ளைகொண்டு நிற்பன எவையென்றாராயுமிடத்து, அன்னோர் கிரந்தங்களோடு பற்பல சமயங்களிலும் இடங்களிலும் அவர்களாற் பாடப்பெற்று வழங்கும் எண்ணிறந்த தனிப்பாசுரங்களுமாமென்பது தெளிவாம். அந்நன்மக்களியற்றிய நூல்களின் பெருமையைப் பற்றி சாதாரண ஜனங்கள் அறிஞர் வாயினின்று கேட்டு அறிந்திருத்தல் கூடும். ஆனால், அவ்வாறு அறிந்ததினும்; அவர்கள் உள்ளபடி தாமே உணர்ந்து கொண்ட தனிப்பாடல்களால், பதின்மடங்கு அதிகமான இன்பத்தை மேன்மே லடையக்கூடுமென்றே சொல்லலாம். நல்லிசைப்புலவராகிய ஒளவையார், பன்னூற்றாண்டுகட்குமுன் விளங்கினவரேனும், அவர் இன்றும் நம் முள்ளத்திலும் இல்லத்திலும் வாழ்வது போல விளங்குவது, அவர் நூல்களைக் காட்டிலும் அவரதரிய பாடல்களாலும் பழமொழிகளாலுமே யன்றோ? ஒளவைப்பிராட்டி இயற்றிய பெருநூல்களொன்றும் இப்போது கிடையாதிருப்பவும், அவரை நாம் ஏனையரெல்லாரினும் அதிகமாகப் பாராட்டிவருவதும் அவற்றாலேயாம். இத்தகைய தனிப் பாசுரங்கள், அவை பாடிய நன்மக்களது வாழ்க்கையில் நிகழ்ந்த வைபவங்களோடு கலப்புற்றவை யாதலால், அவையெல்லாம் அன்னோர் சரித்திரவாராய்ச்சிக்கு இன்றியமையாத கருவிகளாகவும் உள்ளன. ஆனால் இத்தனிப்பாசுரங்களை மொத்தமாக ஒருவர் மூலமாகவேனும் ஒரு நூன் மூலமாகவேனும் கிரகித்தல் யார்க்கும் அருமையாகவுள்ளது. இவைகள் பெரும்பான்மையும் கர்ண பரம்பரை பற்றியே வந்தனவாதலின் பல்லோர்வாய்ப் பட்டு வெளிவருவனவாயின. இதனால் அக்கவிகளின் உண்மையுருச்சில சமயங்களில் மாறியும், வெவ்வேறானகதைக் கூறுகளை யுடையனவாயும் பிரசுரிக்கப்படுகின்றன. உதாரணமாக, ஒப்பிலாமணிப் புலவரென்பவர், குமணனைப் பற்றிப் பாடியதாக வழங்கும் ''ஆடெரிபரந்த கோடுய ரடுப்பில்'' என்னுஞ் செய்யுள் தனிப் பாடல்களிலே ஒன்றாக வழங்குதல் நம்மவரெல்லாம் அறிந்தது. இப் பாட்டின் உண்மையுரு எவ்வாறு சிதைந்து கிடக்கின்றதென்பதும் இது பாடிய புலவரது பெயர் மாறுபாடும் நாம் இப்போது வெளிவந்துள்ள புறநானூற்றால் நன்கு தெரிந்துகொள்ளலாம். மதுரைத் தமிழ்ச்சங்கம் முதலிய சிலவிடங்களில் கையெழுத்துப் பிரதியிலுள்ள ''தமிழ் நாவலர் சரிதை'' போன்ற திரட்டு

நூல்களைக் கொண்டு இக்காலத்து வழங்கும் ஔவைபாடல் முதலியவற்றை ஆராய்ந்தால், இவ்வாறே பாடங்களும் சரித்திர வழக்குக்களும் மாறுபட்டு நிற்றல் காணலாம். ஆயினும் திரிந்து பிறழ்ந்தாயினும் அப்பழைய பாடல்களிற் சில இன்றும் வழங்கி வருதலை நோக்கும்போது, கற்றவரன்றிக் கல்லாதவருள்ளத்தையும் கவரத்தக்க அழகும் அமைதியும் அவைகொண்டுள்ளன வென்பது புலப்படுகிறது. இம்மட்டோ! இப்பாடல்கள், சந்தர்ப்பத்திற்கேற்ற சரித்திரக் கூறுகளோடு கலந்து சொற்செறிவும் பொருட்பொலிவும் பெற்று விளங்குதலால், முன்னோர் பெருமையினும் பாஷையின் அழகிலும் படியாதவர்களையும் ஈடுபடும்படி செய்வது மட்டுமன்றி; அவர்கள் நெஞ்சில் பாஷாஞானச்சுடர் கொளுவுதற்குத் தூண்டுகோல் போலவும், நின்றுதவுகின்றன. ''நாராய் நாராய் செங்கானாராய்'' என்னும் சத்திமுற்றப் புலவரது பாடலழகாலும் கதையழகாலும் கவரப்படாதவர் நம்மில் யாவர்? இத்தகைய பழம்பாடல்களிலே, கிடைத்த சிலவற்றால் இவ்வளவின்பம் எல்லாரும் அடையக் கூடுமாயின், நம் நாட்டுக் கவிஞர் சிகாமணிகளது தனிப் பாடல்களெல்லாம் ஒருசேரக் கிடைக்கும் போது எத்தகைய பேரின்பம் விளையாது!

கம்பநாடர், கூத்தர், காளமேக முதலிய கவச்சக்கரவர்த்திகள் அவ்வப்போது பாடிய தனிப்பாக்கள் எத்துணையோ, அறிந்திலம். அவையெல்லாம் உரியகாலங்களிற் றிரட்டபட்டுப் பின்புள்ளார் பெற்றுமகிழும் வண்ணஞ் செய்வதில், நமக்கு முன்னிருந்த தமிழ்மக்கள் தவறிவிட்டார்கள். ஆனால், இத்திரட்டுக்களின் அத்யாவசியகத்தை, பிற்கால மக்கள் மறந்ததுபோற் பழங்காலத்துச் சான்றோர் சிறிதும் மறந்தவரல்லர். அவர்கள் அங்ஙன மறந்திருந்தால், தமிழ்ப்பாஷையின் பழமை பெருமைகளைப்பற்றி அறிஞர் முன்பு பேசுதற்கும் நமக்கு வாயில்லாதொழியும். அங்ஙனமொழியாவண்ணம், பண்டைத் தமிழ் மக்கள், முன்னோரது அரியபாடல்களை முறைப்படக் கோத்துவைத்தது தமிழணங்கு செய்த பாக்கியங்களில் ஒன்றாம். அன்றியும், தமிழ் மொழியிலுள்ள பழைய நூல்களுள்ளே, ''பழந்தனிப்பாடற்றிரட்டு'' என்று சொல்லத்தக்க தொகை நூல்களே மிகுதியாகக் காணப்படுதல் ஒரு சிறந்த விசேடமாகும். சங்க நாளில் தோன்றிய மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற இலக்கியங்களும், திருக்குறளாதிய பதினெண் கீழ்க்கணக்கு முதலிய நீதி நூல்களு

மொழிய, ஒழிந்த பழந்தமிழ் நூல்களெல்லாம் இத்தொகை நூல்களே. இதனை நோக்குமிடத்து முற்காலத்துச் சான்றோர்கட்கு, தங்காலத்துக்கு முன் விளங்கிய புலவர் பெருமக்களது பாடல் களிலிருந்த பேரவாவும் கௌரதாபுத்தியும் நன்கு விளங்குகின்றன. இவ்வாறு இச்சான்றோரால் தொகுக்கப்பட்டவை, இப்போது கிடைத்த அளவில், ஒன்பது என்று ஒருவாறு கணக்கிடலாம். அவை எட்டுத் தொகையும் பத்துப்பாட்டுமாம். எட்டுத்தொகை யாவன:

''நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூ
றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
கற்றறிந்தா ரேத்துங் கலியே அகம்புறமென்
றித்திறத்த எட்டுத் தொகை''

இவ்வொன்பது நூல்களில், நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகமென்பன அகத்திணை யொழுக் கங்களை விஷயமாகவும், பதிற்றுப்பத்து, பரிபாடல், புறம், பத்துப்பாட்டென்பன புறத்திணையொழுக்கங்களை விஷய மாகவும் கொண்டன. நற்றிணை இருநூறுக்குக் குறையாத புலவராலும், குறுந்தொகை இருநூற்றைவராலும், ஐங்குறுநூறு இருநூற்றைவராலும், பதிற்றுப்பத்துப் பதின்மராலும், அகமும் புறமும் தனித்தனி இருநூறு இருநூறு புலவராலும், பத்துப்பாட்டு ஒன்பதின்மராலும், இவ்வாறே கலித்தொகையும், பரிபாடலும் பலராலும், பாடப்பெற்ற செய்யுள்களின் கோவையாதல் காண்க. ஆக, இவற்றால் நமக்குத் தெரியவரும் புலவர்களின் தொகை, ஆராய்ந்தமட்டில், 514- ஆகின்றது. இத்தனை முதுமக்களது அரும் பெருவாக்குகளை நாமெல்லாம் அறிந்து சுவைக்கும்படி திரட்டிக் கொடுத்த பழைய சான்றோர்களை யாம் எங்ஙனம் புகழ வல்லோம்! ஆனால், இவர்கட்குப் பின்னும் நமக்கு முன்னுமான இடைக்காலத்துப் புலவர்களது பாசுரங்களும் இவ்வாறு திரட்டப் பட்டதுண்டோ எனின், கிடையாதென்பதே விடையாகும். இதனால், மத்திய காலத்து விளங்கிய திருத்தக்க தேவர், முத்தொள்ளாயிரமுடையார், பொய்யாமொழிப்புலவர், கம்பர் முதலாக எண்ணின்றி விளங்கிய கவிச்சக்கரவர்த்திகளது அருமை பெருமை முழுதும் நிரம்பிய வரலாறுகள் நமக்குக் கிடையா தொழிந்தன. ஒருகால் இத்தகைய நூல்கள் முன்னாளிலிருந்து

பின்பு இறந்திருக்கவுங்கூடும், ஆயினும் அங்ஙனம் போற்றாமல், இறக்கவிட்ட குற்றம், நமக்கு முற்பட்டவரதேயாம். பிற்காலத்துத் தோன்றிய தமிழ் நாவலர் சரிதை என்னுந் தனிப்பாசுரத்திரட்டால், சில புதுப்பாடல்களும் செய்திகளும் தெரியவரினும் எண்ணிறந்த பண்டைப் புலவர்களது பெருமையை நோக்க, அந்நூலை ஒன்றாக வைத்தெண்ணவும் மனம் வந்திலது. ஆயினும், ஒன்றுமேயில்லை என்ற குற்றத்தை நீக்க வந்ததாக மட்டும் அதனைக் கொள்ளலாம்.

இனிச், சிலவருஷங்கட்கு முன்பு, இராமநாதபுரம் ஸம்ஸ்தானம் ஸ்ரீமாந். பொன்னுச்சாமித் தேவரவர்கள் இக் குறையை ஒருவாறு நீக்கவேண்டி, முன்னோரும் பின்னோருமான புலவர் பலரால் பாடப்பெற்ற தனிச்செய்யுள்களை அப்போது கிடைத்தவளவில் வெளியிடச் செய்தார்கள். அதுவே இக்காலத்துத் தனிப்பாடற்றிரட்டென வழங்குவது. அஃது ஒரு பெரிய திரட் டன்றாயினும், வெளிவந்தவளவில் கற்றவர் மற்றவரெல்லா ராலும், எவ்வளவு அவாவுடன் படிக்கப் படுகின்றதென்பதற்கு, சில்லாண்டுகளுள்ளே அந்நூல் பற்பல பதிப்புக்களைப் பெற்றிருத் தலே போதிய சான்றாம். இத்தனை பதிப்புக்களால், இத்திரட்டி னிடத்து நம்மவர்க்குள்ள பற்று விளங்குகின்றதாயினும் பதிப் பாளர் சிலர், கண்டபடியெல்லாம் பிழைபட அச்சிட்டு முன்னோர் விஷயத்தில் அபசாரப்படுதல், பெரிதும் வியசனிக்கத் தக்கது.

இங்ஙனம், பழைய தனிப்பாசுரங்கள் வரவர வழக்கு வீழ்ந்து வருதலை அறிந்திருந்தும் நங்காலத்தறிஞர்களில் இதன் பொருட்டு வேண்டிய முயற்சி யெடுப்பவர் அதிகமில்லை. இப்போதுள்ள பெரியோர் சிலர் தமிழ்நாட்டுப் புலவர் சரிதங்களை அவ்வவர் பாடற் பகுதிகளுடன் எழுதிவெளியிடப் பெரிதும் முயன்றுகொண்டிருத்தல் நெடுநாளாகப் பிரஸ்தாபிக்கப்படு கின்றது. இங்ஙனம் வெளிவருதல் இன்றியமையாததொன்றாம். ஆனால், அவ்வழகிய புத்தகத்தைக் கண்ணாரக் கண்டு களிக்கும் பாக்கியம் எப்போது கிட்டுமோ தெரிந்திலது. இவ்வாறே மற் றொரு தொகைநூல், நந்நாட்டுப் பாவலரொருவரால் அச்சாகுஞ் செய்தியும் சிலகாலமாக நங்காதில் அடுத்தடுத்து விழுந்து கொண்டிருந்தது; இதைப்பற்றிய பேச்சு இப்போது அடியோடு மழுங்கிப்போயிற்று. ஆயினும், இக்குறையை எவ்விதத்தானும் விரைந்து நீக்க வேண்டுமென்ற ஊக்கம், தமிழணங்கின் பிறப்பக

மாகிய பாண்டி நாட்டிலுதித்த செந்தமிழ்ச் செல்வர் இருவர்க்கு சமீபத்தில் தோன்றி, உடனே பயனும் விளைந்துவிட்டது பற்றித் தமிழ்மக்கள் மகிழ்வார்களென்பதில் ஐயமில்லை. அங்ஙனம் விரைந்து பயன் விளைந்ததற்குத் தக்க காரணமுண்டு. என்னை யெனில்? அவ்விருவரில், ஒருவர் பெரும்பொருட்செல்வர். மற்றவரோ தக்க கல்விச் செல்வர். இவ்விருவேறு செல்வர்களும் இயைந்து நடத்தும்போது, இயற்கையழகோடு செயற்கையழ கெல்லாம் சிறக்க ஒரு பெருநூல் வெளியேறிவிட்டதென்பது ஆச்சரியமேயன்று. தமிழ்நாட்டின் பாக்யமுளதேல் எத்தனை நுல்கள் தாம் இன்னோர்கள் சேர்ந்து வெளியேற்றமுடியா? இச் செல்வர்களில் முதல்வர் யாவரெனின்:— வைசிய குலமணியும், ''செவிச் செல்வஞ் செல்வத்துட் செல்வம்'' என்னும் திருமொழி யின் உண்மையையறிந்து புலவர்களை ஆதரித்து வருஞ் சீமானும், அருங்குணமெல்லா மொருங்குடையோரும் முறையூரதிபரு மாகிய ஸ்ரீமாந் பழ.சி. சண்முகஞ்செட்டியாரவர்களே; இவர்கள் பெருந்தகைமைகள் உலகமறிந்தவையாதலின் நானும் கூறுதல் மிகைப்படுத்தலாகும். இவர்கட்கு இத்தகைய நூலை வெளியேற்ற வேண்டுமென்னும் எண்ணம் வெகு காலத்துக்கு முன்பே தோன்றியதாம். ஏனெனில், இவர்கள், தம் சமூக வித்வானாயிருந்து சமீபத்திற் காலஞ்சென்ற ஸ்ரீமத், கருப்பையாப் பாவலரவர்களைக் கொண்டு, இத்தகைய தனிப்பாசுரங்களைத் திரட்டித் தரும்படி நெடுங்காலமாகத் தூண்டியிருக்கின்றார்கள். அவ்வாறே பாவலரும் பல்லிடங்களினுஞ் சென்று தொகுத்துவந்த பாடல்கள் செட்டியாரவர்களிடமிருந்தன. அவை இந்நூலின் பெருமையைச் சிறப்பித்தற்குப் பெருஞ்சாதனமாயின என்று தெரிகின்றது. இங்ஙனம் ஒரு சிறந்த நூலை ஆராய்ச்சிசெய்து தொகுத்து வெளியேற்றுதற்குச் செட்டியாரவர்களால் தேர்ந்தெடுக் கப்பட்டவர் யாவரெனில் :—

சேற்றூர்ச் சம்ஸ்தான வித்துவானும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரிலொருவரும், மதுரை விவேகபாநு பத்திராதிபரும், அற்புத கவிஞருமாகிய ஸ்ரீமத் மு.ரா. கந்தசாமிக்கவிராயரவர்களே. கவிராயரவர்களை இந்நூல் விஷயத்தில் நியமித்த செட்டியாரவர் கட்கு மற்றொருமுறை நாம் புகழ்ச்சி கூறுதல் வேண்டுமென்றே தோற்றுகிறது. செட்டியாரவர்களிட்ட நியமனத்தை நிறைவேற்று வதில் கவிராயரவர்கள் தமக்கியல்பான உழைப்பையெல்லாம்

இயலுந்திறத்திற்கு ,மேலாகவே செலுத்தியிருக்கிறார்களென் பதற்கு — இந்நூலினருமை பெருமை மட்டுமன்று — அதிவிரை வில் இந்நூல் முற்றுப்பெற்றதும் போதிய சான்றாம். மதுரை போன்ற இடத்தில், இவ்வரிய நூல் மூன்று மாதங்களிலே வெளிவருமாயின், அது வியக்கத்தக்கதன்றோ? இந்நூல், நினைத்த பாடல்களையெல்லாம் தருதற்கேற்ப ''தனிச்செய்யுட்சிந்தாமணி'' என்ற பெயர் புனைந்திருத்தல் பொருத்தமேயாம். இதனுள் சங்க காலத்தும் அதன் பிற்காலத்தும் விளங்கிய புலவர்கள் பாடல் களோடு, இப்போதுள்ள வித்துவான்கள் பலர் கவிகளும் சேர்த்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம், பெரும் பிரயாசையுடன் தெரிந்தெடுக்கப்பட்டவைகளாம். இப்பாடல் களியற்றிய புலவர்களது சரித்திரக் குறிப்புகளும், தெரிந்தவரை, சுருக்கமாக அதனதன் தலைப்பில் எழுதப்பட்டுள்ளன. இந்நூலில் நங்காலத்துப் புலவர் பாடல்களை இறுதியில் தொகுத்து வைத்திருத்தல், நமக்கு மட்டுமன்றி, நம் பின்னோர்கள் அறிந்து மகிழ்தற்கும் பேருபகாரமாமென்பது சொல்ல வேண்டா. இங்ஙன மாக, இத்தனிச் செய்யுட் சிந்தாமணியில் தொகுக்கப்பெற்ற பாடற்றொகை மொத்தத்தில் ௩அகரு ஆம். இவைபாடிய வெவ் வேறாய புலவர்தொகை கஅ௦-க்கு மேலாம். இத்தனிப்பாசுரங்கள் பெரும்பாலவும் சமயோசிதம் பெற்றவைகளாகவும் படிப்பவர் மனத்தைக் கவரத்தக்கனவாகவும் விளங்குதலை ஒவ்வொருவரும் தாமே அறிந்து கொள்ளக் கூடுமென்பது திண்ணம்.

இச்சிந்தாமணியில் இல்லாத தனிப்பாசுரங்கள் பல நம் நாட்டில் வழங்கக்கூடுமேனும், இதுவரை வெளியேறிய தொகை நூல்களிலே, இதுவே, பெருமையும் ஒழுங்குமுடையதென்பதில் சிறிதும் ஐயமில்லை. பழைய புலவர்களது வாக்கிலும் வரலாறு களிலும் ஒருவரது மற்றவரதாக மாறுபட்டு, அதுவே பெரு வழக்காக வழங்குவன அநேகம் இப்போதுண்டு. அவையெல்லாம் தனிக்குறிப்பில், இந்நூலின்கண்ணே விளக்கிக் காட்டப்பட்டி ருத்தல் பெரிதும் விரும்பத் தக்கதாம். இந்நூற்கு, செந்தமிழ் வளர்க்குஞ் சீமானும் கல்வியும் செல்வமும் கவினப்பெற்ற வள்ளலுமாகிய மதுரைத் தமிழ்ச்சங்கத்து அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்கள், தங்களருமைத் தந்தை யாரான ஸ்ரீமாந் பொன்னுசாமித்தேவரவர்களுடைய தனிப் பாசுரங்களிலே தாங்கள் கேட்டெழுதி வைத்திருந்தனவற்றையும்,

தாங்கள் அவ்வப்போது பாடிய அரும் பாடல்கள் சிலவற்றையும் உபகரித்திருத்தலோடு, இவ்வாறே ஏனைய கல்விச் செல்வர்கள் பலரும் இயன்றவுதவி செய்திருத்தலால் இந்நூல், தமிழ் மக்கட் கெல்லாம் ஆனந்தம்பயவாமற் போகாதென்பது திண்ணம். இத்தகைய திரட்டு நூல்கள் முடிவான நூலென்று துணிந்து சொல்லுதற் குரியனவல்ல; ஏனெனில் இவை காலத்துக்குக்காலம் சேர்க்கப்பட்டுப் பெருக வேண்டியனவாம். ஆதலால், தமிழ் மக்கள் இந்நூலிடத்துக்காட்டும் அன்புக்கும் ஆதரவுக்கும் ஏற்ப, இந்நூல் புதிய தோற்றங்கள் பெற்று வெளிவந்துபகரிக்கு மென்பது திண்ணம்.

இங்ஙனம் தமிழ்நாட்டார் பொருட்டு இத்தகைய பேருப காரத்தைச் செய்வித்த ஸ்ரீமாந்- சண்முகம் செட்டியாரவர்கட்கும், இதனை ஆராய்ந்து அச்சிட்டு நிறைவேற்றிய ஸ்ரீமத் - கந்தசாமிக் கவிராயரவர்கட்கும், இவ்வாறே தமிழ்ப்பரிபாலனம் பண்ணுவதில் ஊக்கமுமுழைப்பும் மேன்மேலும் உண்டாம்படியும், அவர்கட்கு நிறைந்த ஆயுளையும் மிகுந்த அறிவு ஆற்றல்களையும் அளிக்கும்படியும் ஸர்வேசுவரனது திருவருளைத் தியானிக் கின்றேன்.

தமிழ்ச்சங்கம், இங்ஙனம்,

மதுரை, **மு. இராகவையங்கார்,**

*1—8—08* ''செந்தமிழ்ப்'' பத்திராசிரியர்.

# தனிச்செய்யுட் சிந்தாமணி பதிப்புரை

செந்தமிழ்ச் செல்வி திருவடி பரவதூஉம்
சந்ததங் கல்வி தழைத்தற் பொருட்டே.

இத்தனிச்செய்யுட் சிந்தாமணியால் தமிழ் மக்கள் அடையும் பயன் முதலியவற்றை முகவுரைக்கண்ணே மதுரைத் தமிழ்ச்சங்கம் செந்தமிழ்ப் பத்திராசிரியரும் பண்டை நூலாராய்ச்சி யிற் றேர்ந்த வல்லுநருமாகிய ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்கள் நன்கு கூறியிருக்கின்றார்கள்.

இம்மதுரை ஜில்லா முறையூர் வாசியும், பிரபுகுல திலகரும் அருங்கலை விநோதரும், வரையாதுதவும் வள்ளற் றன்மை வாய்ந்தோரும் ஆகிய ஸ்ரீமாந் பழ சி. சண்முகஞ் செட்டியாரவர்கள் தமது சமூகத்தை யடுத்துப் பற்பல சிறந்த வித்துவான்களிருப்பவும் எம்மிடத்துளதாய அன்பு மிகையானே இப்பணியை எமக்கீந்தனர். இது கல்வி வல்லாராற் செயற் பாலதாகவும் அவர்கள் சொல்லை மறுத்தற் கஞ்சியே யாமுமிப் பணியை யேற்றுத் திருவாலவாயுடையார் திருவருளைப் பிரார்த் தித்துத் தொடங்கி ஒருவாறு முற்றுவித்தேம். இவ்வேலை நடக்குங்கால் மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீமத் மு. இராகவையங்காரவர்கள், ஷை செந்தமிழ்க் கலாசாலை உபாத்தியாயர் ஸ்ரீமத் சுந்தரேசுவர ஐயரவர்கள், ஷை தமிழ்ச் சங்கம் நூற்பரிசோதகரும் எமது சேஷ்ட சகோதரருமான ஸ்ரீமத்

மு.ரா. அருணாசலக்கவிராயரவர்கள், மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம் அக்கிராசனாதிபதி ஸ்ரீமத் ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் முதலிய பல வித்துவ சிகாமணிகள் இடையிடையே வேண்டு முதவிகள் பல செய்துவந்தார்கள். இப்புலவர் பெருமக்கள் செய்த பேருதவிக்கு என்றும் நன்றி பாராட்டி வந்தனஞ்செய்யுங் கடப் பாடுள்ளேம்.

இராமநாதபுரம் ஸ்ரீமத் பொன்னுஸாமித்தேவரவர்கள் நற்றவப் புதல்வரும் பாலவனத்தம் ஜமீந்தாரும் மதுரைத்தமிழ்ச் சங்கம் அக்கிராசனாதிபதியும் முறையான நூலுணர்ச்சியிற் சிறந்த கல்வி வல்லுநருமாகிய ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைஸாமி யவர்கள் தமது அருமைத் தந்தையவர்களியற்றிய தனிப்பாக்கள் சிலவற்றையும் தாமியற்றிய செய்யுட்கள் சிலவற்றையும் கொடுத்து தவினார்கள். தமிழ்ப் புலவர்கள் எல்லாருக்கும் வேண்டுமுதவி களைச் செய்யுமியற்கையுள்ள இப்பிரபு சிகாமணியவர்களியற்றிய பேருதவி மிகவும் பாராட்டற் பாலதேயாம்.

இச்சிந்தாமணிக் கண்ணுள்ள பாடற்றொகை ௲அ௧௫. இவற்றுள் ௲௦௩௯ பாடல்கள் நமக்கு முற்பட்ட கடு௯ புலவர்களாற் பாடப்பட்டன. ஏனைய ௭௭௯ பாடல்கள் தற்போதுள்ள ௨௩ வித்துவான்களாலியற்றப்பட்டன. காலஞ்சென்ற கவிஞர்கள் பாடல்களையெல்லாம் அச்சிட்டு முடித்து, தற்போதுள்ள புலவர் பெருமக்களுள் தலைமைப்பாடுற்று விளங்கும் ப்ரும்மஸ்ரீ மகா மகோபாத்தியாயர் வே. சாமிநாதையரவர்கள் பாடல்களை முதற் கண்ணமைத்து ஏனையர் பாடல்களைத் தொடுத்து முடிப்பித் துள்ளேம்.

இவ்வாறு பதிப்பிட்டு முடித்தபின்னர் நக்கீரர், கம்ப நாட்டாழ்வார் புகழேந்திப் புலவர், ஒட்டக் கூத்தர், பொய்யா மொழிப்புலவர், இரட்டையர்; காளமேகப்புலவர் முதலிய பண்டைத்தமிழ்ப் புலவர்கள் பாக்கள் நூற்றுக்கணக்காகக் கிடைத் தன. தற்காலத் தமிழ் வித்துவான்கள் பாக்களோ ஆயிரக்கணக்கில் வந்து குவிந்துள்ளன. இவையனைத்தையும் ஒரே புத்தகமாக்க முடியாமையால் முடிந்தவரை முதற்பாகம் ஆக வெளியிட்டுள் ளேம். இப்போது கிடைத்த கவிகளுடன் இன்னுஞ் சேர்வன சேர்த்து அவற்றை இரண்டாம் பாகமாகக் கூடிய விரைவில்

வெளியிட நிச்சயித்துள்ளேம். வித்துவசிகாமணிகள் தங்கள் தங்கள் பாலுள்ள தனிப்பாக்களை யெமக்கனுப்பி யுபகரிப்பார்களாயின் அது மிகப் பேருபகாரமாகும்.

இந்நூலைநோக்குந் தமிழறிஞர்பலருக்கும் இத்தகைய பெருநூலை வெளியிடப்புரிந்த தயாளகுண சீலராகிய ஸ்ரீமாந் பழ. சி. சண்முகஞ் செட்டியாரவர்களைக் காணும் வேட்கையுள தாமாதலின் அன்னாரது நல்லுருவப்பட மொன்று முதற்கண் ணமைத்தலைக் கண்டு தமிழ் மக்கள் மகிழ்ச்சி கூர்வார்களென்றே நம்புகின்றேம்.

யாமறிந்தவளவில் சரித்திர பேதமுதலிய விசேடக் குறிப்புக்களையும் பாடபேதங்களையும் இதனடுத்து விளக்கிக் காட்டியுள்ளேம். இன்னும் எத்துணையோ பாடபேதங்களும் வேறு பல குறிப்புக்களும் அறிஞர்கள் அறிந்திருக்கக் கூடும். அவற்றையெமக் கறிவிப்பார்களாயின் அன்னார்க்கு நன்றி கூறு தலுடன் அடுத்த பதிப்பில் அவையனைத்தும் விளக்கிக் காட்டவும் பெறும்.

### சரித்திர பேதமுதலிய விசேடக்குறிப்புக்கள்.

உ -ம் பக்கம்— ''கொங்கு தேர்'' என்னுங்கவி குறுந்தொகையில் இரண்டாவது செய்யுளாகவுளது.

கக-ம் பக்கம்—''அற்றதலைபோக'' என்னும் கவி ஔவையார் பசியால் வருந்தி ஒருவன் மனையிற் செல்ல அவன் சோறில்லை என்று போக்க அவன் மனைவி கண்டு உபசரித்து அன்ன மிட்டபோதுபாடியது. என்னுங் குறிப்புடனுமுளது.

கஉ-ம் பக்கம்— ''அங்கவை சங்கவை யென்பார்:— பறம்பு நாட்டதிபனும் கடையெழு வள்ளல்களிற் சிறந்தவனும் மூவேந்தரானுஞ் சூழ்ந்து கொல்லப்பட்டவனுமான பாரியென்னும் வேளின் மகளிர். அவனிறந்ததும் அப் பாரிக்குயிர்த்துணைவரான கபிலராலும் ஔவை யாராலும் மணஞ்செய்விக்கப் பெற்றுக் குலப்பெருமை குன்றாது வாழ்ந்தனரென்ப.

உக-ம் பக்கம்— எ௩-ம் பாட்டு இரட்டையர் பாடலெனவுங் கூறுவர்.

௩கூ-ம் பக்கம் உகூ-ம் பாட்டு ''அத்திமுத'' என்றது குருநமச்சிவாய தேசிகர் பாடியதாகக் காணப்படுகின்றது.

சக-ம் பக்கம் ஆறைநகர் வாணனைப்பற்றிய பாடல்களில் ''மகதேவன்'' என்ன வருமிடங்களையெல்லாம் மகதேசன் எனத் திருத்திக் கொள்ள வேண்டும். மகத + ஈசன் மகத நாட்டுக்கு இறை என்றபடி. இவ்வாணன் இற்றைக்கு 340 வருடங்கட்கு முன் திருநெல்வேலிப் பக்கத்தை ஆட்சி புரிந்த ''சிவலமாறன்'' என்னும் பாண்டியன் காலத்தவனென்று இப்பாடல்களாலும் பிறவற்றாலும் தெரிவதால் இவனைப்பற்றிய கவிகள் மிக முற்பட்டவரான கம்ப நாட்டாருடையனவென்று சொல்ல முடியாமலிருக்கின்றமை உய்த்துணரத் தக்கது.

சச-ம் பக்கம் உஅ முதல் ௩௧ வரையுள்ள பாடல்கள் நான்கும் கம்பர் பாடியனவாக தமிழ் நாவலர் சரிதையில் கூறவில்லை.

சஎ-ம் பக்கம் சகூ-ம் பாடல் பொய்யாமொழிப் புலவர் பாடிய தென்று காணப்படுகிறது. ஷ பக்கம் சகூ-ம் பாடல் பூதத்தாரும் காரைக்காற் பேயம்மை யாரும் பாடிய தென்று யாப்பருங்கல விருத்தியிற் காணப்படுகின்றது.

ரு௦-ம் பக்கம் கூகூஆம் பாட்டு பொய்யாமொழிப்புலவர் பாடிய தாகத் தெரிய வருகிறது.

ருகூ-ம் பக்கம் ''சேனைதழையாக்கி'' என்னும் பாடல் வாண னுடைய பாணன் மதுரைக்குப் போனபோது பாண்டியன் கொடுத்த பரிசிலை வாணன் வலக்கையாலேலாது இடக்கையாலேற்க அதுகண்டு பாண்டிய னிகழ்ந்த போது பாடியதென்ற வரலாற்றுடன் தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது.

கூடு-ம் பக்கம் கரு-ம் பாட்டு:— சரசுவதி தம்பலங் கொடுக்கக் கவிபாடுந்திறனுற்ற கூத்த முதலியார் அரும்பைத் தொள்ளாயிரம் பாடும்போது விக்ரமசோழன் கேட்டு ஒரு கவியை ''ஒட்டச் சொல்'' என்ற போது பாடியது எனத் தமிழ்நாவலர் சரிதை கூறும்.

சுசு-ம் பக்கம் உ௦-ம் பாட்டு:— ஒட்டக்கூத்தர் உலாப்பாடியபோது பேராசிரியர் நேமிநாதர் பட்டோலை பிடிக்கப் பாடியது என்று தமிழ் நாவலர் சரிதை கூறும்.

எசு-ம் பக்கம் கசு-ம் பாட்டும் உ௦-ம் பாட்டும் அதிமதுரகவிராயர் பாடியவையென்று ஷை சரிதை கூறும்.

கூடு-ம் பக்கம் க௦உ-ம் பாட்டு சவையப்பனாயனைக் காளமேகம் பாடியதென்று சிலபாடபேதங்களுடன் தமிழ் நாவலர் சரிதையிற் காணப்படுகின்றது.

க௦டு-ம் பக்கம் கசுச-ம் பாட்டு ஔவை பாடியதாகவுங் கூறுகின்றனர்.

ககரு-ம் பக்கம் வரதுங்கபாண்டியன் இவர் பெயர் வரதுங்கராம பாண்டியனென்றும் வழங்கப்படுகின்றது. வாயுசங்கிதை இவர் பாடியது.

ககடு-ம் பக்கம் வீரன் என்னும் ஆசுகவி:— இவரூர் வீரை யென்று தெரிகின்றது.

களக-ம் பக்கம் சுப்பிரமணியப்புலவர் இவரே குன்றாக்குடித்தல புராணம் பாடியவரெனத் தெரிகிறது.

சரு௪-ம் பக்கம் கசு-ம் பாடல் காரைக்கால் தனக்கோடி முதலியார் பாடியதென்றும் கூறுவர்.

இத்தகைய பாடபேதங்களும் சரித்திர மாறுபாடுகளும் இன்னும் எத்துணையோ இருக்கக் கூடும். அவையெல்லாம் வரவரக் கண்டு திருத்திக்கொள்ளற் பாலவேயாம். ஒரு புலவராற் செய்யப்பட்டு ஒரு சரித்திரத்தைக் கூறும் நூல்களே எத்தனையோ பாடபேதங்களும் கதை மாறுபாடுகளுங் கொண்டு உண்மையுருச் சிதைவு பட்டு நிற்குமாயின் இத்தகைய தனிப்பாக்களில் பேதம் வருதல் அரிதன்றென்பது சொல்லவும் வேண்டுமா?

செந்தமிழபிமானச் செல்வத்திற் சிறந்த ஸ்ரீமாந் பழ.சி. சண்முகஞ் செட்டியாரவர்கள் நீடுவாழ்ந்திருந்து இன்னு மிதுபோன்ற பற்பலநூல்களை வெளியிடச் செய்து வருமாறு ஸ்ரீமீனாக்ஷி சுந்தரேசுவரர் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

இங்ஙனம்,

மதுரை, மு.ரா. கந்தசாமிக்கவிராயர்,

*15—9—08* விவேகபாநுப்பத்திராதிபர்.

எட்டுத்தொகையுள்

நெடுந்தொகை

ஆகும்

# அகநானூறு

மூலமும் பழைய உரையும்

# இரண்டாம் பதிப்பின் முகவுரை

அகநானூற்றினை யான் சில வருஷங்களுக்கு முன்ஸேது ஸம்ஸ்தானம் மகா வித்வான் கவிசேகரர் ஸ்ரீ உ.வே. ராகவையங்கார் ஸ்வாமிகளின் பரிசோதனையையும் சென்னைத் தமிழ் லெக்ஸிகன் தலைமைத் தமிழ்ப் பண்டிதர். ஸ்ரீ உ.வே. மு. ராகவையங்கார் ஸ்வாமிகளின் ஆராய்ச்சியையும் துணையாகக் கொண்டு அச்சிட்டபோது அதற்குப் பழைய உரையில்லாத பாடல்களுக்கு ஒரு குறிப்புரை எழுதி வெளியிட வேண்டுமென்னும் அவா மிகுதியுமுடையவனா யிருந்தேன். ஆயினும் அக்காலத்து எனக்குற்ற பல விபத்துக்களாலும் பொருள் முட்டுப்பாட்டாலும் அதை நிறைவேற்ற இயலாதவனாய் மூலத்தை மட்டும் வெளியிட்டேன். பின்னர் அன்றுதொட்டு இன்றளவும் அவ்வவா என் மனத்தினீங்காது பெருகிக் கொண்டே வந்ததேனும், கொடிய இருமல் இரைப்பு முதலிய நோய்களினால் யாதும் செய்ய மாட்டாதவனாயினேன்.

இப்பால், திருக்குற்றாலம், நீலகிரி முதலிய ஸ்தலவாஸங்களாலும் சிறந்த மருத்துவர்களின் ஔஷதப் பிரயோகங்களாலும் பாகவதர்களின் அநுக்ரஹ விசேஷத்தாலும் ஸர்வேஶ்வரன் கிருபாகடாக்ஷத்தாலும் யான் ஒருவாறு நோய் தணிந்தேனாகி, முன்னர் இந்நூலை அச்சிடுங்காலத்து அவ்விராகவ ஸிம்ஹங்கள்பால் யான் பன்முறையுங் கேட்டு ஐயங்களைத் தெளிந்து கொண்டிருந்தமையாலும், பண்டு நற்றிணை யுரையாசிரியரும் என் மனத்தகத்து என்றும் நிலவும் வள்ளலும் ஆகிய காலஞ்சென்ற பின்னத்தூர் அ. நாராயண ஸ்வாமி ஐயரவர்கள் இந்நூலைச் சோதித்து உரை எழுதி வந்தகாலத்து அவர்கள் திருவடி நீழலில் உறைந்திருந்த பாக்கியத்தாலும் இப்பெருநூற்கு உரை எழுதத் துணிந்து, என் சிற்றறிவிற் கெட்டியவண்ணம் ஒருவாறு எழுதி வந்து, முதற் புத்தகமாகக் களிற்றியானைநிரையை உரையுடன் அறிஞர் திருமுன்னர்ச் சென்ற அக்ஷயவருஷம் ஸமர்ப்பித்தேன். அஃது இப்போது சென்னை யூனிவர்ஸிடியாரால் வித்வான் பட்டப் பரீக்ஷைக்குப் பாடமாக வைக்கப் பெற்றிருத்தலையறிந்து மகிழ்ந்து அவர்கள்பால் என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகின்றேன்.

இப்பதிப்புப் பிறபட்டுக்கிடைத்த சில ஏட்டுப் பிரதிகளாலும், ஆராய்ச்சியாலும் சில திருத்தங்களை அடைந்துள்ளது. இஃது அச்சாகுங் காலத்து யான் படுத்தபடுக்கையாய்க் கிடக்கையைவிட்டெழ வியலாது கடுநோயுற்று ஸர்வேஸ்வரன் திருவடியை யடைவது இப்போதோ சிறிது அப்பாலோ வென்று நோக்கிக் கொண்டிருந்தமையால், இதனைச் சோதிக்கும் பொறுப்பைக் கருணையுடனும் பிரீதியுடனும் தாமே மேற்கொண்டும், அரிய பல உரை நயங்களை ஆங்காங்கு எடுத்துக் காட்டியும் பதிப்பினைப் பூர்த்திசெய்தருளிய சென்னை லெக்ஸிகன் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ.உ.வே.மு. இராகவையங்கார் ஸ்வாமிகளின் திருவடிகளை என்றும் உபாஸிக்குங் கடப்பாடுடையேன். இவர்கள் கிருபை செய்திராவிடில் இப்பதிப்புத் தமிழ் மக்கட்குக் கிடைத்திரா தென்பது ஒருதலையாதலால், இப்பெரியார்பால் அவர்கள் நன்றிபாராட்டற் குரியர்.

அறிவாற்றல்களில் மிகச் சிறியேனாகிய யான் பெரியார் பலர் உதவியைப் பெற்றிருப்பினும் பல பெரும் பிழைகள் செய் திருக்கக்கூடும். அறிஞர் அவற்றைப் பொறுத்துக் கொள்வாராக.

இப்பெருங் காரியத்திற்கு எவ்வாற்றானும் இயைபில்லாத என்னைக் கொண்டு இதனை முற்றுவித்துக் கொண்டருளிய ஸர்வேஶ்வரன் திருவடித் தாமரைகளை அநவரதம் உபாஸிக் கின்றேன்.

கம்பர் விலாஸம்<br>
மயிலாப்பூர்<br>
ஸ்ரீமுகஹு ஐப்பசி மீ

இங்ஙனம்<br>
ஸ்ரீ வத்ஸசக்ரவர்த்தி<br>
**ராஜகோபாலார்யன்**

[illegible] தேனாகி,

[illegible] அர்ப்பித்தேன்.

[illegible] பட்டப்

[illegible] மகிழ்ந்து

[illegible] கின்றேன்.

இப்பதிப்புப் [illegible] பிரதி

[illegible]

# அகநானூறு முகவுரை

இந்நூல் கடைச்சங்க காலத்துப் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை பதினெண் கீழ்க்கணக்கு எனப் பெயர்சிறப்பித்துக் கொண் டாடப் பெற்ற பெருந்தமிழ்ப் பனுவல் வகையுள் எட்டுத்தொகையு ளொன்றாய் உலக நிகழ்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்பட்ட இல்லற நடாத்தற்கண் தலைவனுந் தலைவியும் 'ஓருயிர்ப் புள்ளி னிருதலை' போன்று ஒற்றுமைப்பட்டு ஒழுகற்குரிய விழுமிய பேரன்பின் பயனாகிய இன்பப் பகுதியை நன்கு விளக்கும் நானூறு அகவற் பாக்களை யுடையதோர் அகத்திணை நூலாகும். எட்டுத் தொகை நூல்களின் பெயரினை

> ''நற்றிணை நல்ல குறுந்தொகை யைங்குறுநூ
> றொத்த பதிற்றுப்பத் தோங்கு பரிபாடல்
> கற்றறிந்தார் கூறுங் கலியோ டகம்புறமென்
> றித்திறத்த வெட்டுத்தொகை''

என்னும் பழைய வெண்பாவாலறிக.

வடமொழியாளர் மக்கட் குறுதிபயப்பனவாகப் பாகு படுத்துக் கொண்ட அறம் பொரு ளின்பம் வீடு என்னும் புருடார்த் தங்களைத் தமிழ்மொழியாளர் அகம் புறம் என இருபகுதிப்படுத்து வழங்குவர். புருடார்த்தம் நான்கனுள் இன்பம் ஒன்றும் அகம் எனவும், அறம் பொருள் வீடு என்னும் மூன்றும் புறம் எனவும் வழங்கப்படும். இவை இங்ஙனம் பெயர்பெறுதற்குக் காரணம்

''ஒத்த அன்பான் ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் அக் கூட்டத்தின் பின்னர் அவ்விருவரும் ஒருவர்க் கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறிருந்ததெனக் கூறப்படாத தாய், யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பம் உறுவதோர் பொருளாதலின் அதனை அகம் என்றார். எனவே, அகத்தே நிகழ்கின்ற இன்பத்திற்கு அகம் என்றது ஓர் ஆகுபெயராம்; இதனை யொழிந்தன ஒத்த அன்புடையார்தாமேயன்றி எல்லார்க்குந் துய்த்துணரப்படுதலானும் இவை இவ்வாறிருந்ததெனப் பிறர்க்குக் கூறப்படுதலானும் அவை புறம் எனவேபடும். இன்பமே யன்றித் துன்பமும் அகத்தே நிகழுமாலெனின் அதுவுங் காமங் கண் ணிற்றேல் இன்பத்துள் அடங்கும். ஒழிந்த துன்பம் புறத்தார்க்குப் புலனாகாமை மறைக்கப்படாமையிற் புறத்திணைப் பாலவாம்'' என உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் அகத்திணையின் முகத்துக் கூறியவாற்றால் நன்குணர்தலாகும். தலைவனுந் தலைவி யும் அமுதமும் அதன்கட் கரந்த சுவையும்போல நெஞ்சத்தாற் கலப்புடைய காரணத்தால் வேறுபாடிலராயினும் இவ்வின்பந் துய்த்தற் பொருட்டு ஒருயிரே ஈருருவெடுத்து நின்றாற்போல அவனென்றும் அவளென்றும் வேறுபட்டுத் தோற்றி அன்பின் வழிச்செல்லும் இன்ப வெள்ளத்துத் திளைக்கும் பேரழகு அதனை அநுபவிக்கின்ற அவரகத்தான் உணரப்படுவதன்றி அவருள்ளும் ஒருவருக் கொருவர் வாயினால் இற்றெனக் கூறலாவதோர் பெற்றித் தன்றாதலின் இங்ஙனங் கூறினார்.

> ''ஆனந்த வெள்ளத் தழுந்துமொ ராருயி ரீருருக்கொண்
> டானந்த வெள்ளத் திடைத்திளைத் தாலொக்கும்''

என்னும் (307) திருக்கோவையாரானும்,

''சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந் திங்ஙனே, நற்பால் வினைத்தெய்வந் தந்தின்று நானிவ ளாம் பகுதிப், பொற்பாரறிவார்'' (திருச்சிற்-8) என்பதனுரைக்கட் பேராசிரியர் ''நல்வினைத் தெய்வம் களவின்கட் கூட்ட அமுதமும் அதன் கட் கரந்து நின்ற சுவையுமென்ன என்னெஞ்சம் இவள் கண்ணே யொடுங்க, யானென்பதோர் தன்மை காணாதொழிய, இருவருள்ளமும் ஒருவேமாமாறு கரப்ப, ஒருவேமாகிய ஏகாந்

தத்தின்கட் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் (இதனை யநுபவிக்கின்ற யானே யறியினல்லது) யாவரானறியப்படுமென்று மகிழ்ந்துரைத்தான்'' என்று விளக்கியதனாலும் இப்பெயர்க் காரணம் ஆராய்ந்து கொள்ளப்படும்.

மேலே காட்டிய எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலி, அகம் என்னும் ஐந்து நூல்களும் இவ்வின்பப் பகுதியை விளக்கும் அகப்பொருள் பற்றியனவாகும். இவ்வைந்து நூல்களும் அகமேயாக முதனான்கற்கும் வேறு வேறு பெயர் கூறி, இறுதியொன்றனையே அகம் என்று பெயரிட்டாண்டது மற்றவற்றினும் இதற்கு அப்பொருள் பற்றிய சிறப்புநோக்கி யென்று ஆராயப்படும்.

இந்நூற்கு நெடுந்தொகை எனவும் பெயர் வழங்குதலுண்டென்பது இந்நூலிறுதியிலுள்ள பாயிரச் செய்யுள்களில்

''ஆய்ந்த கொள்கைத் தீந்தமிழ்ப் பாட்டு
ணெடிய வாகி யடிநிமிர்ந் தொழுகிய
வின்பப் பகுதி யின்பொருட் பாடல்''

எனவும்,

''இயற்பட யாத்தான், றொகையி னெடியதனை'' எனவும், இந்நூற் பிரதியின்கண் ''நெடுந்தொகை நானூறுங் கருத்தினோடு முடிந்தன'' எனவும் வந்தவாற்றாற் றெளியப்பட்டது.

மேலேகாட்டிய அகப்பொருட் பகுதிபற்றிய நூல்கள் ஐந்தனுள் கலிப்பாவா னியற்றப்பட்ட கலியொன்று நீங்கலாக அகவற்பாவா னியற்றப்பட்ட மற்றுள்ள நூல்கள் நான்கனுள் இவ்வகநானூ றொன்றே அடியளவாற் சிறுமை பதின்மூன்றும் பெருமை முப்பத் தொன்றுமாக அடிநிமிர்ந்தொழுகிய காரணத்தால் நெடுந்தொகை எனப் பெயர்சிறந்ததென்று தெளியலாகும். இனி, அகவலானாகிய இந்நான்கனுள்ளும் ஐங்குறுநூறு ஒன்றே ஐந்திணைக்குந் தனித்தனியேயாகிய குறுமையான நூறு நூறு பாவானாயினமைபற்றி ஐந்நூறு பாடல்களையுடையதொரு நூலாதலின் அதனை வேறாக வழங்கி, மற்றை நானூறு நானூறு பாடல்களை

யுடைய நூல்கள் மூன்றனுள் அடிகுறைந் தொழுகியதனைக் குறுந் தொகை யென்றும், அடிநிமிர்ந்தொழுகியதனை நெடுந்தொகை யென்றும், இறப்பக் குறைதலும் இறப்ப நிமிர்தலும் இன்றி இடை நிலைப் பட்டதனை வேறோர் பெயரான் நற்றிணை யென்றும் பெயரிட்டனர் எனினும் நன்கு பொருந்துவதேயாகும். இந்நூற்கே இப் பெயருண்மை யுணராமையின் அகநானூறும் நெடுந்தொகை யும் என வேறு வேறு எண்ணினர் பிற்காலத் தொருசிலர் என்றறிக.

இந்நூற்பாடல்களைப் பாடியருளிய நல்லிசைப்புலவர் ஒரு நூற்று நாற்பத்தைவரென்பர். இந்நூன்முகத்துள்ள ''கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்'' என்னுங் கடவுள் வாழ்த் தினைப் பாடியருளியவர் பாரதம்பாடிய பெருந்தேவனார் என்பார். இந்நூற் பிரதிகளுள் *114, 117, 165* இம்மூன்று பாடல்களுக்கும் ஆசிரியர் பெயர் எழுதப்படாமையால் இப்போது கிடைத்த ஒருநூற்று நாற்பத்திருவர் பெயருடன் கடவுள் வாழ்த்துப் பாடினார் பெயரையுஞ் சேர்த்து ஒருநூற்று நாற்பத்துமூவர் பெயர்க்கே இப்பதிப்பின் கண் வரலாறு எழுதப்பட்டுள்ளது.

இந்நூல் தொகுத்தருளியவர் மதுரை உப்பூரிகுடிகிழான் மகனார் உருத்திரசன்மர் என்பர். இவர் குமரக்கடவு ளவதாரம் என்பதும், மூங்கைப்பிள்ளையார் என்பதும், ஐயாட்டைப் பிராயத்தே அறிவு வீற்றிருந்த செறிவுடைமனத்தராய் நுணுகிய செவிப்புல னுடையராயினார் என்பதும், இறையனார் களவிய லுரை கேட்ட காரணிகர் என்பதும், பிறவும் அந்நூன்முகவுரையா னன்குணரப்படும். இவர் மூங்கையா யிருந்தே கேள்வி வன்மை யான் மேம்பட்டு விளங்கினாரென்பது ''யாத்தான், றொகையி னெடியதனைத் தோலாச் செவியான்'' என இந்நூற் பாயிரத்துக் கூறியவாற்றானும் உணரலாம். சொல்வன்மை யுடையராயிற் றோலா மொழியான் என்பர் என்க.

இவர் ஐந்திணையொழுக்கம் பற்றிப் போந்த இந்நானூறு செய்யுட்களை *1* முதல் *120* இறுதியாகவுள்ளன களிற்றியானைநிரை எனவும், *121* முதல் *300* இறுதியாகவுள்ளன மணிமிடைபவளம் எனவும், *301* முதல் *400* இறுதியாகவுள்ளன நித்திலக்கோவை எனவும் முத்திறமாக வகைசெய்து, அம்மூன்று வகையுமுடை யதனை அகம் எனவும் நெடுந்தொகை எனவும் பெயர் தந்து

நிறுவுமிடத்து, மற்றை நூல்களிற் காணப்படாத சிறப்பு முறையாக இன்ன செய்யுள் இன்ன திணையாகுமென்று கற்பார் எளிதி னறிந்து கொள்ளற்கும், தாங்கோத்தமுறை பிறழாது நின்று நிலவற்கும் பெருந்துணையாகப் பாலைத்திணை யெல்லாம் ஒற்றை எண் பெற்ற செய்யுட்களாகவும், குறிஞ்சித்திணை யெல்லாம் இரண் டும் எட்டும் என்னும் எண்களைப் பெற்ற செய்யுட்களாகவும், முல்லைத்திணையெல்லாம் நான்கு என்னும் எண் பெற்ற செய்யுட்களாகவும் மருதத்திணை யெல்லாம் ஆறு என்னும் எண்பெற்ற செய்யுட்களாகவும், நெய்தற்றிணை யெல்லாம் பத்து என்னும் எண் பெற்ற செய்யுட்களாகவும் மிகவும் அழகியதோர் முறைவைப்பின் நிறுவியருளியது ''வியமெல்லாம் வெண்டே ரியக்கம்'' ''ஒன்றுமூன்றைந்தேழொன் பான்பாலை'', ''பாலை வியமெல்லாம்'' என்னும் வெண்பாக்களாற் புலனாகும். இக் கோப்பு முறைவைப்பே இந்நூலாராய்ச்சியிற் றிணைவிளக்கி நிற்பது கற்றார்க்குப் பெருமகிழ் செய்வது. இதனால் இந்நூலுள் பாலைத்திணைக்கு இருநூறு, குறிஞ்சித்திணைக்கு எண்பது, மருதம் முல்லை நெய்தல் என்னு மூன்று திணைகட்குந் தனித்தனி நாற்பது செய்யுட்களுள்ளன என்றுணர்ந்து கொள்ளலாம்.

இந்நூல் தொகுப்பித் துதவியவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி என்பான். இவன் பாண்டியர் குலத்து முடியுடைப் பேரரசன் என்பது இவன் பெயரானும், இவன் நல்லிசைப் புலமையு முடையான் என்பது இவன் பாடிய ''கூர்முண் முள்ளி'' (26) என்னும் அகத்திணைப் பாட்டை இந்நூலுண் மருதத் திணைக்கு ஆசிரியர் உருத்திர சன்மர் கோத்து நிறுவியதனாலும் உய்த்துணரலாகும். இவன் கடைச்சங்க காலத்திறுதி யரசன் என்பது ''அவர்களைச் சங்க மிரீஇயனார் கடல் கொள்ளப்பட்டுப் போந் திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி யீறாக நாற்பத்தொன்பதின்ம ரென்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டிய ரென்ப'' என இறையனார் களவியலுரை முகவுரைக்கண் வருதலா னறியப்படும். கவியரங் கேறிய மூவர் பாண்டியருள் இவனும் ஒருவனாவன்.

இத்துணையுங் கூறியவாற்றான் நூற்று நாற்பத்து நால்வர் நல்லிசைப்புலவர் அவ்வப்போதுகளிற் பாடிய அடிநிமிர்ந் தொழுகிய முந்நூற்றுத்தொண்ணூற் றொன்பான் அகத்திணைச்

செய்யுட்களுடன் பாண்டிய னுக்கிரப் பெருவழுதி செய்யு ளொன்றையுங் கூட்டி, அவன் வேண்டுகோட் கிணங்கி ஆசிரியர் உருத்திரசன்மராற் றிணைநிலைப்படுத்துக் கோத்துத் தொகுக்கப் பட்டது அகநானூறாகிய நெடுந்தொகை என்பதாயிற்று. இங்ஙனந் தொகுக்கப்பட்ட இந்நூற்குப் பாரதம் பாடிய பெருந்தேவனாராற் கடவுள் வாழ்த்துப் பாடிச் சேர்க்கப்பட்ட தென்றுணர்ந்து கொள்க.

இந்நூல் வழக்கினை எடுத்தாளப்பெறாத நூலாசிரிய ரேனும் உரையாசிரியரேனுந் தமிழிலில்லையென்று துணிந்து சொல்லலாகும். ஆளுடைய அடிகள் தாம் இயற்றியருளிய திருச் சிற்றம்பலக் கோவையின் கட் பல்லிடத்தும் இந்நூற் சொல்லையும் பொருளையும் எடுத்தாளுதல் கண்டு கொள்க. உதாரணமாகக் ''கோழிலை வாழை'' (2) என்னும் இந்நூற் குறிஞ்சித்திணைப் பாட்டின் சொல்லையும் பொருளையுமே கொண்டு ''மையார் கதலிவனத்து'' (262) என்னுந் திருக்கோவை விளங்குதல் நோக்கிக் கொள்க. இந்நூல் பண்டைக்காலத்து இத் தமிழ் நாட்டுள்ள மக்களின் இயல்பு, வழக்கு, நாகரிகம், மணமுறை இவற்றை அறிதற்கு வாயிலாதலுடன், அக்காலத்து அரசர்பெருமை, கொடை, வீரம், நீதி முறைமை, நாடு, ஊர், மலை, யாறு, காடு கடற்றுறை முதலிய பலவற்றையும், வள்ளல்கள் புலவர்கள் இவர் புகழ் பெருமிதம் இவற்றையும் நன்கு தெளிந்து கோடற்குக் கருவியாகவும் உள்ளதென்பது இதனைக் கற்பார் எளிதினறியத் தக்கது. இந்நூலுட் கூறப்படும் அகத்திணை யொழுக்கம் நினைந்த வுடன் மணந்து சிணந்தவுடன் தணவும் இக்காலத்துச் சிலர் வதுவை போலாது எப்படியானுந் தணப்பரியதோர் கூட்டம் என்பது.

*''யாக்கைக், குயிரியைந் தன்ன நட்பி னவ்வுயிர்*
*வாழ்த லன்ன காதல்*
*சாதலன்ன பிரிவரி யோளே''* (339)

எனவும்,

*''பிரிவின் றியைந்த துவரா நட்பி*
*னிருதலைப் புள்ளி னோருயி ரம்மே''* (12)

எனவும் வருமிடங்கள் நோக்கி உய்த்துணர்ந்து கொள்ளலாம். இவ்வகத்திணைநூல் ஒத்த தலைவனுந் தலைவியும் அடுப்பாருங் கொடுப்பாருமின்றித் தம்முட் டாமே கூடும் காந்தருவ வழக்கத் தையே மிகுத்துக் கூறுவதாயினும், இக்காலத்துப் போலப் பெண் தன் வேட்கையை வெளிப்படுத்து நிற்கும் நாண மிலாமைக்கு உடன்படாதென்க. இதனை,

> "செந்தார்ப் பைங்கிளி முன்கை யேந்தி
> யின்றுவர லுரைமோ சென்றிசினோர் திறத்தென
> வில்லவ ரறித லஞ்சி மெல்லென
> மழலை யின்சொற் பயிற்று
> நாணுடை யரிவை" (34)

என மணந்த மனைக்கிழத்தி யியல்பு கூறியவாற்றா னுணர்க. மணந்து இல்லின்கண் வாழுந் தலைவி இயல்பு இதுவாயின் மணவாதவள் நாணம் இத்தகைத்தென்று ஊகித்தலாகும். திருத்தக்கதேவரும்

> "என்றா ணினைந்தா ளிதுபோலு மிவ்வேட்கை வண்ணஞ்
> சென்றே படினுஞ் சிறந்தார்க்கு முரைக்க லாவ
> தன்றா யரிதா யகத்தே சுட்டுருக்கும் வெந்தீ
> யொன்றே யுலகத் துறுநோய் மருந்தில்ல தென்றாள்."
> (சிந். விமலை.74)

என்பதனா லிவ்வேட்கை குரவர்க்கும் மகளிராற் கூறலாகாத தென்று விளக்குதல் காண்க. கல்வியிற் பெரிய கம்பரும்

> "தாமுறு காமத்தன்மை தாங்களே யுரைப்ப தென்ப
> தாமென லாவதன்றா லருங்குல மகளிர்க் கம்மா."

(ஆரணி. சூர். 45) என இக்கருத்தேபடக் கூறினார். பெண் டிர்க்கு இவ்வடக்க முடைமை இயல்பாக இருக்க வேண்டியது என்பது பற்றியே ஆசிரியர் தொல்காப்பியனார், பொருளியலுள்

"உடம்பு முயிரும் வாடியக் காலு
மென்னுற் றனகொல் லிவையெனி னல்லது
கிழவோற் சேர்தல் கிழத்திக் கில்லை." (9)

என்று ஆணை யிடுவாராயினர் என்க. இதன்கட் கணவனிடத்துள்ள வேட்கையால் உடம்பும் உயிரும் வாடிய விடத்தும், 'என்னுற்ற இவை' என்று மறைத்துக் கூறி யிருத்தலல்லது தானே வலியத் தலைவனைச் சென்று சேர்தல் களவு கற்பு என்னும் இரண்டு கைகோளினும் இல்லை என்பது காண்க.

இம்மகளிர் வேட்கை பசுமட் கலத்து ணீர் புறம்பொசிந்து அகத்து நீருண்மை புலப்படுத்தல்போல வறிதகத் தெழுந்த வாய்முறுவல் முதலிய குறிப்புவகையான் உணரப்படுதலல்லது சொல்லான் உணரப்படுதலில்லை என்க. இன்னும் ஆண் பெண் இருவரும் இல்வாழ்க்கை நடாத்தற்கண் ஒத்த பண்பு இன்றியமை யாதென்பது இந்நூலுள்

"அன்பு மடனுஞ் சாயலு மியல்பு
மென்பு நெகிழ்க்குங் கிளவியும் பிறவு
மொன்றுபடு கொள்கையொ டோராங்கு முயங்கி"

(225) என வருதலான் அறியப்படும். ஈண்டு அன்பு என்பது ஒருவரை ஒருவர் இன்றியமையாமை. மடன் என்பது ஒருவர் குற்றம் ஒருவர் தெரியாமை. சாயல் என்பது மென்மைத் தன்மை. இயல்பு என்பது ஒருவரை ஒருவர் ஒளித்தொழுகாமை. என்பு நெகிழ்க்குங் கிளவி என்பது உடலின் வலிதாகிய என்பையும் நெகிழ்விக்கும் ஆர்வமொழி. இவையும் பிறவும் இருவர்க்கும் ஒரு தன்மைப்பட்ட கொள்கையுடன் இருவரும் ஒருவராகவே சேர்ந்திருத்தலைக் கூறுதலான் பண்டைக் காலத்து இல்வாழ்க்கை இயல்பு ஒருவாறு தெளியப்படும்.

இங்ஙனம் எத்துணையோ பல இன்பப் பகுதிகளுடன் அரிய பெரிய தமிழ் வழக்கங்களையும், தமிழ ரியல்புகளையும் புலப்படுத்தித் தமிழிற் குரையாணிபோன்று விளங்குகின்ற இந்நூலுரை முழுதிற்குமில்லாது கடவுள் வாழ்த்திற்கும் நூன்முதற்

கண்ணுள்ள தொண்ணூறு செய்யுள்கட்குமே உள்ளது. இவ்வுரை ஒவ்வொரு செய்யுளிலுமுள்ள திரிசொற்கும் அருந்தொடர்க்கும் பொருள் புலப்படுத்தியும், அகத்திணைக்குச் சிறந்த உள்ளுறை யுவமம் இறைச்சிப் பொருள் இவற்றை ஆங்காங்கு இனிது விளக்கியும், வேண்டிய விடங்களிற் சொன்முடிபு பொருண்முடிபு காட்டியும், முக்கியமானவை சிலவற்றிற்கு இலக்கணக் குறிப்புக் கள் கூறியும், கதைபொதிந்த விடத்து அவ்வக் கதைகளை எடுத் துணர்த்தியுஞ் சேறலாற் பலவழியானுஞ் சிறந்து இனிது விளங்குவ தாகும். இவ்வரிய உரையை இயற்றியுதவிய நல்லாசிரியர் பெயர் ஊர் முதலிய வரலாறு ஒன்றும் இப்போது அறிதற்கிடனின்று. இவ்வுரை யெழுதிய பழையதோர் ஏட்டின்கட் கொல்லம் 460 என்று வரையப்பட்டிருந்தது கொண்டு இவ்வுரையாளர் இற்றைக்கு அறுநூற்று முப்பத்தெட்டு வருடங்கட்கு முற்பட்ட காலத்தவரென்பதுமட்டி லறியலாவது. நச்சினார்க்கினியர் காலம் கி.பி. 14 ஆம் நூற்றாண்டிற்கு முற்பட்ட தாகாமையால் இவ்வுரை காரர் நச்சினார்க்கினியர்க்கு முந்தியவர் என்று கொள்ளலாகும்.

இனி, இவ்வேட்டி னெழுதப்பட்ட ''நின்றநேமி'' என்னும் ஒரு பாயிரச் செய்யுளானும் அதன் பின்னுள்ள வசனத் தாலும் சோணாட்டைச் சேர்ந்த இடையள நாட்டு மணக்குடி என்னும் ஊரிலிருந்த பால்வண்ணன் றேவனான வில்லவதரையன் என்று பெயர் சிறந்தவர் இந்நெடுந்தொகைக்குக் கருத்து அகவலாற்பாடினார் என்பது புலனாவது. அவர் கருத்தினைப் புலப்படுத்திப் பாடிய அகவல் இப்போது கிடைத்திலது. மேலே கூறிய பழையவுரையுட னிவை யெல்லாம் அறியக் கிடந்த ஏட்டி னிறுதியில் ''ஆறு நாட்டுக்குச் சேர்ந்த பெரும்பழனையிலிருக்கும் நல்லையப்புலவர் மகன் பொன்னையன் நெடுந்தொகை'' என்று எழுதப்பட்டிருந்தது. திருநெல்வேலியைச் சேர்ந்த நாங்கனேரிச் சேகரத்துப் பெரும்பழஞ்சி என்ற ஊரொன்றுள்ளது. அதுவே இவ்வூரென் றூகித்தலாகும்.

இப் பெரும்பழனையேடும் இந்நூல் 244 ஆம் பாட்டின் 13 ஆம் அடிமுதல் 292ஆம் பாட்டு முதலடிவரை எழுதப்படாததாகி வெள்ளிதழுடையதா யிருந்தது. இவ்வேடு பிங்கலநிகண்டு அச்சிட்ட ஸ்ரீமான் சிவன்பிள்ளை யவர்களாற் றேடி யெடுக்கப் பட்டது. இதனை மதுரைத் தமிழ்ச்சங்க ஸ்தாபனத்திற்கு முன்னே

அந்நற்சங்க ஸ்தாபகருஞ் சிறந்த தமிழபிமானியும் ★பால்வண்ண னத்தம் (பாலவனத்தம்) ஜமீந்தாருமான ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர்கள் ஷை சிவன்பிள்ளை குமாரரிடத்தினின்று விலை கொடுத்து வாங்கி என்போற் பலரும் கற்றுத் தெளியுமாறு தம் முகவை அரண்மனைப் புத்தகசாலையில் நிலை பெறுவித்தனர். அக்காலத்து இப்போது சென்னை யூநிவேர்ஸிட்டி லெக்ஸிகன் ஆபீஸ்த் தமிழ்ப் பண்டிதரும் எனக்குப்பின் செந்தமிழ்ப் பத்திரிகையைச் சீர் பெற நடத்திய ஆசிரியரும் என்னருமை அம்மான்சேயு மாகிய ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்கள் நல்லுதவியால் இப்பெரும்பழனைப் பிரதியை ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரவர் களினின்று பெற்று, என் ஆராய்ச்சியின் பொருட்டு ஒரு பிரதி செய்துகொண்டு, இதற்கு முன்னே எனக்குக் கிடைத்துள்ள சில பிரதிகளுடன் ஒப்பு நோக்கித் திருத்தஞ்செய்யத் தலைப்பட்டேன். இக்காலத்துத்தான் ஸ்ரீமான் தேவரவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை இத்தமிழுலகுய்ய ஸ்தாபனஞ்செய்து, தம்மிடத்திலுள்ள இப்பெரும்பழனையேடு முதலாகப் பலவற்றையும் தமிழபிமானி கள் பலரும் எளிய நிலையிற் கண்டு கற்றின்புறுமாறு அச்சங்கத்திற் குதவினார்கள். பெருந்தமிழ் வள்ளலும், பேரறிவாளரும், இத் தமிழ்ச்சங்க ஸ்தாபனத்திற்கு முக்கிய காரணரும், என்னை நன்னிலையில் நிறுவியருளியவரும் ஆகிய மாட்சிமை தங்கிய ஸ்ரீமான் பாஸ்கர ஸேதுபதி மஹாராஜரவர்களும், ஸ்ரீமான் தேவ ரவர்களும் விரும்பியவாறு யான் ஷை சங்கத்துப் பிரகடனாசிரிய னாக அமர்ந்தபோது ஷை தேவரவர்கள் யான் அகநானூற்றை இச்சங்க ஸ்தாபனத்திற்கு முன்னேதொட்டு ஆராய்ந்து கொண்டி ருத்தலைத் தெரிந்தவர்களாதலால், என்னையே இந்நூலை அச்சிட்டு வெளியிடும்படி வேண்டினார்கள். அவர்கள் வேண்டு கோட்படி இற்றைக்கு ஓரிருபது வருடங்கட்கு முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்து என்னால் இவ்வகநானூறு அச்சிடத் தொடங் கப்பட்டுச் சிறிது தூரம் நடைபெற்றது. அக்காலத்து எனக்கு உண்டாகிய நோயாலும் மற்றுஞ் சில இடையூறுகளாலும் நிறை வேறாம னின்றது. ஷை தமிழ்ச் சங்கத்தி னவ்வேலையினை யான் விட்ட சில ஆண்டுகளின் பின் என்னிடனிருந்த அச்சங்கத்துப் பிரதிகளும் யான் அச்சங்க சம்பந்தமாகச் சோதித்தெழுதியவையும் ஷை தேவர்களால் திரும்ப வாங்கிக் கொள்ளப்பட்டன. அவை

---

★ பால்வண்ண ஈசுவரர் என்பது இவ்வூர்ச் சிவபிரான் பெயர்.

யெல்லாம் இவ்வுலகிற்குப் பண்டை நற்றமிழை இறவாது செவ்வனம் பாதுகாத்து வளர்க்கின்ற புண்ணியமே நாளுஞ் செய்து நிலவும் பெருங் கல்வி வள்ளலாகிய மஹாமஹோபாத்யாய ஸ்ரீமான் உ.வே. சாமிநாதையரவர்கள் பாலுள்ளன. அவர்கள் இது போன்ற எத்துணையோ பல பெருநூல்களை ஆராய்ந்து வெளியிடு தலைப் புரிந்தருளுகின்றதனாலே இந்நூல் அவர்களால் வெளி யிடப் பல வருடங்களாக அவகாசம் பெறாததாயிற்று. அவர்கள் இந்நூலை அச்சிடின் அஃது இப்பதிப்பினும் எத்துணையோ பங்கு திருத்தமும் விளக்கமும் பெறுவதாகு மென்பதொருதலை. நிற்க,

இதன்பின் என் நண்பரும் பண்டைச் சங்கத்தமிழ் நூல் களை ஆராய்தலிலே ஊக்க மிகுத்தவரும், சங்ககாலத்து நிகழ்ச்சி களைச் சிறுவரும் எளிதிலறியலாம்படி பலபல கதைநூல்களால் விளக்கிய வரும் ஆகிய தமிழ்ப்பண்டிதர் கம்பர் விலாஸம் ஸ்ரீமான் வே. இராஜகோபாலையங்காரவர்கள் இந்நூல் அச்சிடுதலை மேற்கொண்டு அதற்காக வேண்டிய பரிசோதனையைச் செய் தளிக்குமாறு என்னை வேண்டினார்கள். அவர்களுக்கமும் பண்டைத்தமிழ் விருப்பமும் இப்பெருங்காரியத்தை இடையில் விடாது நிறைவேற்றல் கூடுமென்னும் எண்ணத்தையுண்டாக்கின மையாலும், எப்படியாயினும் நெடுங்காலமாக மறைந்துகிடக்கும் இவ்வரிய பெரியநூல் வெளிப்படல் வேண்டுமென்னும் வேண வாவாலும் என் சிற்றறிவிற் கியன்றவரை இந்நூலைப் பரிசோதித் துத்தர இணங்கினேன். ஷ ஐயங்காரவர்கள் என் பரிசோதனை யுடன் என்னருமை அம்மான்சேய் ஷ மு. இராகவையங்கார் அவர்கள் அரிய இனிய ஆராய்ச்சியையுந் துணையாகக் கொண்டு, பாடினோர்வரலாறு, அரசர் முதலியோர் வரலாறு, ஆராய்ச்சிக் குறிப்பு, அபிதானக்குறிப்பு, பொருட்குறிப்பு முதலிய பலவற் றுடன் இந்நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்கள். ஈராயிரம் வருடங்கட்கு முற்பட்டு வழங்கிய சொல்வழக்கும் பொருள் வழக்கும் மலிந்த இப் பெருநூலினை, அவ்வழக்குகளை அறிதற் கேற்ற சாதனங்கள் குறைந்துள்ள இப்பிற்காலத்தே ஆராய்ந்து உள்ளவாறு காண்டல் மிகவும் அரியதொன்றாதலால், இப்பதிப் பில் நல்லறிவாளர்க்குப் பிழைகள் ஆங்காங்குத் தோன்றுதல் கூடுமாயினும், அவற்றைத் திருத்திக்கொண்டு நோக்கி, இப்பதிப் பில் இவர்கள் செய்த வேலையை மதித்துப் பாராட்டுவார்களென் றெண்ணுகிறேன். இந்நூல் வெளியிடுவதற்கண் இவர்கட்குத்

திரவிய ஸஹாயத்தையும் வாக்ஸஹாயத்தையும் அப்போதப் போது செய்தருளிய கனவான்கள் செந்தமிழ்வேந்தர் தலைவராகிய மாட்சிமை பொருந்திய ஸ்ரீமான் பா. ராஜராஜேச்வரஸேதுபதி மஹாராஜா அவர்களும், கனம் ஆண்டிப் பட்டி ஜமீன்தாராவர் களாகிய ஸ்ரீமான் பெத்தாச்சிச் செட்டியாரவர்களும், சென்னை ஐகோர்ட்டு மாஜி நீதிபதி ஆனரபிள் ஸ்ரீமான் T.V. சேஷகிரி ஐயரவர்களும், மதுரை ஐகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் T.C. ஸ்ரீனிவாஸையங்காரவர்களும், யுநிவர்ஸிடி புரொபெஸர் ஸ்ரீமான் S. கிருஷ்ண ஸ்வாமி ஐயங்காரவர்களும், தஞ்சை வக்கீல் ராவ் பஹதூர் ஸ்ரீமான் K.S. ஸ்ரீநிவாஸ பிள்ளை அவர்களும், சென்னை School Book and Literary Society அங்கத்தினர்களும், சென்னை, C. குமாரசாமி நாயுடு கம்பெனியாரவர்களும், மேரிராணி கலா சாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கா.ரா. நமச்சிவாய முதலியா ரவர்களும் முதலிய உபகாரிகள் பலர் என்று தெரிகின்றேன்.

## இந்த நூற்பரிசோதனைக்குத் துணையாயின பிரதிகள்:

சென்னை Oriental Manuscript Library பிரதியைப் பார்த்து எழுதிக்கொண்ட கையெழுத்துப் பிரதி ... ... *1*

(இது செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ உ.வே. திரு. நாராயண ஐயங்கார் ஸ்வாமிகள் தமிழ்ச் சங்கத்திற்குத் தந்துதவிய தேவர் பிரான் கவிராயரவர்கள் வீட்டுப் பிரதியுடன் ஒப்புநோக்கித் திருத்தஞ் செய்யப்பட்டது.)

பெரும்பழனை ஏட்டைப்பார்த்து எழுதிக்கொண்ட கையெழுத்துப் பிரதி. ... ... *1*

திருநெல்வேலி ஸ்ரீமான் நெல்லையப்பக் கவிராயரவர்கள் ஏடு ... ... *1*

காலஞ்சென்ற சென்னை ஸ்ரீமான் தி.த. கனகசுந்தரம் பிள்ளை அவர்கள் ஏடு ... ... *1*

ஷியார் காயிதப் பிரதி ... ... *1*

சென்னை மேரிராணியார் கல்லூரித் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கா.ரா. நமச்சிவாய முதலியாரவர்கள் பிரதி ... ... 1

திருமயிலை வித்வான் ஸ்ரீமான் சண்முகம் பிள்ளையவர்கள் ஏடு (இது குறை) ... ... 1

இங்ஙனம் பொருளானுஞ் செல்வாக்கானும் பிரதிகளானும் இந்நூலச்சிடுதற்கண் உபகரித்த பெரியோர்கட்கும், பொருட் செலவையும் சிரமத்தையும் சிறிதும் பாராட்டாது இதனை வெளியிடுதலிலே கண்ணுங் கருத்து முடையராய் வேண்டிய வேலைகளைச் செய்து நிறைவேற்றிய ஷை ஐயங்காரவர்கட்கும் இத்தமிழ் நாடு நன்றி பாராட்டுங் கடப்பாடுடையதாகும்.

இங்ஙனம்,

**ரா. இராகவையங்கார்**

ஸேதுஸம்ஸ்தான வித்வான்.

# அகநானூறு ஒரு விஞ்ஞாபனம்

''அன்பே தகழியா வார்வமே நெய்யாக
வின்புருகு சிந்தை யிடுதிரியா - நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினே னாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்''

அகநானூறு அகநானூறு என்று கற்றார் பலரும் பன் னெடுங் காலமாக்ப் பேராவலோடு எதிர் பார்த்திருந்த இந்நூலின் பதிப்பு இற்றைக்கு ஓரைந்தாண்டுகட்கு முன்னரே அச்சாகி முடிந் திருந்தும், எனது உடம்பின் நோயினாலும், பொருண் முட்டுப் பாட்டாலும், ஸமீப பந்துக்களின் வியோகங்களினாலும், பிற காரணங்களாலும் பூர்ணமாக வெளிவரத் தடைப்பட்டு ஸர்வேச் வரன் கிருபையினால் இப்போது ஸம்பூர்ணமாக வெளிவந்துள் ளது. இந்நூலின் பெருமை முதலியவைகளை எடுத்துரைக்க யான் சிறிதும் பற்றேனென்பது ஒரு தலையாதலால், ஸேது ஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீ உ.வே.ரா. இராகவையங்கார் ஸ்வாமிகளின் முகவுரையைப் படித்துத் தமிழறிவாளர்கள் பெருமகிழ் வெய்துவ ரென நம்பி, இந்நூற் பதிப்பை வெளியிடுதற்கண் எனக்குற்ற சில செய்திகளை மாத்திரம் ஈண்டு உரைக்கலாயினேன்.

இற்றைக்கு ஒரு பதினைந்துயாண்டுகட்குமுன் நற்றிணை யுரையாசிரியரும் என் மனத்தே ஸர்வகாலங்களிலும் உறைந்து, ''நீ ஸர்வாபீஷ்டமும் அடைந்து க்ஷேமமாக நீடுழி வாழ்க'' என்று

என்னை அநுக்ரஹித்து வருபவருமான காலஞ்சென்ற பின்னத்தூர் அ. நாராயணஸ்வாமி ஐயரவர்கள் இந்நூலைச் சோதித்து உரை வரைந்து கொண்டிருந்த காலத்து எனக்கு இதன்கண்ணுள்ள பல வகையான சிறப்புக்களையும் எடுத்துச் சொல்லிக் கொண்டு வருவதுண்டு. யானோ அக்காலத்து இச் சிறந்தநூலின் இன்பப்பகுதியையாவது, தடையின்றி யொழுகும் நடைப்போக்கினையாவது மனத்தைக் கவருமியற்கை வருணனைகளையாவது பிற பெருமைகளையாவது பாராட்டுந் திறத்தேனல்லேனாய், இதன்கண்ணே பொதிந்து கிடக்கும் கதைக் குறிப்பினை மட்டும் பாராட்டி, அவற்றைத் தொகுத்தும் விரித்தும் சிறு கதைப்புத்தகங்களாக எழுதி வந்தேனாக, அவற்றைச் சென்னை க. குமாரசாமி நாயுடு ஸன்ஸ் கம்பெனியின் ஸொந்தக்காரர்களாகிய காலஞ் சென்ற ஸ்ரீமான் க. கன்னைய நாயுடு அவர்கள் அன்புடன் ஏற்று அச்சிட்டு வெளியிட்டனர். பின்னரவர்கள் அகநானூற்றினையே வெளியிடல் வேண்டுமென்று விரும்பி, ''நீர் இந் நெடுந்தொகையைக் குறிப்புகள் பலவற்றோடு பதிப்பித்திடுக'' என்று என்னைப் பலகாலும் தூண்டி, மழமழப்பான காகிதத்தில் காலிகோ பைண்ட் செய்த நோட்டுப் புஸ்தகங்கள் இருபது தந்து துரிதப்படுத்தினார்கள். அப்போது சென்னை மேரிராணியார் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமான் கா.ரா. நமச்சிவாய முதலியாரவர்கள்பால் அகநானூற்றுப் பிரதியொன்றிருக்கக் கண்டு, அதனை அவர்கள் அன்போடுங் கொடுக்கப் பெற்று, நள ௵ கார்த்திகை மீ 21 -ஆம் தேதி ஒரு பிரதி செய்து கொண்டேன். இப்பெருந்தகையாளர்களின் அன்புக்கு நான் எழுமையும் கடமைப்பட்டுள்ளேன். அதன் பின்னர்க் காலஞ்சென்ற ஸ்ரீமான் தி. கனகசுந்தரம் பிள்ளையவர்கள்பால் இந்நெடுந்தொகைப் பிரதிகள்இரண்டு பெற்று, என் பிரதியை அவற்றோடும் ஒப்பிட்டுக் கொண்ட பின்னர், சென்னை இராஜாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைக்குச் சென்று அங்குள்ள அகநானூற்றுப் பிரதியுடனும் ஒப்பிட்டுக் கொண்டு, பின்பு ஆசிரியர் வரலாறு, அரசர் முதலியோர் வரலாறு அபிதானக் குறிப்பு முதலிய பலவகைக் குறிப்புக்களையும் எழுதி வைத்துக் கொண்டேன். ஆயினும் என்பிரதியோ *336*-ஆம் பாடலின் கொளு முதலாக *343*-ஆம் பாடலின் முற்பகுதி ஈறாக ஆறு ஏழு பாடல்கள் முற்றுங் குறைந்தும் *91, 106, 107, 108, 111, 162, 223, 311, 400*-ஆம் பாடல்களில் பலபல அடிகள் குறைந்தும், வேறு பல பாடல்களில் சொற்களும் தொடர்களும் சிதைந்தும், பிறழ்ந்தும், பொருட்

பொருத்தமின்றியும், அடி நிரம்புறாதும் காணப்பட்டமையால், அச்சிடத் தக்கதென்று தோன்றவில்லை. அதனால் நான் பெரிதும் மனமழிந்து, எனக்குப் பரம குருவாய் அறிவு கொளுத்தி வருபவர்களும், சென்னை லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைத் தமிழ்ப்பண்டிதருமாகிய ஸ்ரீஉ.வே.மு. இராகவையங்கார் ஸ்வாமிகள் பக்கல் விண்ணப்பம் செய்துகொண்டேன். அவர்கள் என் துன்பத்தைக் கண்டிரங்கி, அப்போது சென்னைக்கு எழுந்தருளியிருந்த தமது அத்தை குமாரரும், ஸேதுஸம்ஸ்தான வித்வானுமான ஸ்ரீ உ.வே.ரா. இராகவையங்கார் ஸ்வாமிகள் திருவடிகளில் என்னை ஆற்றுப்படுத்தார்கள்.

சரணாகதனைக் கைவிடாதவர்களாகிய அப்பெரியார் என்னைப் பிரீதியுடன் அங்கீகரித்து, என் பிரதி குறிப்பு முதலியவற்றையும் கடாக்ஷித்து, தாம் பன்னெடுங்காலமுன்றொட்டு ஆழ்வார் திருநகரிப் பிரதி, பெரும்பழனைப் பிரதி நெல்லையப்பக் கவிராயரவர்கள் வீட்டுப் பிரதி முதலிய பல பிரதிகளைக் கொண்டு சோதித்துத் திருத்திவைத்திருந்த அகப்பாட்டின் சுத்தப்பிரதியையும், முதற்றொண்ணூறு பாட்டிற்குள்ள பழைய உரையையும் தந்து அநுக்ரஹித்தார்கள். இப்பெருங்கருணை வள்ளல்களுக்கு நான் ஜன்ம ஜன்மாந்தரங்களிலும் இவ்வாறே தாஸ்யனாகப்பிறந்து தொண்டுசெய்யும் பேற்றை ஸர்வேச்வரன் கிருபை செய்தருள்கவென்று பிரார்த்திப்பதல்லது மற்றென் செய்யவல்லேன்! நிற்க, நான் அச்சிறந்த சுத்தப் பிரதியோடு என் பிரதியை ஒப்பிட்டுச்சுத்தம் செய்துகொண்டு இராமநாதபுரத்திற்கே சென்று, அந்த ஸ்வாமிகளின் திருமாளிகையிலேயே ஒருமாதம் வரையில் தங்கி அவர்கள் போனகஞ்செய்த சேடமுண்டு, புனிதனாகி, இந்நூலின் நானூறு பாடல்களையும் அவர்கள் முன்னிலையில் சோதித்துக்கொண்டு சென்னை வந்து, ஸ்ரீ உ.வே.மு. இராகவையங்கார் ஸ்வாமிகள் ஸந்நிதியில் எல்லாம் விண்ணபஞ் செய்தேன். கேட்ட அவர்கள் உவகையெய்தி நான் பிரார்த்தித்தபடி, இந்நூல் அச்சாகுங் காலத்துச் செய்ய வேண்டிய சோதனைகளை யெல்லாம் செய்து தர, ஒவ்வொரு பாரம் புரூபையும் நான் இராமநாதபுரம் அனுப்பி, அது ஸேதுஸம்ஸ்தான வித்வான் ஸ்ரீ உ.வே.ரா. இராகவையங்கார் ஸ்வாமிகளால் கடைசியாகப் பார்வையிடப்பெற்ற பிறகு அச்சிடுவித்தேன். இவ்வா றிந்நூற்பதிப்பு இரண்டு வருஷகாலத்தில் பகவத் கிருபையால் மூலமுழுவதும் அச்சிட்டு முடிந்தது.

பின்னர் என் சிற்றறிவிற் கெட்டியமட்டும் நான் எழுதி வைத்திருந்த பாடினோர் வரலாறு முதலிய பல குறிப்புக்களையும் அச்சிட்டு அநேகமாக முற்றுவித்துட்டேன். இக்காலத்து நான் கடுமையான மார்புநோயினால் மெலிவுறவும் என் ஸமீப பந்துக்களிற் பலர் லோகாந்தரம் செல்லவும் ஸம்பவித்தமையால், நான் சென்னையிலிருக்க வியலாது என் கிராமத்திற்குப்போய் வஸிக்கும்படி நேரிட்டது. அங்கே என் நோய் அதிகரித்து விட்டமையை நோக்கிய அன்பர் பலரும் அகநானூற்றினை மூலமட்டிலாவது பைண்டு செய்து வெளியிடல் அத்தியாவசியக மாகுமென்று வற்புறுத்தினமையாலும், உடல் வலிபெற்று மறுபடி சென்னை வந்து முழுப்புஸ்தகமாக அகநானூற்றை வெளி யிடக்கூடுமென்னுந் தைரிய மெனக்கும் உண்டாகாமையாலும், அவர்கள் விருப்பப்படியே குறைப்புத்தகமாக மூலமாத்திரம் வெளியிட்டேன். இப்போது ஸர்வேச்வரன் கடாக்ஷமும் பாகவதர் களின் ஆசீர்வாதமும் இக்குற்றாலவாஸமும், என்னைக் கூற்றத்தின் வாயினின்றும் மீட்டுக் கொணர்ந்துவிட்டமையால், இம் முழுப் புஸ்தகத்தைத் தமிழறிவாளிகள் ஸந்நிதியில் ஸமர்ப்பிக்கின்றேன்.

நிற்க, இப்பதிப்பு வெளிவரல் வேண்டுமென்னும் பேரவா வினால் எனக்கு வாக்ஸஹாயம், திரவியஸகாயம் முதலியன செய்த பெருந்தகையாளர்கள் சென்னைரிடையர்ட் ஹைகோர்ட்டு நீதிபதி ஆனரபில ஸ்ரீமான் T.V. சேஷகிரி ஐயரவர்களும், மாட்சிமை தங்கிய ஸ்ரீமான் பா. ராஜராஜேச்வர ஸேதுபதி மகாராஜா அவர்களும், கனம் ஆண்டிப் பட்டி ஜமீன்தாரவர்களாகிய ஸ்ரீமான் பெத்தாச்சிச் செட்டியாரவர்களும், சென்னை யூனிவர்ஸிடி ப்ரொ பஸர் டாக்டர் ஸ்ரீமான் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும், மதுரைவக்கீல் ஸ்ரீமான் T.C. ஸ்ரீனிவாஸையங்காரர்களும், தஞ்சை வக்கீல் ராவ்பகதூர், K.S. ஸ்ரீனிவாஸ பிள்ளையவர்களும், சென்னை மேரிராணி கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான் கா.ரா. நமச்சிவாய முதலியாரவர்களும், சென்னை க. குமாரஸாமி நாயுடு ஸன்ஸ் தலைவர்களாகிய ஸ்ரீமான் க. ஜயராம நாயுடு அவர் களும், ஷெ ஆபீஸ் மானேஜர் ஸ்ரீமான் ம. முருகேச முதலியாரவர் களும், சென்னை ஆதி கம்பெனி ஸ்ரீமான் ஆதிகேசவுலு நாயுடு அவர்களும், சென்னை ஸ்கூல் புக் அண்ட் லிடரரி ஸொஸைடி அங்கத்தினரவர்களும் பிறமகோபகாரிகளு மாவார்கள். இப்பெருந் தகையாளர்கள் ஸர்வாபீஷ்டமும் பெற்று, இவ்வாறே நன்கொடை

யாளர்களாய் நீடுழி வாழ்கவென்று ஸர்வேச்வரனைப் பிரார்த்திப் பதல்லது என்னாற் செயற்பாலது மற்றென்னே! ''மாரியை நோக்கிக் கைம்மா றியற்றுமோ வையம்!!''

நெடுந்தொகை நூலெங்கே! நானெங்கே! மகாவித்வான் களாகிய ஸ்ரீ உ.வே.ரா. ராகவையங்கார் ஸ்வாமிகள் பாலும் ஸ்ரீ உ.வே.மு. ராகவையங்கார் ஸ்வாமிகள்பாலும் இந்நூலினை நான் பன்முறையும் சோதித்துக்கொண்டிருந்த போதும், அறிவில் மிகச் சிறியேனாகிய நான் இப்பதிப்பின்கண் பல பல பெரும் பிழைகள் செய்திருக்கக்கூடும். அவற்றையெல்லாம் நல்லறி வாளர்கள் திருத்திக்கொள்வதோடு, எனக்கு அவற்றை எடுத்துக் காட்டி நல்வழியி லுய்க்கவும் வேண்டுமெனப் பன்முறையும் வேண்டுகின்றேன். இவ்வளவு கிஞ்சிஜ்ஞனான என்னை யொரு வியாஜமாக வைத்துக்கொண்டு, இப்பெருங்காரியத்தை நிறை வேற்றிக் கொண்டருளிய ஸர்வேச்வரன் திருவடித் தாமரைகளைத் திரிகரணங்களாலும் அநவரதம் உபாஸிக்கின்றேன்.

இங்ஙனம்,

**வே. இராஜகோபாலன்**

கம்பர்விலாஸம், மயிலாப்பூர்.

திருக்குற்றாலம்
ருதிரோத்காரி ஹ
ஆனி மீ 13வ

[illegible]

[illegible] வேண்டுமென்றும் போவா [illegible]

[illegible] திரவிய ஸகாயம் [illegible]

செய்த பெருந் தகையாளர்கள் சென்னையிலிருந்து [illegible]

நீதிபதி ஆனரபிள் ஸ்ரீமான் T.V. சேஷகிரி ஐயரவர்களும், [illegible]

தங்கிய ஸ்ரீமான் [illegible] ராஜகோபாலாசாரி [illegible]

அவர்களும், [illegible] ஆனரபிள் [illegible] ஜட்ஜ் [illegible] ஸ்ரீமான்

[illegible] சென்னை யூனிவர்ஸிடி பிரொ

பஸர் டாக்டர் ஸ்ரீமான் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்களும்,

மதுரை வக்கீல் ஸ்ரீமான் T.C. ஸ்ரீனிவாசையங்காரவர்களும், தஞ்சை

வக்கீல் ராவ்பஹதூர், K.S. ஸ்ரீனிவாஸ பிள்ளையவர்களும்,

சென்னை மெட்ராஸ் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமான்

கா.ரா. நமச்சிவாய முதலியாரவர்களும், சென்னை க. குமாரஸ்வாமி

நாயுடு ஸன்ஸ் தலைவர்களாகிய ஸ்ரீமான் க. ஜயராம நாயுடு அவர்

களும், ஒரு ஆபீஸ் மானேஜர் ஸ்ரீமான் ம. முருகேச முதலியாரவர்

களும், சென்னை ஆதி கம்பெனி ஸ்ரீமான் ஆதிகேசவலு நாயுடு

அவர்களும், சென்னை [illegible]

[illegible] அவர்களும் பிறமகோபகாரிகளுமாவர்கள். இப்பெருந்

தகையாளர்கள் யாவரிடமும் பெற்ற இவ்வரிய நன்கொடை [illegible]

# கம்பன் கவிதை

## க. கம்ப ராமாயண ரசனை

(ஸுப்ரஹ்மண்ய ஐயர்)

### உபோற்காதம்

கம்ப நாட்டாழ்வார் எழுதிய திவ்ய கிரந்தமானது முப்பத்தைந்து தலைமுறைகளாகத் தமிழருக்கு ஆனந்தத்தைத் தந்து வருகிறது. இந்த ஆயிரத்தைம்பது வருஷங்களில் எத்தனை மேதாவிகள் கம்பனுடைய ராமாயணத்தை ஆராய்ந்திருப்பார்கள், எத்தனைபேர் பிரசங்கித்திருப்பார்கள், எத்தனை பேர் தமக்குள் தாமே படித்து ஆனந்த பரவசர்களாகி யிருப்பார்கள்! ஒவ்வொரு தலைமுறையிலும் கம்பராமாயணம் பிரசங்கிப்பதில் சிறந்தவர் என்று கீர்த்தி பெற்றவர் அனேகர் இருந்திருக்கிறார்கள். வேறெந்தக் காவியத்தையும் பற்றி இத்தகைய தனிப் பெயரை வித்துவான்கள் பெற்றதாகவாவது விரும்பியதாகவாவது நாம் கேட்டதில்லை. இப்பொழுதுகூட, சிலப்பதிகாரம் பிரசங்கிப்பதில் சிறந்தவர் என்றாவது, மணிமேகலை சொல்லுவதில் சாமர்த்தியம் நிறைந் தவர் என்றாவது வித்துவான்களைப் பற்றிப் புகழுவதில்லை. ஆனால் கம்பனுடைய ராமாயணத்தைப் பிரசங்கிப்பதையே ஒருவர் தமது காரியமாக வைத்துக்கொண்டால் மனிதர் அவர் களுக்கு, அவர்களுடைய புலமைக்கும் சொற்பொழிவுக்கும் தக்கபடி, தனி மரியாதை செலுத்துகிறார்கள். அவர்களும் கம்ப

ராமாயணப் பிரசங்கி என்கிற பெயரை ஆசையோடே விரும்பு கிறார்கள்.

ராமாயணம் புண்ணிய கதையாகையால் கதையை உத்தே சித்துப் பக்தர்கள் அதற்குத் தனி மரியாதை செலுத்துகிறார்கள் என்று சொல்லப்படலாம். ஆனால், வில்லிபுத்தூரார் பாரதத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது, ஆரியப்ப புலவர் என்னப்படுகிற அனதாரிப் புலவரின் பாகவதத்தைப் பிரசங்கிக்கிறவர்கள் என்றாவது, கச்சியப்பருடைய ஸ்கந்த புராணத்தைப் பிரசங்கிக் கிறவர்கள் என்றாவது யாருக்கும் கியாதி வந்து நாம் கேட்ட தில்லை. ஆகவே இந்தப் புகழும் புகழிலுள்ள விருப்பமும் கம்பன் எழுதிய காவியத்தின் சிறப்பைத்தான் காட்டுகின்றனவே ஒழிய கதையின் சிறப்பைக் காட்டவில்லை. கம்பனுடைய ராமாயண மானது மற்ற கவிகள் எழுதிய ராமசரிதைகளையும் தமிழில் எழுதப்பட்ட இதர காவியங்களிற் பெரும்பாலனவற்றையும் கூட 'வெயிலிடைத் தந்த விளக்'கொளிபோலாக்கிவிட்டது.

இது மாத்திரமில்லை. கம்ப ராமாயணமானது ஹோமர் எழுதிய இலியாதையும், விர்க்கீலியன் எழுதிய ஏனயிதையும், மில்டனுடைய சுவர்க்க நஷ்டம் என்ற காவியத்தையும் வியாஸ பாரதத்தையும், தனக்கே முதனூலாக இருந்த வால்மீகி ராமாயணத்தையும் கூட பெருங் காப்பிய லட்சணத்தின் அம்சங்களுள் அனேகமாய் எல்லாவற்றிலும் வென்றுவிட்டது என்று சொல்லுவோம். இவ்விமரிசனத்தைத் தொடர்ந்து வாசிப் போருக்கு எமது இவ்வபிப்பிராயத்தை மெய்ப்பிக்க முயலுவோம்.

# ரசனைச் சுவை

காவிய இலக்கணத்தை நிர்ணயிப்பதில், பாரத தேசத்து இலக்கண ஆசிரியர், நமக்குத் தெரிந்தமட்டில், விவரியாமல் விட்டுவிட்ட சில அமிசங்களை மேனாட்டு இலக்கண ஆசிரியர் விஸ்தாரமாக விவரித்திருக்கிறார்கள். நம் நாட்டு இலக்கண ஆசிரியர் பொருள் யாப்பு அணிகைளப் பற்றி நன்றாக ஆராய்ந் திருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். அலங்கார சாஸ்திரத்தை நம் நூலாசிரியர் ஆழமாக ஆய்ந்திருக்கிறார்கள் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், காவிய சமக்ரத்தைப் பற்றின ஆராய்ச்சிகள் இதுவரை வெளிவந்திருக்கும் நூல்களில் விஸ்தார மாகக் காணப்படவில்லை. பெருங் காப்பியத்தில் என்ன என்ன விஷயங்களைப் பற்றிப் பேசவேண்டும் என்று இலக்கணங்களில் ஓர் பெரிய, ஜாபிதா காணப்படும். ஆனால் காவியம் எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், என்ன என்ன இலக்கணங்கள் பெருங் காப்பியத்துக்கு இன்றியமையாதவை, பெருங் காப்பியங்களின் போக்குக்கும் ஏனைய காவியங்களின் போக்குக்குக்கும் என்ன வித்தியாசம், என்ற விஷயங்கள் நம் இலக்கணங்களில் விசாரிக்கப் படவில்லை. மேனாடுகளில் அரிஸ்தோத்தலன் காலம் முதற் கொண்டு இலக்கண நூலாசிரியர் காவிய அமைப்பைப் பற்றிப் பெரிய பெரிய ஆராய்ச்சிகள் வெளியிட்டிருக்கிறார்கள். நம்மவர் காட்டிலுள்ள மரங்களைத் தனித்தனியே கவனித்துக் கொண்டு வந்து அரணியத்தை மறந்துவிட்டார்கள்; மேனாட்டவர் மரங் களைக் கவனித்ததோடுகூட அரணியத்தைப் பற்றியும் விசேஷமான ஆராய்ச்சிகள் செய்துளார்கள்.

காவிய சமக்ர இலக்கணத்தைத் தண்டி கவி தனது அலங்கார இலக்கணத்தில் பாவிக அணியை வர்ணிக்கும்போது சில வார்த்தைகளில் சொல்லி முடித்துவிடுகிறான். அரிஸ்தோத்தலன், ஒராஸியன், புவாலோ, வீதா, பெயின் முதலிய மேனாட்டு இலக்கண ஆசிரியர்கள் விரிவாகச் செய்துள்ள ஆராய்ச்சியைப் பற்றி இங்கு ஓரிரண்டு வார்த்தைகள் சொல்லுவது பொருந்தும். அவ்விலக்கணக்காரர்களுடைய பிரதான அபிப்பிராயம் என்னவென்றால், ஓர் பெருங்காப்பியம் அனேக அவயவங்கள் சேர்ந்ததாயிருப்பினும் ஒரு ஜீவப் பிராணியைப் போல ஓர் தனிப் பிண்டமாயிருத்தல் வேண்டும். தலை, இடை, கடை என்ற பாகுபாடும், அனைத்தையும் சேர்த்துப் பார்க்கும் போது ஏகம் என்கிற உணர்ச்சியும் அக்காவியத்தில் தோன்றவேண்டும். ஒவ்வோர் அவயவமும் தன் தனக்கு முன்னேயுள்ள அவயவத்தோடும், பின்னேயுள்ள அவயவத்தோடும் பிணைக்கப்பெற்று ஒன்று என்கிற உணர்ச்சியை வளர்க்க வேண்டும்.

பஞ்ச தந்திரக் கதை, விக்கிரமாதித்தன் கதை, மதன காமராஜன் கதை, அராபியக் கதை முதலிய கதைகளை ஓர் பக்கமும், அரிச்சந்திர புராணம், கந்த புராணம், ராமாயணம் முதலிய காவியங்களை ஓர் பக்கமும் வைத்துச் சீர்தூக்கிப் பார்த்தால் நாம் மேற்காட்டிய இலக்கணத்தின் கருத்து விளங்கும். பின் சொல்லிய மூன்றிலும் ஒரே ஒரு வஸ்துதான் காவியமாக எழுதப்படுகிறது. இவற்றுள் அனேக உபகதைகள், வர்ணனைகள் உபாக்கியானங்கள் வருகின்றன என்பது வாஸ்தவம். ஆனால் இவை அனைத்தும் கதையின் மத்திய சம்பவத்துக்குத் துணையாக நிற்கின்றன. — மத்திய சம்பவத்திற்கு அலங்காரமாகவோ, மத்திய சம்பவத்திற்கு வித்தாகவோ, மத்திய சம்பவத்தினின்று இயற்கையாக விளைந்த விளைவாகவோ, விளங்குகின்றன. முன் சொல்லப்பட்ட நூல்களோ, அவை செய்யுள் நூல்கள் அல்ல என்பது ஓர் பக்கமிருக்க, தனிக் கதைகளின் கேவலம் சேர்க்கையேயாகும். அவைகளில் மத்திய சம்பவத்திற்கும் கதைகளுக்கும் உள்ள சம்பந்தம் மிகமிக லேசானது — அதைச் சம்பந்தம் என்றுகூடச் சொல்லத் தகாது. மகா காவியத்தின் பகுதிகளுக்கோ இத்தகைய ஒட்டின்மை இராது. அவற்றின் சம்பந்தம் ஜீவ சம்பந்தம். உபாக்கியானங்கள் முதலிய புற அணிகள் பெருங் காப்பியத்தினுள் அளவுக்கு மீறி இரா. மற்ற உறுப்புக்களெல்லாம் காவியத்துக்கு அகத்துறுப்புக்

களாகவே விளங்கும். அவ் உறுப்புக்களில் எதை எடுத்துவிட்டாலும் கதை ஊனமாகிவிடும்.

பாவிக அணி என்று நாம் கூறுவதை மேனாட்டவர் 'ஆர்க்கிதெக்தோனிக்ஸ்' (Architectonics) என்கிறார்கள். இப் பதத்துக்கு ரசனை அல்லது காவிய நிர்மாணம் என்று பொருள் சொல்லலாம். இது மனைச் சிற்ப நூலினின்று எடுத்துக்கொண்ட பெயராகும். ஓர் அரண்மனையையோ கட்டடத்தையோ கட்டுவதற்கு அனந்த கோடி ரீதிகள் உண்டு. ஆனால் சில ரீதிகள்தாம் கட்டடத்துக்கு அழகு தரும். பெரும்பாலவை வானத்தையும் சூரிய ஒளியையும் மூடுமே ஒழிய நமது சௌந்தரிய உணர்ச்சியைத் திருப்தி செய்வியா. அப்படியே ஓர் காவியத்தைப் பல மாதிரி எழுதலாம். நள சரித்திரம், ராமாயணம், பாரதம், அரிச்சந்திர புராணம் முதலிய காவியங்களெல்லாம் அவ் அவ் ஆசிரியர்களின் மனோதர்மத்துக் கேற்றபடி எழுதப்பட்டுள்ளன. சில சம்பவங்களைச் சிலர் விரிக்கிறார்கள், மற்றவற்றைச் சுருக்கி விடுகிறார்கள். வேறு சிலர் முற்சொல்லியவர்க்கு மாறாகச் செய்கிறார்கள். சிலர் சில சம்பவங்களை எடுத்துவிட்டுப் புதிய சம்பவங்களைப் புகுத்துகிறார்கள். ரஸிகனுடைய மனதிற்குத் திருப்தி உண்டாகும்படி எந்தக் கவியின் அமைப்பு அமைந்திருக்கிறதோ அவனைத் தான் ரசனையில் சிறந்தவன் என்று சொல்லலாகும். உண்மையாகப் பார்க்கையில் பெருங் காப்பியங்களுக்கு ரசனையே இன்றியமையாதது. ரசனா சுகம் இல்லாமல் வேறு எந்த சுகம் இருப்பினும் பெருங் காவியங்கள் பெருமையுள்ளனவாகா.

காவிய ரசனையை மகா வித்துவான் ஒருவனுடைய ராக விஸ்தாரத்துக்கு ஒப்பிடுவோம். எல்லா வித்துவான்களும் ஏழு ஸ்வரங்களைத்தான்—அல்லது அர்த்த ஸ்வரங்களையும் சேர்த்துக் கொண்டால் இருபத்திரண்டு ஸ்வரங்களைத் தான்— கையாடுகிறார்கள். இந்த ஸ்வரங்கள் துவாரா நவரஸங்களைத்தான் ஊட்டுகிறார்கள். ஆனால் ஒரு வித்துவானுடைய ஆலாபனத்துக்கும் இன்னொரு வித்துவானுடைய ஆலாபனத்துக்கும், ஒரு பாடகன் ஓர் கீர்த்தனையைப் பாடுவதற்கும் இன்னொருவன் அதே கீர்த்தனையைப் பாடுவதற்கும் எத்தனை பேதம்! ஒருவன் ராகத்தின் ஸ்வரங்களில் யாதொரு அபஸ்வரத்தையும் கொண்டு வந்து கலக்காமல் பாடிவிடுகிறான். ராகம் பிழையின்றி சாஸ்தி

ரோக்தமாகப் பாடபட்டிருக்கும். லயத்தில் யாதொரு பிசகும் இராது. கேட்போர் 'சபாஷ்' என்று சொல்லிக்கொண்டும் சிரக் கம்பம் செய்துகொண்டும் கேட்பார்கள். ஆனால் அவர்களுடை இருதயத்தில் யாதொரு சலனமும் ஏற்பட்டிராது. அலை வந்து மோதியும் அசையாத பாறை போல அவர்களுடைய இருதயம் அப்படியே இருந்துவிடும். இன்னொருவன் வருகிறான். அதே ராகத்தைப் பாடுகிறான். ஆனால், எல்லோரும் அமுத மழையில் அகப்பட்டவர்கள் போல் ஆகிவிடுகிறார்கள். அவரவர்களுடைய சம்ஸ்காரத்திற் கேற்றபடி அவரவர்களுடைய இருதயம், மந்த மாருதத்தில் ஊசலாடும் பூங்கொம்பர்போலவும், சிற்றலைகளால் அசைந்தாடும் தாமரை போலவும், கருப்பஞ் சாற்றில் கரையும் கற்கண்டைப் போலவும், அக்னியில் நெகிழ்ந்து உருகும் மெழுகைப் போலவும் தங்கத்தைப் போலவும் ஆகிவிடுகிறது. அவர்களுடைய மனது புதிய உலகத்தில் சஞ்சரிக்கத் துவக்கி விடுகிறது. மனோ லோகத்தில் சித்திரத்துக்கு மேல் சித்திரம் தோன்றிக்கொண்டே வருகிறது. அவர்கள் லயப்பட்டு, வயப்பட்டுப் போய்விடுகிறார்கள். இந்தக் கலைஞனுக்கும் முன் சொல்லப்பட்ட கலைஞனுக்கும் உள்ள வித்தியாசம், இவனிடம் கனிவு இருந்தது, அவனிடம் அது இல்லை. ஆனால் அது மாத்திர மில்லை. இவனுடைய பாட்டின் அமைப்பு மனோஹரமாக அமைந்திருக்கிறது. ஒவ்வொரு ஆவிருத்தமும் அதற்கு முன்னே பாடப்பட்ட ஆவிருத்தத்தினின்று இயற்கையாக வளர்ந்த வளர்ச்சியாகும்; அதே மாதிரி தனக்குப் பின்னே வரப்போகும் ஆவிருத்தத்திற்குத் தோற்றுவாயும் ஆகும். ஒவ்வொரு 'சங்கதி'யும் அந்தந்தப் பதங்களை அலங்கரிக்க விழுந்த அலங்காரமாகுமே யன்றி, பதங்களையே முழுக்கி மூடிவிடும் வெறும் சபத சாலங் களாகா. ஒவ்வோரி ரஸமும் போதிய அளவுக்கு விஸ்தரிக்கப்பட்டு இயற்கையான சோபானங்கள் வழியாக அதனோடு பொருந்தக் கூடிய வேறொரு சுவைக்கு வழிகாட்டிக்கொண்டு போகும். கடைசியாக எல்லா ஆவிருத்தங்களும் எல்லாச் சுவைகளும் இன்னலந் தெரியவல்லாருடைய இருதயம் லயித்துப் போகும்படி ஓர் சமஷ்டி உணர்ச்சியை உண்டாக்கும்.

இதே மாதிரிதான் ஒருகாவிய ரசனையும். காவியத்தின் தனித்தனிப் பாகங்களிலுள்ள இன்சுவை ஒரு பக்கமிருக்க, பாகத்து கும் பாகத்துக்கும் உள்ள பொருத்தம் அழகாக இருப்ப

தோடு காவியமானது நல்ல சமஷ்டீகரணத்தைப் பெற்றிருக்க வேண்டும். எவ்வளவுக் கெவ்வளவு இந்த சமஷ்டீகாரம் அழகாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு காவியமானது ரஸிகருடைய இருதயத்தைக் கவர்ந்து எல்லோரும் விரும்பத்தக்கதாகும்.

கம்ப ராமாயணத்தில் உள்ள ரசனைச் சுவை மிகவும் உயர்ந்தது. ரஸிகருடைய அறிவுக்கு அது அமுதமாக நிற்கின்றது. கம்ப ராமாயணத்தின் ரசனைச் சுவையை உணராமல் மற்ற சுகங்களை மாத்திரம் உணருகிறவர்கள் அதன் சுவையில் செம்பாதிக்கு மேல் இழந்துவிடுகிறார்கள்." ராமாயணத்தின் அழகை விஸ்தரிக்கிறவர்கள் ஒவ்வோர் பாகத்தின் அழகை, சிற்சில வேளைகளில் ஒவ்வோர் செய்யுளின் அழகைத்தான் எடுத்துக் காட்டுகிறார்கள். ராமாயணத்தை ஓர் சிற்பியால் சமைக்கப்பெற்ற அரண்மனையாகப் பாவித்து, அவ்வரண்மனையின் ஒவ்வோர் அவயவத்துக்கும் மற்ற அவயவங்களுக்கும் உள்ள பொருத்தத்தை யும், அவயவங்களுக்கும் அரண்மனையின் சமக்ர அமைப்புக்கும் உள்ள பொருத்தத்தையும் வியக்தீகரித்து எடுத்துக் காட்டும் விமரிசனங்கள் இதுவரையில் வெளிவரவில்லை.

## க. பால காண்டம்

ராமாயண கதை அயோத்தியா காண்டத்தில்தான் ஆரம்பிக் கிறது என்று சொல்ல வேண்டும். வால்மீகி பகவான் தனது ராமாயணத்துக்கு 'ராவண வதம்' என்றும் 'சீதையின் பெருங் கதை' என்றும் மறுபெயர் கூறுகிறான். ராமாயணத்தின் வஸ்து, அதாவது பிரதான சம்பவம் ராவண வதம். அதற்கு நெருங்கிய காரணம் அரணியத்தில் நேரும் சீதா ராவண சந்திப்பாதலால், ராமன் சீதா சமேதனாய்க் காட்டுக்குச் செல்வதையே அந்த வஸ்துவுக்கு பீஜம், அதாவது விதை என்று கூறவேண்டும். அயோத்தியா காண்டத்தில் தான் இவ்விதை விதைக்கப்படுகிறது. ஆதலால் அதுவேதான் கதையின் உண்மையான துவக்கம். அது முதற் கொண்டு கதை யானது ஓர் அரண்மனைக் கட்டடம் போல அழகாயும் கம்பீர மாயும் கிளம்பி, வஸ்து பூர்த்தியாகிற வரையில் ஒரே வளர்ச்சியாக வளர்ந்து செல்கின்றது. இப்பெரிய கட்டடத்திற்குப் பால காண்டம் முன்வாயிற் சோலையாக விளங்குகிறது. அரண்மனைக்குள் பிரவேசித்து அதன் சிற்பவேலையில் மூழ்குவதற்கு முன் படிப் போனுடைய மனது இவ் உத்தியானத்தில் ஆனந்தத்தோடு உலவும்.

இதில் ராமனுடைய அவதாரமும் விவாகமும் வர்ணிக்கப்படு கின்றன. ஆனால், இவை மாத்திரம் இக்காண்டத்தின் 1,400 செய்யுள்களை நிரப்பப் போதா. அதற்காகக் கம்பன் நாட்டு வர்ணனைகளும், நகர வர்ணனைகளும், எழுச்சி, உண்டாட்டு, வரைக் காட்சி, ஆற்று வர்ணனைகளும், உலாவியல் வர்ணனை களும் பிறவும் கொண்டு இக்காண்டத்தை விரிக்கின்றான். தவிர இக்காண்டத்தில் விசுவாமித்திரனாலும் விசுவாமித்திரனைக் குறித்தும் சொல்லப்படுகிற கதைகளைக் கம்பன் வால்மீகியி னின்று எடுத்துக் கொண்டு பால காண்டத்தின் அளவைப் பெருக்கிக் கொள்ளுகிறான். வஸ்துவின் பெருமையையும் விஸ்தாரத்தையும் உத்தேசிக்க, இந்த முகவுரையை நாம் அனாவசியம் என்றாவது, அதி விளம்பனமாக இருக்கிறது என்றாவது கண்டிக்க வேண்டியதில்லை. ஆனால் காவியத்தோடு அவயவ சம்பந்தம் அதற்கில்லை என்பதை நாம் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

## உ. அயோத்தியா காண்டம்

ராவண வதத்தையே ராமாயணத்தின் வஸ்துவாக வால்மீகி பகவான் அமைத்தது போலவே கம்பனும் அமைத்திருக்கிறான் என்று மேலே கூறினோம். இவ் வஸ்துவின் ஒருமையைக் கம்பன் மறப்பதே யில்லை. முக்கியமான கட்டங்களிலெல்லாம் அவன் தனக்கும் படிப்போருக்கும் அதை நினைவுறுத்திக் கொண்டே செல்லுகிறான். பால காண்டத்தில் ராமனால் அடிபட்டுத் தாடகை விழும்போது அவள்,

> ............................................. தலைகள் தோறும்
> முடியுடை அரக்கற்கு அந்நாள் முந்திஉற் பாத மாகப்
> படியிடை அற்று வீழ்ந்த வெற்றிஅம் பதாகை ஒத்தாள்,

என்று வஸ்துவை உபமானத்தின் வாயிலாகக் காட்டுகிறான். அவ்விதமே மந்தரையின் சூழ்ச்சியினால் கைகேயியின் மனம் கலைந்து மாறிய போது,

> ..............................................இமையோர்
> மாயை யும், அவர் பெற்றநல் வரம் உண்மையாலும்,

ஆய அந்தணர் இயற்றிய அருந்தவத் தாலும்,
..........................................................
அரக்கர் பாவமும், அல்லவர் இயற்றிய அறமும்

துரக்கவேதான் நல் அருள் துறந்தனள் அத் 'தூய்மொழி'. கடைசியாக ராவணன் போர்க்களத்தே பட்டு வீழ்ந்து கிடக்கையில் மந்தோதரி வந்து புலம்பும் போது, கம்பன் அவள் வாயில் இம் முத்தாய்ப்பை வைத்துவிடுகிறான். அஃதாவது:

'காந்தையருக்கு அணி அனைய சானகியார்
பேர் அழகும் அவர்தம் கற்பும்,
ஏந்துபுயத்துஇராவணனார் காதலும், அச்
சூர்ப்பநகை இழந்த மூக்கும்,
வேந்தர்பிரான் தயரதனார் பணியினால்
வெங்கானில் விரதம் பூண்டு
போந்ததுவும், கடைமுறயே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற்று, அம்மா!'

அச்சம்பவங்கள் அனைத்தும் பளிங்குக் கற்கள் போல நின்று ராவண வதமாகிய மண்டபத்தைக் கட்டவே கருவியாக நிற்கின்றன என்பது கவியின் அபிப்பிராயம். ஏனெனில் ராவண வதம் இன்றி இந்திரன் சுயராஜ்ஜியத்தை அடைவது எங்ஙனம்?

இந்த வஸ்து ஒருமை உணர்ச்சி அயோத்தியா காண்டத்திலிருந்துதான் உண்டாகிறது என்று ரசனை என்ற பகுதியில் கூறினோம்.

அயோத்தியா காண்டத்தினின்று கதையானது மத்த கஜத்தின் நடையோடு, கங்காப் பிரவாகத்தின் கமனத்தோடு, ராவண வதம் வரை செல்லுகிறது. உபாக்கியானங்களுக்காக வேனும், மத்திராலோசனைக் காகவேனும் கதை நிற்கிறதே என்றால், அது இயற்கையை யொட்டியே அவ்வாறு நிற்கின்றது. வன ராஜனான கஜேந்திரனும் அங்கங்கே ஆகாரத்துக்காக நிற்கிறான்; அங்கங்கே இளைப்பாறுகிறான். கங்கா நதியும் சம தடத்தில் வேகம் குறைகிறது. யமுனை முதலிய உப நதிகளின் நீரை ஏற்றுக்கொள்ளுகையில் வேகத்தைத் திரும்பப் பெற்றுக் கண்டோர்

வியக்கச் செல்லுகிறது. கிளை நதிகளையும் கால்வாய்களையும் நிரப்பிக்கொண்டு சற்று ஆலசியமாக நடக்கிறது. ஆனால், ஆலசியமெல்லாம் அடுத்த கட்டத்தில் இரண்டு பங்கு வேகமாகச் செல்லுவதற்காகத்தான். கடைசியில் சமுத்திர ராஜனோடு கலப்பதற்கு முன் கங்கா தேவியின் அழகையும் காம்பீர்யத்தையும் வாயால் வர்ணித்துச் சொல்ல ஒண்ணுமோ? தேவர்களும் கண்டானந்திக்கத்தகும் காட்சியன்றோ கங்காதேவியின் சமுத்திர சங்கமம்! இத்தகைய வேகமும், ஓட்டமும், பொலிவும் இருக்கிறது கம்பராமாயணத்தில்.

அயோத்தியா காண்ட ஆரம்பத்தில் சக்ரவர்த்தி ராமனுக்குத் தன் கையாலேயே முடி சூட்ட வேண்டும் என்ற கருத்துடன் மந்திரக் கிழவரை அழைத்து அனுமதி கேட்கிறான்.

**‘ஊருணி நிறையவும், உதவு மாடுஉயர்**
**பார்கெழு பயன்மரம் பழுத்தற்று ஆகவும்**
**கார்மழை பொழியவும், கழனி வாய்நதி**
**வார் புனல் பெருகவும், மறுக்கின் றார்கள் யார்?’**

ஆகையால் மந்திரக் கிழவர்களின் பிரதிநிதிகளாக நின்று வசிஷ்டனும் சுமந்திரனும் ராமனுக்கு முடிசூட்ட அரசனுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். எல்லாம் செவ்வனே நடந்தேறிப் பட்டாபிஷேகமும் அழகுபெற நிறைவேறும் என்று படிப்போருக்குத் தோன்றுகிறது. ஆனால் இல்லை.

**இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை போல்**
**துன் அருங் கொடு மனக் கூனி**

தோன்றிவிட்டாள். ராமனிடம் பரம பிரேமை செலுத்துவதாக நினைத்துவந்த கைகேயியின் மனத்தையும் கலைத்துவிட்டாள். ஆகவே,

**தீய மந்தரை இவ்வுரை செப்பலும் தேவி**
**தூய சிந்தையும் திரிந்தது சூழ்ச்சியின்!**

ராவண வதத்தின் பீஜம் விதைத்தாகிவிட்டது.

விதை விழுந்ததும் என்ன வேகமாக வளரத் துவக்குகிறது! தசரதன் உயிருக்கே ஹானி வந்துவிடும் என்பதை அறிந்தும் கைகேயி அவனுடைய மனதை உடைத்துவிட்டு, தான் சொல்லி அனுப்பியதற்கு வந்த தாயென நினைவானான ராமன் முன்னே கூற்றெனத் தமியளாய்த் தோன்றி,

**'ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீபோய்த்**
**தாழ்இருஞ் சடைகள் தாங்கித் தாங்குஅருந் தவம்**
**மேற் கொண்டு**
**பூழிவெங் கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி,**
**ஏழ் இரண்டு ஆண்டின் வாஎன்று இயம்பினன் அரசன்'**

என்றாள். தீரோதாத்தனான ராமனும் அப் பணியைத் தலைமேற் கொண்டு அப்பொழுதே அரணியம் போகத் தீர்மானித்து விட்டான்.

ஆனால், ராமன் மாத்திரம் காட்டுக்குத் தனியே சென்றால் ராவணவதம் எவ்வாறு நடக்கும்? ஆகையால் வால்மீகி சீதை யையும் ராமனோடு கூடக் காட்டுக்கு அனுப்புகிறான். வில்லாள ரானார்க்கெல்லாம் மேலவனான இந்திரசித்தனைக் கொல்லுவதற் கும் வேறொரு வீரன் இருந்தால்தான் ரசனை சோபிக்கும். ஆகவே லட்சுமணனும் ராமனோடு கூடக் காட்டுக்கு ஏகுகிறான். ஆனால் வால்மீகி கைகேயியினிடத்தில் ராமனுடன் லட்சுமணனையும் சேர்த்து அனுப்பி அவளுடைய கொடுஞ் சொற்களை அவன் உட னிருந்து கேட்கும்படிச் செய்கிறான். ரசனா தந்திர பாரங்கதனான கம்பன் அத்தகைய உடன்போக்கின் இழுக்கை உன்னி ராமனைக் கைகேயியின் முன்னே தனியே நிறுத்துகிறான். ஆகையினால் ராமனுடைய மகுடாபிஷேகம் நடக்கவில்லை என்ற செய்தி அவனுக்கு வெகு நேரம் கழித்தேதான் தெரிகிறது. ஆக, நம் கவி லட்சுமணனை,

**கேட்டான் இளையோன், கிளர்ஞாலம் வரத்தினாலே**
**மீட்டாள் அளித்தாள் வனம் தம்முனின், வெம்மை முற்றித்**
**திட்டாத வேற்கண் சிறுதாய்என, யாவ ராலும்**
**மூட்டாத காலக் கடைத்தீ யெனமூண்டு எழுந்தான்,**

என்று நாடகத்தில் தோற்றுவிப்பது போலத் தோற்றுவித்தல் சாத்தியமாகிவிடுகிறது.

இங்கு வால்மீகியின் ரசனைக்கும் கம்பனுடைய ரசனைக் கும் பேதத்தைச் சற்று ஆழமாகக் கவனித்தல் பயனுடையதாகும். வால்மீகியில் ராமன் தசரதனுடைய சன்னிதிக்கு வந்த பிறகு கஅ– சுலோகங்களால் என்ன நேர்ந்திருக்கலாம் என்று தனக்குள் தானே ஆலோசித்துக் கொண்டு கைகேயியைக் கேட்கிறான். என்ன என்று கேட்ட பிறகு, கைகேயி பழங்கதையெல்லாம் சொல்லி விட்டு எட்டு சுலோகங்களால், 'நீ அரசன் வார்த்தையை நிறை வேற்று வாயா?' என்று கேட்கிறாள். பிறகு, தான் வரங்களைப் பெற்ற வரலாற்றைச் சொல்லிக் 'காட்டுக்குப் போ!' என்று ஆஞ்ஞா பிக்கிறாள். ராமனுடைய பதிலும் வளவள என்றே யிருக்கிறது. இத்தகைய நீட்சியினால் கதை தொய்ந்து போய்விடுகிறது. கம்பனிலோ, ராமன் வருவதும், கைகேயி ஆணையிடுவதும், ராமன் ஒரு வார்த்தையில் மறுமொழி கூறிவிட்டு விடைபெற்றுக் சோசலை கோயில் போவதும் அதிவேகமாக, மிகக் கெடுபிடியாக நடப்பதால் கதை நாணேற்றின வில்லைப் போல் வன்மை யுடைத்தாய் நடக்கிறது. இன்னும் வால்மீகியில் சீதையையும் லக்ஷ்மணனையும், அழைத்துக்கொண்டு ராமன் மூர்ச்சித்துப் போயிருந்த தரசதனிடம் மறுபடியும் விடைபெற்றுக் கொள்ள வருகிறான். இங்கேயும் அசுவபதி மகாராஜாவின் உபாக்கியானம் பிரவேசித்துக் கதையின் ஓட்டத்தைக் காலமில்லாத காலத்தில் தடுக்கிறது. தவிர, கைகேயியே மரவுரியை ராமனிடம் தருகிறாள். ராமன் சீதைக்கு அதை அணிவிப்பதைக் கண்டு வசிஷ்டர் தாங்க மாட்டாமல், 'நானும் மற்ற மந்திரிகள் முதலாயினோரும் சீதா ராமர்களோடு காட்டுக்குச் செல்லுகிறோம்' என்று சொல்லிவிட்டு, பிறகு, 'சீதை ஆபரணங்கள் அணிந்து கொண்டாகிலும் போகட் டும்' என்று சொல்லி முடிக்கிறான். இந்த அற்ப விஷயம் பிரவே சிப்பதால் கதை மகா காவிய லட்சணத்தை இழந்துவிடுகிறது. தவிர, ராமன் தசரதனிடம் கோசலையை ஒப்பிப்பது ஸ்வபாவீக மாக இருந்தாலும் இந்தப் பாகமே வால்மீகியில் சம்பந்தா சம்பந்தமின்றி ஊழற்று இருக்கிறது. கம்பனோ சுமித்திரையின் அரண்மனையில் ராமலக்ஷ்மணர் இருக்கையில் கைகேயி அனுப்பிய சீரை வரும்படி செய்து, அதினின்றும், பரிபூரண

ரஸத்தைப் பிழிந்தெடுத்துத் தருகிறான். அனுப்பிய மரவுரியைக் கண்டு வெதும்பி,

'யாணர்த் திருநாடு இழப்பித்தவர் இந்த எல்லாம்
பூணப் பிறந்தானும் நின்றான், அவை போர்விலோடும்
காணப் பிறந்தேனும் நின்றேன்அவை காட்டுமின்!'

என்று ராமலக்ஷ்மணன் கூறும் வாக்கியத்தின் இருதய பேதன துக்கம் படிப்போர் மனதில் சுரீர் என்று தைக்கிறது. சீதா ராம சம்வாதத்தைக் கம்பன் ஒழுங்குபடுத்தி நன்கு அமைத்திருக் கிறான். தவிர,

காரை ஒத்தவன் போம்படி கண்டஅவ்
ஊரை உற்றது உணர்த்தவும் ஒண்ணுமோ?

என்று சொல்லிவிட்டு, தசரதனுடைய அரண்மனை வாயிற் படியைச் சார்ந்து அங்கு கூடியிருந்த தசரதனுடைய பத்தினி களினிடத்தில் ராமன் விடை கேட்ட காலத்தில்,

ஏத்தி னார்தம் மகனை; மருகியை
வாழ்த்தி னார்; இளை யோனை வழுத்தினார்;
'காத்து நல்குமின், தெய்வதங் காள்!' என்றார்
நாத்த ழும்ப அரற்றி நடுங்குவார்!

என்று சொல்லி ராமன் அயோத்தி நகர் நீங்கும் தன்மையை வர்ணிக்கும் தோரணை மிகவும் ரஸமாக இருக்கிறது என்று காவிய இலக்கண அறிஞர் கூறத்தக்கதாக இருக்கிறது.

ராமன் காட்டுக்குச் செல்லுகையில் யாத்திராதானம் செய்கிறதை வால்மீகி வெகு விஸ்தாரமாக வர்ணிக்கிறான். இந்த இடத்தில் கதையின் வேகத்தைக் குறைப்பது சரியாக இல்லை. ஆதலால் கம்பன் கதையை இத்தகைய வர்ணனையினால் நிற்கச் செய்யாமல் உரிய வேகத்துடன் செல்லச் செய்கிறான். இங்கே கம்பனுடைய கதை அசுவ கதியில் செல்லுகிறது. அதாவது கம்பீர மாயும் வேகமாயும் ஒரே மூச்சில் வெகு தூரம் செல்லுகிறது. பிறகு சிறிது நேரம் ஆசுவாசம் செய்துகொள்ளுகிறதற்காகக் குதிரை

நிற்குமே அது போலச் சற்று விளம்பனமான வர்ணனைகளுடன் தேங்குகிறது. ஆனால் உடனே பழைய வேகத்துடனும் உக்ரத் துடனும் கிளம்பி வெகு தூரம் கட்டுக்கு அடங்காது போலச் செல்லு கிறது. இவ்வாறு,

**விசையால் அனுங்க வடமேரு, வையம்**
**ஒளியால் விளங்க, இமையாத்**
**திசையானை கண்கள் முகிழா ஒடுங்க**
**நிறைகால் வழங்கு சிறையா**

னான பெரிய திருவடியின் கம்பீரமான கமனத்தையும் ஐராவதத் தின் தாட்டியையுமே தனக்கு உவமையாகக் கொண்டு கம்ப னுடைய அயோத்தியா காண்டமானது ராமனைத் தண்ட காரணியத் தின் எல்லை வரையில் கொணர்ந்து சேர்த்துவிடுகிறது.

பரதனுடைய சம்பந்தம் கதைக்கு—ராமாயண கதை அனைத்துக்குமே என்று பொதுவாகவே சொல்ல வேண்டியது— உபாக்கியானசம்பந்தமாகத்தான் இருக்கிறது. ஆனால் உபாக்கி யான சம்பந்தமாக இருந்தாலும், சம்பந்தம் எத்தனை நெருங்கிய தாக இருக்கிறது! எவ்வளவு அழகாக இருக்கிறது! ராமனுடைய அரணியப் பிரவாசம் அயோத்தியா காண்டத்துக்கு ஓர் முத்தாய்ப் பைக் கொடுத்துவிட்டது என்று சொல்லலாம். ஆனால், வால்மீகி பகவான் அம்முத்தாய்ப்புக்கும் ஓர் முத்தாய்ப்பு வைக்க வேண்டும் என்று விரும்பி மகா சாந்தனும், மகா சுத்தனும், பின்பிறந்தோர் களுக் கெல்லாம் பெரிதும் உத்தமனான, ஆதர்ச சகோதரனான, பரதனை அரங்கத்தில் பிரவேசிக்க விட்டிருக்கிறான். கம்பன் கதையையும் போக்கையும் அவனிடம் நின்று வாங்கிக் கொண்டி ருக்கிறான் என்பது உண்மையே. ஆனால் அவன் இந்தப் பரத பிரவேசத்தை வால்மீகியையும் விட மிகமிக அழகாக அமைத் திருக்கிறான். இந்த உபாக்கியானத்தை விஷய ஆராய்ச்சியில் விஸ்தாரமாக ஆராய்ந் தெழுதுவோம். இங்கு இதன் ரசனை அழகைப் பற்றி மாத்திரம்தான் குறிப்பிட வேண்டியது அவசியம்.

அயோத்தியா காண்டத்தில் சுஎ-வது சர்க்கத்தில் தசரதன் இறந்துவிட்டான் என்று கண்டதும் பிரஜைகளெல்லாம் வசிஷ்ட னிடத்தில் அரசனில்லாமல் தாங்கள் க்ஷேமமாயிருத்தல் சாத்திய

மில்லை என்று முறையிடுகிறார்கள். ஆனால் அம் முறையீடு தர்ம சாஸ்திரத்தில் சொல்லியது போலச் சொல்லப்பட்டிருக்கிறதே ஒழியக் காவியத்தில் சொல்லப்பட வேண்டிய ரீதியில் சொல்லப் படவில்லை. அதேமாதிரி கoo-வது சர்க்கத்தில் ராமன் பரதனை எள சுலோகங்களால் ராஜ்ஜியம் சரிவர நடக்கிறதா என்று விசாரிக் கிறான். இவைகளும் கoஅ, கoகூ -வது சர்க்கங்களில் வரும் ஜாபாலி ராம சம்வாதமும் சம்ஹிதைக்குரிய வர்ணனைகளாகுமே யன்றி காவிய அமைப்புக்கேற்ற வர்ணனைகளாகா. இதை யெல்லாம் பார்க்கும் போது,

> **நைவ வ்யாகரணஜ்ஞ மேதி பிதரம்,**
> **ந ப்ஹ்ராதரம் தார்கிகம்,**
> **தூராத் ஸங்குசிதேவ கச்ச்ஹதி புநச்**
> **சாண்டாலவத் ச்ஹாந்தஸாத்;**
> **மீமாம்ஸாந்புணம் நபுமஸக மிதி**
> **ஜ்ஞாத்வா நிரஸ்தா தரா**
> **காவ்யாலங்கரணஜ்ஞ மேத்ய கவிதா**
> **காந்தா வ்ரிணீதே ஸ்வயம்!★**

---

★ (இ-ள்.) கவிதை என்னும் அணங்கு, இலக்கண வித்துவானைத் தந்தையென மதித்து அவனை அணுகாள்; தார்க்கிகனைச் சகோதரன் என்று பாவித்து அவனை நெருங்காள், வேதாத்தியயனம் செய்தவனை (யும், சந்தத்தையே கவனிப்பவனையும்) விட்டுச் சண்டாளர்களிடம் நின்று ஓடுகிறவர்கள் போல ஓடியே போய்விடு கிறாள்; மீமாம்சையை ஆராய்பவனை நபும்ஸகன் என்று நினைத்து அவமதித்து விடுகிறாள்; காவியாலங்கார சாஸ்திர மறிந்தவனைக் கண்டதும் அவனையே தன் கொழுநனாகப் பாவித்து அவனைச் சேருகிறாள்.... வால்மீகியைச் சாமானிய கவியாக, நாம் பாவிக்க வில்லை. உலகத்திலுள்ள முதல் ஏழெட்டு மகா கவிகள் என்று கணக்கிட்டு எந்த ஜாதி அறிஞர் எண்ணினாலும் அந்தக் கணக்கில் வால்மீகியின் பெயரைச் சேர்க்காதிருக்க முடியாது. எமது சொந்த அபிப்பிராயத்தில் உலகத்தின் ஒரு தனிக் காவியம் என்று சொல்லத் தகுந்தது கம்பராமாயணம்தான் என்றும், வால்மீகி ராமாயணம் அதற்கு அடுத்த ஸ்தானத்தை வகிக்கும் என்றும் சொல்லுவோம். ஆனால் இங்கே வால்மீகி காவிய ரீதியை மறந்து சம்ஹிதை ரீதியில் இறங்குகிறான் என்பது எமது அபிப்பிராயம்.

என்ற சுலோகம் நமது ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால், கம்பன் தன் கதையைக் காவியமாகவே கருதி, சம்ஹிதைக்காரர்கள் சொல்லுவது போலச் சொல்லாமல், சுவைபட வகுத்தலையே தன் தர்மமாகக் கொண்டு தன் காவிய மாளிகையைக் கட்டியுள்ளான். வால்மீகியில் அயோத்தியா காண்டத்தில் அஉ-வது சர்க்கத்தில் பரதன் சித்திரகூடத்தை நோக்கிப் போவதற்கு வழியெல்லாம் சீர்திருத்தி அமைக்க உத்தரவு செய்த பிறகு, வசிஷ்டன், 'நீ பட்டாபிஷேகம் செய்து கொள்ள வேண்டும்' என்று வற்புறுத்துகிறான். இது சம்பா விதமாக இல்லை. இதிலெல்லாம் கம்பன் மிக மிக ஜாக்கிரதையாக இருந்து கதையைக் கொண்டுபோகிறான். தசரதனுக்காகவேண்டிய கருமங்களையெல்லாம் செய்து முடித்தானதும் கம்பன் ஓர் மந்திர சபை கூட்டுவிக்கிறான். அதில் வசிஷ்டன் பரதனைப் பார்த்து, 'நீ ராஜ்ஜிய பாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்று வேண்டுகிறான். பரதன் அரணியம் சென்று ராமனை அழைத்து வரவேண்டும் என்கிற தன்னுடைய நிர்ணயத்தை அந்தக் கூட்டத்தில்தான் முதல்முதல் தெரிவிக்கிறான். அங்கே வசிஷ்டனுடைய வாதத்திற்கெல்லாம் சமாதானம் சொல்லித் தன் நிச்சயத்துக்கு அவனையும் உட்படச் செய்த பிறகே வழிகளைத் திருத்த ஆக்ஞாபிக்கிறான். பரதனுடைய ராம பக்தியைப் பார்த்துக் கோசலை வருந்துவதாக எழுதுவது வால்மீகியின் கற்பனைத் திறத்தைக் காட்டுகிறது. ஆனால் கம்பன் அதை அங்கு காட்டாமல், யுத்த காண்ட முடிவில் மீட்சிப் படலத்தில் காட்டுவதற்காக நிறுத்திக்கொண்டு, தன் ரசனைத் திறமையை விளக்குகிறான். இன்னும், ராமனுடைய பர்ணசாலையைக் கண்டு பரதன் வேகமாகச் செல்லுகிறான் என்கிற வர்ணனைக்குப் பிறகு சீதையிடம் ராமன் சித்திரகூட பர்வதத்தை வர்ணித்துப் பேசிக் கொண்டிருப்பதாகக் கதையை வால்மீகி கொண்டுபோகும் போக்கு சம்பாவித விரோதமாக இருக்கிறது. கதையின் வேகத்தையும் குறைக்கத்தகாத இடத்தில் அவ்வர்ணனை குறைக்கிறது.

இம்மாதிரி கட்டங்களில் கம்பன் அசுவ தாட்டியில் செல்வது வழக்கம். பரதனது சைனியம் வருவதைக்கண்ட லக்ஷ்மணன் ஆவேசத்துடன் ராமனிடம் சென்று பரதனைத் தூஷிக்கிறான். ஆனால், கால் தாக்க நிமிர்ந்து, புகைந்து கனன்று, பொங்கும் ஆறாக் கனல் ஆற்றும் ஓர் அஞ்சன மேகம் என்ன ராமன்,

**'எனைத்துஉள மறை, அவை இயம்பற் பாலன,**
**பனைத்திரள் கரகரிப் பரதன் செய்கையே!**
**அனைத்திறம் அல்லன்அ வல்ல வான்: அது**
**நினைத்திலை, என்வயின் நேய நெஞ்சினால்!'**

என்று முதலாய்ச் சொல்லிவிட்டுப் பரதன் ஜடாவல்கல தாரியாய்த் தானே நெருங்கியதும் லட்சுமணனுக்கு,

**'தேர்ப்பெருந் தானையால் பரதன் சீறிய**
**போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு!'**

என்று குத்திக்காட்டிச் சொல்லுகிறான். அதற்குள்ளும் பரதன் வந்து ராமன் பாதத்தில் வீழ்கிறான். சீதைக்கு வனத்தின் அழகுகளைக் காட்டுவது போன்ற அகால விளம்பனங்க ளின்றிக் கதை ஸ்தாயிக்கு மேல் ஸ்தாயியாக ஆரோகணக் கிரமத்திலேயே செல்லுகிறது. தசரதன் சௌக்கியமா என்று ராமன் கேட்பதும், பரதனுடைய வார்த்தையைக் கேட்டதும் ராமனுடைய பிரலாப மும் மூர்ச்சையும், சக்ரவர்த்தியின் சரமக் கிரியைகள் ஆனதும் ராஜ்ஜியபாரத்தை ஏற்றுக் கொள்ளும்படி பரத ராமர்கள் பரஸ்பரம் வேண்டிக்கொள்வதும், வசிஷ்டன் ராமனை வற்புறுத்துவதும், ராமன் யாதொன்றுக்கும் இணங்காது நிற்பதும், வீண் விவாதங் களின்றி மிகக் கெடுபிடியாக நடைபெறுகின்றன. ஜாபாலியின் அசந்தர்ப்பமான சம்வாதத்தில் கதையின் போக்குத் தேக்கெறிந்து போய்ச் சுவை கெட்டுப் போய்விடுகிறது என்று கண்டு, கம்பன் அவ் உபாக்கியானத்தை அறவே ஒழித்துவிட்டான்.

ஆரணிய காண்டத்திலும் பின் காண்டங்களிலும் கம்பன் ரசனையை எவ்வளவு அழகாகச் செய்திருக்கிறான் என்பதை அடுத்தாற் போல் காட்டுவோம்.

## ந. ஆரணிய காண்டம்

ஆரணிய காண்டம்தான் ராமாயணத்தின் மத்திய பாகம். கிஷ்கிந்தா காண்டம் கேவலம் உபாக்கியானமே யானதால் கதையின் காண்ட வரிசையிலும் ஆரணிய காண்டத்தையே தான் மத்திய காண்டமாகக் கொள்ள வேண்டும். இதில்தான் ராம

ராவணரின் பகைமைக்கு நேரான காரணமான சீதாபஹரணம் நிகழ்கின்றது. ஆதலால் ராம கதையாகிற கன்னிகையின் மேகலா பரணமாக விளங்குகிற இக்காண்டத்தின் ரசனை மிக அழகாக அமைந்திருத்தல் வேண்டும். கம்பன் அவ்வாறு அமைத்தே யிருக்கிறான் என்று இவ்விடத்தில் காட்டுவோம். அதனோடு இக் காண்டத்தில் வால்மீகியின் ரசனையைக் கம்பன் மாற்றியிருக்கிற இடங்களெல்லாம் ரஸக்ஞர்களுக்கு நல்விருந்தாக இருக்கின்றன என்றும் காட்டிவிடுவோமானால் படிப்போர் கம்பனுடைய ரசனாசக்தியை மதிக்க வேண்டிய அளவுக்கு மதிப்பர் என்பதில் எமக்கு ஐயமில்லை.

இக்காண்டத்தில் முதல் உஉசவிருத்தங்கள் வரையில் கதை ஆலசியமாகத்தான் நடக்கிறது. விராதன் வதைப் படலம் மாத்திரம் சிறிது வேகத்தைத் தாங்கி நிற்கின்றது. ஆனால் அது —விராத னுடைய ஸ்தோத்திரம் இருப்பினுங்கூட — வேதாளக் கதையின் ஜாதியைச் சேர்ந்ததே யொழிய, மகா காவிய ஜாதியைச் சேர்ந்த தன்று. ஹோமர் எழுதிய ஒதூஸியத்தில் வரும் குக்ளோப உபாக்கி யானம், விர்கீலியனுடை ஏனையத்தில் வரும் ஹார்ப்பியரின் செய்தி★ ஆகிய இவைகளோடுதான் இந்த விராதன் கதையையும், இக்காண்டத்தின் கடைசியில் வரும் அயோமுகியின் கதையையும் ஒப்பிடலாகும். சரபங்கர் பிறப்பு நீங்கு படலம் கதைக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை—அதை எடுத்துவிட்டதனால் கதைக்கு எவ்வித நஷ்டமும் ஏற்படாது. அகத்தியப் படலத்தின் விஷயத்தை ஐரோப்பியக் கவிஞர் அது கம்பனில் தோன்றுமிடத்தில் கூறமாட்டார்கள். கதையின் பிற்பாகத்தில் யாராவது இரண்டு நாயகர்கள் சம்பாஷிக்கும் போது இவ் விஷயம் உபாக்கியானமாக வரும்படி செய்வது அவர்களுடைய முறையாகும். அவ்வாறு செய்திருந்தால் இவ்விடத்திலுள்ள ரசனையைவிட உயர்ந்த ரசனையாயிருந்திருக்கும். ஆனால் சூர்ப்பநகையின் பிரவேசத்தி லிருந்து கம்பனுடைய ரசனை மேனாட்டுக் காவியங்களின் சுவையில் தோய்ந்தவருக்கும் கீழ்நாட்டுக் காவியங்களின் ரஸத்தைப் பருகி அனுபவிப்பவருக்கும் சமமான இன்பத்தைத் தரும். இவ் இரசனையை ஆராய்ந்து பார்ப்போம்.

---

* The episode of Polyphemus of Cyclops in the Odyssey of Homer and the account of the Harpies in Virgl's Æneid.

பஞ்சவடியில் சீதா ராம லக்ஷ்மணர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாளில், உடன்பிறந்தே கொல்லும் வியாதியைப் போல் ராவணனுக்கு உடன்பிறந்தாளே யாயினும் அந் நிருதர் வேந்தனை மூலநாசம் பெற முடிக்கும் மொய்ம்பினாளான சூர்ப்பநகை ராமன் இருந்த சூழல்வாய் வந்து தோன்றுகிறாள். ராமனுடைய ரூப லாவண்யத்தைக் கண்டவுடன் காமாதுரையாகி, அவள் தன் அரக்க உருவத்தை மாற்றிக் கொண்டு, தேவ கன்னிகை போன்ற ஜகன் மோகனமான உருவம் ஒன்றைத் தரித்துக்கொண்டு ராமன் கண்ணெதிரே வருகிறாள்.

கம்பனுடைய சந்தங்களைப் பற்றிய விசாரணை இவ்வாராய்ச்சியின் இறுதியில்தான் செய்வது முறையானாலும் இங்கே எடுத்துக்கொள்ளுகிற சந்தம் விஷயத்துக்கு மிகவும் பொருத்தமானது என்று நாம் கூறாமலிருக்க முடியவில்லை. பாலகாண்டம் கோலங்காண் படலத்தில் சீதாதேவி சபா மண்டபத்தில்,

**சிற்றிடை நுடங்க, ஒளிர் சீறடி, பெயர்த்(து)**
**அன்னமும், அரம்பையரும், ஆர்அமிழ்தும் நாண**
**மன்அவை இருந்தமணி மண்டபம்**

அடைந்ததை வர்ணிக்க எடுத்துக்கொண்ட சந்தத்தையே, தாமரைக் குளத்தில் அன்னம் நீந்தி வரும் உணர்ச்சியையும், இன்பப் படகு வலிக்கப்பட்டு வரும் ஒய்யாரத்தையும் அது நினைவுக்குக் கொண்டுவருவதால், கம்பன் இங்கும் கையாளுகிறான்.

சூர்ப்பநகையை அரங்கத்தில் தோற்றுவிக்கும் அழகைத் தான் என்னென்று சொல்லலாம்! வால்மீகியில் சூர்ப்பநகையின் வரவு சாமானியமாகத்தான் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ராமன் ரிஷிகளோடும் சீதா லக்ஷ்மணர்களோடும் உட்கார்ந்துகொண்டு அவர்களுக்குக் கதைகள் சொல்லிக் கொண்டிருக்குங் காலத்தில் சூர்ப்பநகை, சிவந்த தலைமயிரும், கொடிய கண்களும், நரை திரை உள்ள உடலும் முதலிய அலங்காரங்களுடன் ராமனிடம் வந்து, 'பத்தினியோடுகூட இந்தப் பிரதேசத் திற்கு வந்த நீ யாவன்? உன்னுடைய விருத்தாந்தங்களெல்லாம் என்ன?' என்று கேட்கிறாள். ராமன்,

'நஹி தாவத் மனோஜ் ஞாங்கி
ராக்ஷஸீ ப்ரதிப்ஹாஸி மே'

என்று சொல்லுகிற வாக்கிலிருந்துதான் உரைகாரர் சூர்ப்பநகை யௌவன உருவத்தை எடுத்துக் கொண்டு ராமனிடம் வந்திருக்க வேண்டுமென்று கவி அநுமானிக்கச் செய்கிறார் என்கிறார்கள். சூர்ப்பநகை கேட்டதும் ராமன் தன்னுடைய பூர்வோத்தரத்தைச் சொல்லிவிட்டுச் சூர்ப்பநகையின் பூர்வோத்தரத்தைக் கேட்பதும், சூர்ப்பநகை தான் ராமனைக் காமிப்பதாக முதலெடுத்ததுமே வெள்ளையாகச் சொல்லி விடுவதும் வேலைப்பாடில்லாமல் மொட்டையாக இருக்கிறது. ஆனால் கம்பனில், சூர்ப்பநகை மோகனமான உருவத்தைத் தரித்துக்கொண்டு, நூபுரம் மேகலை முதலிய ஆபரணங்கள் குலுங்க ராமன் தனியே இருக்கும் இடத்தை நோக்கி வர, அவ்வுருவத்தைக் கண்ட எம்பெருமான்,

'பாருழையின் இல்லதுஒரு மெல்உருவு பாரா,
ஆருழைஅ டங்கும்! அழ கிற்கு அவதி உண்டோ?'

என்று நினைக்கிறான். அவள் வந்து, வெவ்விய நெடுங்கண் அயில் வீசி, அயல் பார்த்து, நவ்வியின் ஒதுங்கி, இறை நாணி அயல் நின்றதும், ராமன் அவள் செய்தியை விசாரிக்கிறான். சம்பாஷணை வெகு ருசிகரமாக, இயற்கையில் நடைபெறுவது போல, நடக்கிறது. இடையில்தான் அமுதின்வந்த அருந்ததிக் கற்பின் அஞ்சொல் வேயிடை தோளினளான சீதை ராமனிடம் வருகிறாள். இந்தச் சிறு, ஆனால் ரசனைத் திறம் அனைத்தையும் காட்டுகின்ற தந்திரத்தினால், சீதையை ஓர் அரக்கியென்று சூர்ப்பநகை கூறும்படி செய்வதும், ராமன் அதைக் கண்டு சிரித்துச் சூர்ப்ப நகையின் தன்மையைப் பரிபூரணமாகத் தெரிந்து கொண்டுவிடும் படி செய்து கதையை அழகுபட அமைப்பதும் கவிக்குச் சாத்திய மாகிவிடுகிறது. அதனோடு மானம் லவலேசமு மிழுக்கா மறம் நிரம்பிய கம்பனுடைய ராமன் சூர்ப்பநகையின் ஸ்வரூபத்தைக் கண்டபிறகுதான்,

தரையளித்த தனிநேமித் தயரதன் தன் புதல்வர்யாம்
..........................................................

கரைஅளித்தற்கு அரியபடைக் கடல் அரக்கர்
குலம் தொலைத்து, கண்டாய், பண்டை
வரை அளித்த குலமாட நகர்புகுவேம்
இவைதெரிய மனக்கொள்!

என்று அகங்காரத்தோடும் கர்வத்தோடும் சொல்லுகிறான்.

கர தூஷண திரிசிரர்களுடைய யுத்தம், வால்மீகியில் போலவே கம்பனிலும், யுத்தகாண்டத்தில் வரப்போகும் கோர யுத்தங்களுக்கு ஒத்திகையாக விளங்குகிறது. சூர்ப்பநகை ராவண சந்திப்பிலும் சம்பாஷணையிலும் கம்பன் அபூர்வமான திறமை காட்டுகிறான். பரத ராம சமாகமம் போல வால்மீகியில் இச் சகோதர சகோதரி சந்திப்பும் சம்ஹிதை வழியைத்தான் பின்பற்றுகிறதே யொழியக் காவிய வழியைப் பின்பற்றவில்லை. சூர்ப்பநகை, 'நீ ராஜ்ஜியத்தைக் கவனிப்பதில்லை, விஷய போகத்தில் இறங்கிவிட்டாய், வேவு சரியாகப் பார்ப்பதில்லை, கரதூஷணாதியர் இறந்ததைப்பற்றி நீ இன்னும் தெரிந்துகொள்ள வில்லை,' என்று முதலாகச் சொல்லி ராவணனைத் திட்டிவிட்டு, சம்பந்தாசம்பந்த மில்லாமல்,

'தீக்ஷ்ணம், அல்பப்ரதாதாரம்
ப்ரமத்தம், கர்விதம் சட்ஹம்,
வ்யஸனே ஸர்வ ப்ஹூதானி
ந அப்ஹிதாவந்தி பார்த்ஹிவம்'★

என்பன போன்ற மொழிகளை அவனிடம் பேசுகிறாள். இவ்வாறு இருபத்து மூன்று சுலோகங்களால் சூர்ப்பநகை தகுதியில்லா அரசன் இம்மாதிரி இருப்பான் என்று இராவணனிடம் சொல்லி வருதலில் சுவை சிறிதும் இல்லாமலிருக்கிறது. தவிர இச்சம்பா ஷணைக்கு முன்னாகவே அகம்பனன் என்னும் அரக்கன் கரன் முதலாயினோர் பட்டவாற்றைச் சொல்லிச் சீதையை அபகரித்து வருதல்தான் ராமனைத் தண்டிக்கும் முறை என்று ராவணனுக்குப்

---

★ (இ-ள்) 'கடுஞ்செயலன், இவறற்குண முடையான், பொச்சாப்புடை யவன், கர்வமுடையவன், மூர்க்கன் ஆகிய இத்தகைய அரசர்களுக்குக் கேடு வந்த காலத்தில் யாரும் உதவார்.'

போதித்ததன்மேல் ராவணன் மாரீசனுடைய உதவியை வேண்டின தாகவும், மாரீசன் ராமனுடைய பராக்கிரமத்தைப் பற்றிச் சொல்லி ராவணனைத் தன் ஊருக்குத் திரும்ப அனுப்பி விட்டதாகவும் வால்மீகி கதையைக் கொண்டுபோகிறான். சூர்ப்பநகை இதன் பிறகு 'சீதையை அபகரித்துவா!' என்று ராவணனிடம் சொல்லு வதும், ராவணன் மறுபடி மாரீசனிடம் சென்று கூறியதையே கூறுவதும் கதைக் கிரமத்துக்குப் பொருந்தாததாக இருக்கிறது.

கம்பனில் இவ் இரசனையைக் கவனிப்போம். இரத்தம் ஒழுகும் அவயவங்களோடு சூர்ப்பநகை ராவணனைப் பார்க்க வருங்காலத்திலே அரக்கிய ரெல்லாம்மனங் கலங்கிக் கொண்டும், அழுது கொண்டும், இதைப் பார்த்ததும் ராவணனுடைய கோபம் என்ன செய்யுமென்று அஞ்சிக்கொண்டும் நிற்கிறார்கள். இனி வர இருக்கும் ராவணனுடைய கோபத்திற்கும், சீதாபஹரணத்திற்கும், ராம ராவண யுத்தத்திற்கும், அரக்கரின் வீழ்ச்சிக்கும் இந்த உபோற்காதம் அந்தம் தருகிறது. வந்த சூர்ப்பநகை வால்மீகியில் போல ராவணனை இழித்துக் கூறவில்லை. கம்பனுடைய ராவணனை உரிமையின்றிச் சீறத் தகுந்தவர் யாருமில்லை. முறையிரப்பவள் செய்யவேண்டிய பிரகாரம் சூர்ப்பநகை ராவணனது பாதத்தில் வீழ்கிறாள். அந்த நிலைமையில் அவளைக் கண்ணுற்றதும் ராவணனுடைய புருவங்கள் நெரிந்தன; நயனங்கள் எரிந்தன; கோபத்தால் உடல் விம்மத் தோள் வலயங்கள் விரிந்தன! அவன் கோபாவேசத்தைக் கண்டு சூரியன் நடுங்குகிறான்; தேவர் கள் ஓடி ஒளிகின்றனர்; ஆதிசேஷன் கூட நெளிந்துகொடுத்துக் கொள்ளுகிறான். கடைசியாக,

**மடித்தபில வாய்கள்தொறும் வந்துபுகை முந்த,**
**துடித்ததொடர் மீசைகள் சுறுக்கொள உயிர்ப்ப,**
**கடித்தகதிர் வாள்எயிறு மின் கஞல, மேகத்து**
**இடித்தஉரும் ஒத்துஉரறி,**

'யாவர் செயல்?' என்று ராவணன் கேட்கிறான்.

---

மானிடர்தாம் வாளுருவி வெட்டினர் என்று சொல்லிச் சூர்ப்பநகை நிறுத்துவதால், ராவணன் 'பயமில்லாமல் உள்ளதைச் சொல்' என்று சொல்வதும், ராமலக்ஷ்மணரின் ரூபலாவண்ணியத்

தில் அழுந்திய மனத்தினளாகிய சூர்ப்பநகை அவர்களது அழகை ஆசை தீர வர்ணிப்பதும் இயற்கையாகிறது. 'என்னுடைய ஆக்கினைக் குட்பட்ட காட்டில் என்னுடைய அருமைச் சகோதரிக்கு இந்த அவமானம் ஏற்பட்டு விட்டது பார்த்தாயா?' என்று ராவணன் தன்னைத்தான் கடிந்து கொள்ளுவதும், கரதூஷணர் அவர்களைக் கொல்லவில்லையோ என்பதும், கரன் பேரைக் கேட்டதும் சூர்ப்பநகை கண்ணீர் விட்டுப் புரண்டு அழுது கரதூஷணர் வீழ்ந்த வரலாறு கூறுவதும், ராவணன் நிறை நெடுங் கண்களெல்லாம் நெருப்புக் கால, 'நீ இடை இழைத்த குற்றம் என்னைகொல்?' என்று கேட்பதும், காரணம் சொல்லுகையில் பொய்யொன்றைச் சேர்த்து, ராவணனுடைய அந்தப்புரத்துக்காக, பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்தவளும், தாமரை இருந்த தையல் சேடிஆம் தரமும் அல்லாதவளும், அஞ்சொற்கள் அமுதில் அள்ளிக் கொண்டவளும், கடலினும் பெரிய கண்களையுடையவளும் ஆன சீதையை வர்ணித்து ராவணனுடைய மனத்தில் காமத் தீயைக் கொளுத்திவிடுவதும், மலையருவி விழுவது போலக் கதையில் தேக்கமின்றிச் சரளமாகப் பெருகி வருகிறது. அயோத்தியா காண்டத்தில் 'ஆழிசூழ் உலக மெல்லாம்' என்ற செய்யுளில் போட்ட வித்து காவிய பூமியில் விழுந்து, மண்ணையும் நீரையும் உண்டு, உப்பி, அங்குரித்துவிட்டது.

> **கரனையும் மறந்தான், தங்கை மூக்கினைக் கடிந்து நின்றான்**
> **உரனையும் மறந்தான், உற்ற பழியையும் மறந்தான், வெற்றி**
> **அரனையும் கொண்ட காமன் அம்பினால், முன்னைப் பெற்ற**
> **வரனையும் மறந்தான், கேட்ட மங்கையை மறந்தி லாதான்!**

என்ற செய்யுளில் அவ் வித்து முளையைக் காட்டத் துவக்கி விட்டது.

ராவணனுடைய காம நோயை வர்ணிக்கக் கம்பன் 80 செய்யுள்கள் எழுதியிருக்கின்றான். இது அதிவர்ணனையே. ஆனால் கும்பகர்ணன் மாண்டும், இந்திரசித்தன் தலை யிழந்தும், மூல பலங்கள் மடிந்தும் அவியாத காமத்துக்கு இத்துணை விளம்பனமான வர்ணனை வேண்டும் என்று கவி நினைத்திருக்கிறான் என்று கொள்ளல் வேண்டும். இவ்வர்ணனைகளில் பெரும்பாலன பன்னாட்டு இலக்கியங்களையும் ஆராய்ந்து சுவையறிவைச்

சேகரித்தவருக்குச் சுவை கொடா. இவற்றில் இயல் பின்மைதான் மிகுதியாகக் காணப்படுகிறது. முன் சொன்ன காரணத்தை வைத்துக்கொண்டு பார்த்தால் இதிலும் ரசனையின் குறைபாடு அத்துணை அதிகமாகத் தோன்றாது என்று சொல்லுவோம். இருப்பினும் இப்பாகம் வேறுமாதிரி அமைக்கப்பட்டிருத்தலே முறை என்று எடுத்துக் காட்ட நாம் பின்வாங்குகிறோமில்லை.

மாய மான் விஷயத்தில் லக்ஷ்மணன் ஆக்ஷேபித்ததும் ராமன் சமாதானம் கூறிவிட்டு வேட்டைக்குப் புறப்பட்டுச் சென்றுவிடுகிறான் என்று வால்மீகி செய்திருக்கும் ரசனையில் லக்ஷ்மணனுடைய சாமார்த்தியமும் முன்யோசனையும் வற்புறுத்திக் காட்டப்படவில்லை. லக்ஷ்மணன் ராமனை அவ்வேட்டையினின்று விலக்கப் பன்முறையும் முயன்று பார்த்தால்தான் படிப்போருடைய மனதில் லக்ஷ்மணனுடைய கூரிய அறிவையும் ராம பக்தியையும் விளக்கிக் காட்ட முடியும் என்று கம்பன் ராம லக்ஷ்மண சம்வாதத்தை மிக வேலைப்பாட்டோடு அமைத்திருக்கிறான்.

சீதை லக்ஷ்மணனைச் சீறி ராமனை நோக்கிப் போகச் செய்யும் கட்டத்தில் வால்மீகியின் வேலைப்பாட்டுக்கும் கம்பனுடைய கைநயத்துக்கும் உள்ள தாரதம்மியம் மற்றெங்கேயும்விட அதிக விசதமாக விளங்குகிறது. மாரீசன் ராமன் குரலை அனுகரித்துக் கூவியதும் சீதை ராமனது உயிருக்கு அபாயம் நேர்ந்துளது என்று ஐயுற்று லக்ஷ்மணனை ராமனைத் தேடிப் போகும்படி ஆக்ஞாபிக்கிறாள். ஆனால்,

> ந ஜகாம தத்ஹோக் தஸ்து
> ப்ஹ்ராதுர் ஆஜ்ஞாய சாஸனம்★

என்று மாத்திரம் கவி லக்ஷ்மணனைப் பற்றிக் குறிப்பிடுகிறான். அவன் சும்மா இருந்ததைக் கண்ணுற்ற சீதை உடனே, 'என்னைக் காமித்தன்றோ நீ ராமனுடைய அழிவைக் கோருகின்றாய்! என்னைச் சுவீகரிக்கும் பொருட்டே நீ ராகவனுக்குத் துணைபுரியச்

---

★ (இ-ள்) அவ்வாறு ஆணையிடப்பட்டும் ஆணையைக் கருதி லக்ஷ்மணன் அதைவிட்டு நகரவில்லை.

செல்லுகிறாயில்லை!' என்று சொல்லிவிடுகிறாள். இவ்வாறு பேசுவதில் உள்ள வைரஸ்யம்★ ஒரு புற மிருக்க, ஆரம்பத்திலேயே இத்துணைப் பெரிய வார்த்தைகளைப் பிரயோகிப்பதனால் இச்சம்பாஷணைக்கு ஆரோகணக் கிரமம் இல்லாமற்போய், சென்று தேய்ந்திறுதற் குற்றம் சம்பவித்துவிடுகிறது. இன்னும், 'பரதன் ஏவுதலினாலோ, அல்லது நீயே சூழ்ச்சி செய்து கொண்டு தானோ இவ்வாறு செய்கிறாய்! பார், உன்னெதிரிலேயே பிராணனை விட்டு விடுகிறேன்,' என்று சீதை சொல்லுகிறாள். பரதனைப் பற்றிச் சீதை இவ்வாறு பேசுவது இயற்கைக்குப் பொருந்தியிருக்கிறது என்று சிலர் சொல்லலாம்—சிலர் சொல்லியும் கேட்டிருக்கிறோம். ஆனால், இயற்கைக்காவது, கதை அமைப்புக்காவது, சீதையின் தன்மைக்காவது இத்தகைய வாக்குச்சிறிதும் பொருந்தியதன்று என்று தைரியமாகச் சொல்லுவோம். இதற்கு லக்ஷ்மணன் கூறும் பதில் இன்னும் விரஸமாக இருக்கிறது.

'இத் தகாத வார்த்தைகள் பெண்கள் வாயினின்று வருவதில் ஆச்சரியமில்லை. பெண்கள் அறவழி நில்லாதவர், சபல சித்தர், கொடியவர், கலக மூட்டுபவர். என்னை இவ்வாறு ஐயுறும் நீ கெடுக!' என்று சொல்லிவிட்டு, அதே மூச்சில், 'உன்னை வன தேவதைகள் காத்திடுக!' என்று சொல்லிகொண்டு லக்ஷ்மணன் ராமன் காலடிகளைப் பின்பற்றிச் செல்லுகிறான்.

இக்கட்டத்தைக் கம்பன் எவ்வாறு அமைக்கிறான் என்று பார்க்கலாம். மாரீசனுடைய சத்தத்தைக் கேட்டதும் குயில் தலத்திடை உற்றதோர் கொள்கையாளான சீதை, லக்ஷ்மணன் யாதொரு வேதனையும் படாதிருப்பதைக் கண்ணுற்று,

> 'குற்றம் வீந்த குணத்தின்எங் கோமகன்
> ......................................
> இற்று வீழ்ந்தனன் என்னவும், என் அயல்
> நிற்றியோ, இளையோய், ஒரு நீ!'

என்றாள். உடனே லக்ஷ்மணன் ராமனுடைய அசகாய சூரத்துவத்தை ஆறு கம்பீரமான பாட்டுக்களில் வர்ணிக்கின்றான்.

---

★ விரஸத்தன்மை

**'கார் எனக் கரிய அக் கமலக் கண்ணனை**
**ஆர் எனக் கருதி இவ் இடரின் ஆழ்கின்றீர்?'**

**'......................புரம் எரித்த புங்கவன்**
**ஏற்றிநின்று எய்தவில் இறுத்த எம்பிரான்**
**ஆற்றலின் மேலும்ஓர் ஆற்றல் உண்மையோ!'**

என்று கேட்டுவிட்டு, லக்ஷ்மணன், 'ராமனது அம்பினால் பட்டு வீழ்ந்த அரக்கனது சத்தமாகத்தான் அது இருக்க வேண்டும், ஆதலின் மனதில் சஞ்சலப்படாமல் பொறுத்திரும்' என வணங்கிச் சொல்லுகிறான். இதற்குச் சீதை வால்மீகியில் போலவே எடுத்த சீற்றத்தளாய், கொன்றன இன்னலளாய், கொதிக்கும் உள்ளத் தளாய்த்தான் பேசுகிறாள். ஆனால் அதில் எவ்வளவு நிதானம்! சிறிதேனும் வரம்பு கடத்தல் என்பதில்லை. வார்த்தைகள் நிறுத்து வைத்தது போல் விழுகின்றன. பரதனைப் பற்றியாவது லக்ஷ்மணனைப் பற்றியாவது விரஸமான, அவாச்சியமான வார்த்தைகள் ஒன்றுகூடச் சீதையின் வாயினின்று வரவில்லை. 'நின்ற நின் நிலை இது நெறி யிற்று அன்று!'' என்று சொல்லிவிட்டு,

**'ஒருபகல் பழகினார் உயிரை ஈவரால்!**
**பெருமகன் உலைவுறு பெற்றி கேட்டு, நீ**
**வெருவலை! நின்றனை! வேறுஎன்? யான் இனி**
**எரியிடை வீழ்ந்துஉயிர் இறப்பல் ஈண்டு'**

என்று சொல்லிக்கொண்டு, 'தாமரை வனத்திடை தாவும் அன்னம் போல், காட்டுத்தீ எரியுமிடம் நோக்கிச் செல்லத் தொடங்கி விட்டாள்.

இதன்பிறகும் லக்ஷ்மணன் வாயினின்று ஒரு கொடிய சொல்கூட விழவில்லை.

இந்தக் கட்டத்தை வால்மீகியிலும் கம்பனிலும் ஆதியோ டந்தமாய்ப் படிக்குமவர்க்கு வால்மீகி ராமாயணமானது இடைக் கிடை தங்கக் கொடிகள் கொழுத்து ஓடினாலும் பூமியிலிருந்து அப்படியே பாறையோடு வெட்டி யெடுக்கப்பட்ட கட்டியைப் போன்றதுதான் என்றும், கம்ப ராமாயணம் அத் தங்கத்தை எடுத்து

உருக்கி, மாசு போக்கி, வார்த்த சொர்ண விக்ரகமாகும் என்றும் தோன்றும்.

சீதா ராவண சம்வாதத்தையும் 'கம்பன் வெகு சாமர்த்திய மாய்ப் பாகுபடுத்தியிருக்கிறான். ராவணன் சீதையைத் தூக்கிக் கொண்டு போகுமுன் ஒரு சம்வாதம் அமைத்துவிட்டு, வால்மீகி, உடன் கையிலேயே சீதையை அசோக வனத்தில் கொண்டுபோய்ச் சேர்த்த பிறகு அவர்களுக்குள் ஏறத்தாழ அதேமாதிரி சம்பாஷணையே மறுபடி ஏற்படும்படி செய்திருக்கிறான். கம்பனுடைய சுவையுணர்ச்சிக்கு இவ்விரண்டு சம்பாஷணை களும் இவ்வளவு நெருங்கியிருத்தல் முறையில்லை யென்று தோன்றியே அவன் சுந்தரகாண்டத்தில் அனுமானுடைய பார்வை யில் நடக்கும் சம்வாதத்துக்கு முன் லங்கையில் சீதா ராவணர் களுக்குள் யாதொரு பேச்சும் நிகழ்த்தாமல் நிறுத்திக் கொண்டிருக் கிறான்.

ராவணன் சீதையை அபகரிப்பதற்காக வருங்காலத்தில் வால்மீகி அவனைக் கண்டு இயற்கைப்பொருள்கள் நடுங்கின என்று வர்ணிக்கிறான். ★ கம்பன் இந்த வர்ணனையைச்சுவீகரித்துக் கொண்டு தனது சித்திரப் படலத்திலும் அதைச் சேர்த்துக்கொண்டு விட்டான். கம்பனுடைய வர்ணனை பின்வருமாறு

**நடுங்கின மலைகளும் மரனும்! நா அவிந்து**
**அடங்கின பறவையும்! விலங்கும் அஞ்சின!**
**படம்குறைந்து ஒதுங்கின பாம்பும், பாதகக்**
**கடுந்தொழில் அரக்கனைக் காணுங் கண்ணினே!**

மகா கவிகளெல்லாம் இத்தகைய மகா சந்தர்ப்பங்களில் பிரகிருதி மனித உணர்ச்சியோடு நடப்பது போல எழுதுவது

---

★ அந்தக் கொடுந் தொழிலனான ராவணனைக் கண்டதும் ஜனஸ்தானத்தில் நின்ற மரங்கள் அசைவொழிந்து நின்றன: காற்று அடங்கிவிட்டது. வன்தறுகண்ணினனான அவனது கண்கள் பட்டதும் வேகமாய்ச் செல்லும் கோதாவரி நதியும் பயந்து ஸ்தம்பித்துப் போய் மெல்லவே நகர ஆரம்பித்தது!

— வால்மீகி, சரு. சு, எ

சகஜமாயிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இலியாதின் ௨௦-வது சருக்கத்தில் ஹோமர் பின்வருமாறு பாடுகிறான்:

போர்க் கடவுள்* துரோயா† மீது வட்டமிட்டுக்கொண்டு தன் பயங்கரமான உருவத்தைப் புயற்காற்றாலும் மழை வேகத்தாலும் போர்த்தி மறைத்துக்கொண்டு, அத்துரோயாவின் உன்னதமான கோபுரங்களின் மீது நின்று கர்ஜித்துத் தன் வேகத்தைத் துரோயர் நெஞ்சில் ஊற்றினான். பக்கத்திலுள்ள மனோகரமான குன்றிற்குத் தாவி ஸிமோயா‡ நதியை நோக்கிக்கொண்டு அட்டகாசம் செய்கையில் குன்று அதிர்ந்தது, **வேகமாய்ச் செல்லும் அந்நதி ஸ்தப்தமாய் நின்றுவிட்டது.**||

ஏவாள் மரத்தினின்று கடவுள் தொடக் கூடாது என்று ஆணையிட்டிருந்த பழத்தைக் கொய்து மனித ஜாதிக்கே துக்கத்தையும் மரணத்தையும் உண்டாக்கித் தந்துவிட்ட போது,

பூதேவி புண்பட்டாள்; முடிவு வந்துற்றதென்று பகுதியாளும் தான் நிற்கும் அனைத்துப் பொருள்களிலும் உயிர்த்துக் கொண்டு பொருமினாள், துடித்தாள்.$

என்று மில்தனும் கற்பித் தெழுதுகிறான். எந்த ஜாதியினராயினும் பெருங் கவிகளின் இதயத்தில் ஒரே மகாநாதம் ஒலிக்குமன்றோ?

சீதா ராவண சம்வாதத்தைக் கம்பன் வெகு அழகாக, சுவைப் பிறழ்ச்சி சிறிதுமின்றி,

---

* Ares or Mars
† Troy
‡ Simois
|| The mountain shook, the rapid stream stood still.
$ Earth felt the wound and nature from her seat
Sighing through all her works, gave signs of woe
That all was lost.

'படங்குறைந்தொதுங்கின பாம்பும்' என்பதற்குக்கூட இங்கு மில்தனில் Back to the thicket slunk the guilty serpent என்கிற சதிருசவாக்கு அகப்படுகிறது. ஆனால், சர்ப்ப ரூபம் தரித்து வந்த சைத்தானையே அது குறிப்பதால் நூலில் அதை எடுத்துக் காட்டவில்லை.

**இருந்தவன் யாவதுஇவ் இருக்கை? இங்கு உறை**
**அருந்தவன் யாவன்? நீர் யாரை? என்றாலும்,**
**விருந்தினர்- இவ்வழி விரகு இலார்' என,**
**பெருந்தடங் கண்ணவள் பேசல் மேயினாள்,**

என்று ஆரம்பிக்கிறான். வால்மீகியோ ராவணனைப் பதினேழு சுலோகங்களால் சீதையின் சர்வாங்கங்களையும் காமாதுரனைப் போல வர்ணிக்கச் செய்து விரஸமாக்குகிறான். சம்பாஷணையின் துவக்கத்திநின்று,

**........................ எரிந்தன நயனம்: திக்கில்**
**சென்றன திரள்தோள்: வானம் தீண்டின மகுடம்: திண்கை**
**ஒன்றொடு ஒன்று அடித்த: மேகத்து உரும்என எயிற்றின் ஒளி**
**மென்றன: வெகுளி பொங்க விட்டது மாய வேடம்!**

என்ற முத்தாய்ப்புவரை கம்பனில் சம்வாதம் ஆரோகணக் கிரமத்திலேயே ஏறிவருகிறது படிப்போருக்குப் பேரானந்தத்தைத் தருகிறது.

அயோமுகிப் படலம் விராதன் வதையைப் போலவே வேதாளக் கதை ஜாதியைச் சேர்ந்ததா யிருக்கிறது என்றோம். ஆனால் கம்பன் அதற்கு ஓர் பிரயோஜனம் கற்பித்து வைக்கிறான். லக்ஷ்மணன் அயோமுகியினால் வழி மறிக்கப்பட்டுக் குறித்த காலத்துக்குள் வாராததைப் பார்த்து ராமன் சகோதரனுக்கு ஏதாவது தீங்கு நேர்ந்துவிட்டதோ என்று தவியாய்த் தவிக்கிறான். லக்ஷ்மணனிடம் ராமனுக்கு இருக்கும் நிரதிசயமான வாற்சல்லியத்தைக் காட்டச் செய்து கம்பன் இந்த வியர்த்தமான கதையையும் பொருளுள்ளதாகச் செய்துவிடுகிறான்.

இன்னும் எடுத்துக் காட்டக்கூடியது அநேக மிருந்தும் விரிவஞ்சி இதனோடு நிறுத்திக்கொள்வோம்.

### ச. கிஷ்கிந்தா காண்டம்

கிஷ்கிந்தா காண்டத்தை உபாக்கியானம் என்கிற ஜாதியிற் சேர்த்தோம். மேனாட்டு இலக்கணாசிரியர்கள் உபாக்கியானங்களை இரண்டு வகையாய்ப் பிரிக்கிறார்கள். அவைகளில் ஒன்று, கதாநாயகர்களில் ஒருவர் மற்றொருவருக்குச் சொல்லுகிற உபகதை

யாகும். மற்றது, கதையின் பாகமாக இருந்தாலும் கதைக்கு இன்றியமையாத பாகமாக இராமலும், எடுத்துவிட்டதினால் கதையை ஊனமாக்காமலும், இருக்கும் ஓர் அவயவமாகும். பால காண்டத்தில் வருகிற ரிஷியசிருங்கன்கதையும், க்ஷீராப்தி மதனமும், விசுவாமித்திரன் சொல்லுகிற கதைகளும், விசுவா மித்திரனைப் பற்றி வருகிற கதைகளும் உபகதை உபாக்கியானங் களே. அயோத்தியா காண்டத்தில் வரும் சுரோசனன் கதையும், ஆரணிய காண்டத்தில் வரும் விராதன் கதையும், இலங்கணியின் கதையும், உயுத்த காண்டத்தில் வரும் இரணியன் வதைப் படலமும் அதே வகுப்பைச் சேர்ந்த உபாக்கியானங்களேயாகும். ஆனால், கிஷ்கிந்தா காண்டம் அத்தகைய உபாக்கியான மன்று. அது ஹோமரில் வரும் கப்பல் ஜாபிதாவையும், பால காண்டத்தில் வரும் பூக்கொய் படலம் முதலியவற்றையும் போல, கதையோடு அவயவ சம்பந்தம் மிக லேசாக உள்ள உபாக்கியானமாகும்.

உபாக்கியானங்கள் அமைப்பதில் ஹோமரைத்தான் — அவனும் இலியாதைப் பாடுகையில் தான் — மிகச்சாமர்த்தியசாலி எனலாம். அவன் எழுதிய ஒதூஸியம் என்னும் காவியத்தை உண்மையாக மகா காவியமென்று சொல்லக் கூடாது. அதை அனேக உபாக்கியானங்களின் சேர்க்கையென்று சொல்லுவதே முறையாகும். ஆனால் இலியாதிலுள்ள அவனுடைய உட்கதைகள் சிறியனவாயும் அவயவங்களுக்கு அளவில் பொருத்தமாயும் இருக் கின்றன. கதையும் உபாக்கியானங்களும் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு, கதைக்கு இடைஞ்சற்படுத்தாமல் பெரும் பாலும் எடுக்க முடியாதனவாய் இருக்கின்றன. ராமாயணத்தில் உபாக்கியான அமைப்பு இலியாதின் அமைப்புக்குத் தாழ்ந்ததன்று; இங்கேயும் பால காண்டத்திலுள்ள உட்கதைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் உபாக்கியானங்களும் மூல கதையும் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டு, இணைந்துகொண்டு இருக்கின்றன. இரணியன் கதையைத்தான் கதைக்குக் கேடின்றி எடுத்துவிடக் கூடும். ஆனால் திசை திறந்து அண்டம் கீறிச் சிரித்த செங்கட் சீயத்தின் காம்பீரியம் நிறைந்த உபாக்கியானத்தை — அமைப்பில் பாகவதக் கதையை யும் விஷ்ணுபுராணக் கதையையும் வென்றுவிட்டு, ராமாயண மாகிற வைரமணி மாலையில் இந்திர நீலமணியைப் போல

விளங்கும் இந்த அற்புதமான உட்கதையை — யாரே ராமாயணத்தினின்று எடுக்க ஒருப்படுவர்?

ராமாயணத்திலுள்ள பரதன் கதையும் கதைக்கு உபாக்கியான சம்பந்த முள்ளதே. ஏனெனில் கதையின் வஸ்துவாகிய ராவண வதத்திற்குப் பரதன், ராமன் காட்டிற்குச் செல்ல அனிஷ்ட காரணனாக இருப்பதால் தவிர வேறு மாதிரி உதவவில்லை. இருப்பினுங்கூட வால்மீகியும் கம்பனும் பரதனுடைய சிருஷ்டியில் எத்துணை அன்பை, எத்துணை பக்தியை, எத்துணைத் தியாகத்தை, எத்துணை ஆத்ம கண்டனத்தைப் புகுத்தி, பரதனை அனன்னிய சதிருசமான, இணையற்ற ஆத்மவீர னாக்கிவிட்டார்கள்! நமது ஆங்கில ஆராய்ச்சியில் ★ கூறியிருப்பது போல், பரதனை அறியாதவர்கள் ராமாயணத்தின் அழகில் செம்பாதியை இழந்தவர்களாவார்கள்.

கிஷ்கிந்தா காண்டத்தின் பிரதான பாகமான வாலிவதை ராமாயணத்தின் வஸ்துவுக்கு அவயவ சம்பந்தம் வாய்ந்த தன்றாதலால் அதை எடுத்துவிட்டதினால் கதைக்கு யாதொரு ஊனமும் வராது. ஆனால், கம்பன் தன் நாடகத் திறமையனைத்தையும் இந்த வாலி வதைப்படலத்தில் கொட்டி வைத்து விட்டான். இந்த வாலி வதை உபாக்கியானத்தை மாத்திரம் எழுதி வைத்து விட்டு வேறொன்றும் எழுதிவையாமல் இறந்திருந்தாற்கூட அறிஞர் அவனை உலகத்து மகா கவிகளின் வர்க்கத்தில் சேர்க்காமல் விடத் துணியார். அத்துணைச் சிறப்பு வாய்ந்தது கம்பனுடைய வாலி வதை உபாக்கியானம்.

ஆனால் ராமாயணத்தின் ரச்னை அழகைப் பற்றி மாத்திரம் சொல்ல எடுத்துக்கொண்ட இவ்வாராய்ச்சி வரையில் இவ் உபாக்கியான காண்டத்தின் அழகைப் பற்றியாவது விஸ்தாரமாகப் பேசுதல் பொருத்தமுடைத் தன்றாகலான் கிஷ்கிந்தா காண்டத்தைப் பற்றி இங்கே சொல்லியதற்கு மேல் ஒன்றும் சொல்லாமல் நிறுத்திக் கொள்ளுகிறோம்.....

---

★ இந்த அரிய ஆராய்ச்சி நூல் இன்னும் வெளியிடப்பெறவில்லை. இது கைப்பிரதியில் சுமார் ௪௦௦ பக்கமுள்ளது. இதில், ரஸிகசிகாமணியான அய்யரவர்கள் தம் மேதாவிலாஸம் அனைத்தையும் பயன்படுத்தி, கம்பனே 'உலக-மகாகவி' என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

### ரு. சுந்தர காண்டம்

இனிச் சுந்தர காண்டத்தின் அமைப்பை ஆராயப் புகுவோம். அதற்கு இப்பெயரை வைத்தது வால்மீகியேயாயிருந்தாலும், வேறு யாராயிருந்தாலும், பெயர் வைத்தவன் மிகப் பொருத்தமாகவே வைத்திருக்கிறான். இதுவே காண்டங்களனைத்தினும் பேரழகு வாய்ந்தது. உயுத்த காண்டத்தில் காம்பீரியமும் கதையின் ஓட்டமும் அதிகம். ஆரணிய காண்டத்தில் வெவ்வேறுபட்ட சம்பவங்களின் சமன் வயத்தினால் வரும் அழகு பிரதானமாக இருக்கிறது. அயோத்தியா காண்டத்தில் நாயகர்களின் சுக வாழ்வுக்கு நேரும் எதிர்பாராத தடையும் சோக பரம்பரையும், அக்காண்டத்தின் வேகமும் அதற்கு ஓர் தனிச் சுவையைத் தருகின்றன. ஆனால், கவி தன் அருமையையெல்லாம் தன் சக்தியை யெல்லாம், தான் சிறையிலிருந்து உலகை விடுவிக்க வந்த எம்பெருமாட்டியான சீதா பிராட்டியின் பெருமைகளை வர்ணிக்கும் இந்தச் சுந்தர காண்டத்திலேயே வரையாமற் செலவு செய்திருக்கிறான். சிறையிருந்தாளின் ஏற்றத்தைக் கூறுகின்றதுதான் ராமாயாணம் என்று ஸ்ரீ பிள்ளைலோகாச்சாரியர் சொல்லியதும், 'ஸீதாயாச் சரிதம் மகத்' என்னும் வால்மீகி ராமாயணப் பாயிரத்தின் சூத்திரத்திற்கு இலக்கியமாக விளங்கும் வால்மீகி ராமாயண சுந்தர காண்டத்தையும், 'அதற்கு நான் தோற்றேனில்லை!' என்று துவஜம் கட்டி நிற்கும் கம்ப ராமாயணத்தின் சுந்தர காண்டத்தையும் கருதியேயாகும்.

சீதையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக அனுப்பப் பட்ட வானர தூதர்களுக்குள்ளே, மகா புத்திமானும், பலவானும், ஸ்வாமி பக்தனும், திறமைசாலியுமான அனுமான் மகேந்திர பர்வதத்தின் மீது நின்று கடலைத் தாவுகிற வர்ணனையோடு சுந்தர காண்டம் ஆரம்பிக்கிறது. கடலைத் தாவும் வர்ணனையில் வால்மீகி கம்பனை எளிதில் வென்றுவிடுகிறான். வால்மீகியில் அதிசயோக்திகள் கூட இயற்கைக்குப் பொருந்தர ஸக்ஞர்கள் சிரக்கம்பம் செய்யும்படி இருக்கின்றன. கம்பனில் இந்த வர்ணனை சுவை குறைவாக இருக்கிறது என்றே சொல்ல வேண்டும். அவன் சொல்லுகிற உத்பிரேக்ஷைகள் சமுத்திரத்தின் காம்பீரியத்தையும் அனுமான் தாவுகிற சண்டமாருத வேகத்தையும் மறைத்துவிடுகின்றன. ஆனால் அதற்கு மாறாக, மைந்நாக பர்வதத்தினுக்கும் அனுமானுக்கும் நடக்கிற சிறு சம்பாஷணையில்கூட

கம்பனுடைய திறன் அதிகமாய் விளங்குகிறது. 'நீ நான் செய்யும் விருந்தினை ஏற்றுப் போகவேண்டும்' என்று மைந்நாகம் செய்கிற உபசாரத்துக்கு,

> 'பெருந்தேன் பிழிசாலும்நின் அன்பு பிணித்த போதே
> இருந்தேன்! நுகர்ந்தேன்! இதன்மேல்இனி ஈவது என்னோ?★

என்று அனுமான் சொல்லுகிற பதில் எவ்வளவு ரஸமாக இருக்கிறது! இலங்கிணிக்கும் அனுமானுக்கும் நடக்கும் போரும் சம்வாதமும் இன்னும் உயர்ந்த ஸ்தாயியை எட்டுகிறது. சீதா ராவண சம்வாதமும், ஹனுமத் ஸீதா சம்வாதமும், இன்னும் பிற சம்பாஷணைகளும் நிகழும்போது கம்பன் தன்னிலும் உயர்ந்துகொண்டுவிடுகிறான்! இவற்றைப் பற்றி மறுபடியும் பேசுவோம்.

ஊர்தேடு படலத்தில் கம்பனுடைய செழுமையுள்ள பாவனா சக்தி கரைபுரண்டோடி இலங்கையை சுவர்க்கத்திற்கும் விழுமியதோர் பூமியாக்கிவிடுகிறது. பின்னே வர இருக்கும் சீதையின் சோகத்திற்கும், இலங்கைத் தீவின் ஆவேசத்திற்கும் இது மணியின் ஜ்வலிப்பைத் தூக்கிக் காட்டும் வர்ணத் தகட்டைப் போல அடிநிலமாக விளங்குகிறது. ஆனால் இதிலும் வர்ணனை சற்று விளம்பமாக நடந்து வருகையில் படிப்போருக்கு,

> கரியனாய், வெளியனாகி செய்யனாய்க் காட்டும்
> காண்டற்கு அரியனாய், எளியனாய்

நிற்கும் ராமபிரானையும், செவிக்குத் தேன் என நிற்கும் ராமனுடைய புகழையும், சிறையின் எய்திய செல்வியின் முகத்தையும் கம்பன் நினைவுறுத்திக் கொண்டே செல்லுகின்றான்.

---

★ 'தேன் பொங்கிப் பொழிவது போன்ற உன் அன்பு என்னைத் தழுவியபோதே உன்மீது நான் இளைப்பாறினவனாகிவிட்டேனன்றோ? நீ கொடுக்கும் அமுதை உண்டவனாகிவிட்டேனன்றோ? இதற்கு மேல் நீ செய்யத்தக்கது என்ன உளது?

ஒரு உத்கிருஷ்டமான கவிக்குப் பிறகு இன்னொரு கவி அதே கதையைப் பாடினானானால் முதல் கவியின் போக்கும் வாக்கும் பின்னவன் காலைச் சுற்றி நிற்கும் ஈயத் தளை போலாகி விடுகின்றன. ஆனால், கம்பன் பூமண்டலத்தை ஓர் தலையால் தாங்கும் ஆயிரந் தலை ஆதிசேஷன் போல வால்மீகியின் கனத்தை அலக்ஷியமாய்த் தாங்கி நடப்பதோடு, அவனது கதையையும் தனக்குக் குற்றேவல் செய்து தன் உதபிரேக்ஷைகளை அலங்கரிக்கும் மணிப் பூண்களாகச் செய்துவிடுகிறான். தாடகை வதை காலத்திலும், மந்தரை சூழ்ச்சியால் கைகேயியின் மனம் திரிந்த காலத்திலும் வால்மீகி புனைந்து வைத்திருக்கிற கதை முடிவைக் கம்பன் எவ்வாறு கையாளுகிறானென்று அயோத்தியா காண்டப் பகுதியில் நாம் காட்டியுள்ளோம். சுந்தர காண்டத்தில் அந்த வழியை அவன் இன்னும் அழகாகப் பின்பற்றிச் செல்லுகிறான் என்பதை நேயர்களுக்கு இப்பொழுது எடுத்துக் காட்டுவோம்.

சீதையைத் தேடுவதற்காக இலங்கையில் ஒவ்வொரு வீடாக அனுமன் நுழைந்து சென்றான் என்று சொல்லி வரும்போது, கூ-வது சருக்கத்தில் வால்மீகி, 'பிரஹஸ்தன் வீட்டையும், மகாபார்சுவன் வீட்டையும், கும்பகர்ணன் அரண்மனையையும், இந்திரசித்தன் அரண்மனையையும், விபீஷணன் மந்திரத்தையும்' என்று வேறொரு வர்ணனையுமில்லாமல் ஜாபிதாவாக அடுக்கிக் கொண்டு போகிறான். கம்பன், சுந்தர காண்டத்தில் பிற்பகுதியிலும் யுத்த காண்டத்திலும் வால்மீகி புனைந்திருக்கிற கதையை இங்கேயே சூசிப்பித்து தன் வர்ணனைக்கு வேறுபடுத்தி வைத்தலால் வரும் அழகைத் தந்து வைத்திருக்கிறான். உதாரணமாகக் கும்பகர்ணனை அனுமன் கண்டான் என்னும் போது, அவன் ஆதிசேஷனைப் போலவும், பரந்த கடலைப் போலவும், உலகத்திலுள்ள இருளெல்லாம் ஒரே யிடத்தில் செறிந்து நின்றது போலவும், தீவினை யெல்லாம் உடல்பெற்றுத் தோன்றியது போலவும் இருந்தா னென்றும் பிறவுமாக வர்ணிக்கிறான். விபீஷணனது அரண்மனையில் பிரவேசித்ததும், அவன் தோற்றத்தினின்று அவனது தன்மையை அனுமன் ஊகித்துக் கிரகித்துக் கொண்டு, அரக்கர் நாட்டில் பகிரங்கமாக வசித்தல் அசாத்திய மென்பது கண்டு, அவர்களைப் போன்றதோர் உடலை எடுத்துக்கொண்டு வசிக்கும் அறத்தைப் போலிருக்கிறான் என்று அவன் நினைத்தான் என்று கவி கூறுகிறான். இந்திரசித்தனை அனுமன் கண்ணுற்றான் என்பதற்கு முன்னேயே,

இந்திரன் சிறையிலிருந்த வாயிலின் கடை எதிர்ந்தான்

என்று ஓர் கட்டியம் கூறிவிட்டு, அவனைக் கண்ணுற்ற போது, ஆச்சரியப்பட்டு,

வளையும் வாள்எயிற்று அரக்கனோ, கணிச்சியான் மகனோ,
அளையில் வாளரி அனையவன் யாவனோ, அறியேன்
இளைய வீரனும் ஏந்தலும் இருவரும் பலநாள்
உளைய உள்ளபோர் இவனொடும் உளதுஎன உணர்ந்தான்★

என்றும்,

'சிவனை, நான்முகத்து ஒருவனை, திருநெடு மாலாம்
அவனை அல்லவர் நிகர்ப்பவர் என்பதும் அறிவோ?' †

என்றும் நினைப்பதாகக் கூறுகிறான்.

இந்த மேற்கோள்களினின்று, பிறருடைய கதைகளை சுவீகரித்து அவற்றை முதனூலாசிரியன்போலவே சுதந்திரமாகவும் கம்பீரமாகவும் நடத்திக் கொண்டு போவதில் கம்பன் ஹோமரின் கதைகளை சுவீகரித்துக் கையாண்ட எஸ்கூலனுக்கும் ஸோபோகிளனுக்கும் ஓர் படி உயர்ந்தவன் எனவே அறிஞர் கண்டுகொள்வர்.

ஊர்தேடு படலம் போன்ற கட்டங்களில் கவிக்கு நீண்ட உபதேச வர்ணனை மாலையை யாக்கவேண்டிய தவசியமாக இருக்கிறது. ஆனால் இவற்றை வெறும் வர்ணனைகள் மாத்திரம் நிரப்பின் படிப்போருக்குச் சலித்துப்போம். இவற்றோடு பொருந்திய உணர்ச்சிகள் விரவி வருகின்றதே ரசனைக்கு அழகு தரும். இவ்விரகசியம் மகாகவிகளுக்குத்தான் தெரியும். மற்ற கவிகள்

---

★ 'குகையில் சிங்கம் தூங்குவது போன்று தூங்குகிற இவன் ராவணனே தானோ, சூலபாணியின் மகனான முருகக் கடவுளோ, யாவனோ, அறிய முடியவில்லை; ஆனால், லக்ஷ்மணனும் ராமனும் பலநாள் தவிக்கும்படி போர் கொடுக்கப் போகிறான் என்பது நிச்சயம்!' என்று அனுமன் சொல்லிக் கொண்டான்.

† 'சிவனையும் விஷ்ணுவையும் விட்டால் இவனுக்கு வேறொருவர் நிகர் ஆவர் என்று சொல்லுவதும் அறிவாகுமா?'

யாதொரு உணர்ச்சியும் மெய்ப்பாடும் இல்லாமல் நூற்றுக்கணக் கான விருத்தங்களைப் போட்டு வர்ணனைகளை நிரப்பிவிடு கிறார்கள். அல்லது உத்பிரேக்ஷைகளை மழை பொழிவது போலப் பொழிந்து வெள்ளம் வெள்ளமாய்ப் போலி உணர்ச்சிகளைத் தோற்றுவித்து, படிப்போரின் பாவனையை விலக்கிவிட்டுத் திண்டுமுண்டாடச் செய்துவிடுகிறார்கள். கம்பன் இப்படலத்தில் அனுமன் மனதில் தோற்றுவிக்கிற உணர்ச்சிகள் பொருத்தமாயும் சுபாவிகமாயும் இருக்கின்றன. அவற்றிலும் ஆரோகண அவரோ கணத்தை அழகுபட அமைத்து மேளச் செவ்வி† குறையாமலிருக் கும்படி செய்துவிட்டிருக்கிறான்.

சில உதாரணங்கள் காட்டுவோம். இலங்கையைக் காக்கும் படையை அனுமன் கண்டதும்,

*‘தெவ்வர் இவர்! சேமம் இது! சேவகனும் யாமும்*
*வெவ் அமர் தொடங்கிடின் எனாய் விளையும்?’* ‡

என்றும்,

*‘கருங்கடல் கடப்பு அரிது அன்று, நகர் காவல்*
*பெருங்கடல் கடப்பது அரிது! எண்ணம் இறை பேரின்*
*அருங்கடன் முடிப்பு அரிது; ஆர் அமர் கிடைக்கின்*
*நெருங்குஅமர் கிடக்கும் நெடுநாள்!’* ¶

---

† வாத்தியத் தொகுதியில் அனுபவிக்கப்பெறும் பல சப்தங்களும் ஸ்வரங்களும் சம்மேளிப்பதால் வரும் அழகு.

‡ ‘பகைவர் இத்துணைப் பலிஷ்டர்; அவர்களது காவற் படையோ இத்தகையது; ராமனும் நமது வானர சைனியமும் போர் துவக்கினால் முடிவு என்ன ஆகிமோ?

¶ ‘இலங்கையின் காவற்படையைத் தாண்டிச் செல்வது கடலைக் கடப்பதைவிடக் கடினமான காரியமாயிருக்கிறது; கொஞ்சம் கவனம் தப்பினால் நான் வந்த காரியத்தைச் சாதித்தல் அசாத்தியமாய்விடும். போர் செய்ய நேர்ந்தால் யார் வெல்வர் என்று சொல்ல முடியாதபடி நெருங்கிய போர் நெடுநாள் செய்ய வேண்டி வரும்!’

என்றும் தனக்குள் சொல்லிக் கொள்ளுகிறான்.

பிறகு மந்தோதரியைச் சீதையென ஓர் நிமிஷ நேரம் ஐயுற்று நோக்கிய பின்னர்,

**'கான் உயர்த்ததார் இராமன்மேல் நோக்கிய**
**காதல் காரிகையார்க்கு**
**மீன் உயர்த்தவன் மருங்குதான்**
**மீளுமோ? நினைந்தது மிகை'**

என்று அனுமன் இவ்வாறு ஐயுற்றதே மகா பாபம் எனச் சொல்லிக்கொள்ளுவதும் எத்துணைச் சிறப்பு வாய்ந்திருக்கின்றது என்று ரஸிகருக்கு எடுத்துக் காட்டவும் வேண்டுமா?

ராவணனுடைய சொந்த அரண்மனைக்குள் பிரவேசிக்கையில் வானம் மின்னலின்றி இடித்ததையும் பூரண மங்கல கலசங்கள் வெடித்ததையும் கண்ட ஆஞ்சனேயன்,

**நெக்கு நின்றனன், 'நீங்கும் அந்தோ, இந்த**
**நெடு நகர்த்திரு' என்னா.**

ராவணனைக் கண்ணுற்றதும் அனுமனுக்கு ஆவேசமுண்டாகி அவனைத் தாளாற்றலால் இடித்துத் தலை பத்தையும் தகர்க்க எண்ணுகின்றான். ஆனால், உடனே மறுபடியும் யோசித்துப் பார்த்து அது பிழையாகும் என்று தீர்மானித்து, தன்னைத் தானே அடக்கிக் கொள்ளுகிறான். இதைச் சொல்லும் செய்யுட்கள் கம்பனுடைய பெயர்போன செய்யுட்களின் வகுப்பைச்சேர்ந்தவையாகும்.

**ஆலம்பார்த்து உண்டவன் போல் ஆற்றல்**
**அமைந்துளர் எனினும்**
**சிலம்பார்க் குரியோர்கள் எண்ணாது செய்பவோ?**
**மூலம்பார்க் குறின், உலகை முற்றுவிக்கும்**
**முறை தெரினும்**
**காலம் பார்த்து, இறைவேலை கடவாத**
**கடல் ஒத்தான்.**

இற்றைப் போர்ப் பெருஞ் சீற்றம்
என்னோடு முடிந்திடுக;
கற்றைப் பூங்குழலாளைச்
சிறைவைத்த கண்டகனை
முற்றப் போர் முடித்தது ஒரு
குரங்கு என்றால் முனை வீரன்
கொற்றப் போர்ச்சிலைத் தொழிற்குக்
குறைவு உண்டாம்!' எனக் குறைந்தான்.

ஊர் முழுதும் தேடிய பிறகும் சீதையைக் காணாததால் அனுமனுக்கு உண்டாகும் விஷாதத்தின் வர்ணனை இப்படலத்திற்கு அழகிய முத்தாய்ப்பாக விளங்குகிறது.

சீதையின் நிலைமையையும் எண்ணங்களையும் வர்ணிக்கிற பாகத்தில் கம்பன் தன் கலைத்திறன் அனைத்தையும் கொட்டி விட்டான். சீதையின் தவத்தைக் கண்ணுற்றதும் அனுமன் அடையும் ஆனந்தத்தையும், சொல்லும் வார்த்தைகளையும் வர்ணிக்கிற செய்யுட்களை உயரிய கவிதையின் எல்லை என்றே கூறிவிடலாகும். அந்த ஆனந்தத்தில் அனுமன் 'வீடின தன்று அறன்' என்றும், கள்ளவாள் அரக்கன் கமலக் கண்ணனார் உள் உயிரினை ஒளித்து வைத்தவா!' என்றும், 'ஐயம் இல்! அரவின் நீங்கிய தேவனே அவன்! இவள் கமலச் செல்வியே!' என்றும்,

'மாசுண்ட மணியனாள், வயங்கு வெங்கதிர்த்
தேசுண்ட திங்களும் என்னத் தேய்ந்துளாள்,
காசுண்ட கூந்தலாள் கற்பும் காவலும்
ஏசுண்ட தில்லையால்? அறத்துக்கு ஈறுஉண்டோ?★

என்றும்,

'புனைகழல் இராகவன் புயத்தையோ, புகழ்
வனிதையர் திலகத்தின் மனத்தின் மாண்பையோ,

★ 'அழுக்குண்ட ரத்தினத்தையும் தேய்ந்த சந்திரனையும் போல மலினமான நிலையிலிருக்கிற சீதையின் கற்பும் காவலும் சிறிதும் கெடாமலிருக்கின்றன. அறம் அழியுமோ?

வனைகழல் அரசரின் வண்மை வீக்கிடும்
சனகர்தம் குலத்தையோ, யாதைச் சாற்றுகேன்?' ★

என்றும்,

'தேவரும் பிழைத்திலர்! தெய்வ வேதியர்
ஏவரும் பிழைத்திலர்! அறமும் ஈறு இன்றால்!
யாவது இங்கு இனிச் செயல் அரியது?'†

என்றும், கூறிக்கொண்டு ஆடுகிறான். பாடுகிறான், அங்கும் இங்குமாக ஆனந்த வெறிகொண்டு ஓடுகிறான்! இன்னும் அவளது தவத்தைப் பார்த்துவிட்டு அவள் அங்கிருந்த ஆற்றைக்

'காண நோற்றிலன்‡ அவன் கமலக் கண்களால்!'

என்கிறான். 'தருமமே காத்ததோ, ராவணனுடைய வினைதான் அவளைக் காத்துக் கொடுத்ததோ? அல்லது சீதையது கற்புத்தான் வேறோர் துணைப் பலமின்றி அவளைக் காத்து வைத்ததோ, அருமை! அருமை! யாரால் இவ்வளவு ஆச்சரியமான தற்காப்பு சாத்தியம்? என் நண்பருக்கு இச் செய்தியை எத்துணை முறை சொன்னால்தான் என் ஆவல் அடங்கும்? வேறு ஒரு பிராணிக்கு இத்துணை மனோதிடம் இருக்குமோ? இவ்வளவு தவத்தை இவள் ஆற்றும்போது உலகின் கஷ்டங்களெல்லாம் இன்றோடு முடிந்துவிட்டன! அறத்தினைத் தீவினை வெல்லுமோ? ஒரு நாளும் வெல்லாது!' என்று அவன் வாயினின்றும் பெருகுவதாகக் கூறும் வார்த்தைகள் முத்தாய்ப்புக்கு மேல் முத்தாய்ப்பாக

---

★ 'இதற்காக, ராகவனுடைய திருமேனி யழகைப் புகழட்டுமா? அல்லது பிராட்டியின் திடச் சித்தத்தையும் சீலத்தையும் புகழவோ? அல்லது அரசரின் வள்ளன்மைக்குப் பெருமை தரும் சனகரின் குலத்தையேதான் புகழவோ? யாதைப் புகழ?'

† 'தேவர்மீது இனிப் பழியில்லை — வேதியர்மீதும் பழியிலது — அறத்தினுக்கு எல்லை இல்லையென்று ஏற்பட்டுவிட்டது: இனி உலகில் அசாத்தியம் என்று எது இருக்கிறது?'

‡ 'ராமன் கொடுத்துவைக்கவில்லை.'

ஏறிக்கொண்டு செல்லுகின்றன என்று படிப்போருக்கு எடுத்துக் காட்டுவோம்.

சீதையோடு அனுமன் பேசுமுன் வால்மீகி சீதையையும் ராவணனையும் சந்திக்கச் செய்திருக்கும் அமைப்பைக் கம்பன் ஸ்வீகரித்துக் கொண்டுவிட்டான். 'சீதையை ராவணன் தொடுவ தானால் அவனையும் தாக்கி இலங்கையையும் அழித்து விடுவேன்!' என்று அனுமன் சங்கற்பித்துக் கொள்ளுவதாகக் கூறுவதன் ரசனை குறிப்பிடத்தக்கது.

உருக்காட்டு படலத்தின் அமைப்பின் செவ்வியை எக்கவியும் எக்காலத்திலும் வென்றதில்லை யென்றும், வெல்ல முடியாது என்றும் கூறிவிடலாகும். சூளாமணி கொடுக்கு முன் சீதை ராமனுக்கு அனுப்பும் செய்தியும் அனுமனது பதிலும் மிகப் பொருத்தமாக அமைந்துள்ளன. இதினின்று பிணிவீட்டு படலம் ஈறாக உள்ள கதை சங்கிலி கோத்தது போலச் சம்பவத்துடன் சம்பவம் அழகுபட ஒட்டிக் கொண்டிருக்கும்படி செல்லுகிறது.

இலங்கையை அனுமன் எரிக்கும் சம்பவத்தில் கடல் தாவு படலத்தில் போல வால்மீகியின் வர்ணனை கம்பனதைவிட மிகவும் அழகாக இருக்கிறது. கம்பனது உத்பிரேக்ஷைகள் அக் காட்சியின் காம்பீரியத்தைத் திரைபோட்டது போல மறைத்து விடுகின்றன. ஆனால், இதிலும் படிப்போருக்கு ராவணனை நினைவுறுத்தி,

> **என்று கொல் குரங்கு அன்னது இவ்வலி உளது? இலங்கை**
> **நின்று வெந்துமா நீறுஎழு கின்றது! நெருப்புத்**
> **தின்று தேக்கிடு கின்றது! தேவர்கள் சிரிப்பார்:**
> **நன்று, நன்று போர்வலி!' என இராவணன் நக்கான்,**

என்று கூறிக் கம்பன் தன் அமைப்புத் திறமையை விளக்கி விடுகின்றான்.

சுந்தர காண்டத்தில் ஊர்தேடு படலத்தில் எதிர்பார்க்க வைத்தபடி, கம்பன் தனது ஸ்தாயியைப் படிப்படியாக ஏற்றிக் கொண்டு சென்று கடைசிப் படலமாகிற திருவடி தொழுத படலத்

தில் முத்தாய்ப்பை வைத்துவிட்டான். இதில்கூட ஓர் ஜிகினா வேலை செய்திருக்கிறான். இலங்கையில் நிகழ்ந்தவற்றை வினவிய வானர வீரருக்குச் சீதையின் கற்பை வர்ணித்தும் அவள் கொடுத்த சூடாமணியைக் காட்டியும்விட்டு அனுமன்,

**..............................................போரில்**
**நீண்டவாள் அரக்கரோடு நிகழ்ந்ததும் நெருப்புச் சிந்தி**
**மீண்டதும் விளம்பான் தான்தன் வென்றியை உரைப்ப வெள்கி!★**

அதற்கு வானரர், பாரஸீகக் கதையில் வரும் ஒட்டகத்தைக் கண்டிராமலே அதைக் கண்டவன் போல் வர்ணித்த அராபிய சாதுவைப் போலவும், கோனன்தாயில் சிருஷ்டித்துள்ள ஷெர்லக் ஹோம்ஸைப் போலவும், தாங்கள் சகலத்தையும் ஊகித் தறிந்துகொள்வதாகக் கூறுகிறார்கள்.

**'பொருதமை புண்ணே சொல்ல, வென்றமை போந்த தன்மை**
**உரைசெய, ஊர் தீ யிட்டது ஓங்கு அரும் புகையே ஓத,**
**கருதலர் பெருமை, தேவி மீண்டிலாச் செயலே காட்டத்**
**தெரிதர உணர்ந்தேம்!'..................................†**

என்றார்களாம். ஆனால் இந்தச் சமத்கார வர்ணனை யன்று கம்பனுக்குச் சிறப்பான பெருமையைத் தருவது. மற்று,

**'விற் பெருந் தடந்தோள் வீர!**
**வீங்குநீர் இலங்கை வெற்பின்**
**நற்பெருந் தவத்தள் ஆய**
**நங்கையைக் கண்டேன் அல்லேன்!**

---

★ தான் அரக்கரோடு போர் செய்து, இலங்கைக்கு நெருப்பு வைத்துத் திரும்பியதை அனுமன் சொல்லவில்லை: தான் காட்டிய பராக்கிரமங்களைப் பற்றித் தானே உரைக்க அவன் நாணினான்.

† 'உன் உடம்பில் கோரமான காயங்களிருப்பதினின்று போர் செய்தாய் என்றும், நீ இங்கு திரும்பி வந்ததினின்று நீ பகைவரை வென்றாய் என்றும், அதோ வானளாவிச் செல்லுகிறதே புகை — அதினின்று நீ இலங்கைக்குத் தீ வைத்தாய் என்றும், சீதா தேவியை நீ உடன் அழைத்து வராததினின்று பகைவர் இத்துணைப் பலிஷ்டர் என்றும் உணர்ந்து கொண்டோம்.'

இற்பிறப்பு என்பது ஒன்றும்,
இரும்பொறை என்பது ஒன்றும்
கற்புஎனும் பெயரது ஒன்றும்
களிநடம் புரியக் கண்டேன்!'

என்பது போன்ற ரஸவாதிகளுக்கும் அகப்படாத ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கத்துக் கிணையான கம்பீரமான செய்யுட்களும், அவற்றைப் பொருந்த அமைத்துவைக்கும் ரசனைத் திறனுமே கம்பனைப் பிராகிருதமான கவிகளினின்றும் அவன் சாதியைச் சேர்ந்த கலைவலாளரான வால்மீகி, வியாசன், ஹோமர், மில்தன் முதலியோரினின்றும் வேறுபடுத்தித் தனிச் சிறப்புத் தருகின்றன.

கம்பன் வழக்கமாய்க் கதைப் பாங்கை மறப்பதில்லை. ஆனால் அனன்னிய சாத்தியமான பராக்கிராமம் காட்டித் தன் பெருந்தேவி சிறையிருந்த உளவைக் கண்டுபிடித்துத் தந்த அனுமனுக்கு இவ்விடத்தில் ராமன் ஓர் நன்றிக் கூற்றுக் கூடக் கூறுவதாகச் சொல்லவில்லை. இருப்பினும் வால்மீகி கூறுவது போல அனுமன்மீது தானும் அங்கதன் மீது லக்ஷ்மணனும் 'ஏறிச் செல்வோம்' என்று ராமனே சொன்னான் என்னாமல், கம்பன், அனுமன் இரண்டு கைகளையும் கூப்பிக் கொண்டு, 'என்னைக் குரங்கென இகழாமல் என்மீது ஏறி வரத் திருவுளம் பற்றவேண்டு' மென்று சொல்லிய பிறகே ராமன் சிறிய திருவடியின் மீது சரணம் வைத்தான் என்று கதையைப் புனைந்திருப்பதினின்று மிகச் சிறிய விஷயங்களிலும் கூட அவன் தன் அரிய கருத்தைச் செலுத்திக் காவியத்தைத் திறம்பட அமைத்திருக்கிறான் என்று படிப்போர் கண்டுகொள்வர்.

### கூ. யுத்த காண்டம்

ரசனைச் சுனையின் ஆராய்ச்சியில் இங்கு கம்பனுடைய யுத்த காண்டத்தை ஆராய எடுத்துக் கொண்டோம். இவ்யுத்த காண்டம் ஒன்று மாத்திரம் அளவில் மேனாட்டுப் பெரிய மகா காவியங்களுக்கு ஏறத்தாழச் சரியாக இருக்கிறது. சாதாரணப் பதிப்புக்களில் யுத்த காண்டத்தில் 4,358 விருத்தங்கள் காணப் படுகின்றன. இலியாதில் 15,693 அறுசீர் வரிகளே இருக்கின்றன

என்று கணக்கிடுகிறார்களாதலால் கம்பனது யுத்த காண்டம் இலியாதைவிடப் பெரிதாகவே இருக்கிறது. அவ் இலியாதில் உள்ள சகல சுவைகளையும் இக் காண்டத்தில் நாம் காணலாகும். யுத்த காண்டம் என்று பெயர் வைக்கப்பட்டிருந்தாலும் இது யுத்தங்களை மாத்திரம் வர்ணிக்கவில்லை. சோகம், பயம், வியப்பு, பக்தி, காதல் முதலிய இதர ரஸங்களும் வீர ரஸத்தோடு சம்மேளித்து இக் காண்டத்தை அழகுபடுத்துகின்றன.

இக் காண்டமே கம்ப ராமாயணத்தின் இறுதிக் காண்டம். இதில்தான் கதையின் வஸ்து சம்பூர்ணமாகிறது. சாதாரணமாக நமது பண்டிதர் யுத்த காண்டத்தை மற்ற ஐந்து காண்டங்களையும் படிக்கும் கவனத்துடன் படிக்கிறதில்லை. அவர்கள் இதில் மற்ற காண்டங்களிலுள்ள சுகம் இல்லை யென்ற ஓர் எண்ணத்தை உண்டாக்கிப் படிப்போருக்கு இதன்மீது ஓர் அசிரத்தை ஏற்படும் படி செய்துவிட்டார்கள். ஆனால் கம்ப ராமாயணத்தின் பெருமை யெல்லாம் இவ் யுத்த காண்டத்தில்தான் காணப்படும். இதுதான் கம்ப ராமாயணமாகிற விஸ்தாரமான துர்க்கத்தில் அரசன் உகந்து வாழும் அரண்மனையாகும். ஆகையால் கம்பன் தனது ரசனைத் திறன் அனைத்தையும் இங்கு காட்டியிருப்பான் என்று எதிர் பார்ப்பது முறையேயாகும். கம்பனும் அவ்வாறே உண்மையில், தன் சக்தி யனைத்தையும் இக்காண்டத்தில் காட்டியுள்ளான்.

யுத்த காண்டம் கடலின் வர்ணனையோடு தொடங்கு கிறது. ஆனால் நாம் ஏற்கெனவே குறித்திருக்கிறதைக் கொண்டு படிப்போர் எதிர்பார்க்கக்கூடியபடி இங்கும் வருணனை வழி வேண்டு படலத்திலும் கடல் வர்ணனை மூன்றாந் தரத்ததாகத்தா னிருக்கிறது. பைரனுடைய கம்பீரமான சமுத்திர வர்ணனையை நினைவுறுத்தக்கூடிய, ரஸிகர் காதில் அடிக்கொரு முறை அவர்கள் விரும்பாம லிருக்கையிலும் கூடத் துவனித்துக் கொண்டிருக்கக் கூடிய, செய்யுள் ஒன்றேனும் இப்படலங்களில் இல்லை. கடல் காண் படலத்திலுள்ள பன்னிரண்டு செய்யுட்களும் கேவலம் வார்த்தைகளால், வியர்த்த வார்த்தைகளால், நிரம்பியிருக்கின்றன. அவைகளிலுள்ள உத்பிரேக்ஷைகள் சமுத்திரத்தின் கோஷத் தையோ, பூரிப்பையோ, அலை வீக்கத்தையோ, பிரதிபிம்பிக்கும் ஆற்றலற்றனவா யிருக்கின்றன. வர்ணனையின் முடிவில் கவி,

................................... இலங்கைப்
பின்னதாய காரியமும் நிகழ்ந்த பொருளும் பேசுவாம்

என்னும் போது நல் வேளையாய் இவ்வளவோடு நிறுத்தினானே என்ற எண்ணமே உண்டாகிறது.

மந்திரப் படலத்தில், அரக்கர் ராவணனது சன்னிதியில் ராமனோடு எவ்வாறு போர் புரியலாம் என்று விவரிக்கும் பாகத்தில், மில்தனது ஸ்வர்க்க நஷ்ட காவியத்தின் 2-ம் புத்தகத்தில் காணும் மந்திர★ வர்ணனையின் ஒழுங்கும் திருப்தி உணர்ச்சியும் இல்லை. ஆனால் அரக்கரின் மந்திரத்தில்தான் உபாக்கியான ரத்தினமாகிய இரணியன் வதைச் சரித்திரம் விபீஷணனால் ராவணனுக்குச் சொல்லப்படுகிறது.

ஸ்ரீ பாகவதத்திலுள்ள பிரகலாத சரித்திரத்தையும், அதை அனுசரித்துப்பொம்மர போதன்னா ஆந்திர பாகவதத்தில் எழுதிய பிரகலாத சரித்திரத்தையும் கம்பனது இரணியன் வதைப் படலம் வெகு சுலபமாக வென்றுவிட்டது.

ராவணன் தன் வார்த்தையைத் திரஸ்கரிக்கவே, விபீஷணன் அவனை விட்டுவிட்டு ராமனிடம் சரணாகதி செய்து கொள்ளப் போய்விடுகிறான். ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயத்தில் ராமாயணத்திற்குச் சம்பிரதாய கிரந்த ஸ்தானத்தைக் கொடுப்பது இந்த விபீஷண சரணாகதியேயாகும் என்று சொல்லலாம். விபீஷணனைச் சேர்த்துக் கொள்ளலாமா கொள்ளக்கூடாதா என்கிற விஷயத்தை வானரர் சபையில் யோசித்து, அம் மந்திரத்தின் இறுதியில் ராமபிரன்,

'ஆநயை நம், ஹரிச்ரேஷ்டஹ,
தத்த மஸ்யாப்ஹயம் மயா!
விப்ஹீஷணோவா, ஸுக்ரீவ,
யதி வா ராவண: ஸ்வயம்!' †

---

★ அரசன் மந்திரிகளுடன் செய்யும் ஆலோசனை.

† 'வானர சிரேஷ்டனான சுக்ரீவ! அவன் விபீஷணனாகவிருந்தாலும் சரி, சாக்ஷாத் ராவணனாயிருந்தாலும் சரி! அவனுக்கு அபயம் கொடுத்து விட்டேன்; இனி அவனை என்னிடம் அழைத்து வந்துவிடு!'

என்று சொல்லுகிற யுக யுகாந்தங்களையும் தாண்டி வந்து ராம பக்தர் அனைவருக்கும் முக்தி நம்பிக்கையைத் தருகிற கம்பீரமான வாக்கானது வால்மீகி பகவான் நம்மனோருக்காக வரையாது கொட்டிவைத்திருக்கிற ரத்தினக் களஞ்சியத்தினுள் ஜாஜ்வல்லிய மானதோர் மணியரசாகும். இச்சபையின் மந்திரத்தை வர்ணிக்கை யில் வால்மீகி தனது கவிநயமனைத்தையும் காட்டியிருக்கிறான். அண்ணனைக் காட்டிக் கொடுக்கிறவனை நம்பக்கூடாது என்று சுக்ரீவன் சொல்லுவதும், 'தான் வாலியைக் காட்டிக்கொடுத்தது மாத்திரமின்றிக் கொல்வித்ததையும் சுக்ரீவன் மறந்துவிட்டான் பார்த்தாயா?' என்று ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து முறுவலிப் பதும்,

> 'ராஜ்ய காங்க்ஷீ ச ராக்ஷஸ: —
> பண்டிதா ஹி ப்ஹவிஷ்யந்தி
> தஸ்மாத் கிராஹ்யோ விப்ஹீஷண:'★

என்று சொல்லி ராகவன் சுக்ரீவனைக் குத்திக் காட்டுவதும் இந்த மந்திரசபையின் வர்ணனைக்குச் சாத்தியதைத் தன்மையும் உயிரும் கொடுக்கின்றன. ஆனால் கம்பன் இந்தக் கட்டத்தில் கூட வால் மீகியை வெல்கிறான். எவ்வாறு! என்று ஓரிரண்டு விஷயங்களில் குறித்துக் காட்டுவோம்.

விபிஷணனுடைய குணாகுணங்களை அனுமன் எடுத்துக் கூறுவதில், தூதனைக் கொல்லக் கூடாது என்று அவன் ராவண னுக்குத் தர்மம் எடுத்துக் கூறி அனுமனுக்குப் பரிந்து பேசியதாகச் சொல்லுவது இயற்கையாகும்: வால்மீகியில் இது கவனிக்கப் படவில்லை. கம்பனோ அனுமனுடைய வாக்கில்,

> ..................................தூதரை எறிதல் என்பது
> புல்லிது; பழியொடும் புணரும்; போர்த்தொழில்
> வெல்லலம் பின்னை!' என்று இடை விலக்கினான்,

---

★ 'இந்த ராக்ஷஸன் இலங்கை ராஜ்ஜியத்தை விரும்புகிறான். இவ்வாறு அரசை விரும்புவோர் அவ்விருப்பத்தைச் சாதித்துக் கொள்கிற விஷயத்தில் தங்கள் சாமர்த்தியமனைத்தையும் பிரயோகிப்பர். ஆதலால், விபீஷணன் கொள்ளத்தக்கவனே.'

எனவும்,

> 'தூதரைக் கோறலும் தூய்து அன்றாம், என
> ஏதுவின் சிறந்தன எடுத்துக் காட்டினான்.'

எனவும், பேச்சுக்களை அமைத்து, சம்பாவிதத்தால் வரும் திருப்தியை நமக்கு அளிக்கிறான்.

வேறொரு பாவிகம் கம்பனுடைய விபீஷண சரணா கதியை வால்மீகியினதைவிட உயர்த்துகிறது. அஃதாவது, விபீஷ ணனுக்கு அபயப் பிரதானம் கொடுத்தாயிற்றோ இல்லையோ உடனே வால்மீகியில் ராமன்,

> 'ஆக்ஹ்யாஹி மம தத்வேந
> ராக்ஷஸாநாம் பலாபலம்;'★

என்று சொல்லுவதால், விபீஷணன் மீதுள்ள நிர்ஹேதுகமான பிரீதியினாலன்று (முக்கியமாக) அவனுக்கு ராமன் அபயப் பிரதானம் செய்தது, மற்று, இலங்கை அரக்கரின் பலாபலத்தை ஒற்றித் தெரிந்துகொள்ளுவதேயாகும் என்று படிப்போருக்குப் படுகிறது. ஆனால் கம்பன் ராமனது குணத்தை ஒரு சிறு புனை வினால் மிகவும் உயர்த்தி விடுகிறான் என்று கீழே காட்டுகிறோம்.

---

★ 'ராக்ஷஸர்களது பலாபலங்களை உள்ளது உள்ளபடியே எனக்குச் சொல்வாய், விபீஷண!'

ந ஸர்வே ப்ஹ்ராதாஸ் தாத
ப்ஹவந்தி ப்ஹா தோபமா: ★

என்று சுக்ரீவனையும் லக்ஷ்மணனையும் குத்திக் காட்டிய பிறகும் கூட வால்மீகியில் சுக்ரீவன் பழைய ஆக்ஷேபணைகளையே திரும்பக் கூறுவதாக வருவது அசம்பாவிதமாக† இருக்கிறது. கம்பனில் இத்தகைய அசம்பாவிதப் போக்குகள் இல்லை. அனுமன் விபீஷணனை அங்கீகரிக்க வேண்டியது என்று அபிப்பிராயம் சொல்லியதும் ராமன் வாதத்தை முடித்து,

'வெற்றியே பெறுக, தோற்க; வீக, வியாது வாழ்க;
பற்றுதல் அன்றி உண்டோ புகல் எமைப் பகர்கின்றானை?'‡

---

★ (இ-ள்) 'அப்பா, சகோதரராய்ப் பிறந்தவரெல்லாம் பரதனைப் போன்றிருப்பதில்லை.'

இந்த பாவத்தைக் கம்பன் வால்மீகியிலிருந்தே எடுத்துக் கொண்டிருக்கிறான். ஆனால், அதை இங்கே ஆளாமல் வாலி வதைப் படலத்தில்தான் ஆளுகிறான்.

'அத்தா, இது கேள் ..........................
எத்தாயர் வயிற்றினும் பின் பிறந்தோர்கள் எல்லாம்
ஒத்தால் பரதன் பெரிது உத்தமன் ஆவதுண்டோ?'

என்ற செய்யுளையேதான் குறிக்கிறோம் என்று வித்துவான்களுக்கு எடுத்துரைக்க வேண்டியதில்லை. ஆனால், இங்கேயும் வால்மீகி, இதனோடு 'மத்வித்ஹாவா பிது: புத்ரா': ('என்னைப் போன்ற பிதிரு வாக்கிய பரிபாலனம் செய்யும் புத்திரர்களாவது') என்ற வார்த்தைகளைச் சேர்த்து ராமனுடைய வாக்கில் தற்புகழ்ச்சியைப் புகுத்தியிருக்கிறான். கம்பன் தகுதி நோக்கி அந்த பாவத்தை எடுத்துவிட்டிருக்கிறது குறிப்பிடத்தக்கது.

† ஸமாஸார்த்தத்திலேயே கொள்க — அதாவது, 'நடந்திருக்கக்கூடியதன்று போல' எனப் பொருள் கொள்க.

‡ (இ-ள்) 'நமக்கு வெற்றியே வரட்டும், தோல்வியே வரட்டும்; நமக்கு அழிவே வரட்டும், அல்லது வாழ்வே பெருகட்டும்; சரணாகதி என்று சொல்லி என்னை அடைந்துவிட்டவனை நான் கைவிடுவது எங்கேனும் உண்டோ?'

என்று கம்பீரமாகக் கூறிவிடுகிறான். அதன் பிறகு விபிஷணன் வந்து ராமனிடம் நேரில் சரணாகதி செய்கிறான். இதே சமயத்தில் இலங்கையைப் பற்றிக் கேட்டல் ராமனது குணத்துக்கு இழுக்குத் தரும் என்றுன்னிக் கம்பன் இப்படலத்தை இவ்வளவோடு நிறுத்திக் கொண்டு, ராமன் விரகதாபப்பட்டு வருந்துவதாகவும், அப்பொழுது சுக்ரீவன் அவனிடம் வந்து,

> 'தோய்வது என்? காரியம் நிரப்பும் சிந்தையை
> மேயவன் தன்னொடும் எண்ணி, மேல்இனித்
> தூயது நினைக்கிலை?' ★

என்று யோசனை கூறுவதாகவும், அதன் பிறகு ராமன் விபீஷணனை இலங்கையின் காவலைப் பற்றியும் படைகளைப் பற்றியும் விசாரிப்பதாகவும் கற்பித்து வைத்திருக்கிறான். இதனால் இலங்கையின் சமாசாரமும் கேட்கப்படுகிறது. ராமனுடைய குணமும் சுயநயம் என்கிற குற்றத்தினின்றும் விடுபடுகிறது.†

ராம ராவணர்களாகிற இரண்டு வீரர்களும் எதிரிகளின் சைனியங்களைக் கண்ணுற்றுப் பலாபலங்கள் தெரிந்து கொண்ட பிறகு அங்கதன் ராமனால் ராவணனிடம் தூதனாக அனுப்பப் படுகிறான். 'மாருதி அல்லனாகில் நீ எனும் மாற்றம் பெற்றேன்,' என்று அடங்காத மகிழ்ச்சி கொண்டு அவன் ராவணனது அரண் மனை சென்று ராவணனோடு சமாதானம் பேசும் செய்திகூடக் கம்பனால் மிக நயமாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. இதன் பிறகு யுத்தம் துவங்கிவிடுகிறது.

போரை வர்ணிப்பதில் ஹோமரேதான் சிறந்த கவி என்ற மேனாட்டு ஆசிரியரின் கூற்றுக்களைக் கண்டும், ஹோமரின் உத்திருஷ்டமான வர்ணனைகளைப் படித்துப் பார்த்தும் நாம்

---

★ (இ-ள்) 'ஏன் துக்கிக்கிறாய்? நம்மோடு வந்து சேர்ந்த விபீஷணனோடு கலந்துகொண்டு இனிச் செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றி நினைக்க வேண்டாமா?'

† இவ்வாறு ஒவ்வோர் பாகத்தையும் ஆராய்ந்துகொண்டு போனால் இவ் ஆராய்ச்சி பெரிதும் விரியுமாதலால், இவ்வியாசத்தின் பிற்பாகத்தில் ரசனை - ஆராய்ச்சி பெரும்போக்காகத்தான் செய்யப்படுகிறது.

மயங்கிப் போய், ஹோமரின் போர்ச் சித்திரங்களைவிட உயர்ந்த சித்திரங்கள் கிடையா என மதித்திருந்தோம். ஆனால் கம்பராமாயணத்தின் யுத்த காண்டத்தைப் படித்துப் பார்த்ததும், கம்பன்போர் வர்ணனையில் ஹோமருக்குத் தாழ்ந்தவனில்லை என்றும், சில இடங்களிலும் சில விஷயங்களிலும் ஹோமரது போர் வர்ணனையை வென்றிருக்கிறானென்றும் கண்டுகொண்டோம். ஹோமரில் ஓர் குற்றம் இங்கு எடுத்துக் காட்டற்பாலது. அந்தந்த நாயகனைப் போர் முனையில் கொண்டுவரும்போது ஹோமர் அதுவரையில் அவன் சும்மா இருந்தான் என்று பொருள்படும்படி கதை புனைந்திருக்கிறான். உதாரணமாக, மகா வீரனான தியமேதனைப் பார்த்து ஆத்ரேயன், 'நீ என்ன பயந்தாரியாயும் சோம்பேறியாயும் இருக்கிறாய்?' என்று நீண்ட பிரசங்கம் செய்த பிறகுதான் முன்னவன் தன் பராக்கிரமங்களைக் காட்டத் துவக்குகிறான். அதேமாதிரி இணையற்ற வீரனான ஹெக்தரைக் கூட ஸார்ப்பெதன், 'நீ என்ன போரில் கலவாமல் வாளா இருக்கிறாய்?' எனக் கண்டிக்கிறான். அவனும் சும்மா இருந்ததாக ஒப்புக் கொள்கிறான். ஆனால் கம்பனில் இத்தகைய குற்றங்கள் கிடையா. போர் நடக்குமிடத்தில் கவி சாக்ஷாத்தாய் நின்று பார்த்தால் எவ்வாறு வர்ணிப்பானோ அவ்வாறே அவனது வர்ணனைகள் அமைந்திருக்கின்றன. அவன் முதலில் நாற்பெரும் படைகளும் தத்தமக்குள் போர் செய்தன என்று வர்ணனையைத் துவக்கிக் கொள்கிறான். அவ்வர்ணனை போதிய அளவு சென்ற பிறகு தனித்தனி வீரர்கள் யுத்தரங்கத்தில் காட்டிய பராக்கிரமங்களை வர்ணிக்க எடுத்துக் கொள்கிறான். அதுவரையில் அவர்கள் சும்மா இருந்தார்கள் என்ற எண்ணம் படிப்போருக்கு வராதபடி கம்பன் சாமார்த்தியமாய்ப் பார்த்துக்கொள்கிறான். இகல் குறித்த நாயகர் இருவர் போர் செய்து ஒருவர் தோற்றுப் பின்னடைந்ததும் கம்பன் உடனே வேறு நாயகரைப் போர்க்களத்தில் புகுவிக்கிறதில்லை: மறுபடியும் ஓர் பொதுப் போரை விஸ்தாரமாக வர்ணித்த பிறகுதான் அவன் இரண்டாவது இணையைக் கொண்டு வந்து விடுகிறான். இவ்வாறு அநேகமாய் ஒவ்வோர் போரும் அவியக்தத்தினின்று பரிணமித்து வியக்த தசையையடைந்தும், அந்த வியக்தம் பரிணமித்து ஆரோகணக் கிரமம் அனைத்தையும் பெற்ற பிறகு படிப்படியாயோ ஒரே அடியாயோ இறங்கி அவியக்தத்தன்மையை மறுபடியும் பெற்றும்' பிண்டாண்டங்களின் வளர்ச்சிகளை அனுசரிக்கிறது. வேறு எந்தக் கவியும் இந்த உயர்ந்த வழியைக்

கம்பனுக்கு முன் கையாண்டதில்லை என்று நிச்சந்தேகமாய்ச் சொல்லலாம்.

தனிப் போர் வர்ணனை ஓர் பக்கம் இருக்க, ராம ராவண யுத்தத்தின் சமக்கிரத்தையும் கம்பன் ஆரோகணக் கிரமம் கெடாமல் அமைத்திருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. இதுவே ரசனையின் பெருந்திறன். வால்மீகியில் ஆரோகணக் கிரமம் வெகு ஸ்தூல மாகத்தான் காட்டப்படுகிறது. முதல் போரிலேயே ராமன் அடிபட்டு வீழ்ந்துவிடுவதும் சீதை போர்க்களம் வந்து புலம்பு வதும் வர்ணிக்கப்பட்டுப் போய் விடுகிறது. இதே போரிலேயே லக்ஷ்மணன் நாகபாசத்தால் கட்டுண்பதும், ராமன் அதைக் கண்டு மனமுடைந்து பிரலாபிப்பதும், கருடன் வரவினால் நாகபாசம் அவிழ்ந்துபோய் விடுவதும் நிகழ்ந்துவிடுவதாய் வர்ணிக்கப் படுவதால் வால்மீகியின் யுத்த காண்டம் ஆரோகணக் கிரமத் தினால் பெறக்கூடிய அழகை அம்மட்டுக்கு இழந்துவிடுகிறது. ஏனெனில் 45-வது சருக்கத்தில் ராம லக்ஷ்மணர் இந்திரசித்தினால் அடிபட்டு வீழ்கிறார்கள் என்ற வர்ணனைக்குப் பிறகு வால்மீகிக்கு 75-வது சருக்கத்தில் அதேமாதிரி சம்பவத்தையேதான் மறுபடி வர்ணிக்க வேண்டி வருகிறது. ஆதலால் வர்ணனைகள் வியப்பை யும் ஆரோகண சுகத்தையும் இழந்துவிடுகின்றன. வால்மீகி இத்துணைப் பெரிய கவியாக இருந்திராத பக்ஷத்தில், வர்ணனை யைத் துரித காலத்தில் ஆரம்பித்துவிட்டு விளம்ப காலத்துக்கு இறங்கவேண்டி வரும்போது அவனது வர்ணனை ரஸமின்றிப் போயிருக்கும். அவனது அசாமானிய கவிதா சக்தியே இவ் இரசனைக் குற்றத்தால் வரும் ரஸக் குறைவினின்று அவனைக் காக்கிறது. உதாரணமாக, எப்படியாவது ஆரோகணச் சுவையை உண்டாக்குவதற்காக வால்மீகி இரண்டாவது முறை லங்காதகனம் நிகழ்வதாகக் கற்பிக்க வேண்டி வருகிறது. அப்படியிருந்தும் முதலதனில் போலவே இதிலும் புதுமை புலப்படும்படி செய்ய அவனது அபாரமான பாவனா சக்தியும் சொல்லின் மோகனமும் அவனுக்கு ஆற்றல் அளிக்கின்றன.

கம்பனோ சிறந்த சுவையுணர்ச்சியுடன் படலங்களை ஆரோகணக் கிரமத்திலேயே அமைத்திருக்கிறான். அதனோடு, யுத்தங்களுக்கிடையில் சீதா ராவண சம்வாதத்தையும், மாயாசனகப் படலத்தையும், மாயா சீதைப் படலத்தையும், தேரேறு படலத்தை

யும் இடையிடையே புகுத்தியும், யுத்தங்களை வர்ணிக்கிற படலங் களிலேயே தானமாலையின் சோகம், விபீஷண கும்பகர்ணர்களின் அருமையான சம்வாதம் முதலியவற்றைச் சேர்த்தும், யுத்த வர்ணனைகளையே படித்து அலுத்துப்போகும் மனோபாவத்துக்கு அங்கங்கே இளைப்பாற்றி செய்துகொடுக்கிறான். எப்படி என்று சற்று விரிவாகக் காட்டி நம் ரசனை ஆராய்ச்சியை நிறுத்திக் கொள்வோம்.

ராவணன் வானர சைனியத்தைக் கண்ணுற்று வரும்போது சுக்ரீவன் திடீரென அவன்மீது பாய்ந்து மகுடத்தைத் தகர்த் தெறிகிறதே ராம ராவண யுத்தத்தின் முதற் சம்பவமாகும். இங்கே சுக்ரீவனுக்காக ராமனை இரங்கச் செய்து, கம்பன் அப்போரையும் இரங்கலையும் ஒவ்வொன்றும் மற்றதினால் தூக்கிக் காட்டப் படும்படி செய்துவிடுகிறான்.

*......................நின்னை அக் கருணை யில்லோன்*
*கொல்லுதல் செய்தா னாகில்........................*
*..........................................................*
*வெல்லினும் தோற்றேன் யானே அல்லனோ*
*விளிந்தி லாதேன்!''*

என்று ராமன் சுக்ரீவனைப் பார்த்துச் சொல்லுகிற வார்த்தை அவனது அபிராகிருதமான அன்பையும் கருணையையும் காட்டா நின்றது. அந்தப் புறத்தில்,

*'.................. இன்று கண்டும் அக் கிளி மொழி மாதராளை*
*மீட்டிலேன்! தலைகள் பத்தும் கொணர்ந்திலேன்!*
*வெறுங்கை வந்தேன்!'*

என்றும் பிறவும் சொல்லுகிற சுக்ரீவன் தன் வன்மையைத் தானே இழித்துக் கூறி அவனது வீரத்தை நாம் மெச்சும்படி செய்துவிடு கிறான்.

முதனாட் போரில் வீரர்கள் போர் செய்வதும் அவரவர்கள் தங்கள் சத்துருக்களைப் பற்றி நினைக்கும் எண்ணங்களும் சொல் லும் வார்த்தைகளும் பின்னால் வரும் போர்களில் அவர்கள் காட்

டப்போகிற பராக்கிரமங்களுக்கு ஒத்திகையாகவும் கட்டியமாக வும் விளங்குகின்றன. அனுமன் ராவணனை முஷ்டியால் குத்திய போது அவனது வலுவைக் கண்டு ராவணன்,

'வலி என்பதும் உளதே, அது
நின்பாலது, மறவோய்!
..................................
சலி என்று எதிர் மலரோன் உரை
தந்தால் இறை சலியேன்,
மெலிவு என்பதும் உணர்ந்தேன், எனை
வென்றாய், இனி, விறலோய்!★

என்று சொல்லி அனுமனது பலத்தை மெச்சுவதும், அதற்கு மாருதி,

'............................எனை நீ
வென்றாய் அலையோ, உன் உயிர்
வீடாது உரை செய்தாய்' †

என்று சொல்லுவதும் அவர்களது போரை நேரே பார்த்தால் தோன்றக்கூடிய உணர்ச்சியைவிட அதிகமான உணர்ச்சியை நமக்குத் தருகின்றன. இந்த வார்த்தைகளை எழுதிய பிறகு கம்பன் நம்மை அழைத்து, ''ராவணன் யுத்த ரங்கத்தில் பிரவேசிக்கிறான், அனுமன் போர்க்களத்தில் வந்துவிட்டான், பார்த்துக்கொள்ளுங் கள்,' என்று சொல்லவே வேண்டியதில்லை. அந்த இரண்டு செய் யுட்களைக் கொண்டு கம்பன் அனுமனுக்காகவும் ராவணனுக்காக வும் நம்முடைய கவனத்தையும் வியப்பையும் விலைக்கு வாங்கிக் கொண்டுவிட்டான். இனி அவ்விரு வீரர்களும் யுத்த பூமிக்கு வரும்போது நமது மனம் தானே வலிய இழுக்கப்பட்டுப்போய் அவர்களுடைய பராக்கிரமங்களில் மூழ்கிப் போவதைத் தவிர வேறு மார்க்கமற்றதாய் விடுகிறது.

---

★ 'உலகத்தில் வன்மை என்றொன்று இருக்குமானால் அது உன்னிடம் தான் இருக்கிறது, அனும! பிரமனே, ''என்னோடு போர் செய்து நீ தளரக் கடவாய்'' என்று சபிக்கினும் தளர்வேனல்லாத நான் உன் முஷ்டிக் குத்தால் மெலிவு என்பது என்ன என்று உணர்ந்துகொண்டேன்; ஆதலால் நீயே எனை வென்றாய்!

† 'உன் உயிர் போகாததுமன்றி இத்தனை வார்த்தை நீ பேசுகிறபோது நீ யல்லனோ என்னை வென்றுவிட்டவன்!'

முதற் போரில் தோல்வியுண்ட ராவணன் மாலியவானிடம் தான் பட்ட பாட்டைச் சொல்லி ராமனுடைய அபிராகிருதமான பலத்தை நாம் உணரும்படி செய்துவிடுகிறான். கும்பகருணன் எழுந்து போர் செய்தால்தான் இனி உண்டு என்று ராவணனுக்குத் தோன்றிவிடுகிறது. கும்பகருணனைக் கம்பன் வால்மீகி காட்டு கிறபடி காட்டாமல் தர்மாதர்மம் அறிந்த ஓர் ஞானியாகச் சித்தரித் திருக்கிறான். வால்மீகியில் கும்பகருண ராவண சம்வாத கட்டத் தில் நூற்சிதைவு இருப்பதாக நமக்குத் தோன்றுகிறது — அவன் பேசும் பேச்சு முன்னுக்குப் பின் முரண்பாடுற்றதாக இருக்கிறது. ஆனால் கம்பனில் அவனது நிலை முரணின்றி அறிவுக்குப் பொருந் தியதாக இருக்கிறது. ராவணன் செய்த தீமையை அவன் வெறுக் கிறான். ராமனை மகா பலவான் என்றும் அவதாரம் என்றும் நினைக்கிறான். ஆதலால் சீதையை விட்டுவிட்டுச் சமாதானம் செய்து கொள்ளும்படி ராவணனுக்கு அவன் புத்தி கூறுகிறான். ஆனால்,

> 'உறுவது தெரிய அன்று உன்னைக் கூயது!'

என்று கூறி ராவணன் அவமதித்ததும் அவன்,

> 'என்னை வென்று உளர் எனின், இலங்கை காவல,
> உன்னை வென்று உயருதல் உண்மை! ஆதலால்,
> பின்னை நின்று எண்ணுதல் பிழை, அப் பெய்வளை
> தன்னை நன்கு அளிப்பது தவத்தின் பாலதே.' ★

என்று யோசனை கூறிவிட்டு,

> 'இற்றை நாள் வரைமுதல் யான் முன் செய்தன
> குற்றமும் உள எனின் பொறுத்தி, கொற்றவ!'

என்று அபராத க்ஷமை கேட்டுக்கொண்டு,

---

★ பொருள்:—'என்னை வென்று ராம லக்ஷ்மணர் பிழைத்து நின்றால் உன்னை வென்று விடுவார்கள் என்பதில் ஐயமில்லை. ஆதலின் அப்பொழுதாவது முன் யோசனையுடன் சீதையை ராமனிடம் அனுப்பிவிடு.'

'அற்றதால், முகத்தினில் விழித்தல் ஆரிய!' †

என்று மனம் பொருமிக்கொண்டு போர்முனைக்குப் புறப்பட்டுவிடுகிறான். அச் சமயம் ராவணன் கண்களில் வந்த இரத்தங் கலந்த கண்ணீர் நம் கண்களையும் ஊற்றெடுக்கச் செய்கின்றன!

விபீஷணன் ராமனது உத்தரவு பெற்றுக் கும்பகருணனைப் பேதிக்க முயலுகிறான். அதற்கு, கும்பகருணன், 'ஒருபுறம் ராவணனுக்குத் துரோகம் செய்யமாட்டேன்' என்றும், ஒரு புறம்,

'கும்பிட்டு வாழ்வெனோ யான்
கூற்றையும் ஆடல் கொண்டேன்?' ‡

என்று 'மானத்தைப் பரிபாலிப்பேன்' எனவும், மற்றோர் புறம், நீயும் எங்களோடு வந்துவிட்டால் அரக்க ராயினார்க் கெல்லாம்,

'கையினால் எள்நீர் நல்கிக்
கடன்கழிப் பாரைக் காட்டாய்,'

என்றும் கூறி, நான் 'ராவணனுக்காகக் கடைசிவரை போர் செய்து, ஆலம் கண்டு அஞ்சி ஓடும் அமரர் போல வானரர்களை ஓடச் செய்து, போர்க்களம் முழுவதும் கறங்கு எனத் திரிந்து,

'கருவரை, கனகக் குன்றம் என்னலாம் காட்சி தந்த
இருவரும் நிற்க,

மற்றனைவரையும் கொன்று போடுவேன்' என்று சபதம் செய்து, 'எம்மீது இரக்கம் வையாமல் ராமனிடம் நீ திரும்பச் சென்று நாங்கள் இறந்த பிறகு எங்களுக்குப் பிதிருக் கிரியைகள் செய்து கரையேற்று,' என்று முடிக்கிறான். இந்த சம்வாதத்தினால்

---

★ 'இனி நமக்கு முகவிழி யற்றது, ஐயனே!'

† எமனையும் போரில் வென்ற யான் என் தமயனைக் கொன்ற மானிடனைக் கும்பிட்டு வாழ்வேனோ?'

விபீஷணனது தன்மையும் கும்பகருணனது தன்மையும் மிகவும் உயர்வு பெறுகின்றன.

கும்பகருணனது போருக்கும் அதிகாயனது போருக்கும் இடையில் வேறொரு ருசியான சம்பவத்தைப் புகுத்தாமற் போனால் ரசனையில் சுகம் குறையும் என்று கண்டு, கம்பன் மாயாசனகப் படலத்தை இடைப் புகுத்தியிருக்கிறான். இப்படலத்தில்,

**'ஊண் இலா ஆக்கை பேணி**
**உயிர் புகழ் சூடாது, உன்முன்**
**நாண் இலாது இருந்தேன் அல்லேன்:**
**நவை அறு குணங்கள் என்னும்**
**பூண் எலாம் பொறுத்த மேனிப்**
**புண்ணியமூர்த்தி தன்னைக்**
**காணலாம் இன்னும் என்னும்**
**காதலால் இருந்தேன், கண்டாய்!'★**

என்று, தன்னைக் காதல் இரக்க வந்த ராவணனிடம் கம்பீரமாய்க் கூறும் சீதா பிராட்டியின் திருவாக்குகள் நமக்கு வீரச் சுவையை வேறொரு வழியில் ஊட்டுகின்றன.

அதிகாயனது போர் முடிந்த பிறகு இந்திரசித்தனது நான்கு போர்கள் வர்ணிக்கப் பெறுகின்றன. இவை நான்கும் அழகிலும், காம்பீரியத்திலும், வேலைப்பாட்டிலும் ஒன்றைவிட ஒன்று உயர்ந்துகொண்டே செல்லுகின்றன. முதற் போரிலே லக்ஷ்மணனை ராவணன் அவனிடமே மெச்சும்போது,

---

★ 'பிராணனைவிட்டு இப்பொழுதே புகழுடம்பை எய்தாமல் நான் உயிர் தரித்திருப்பது, விரதங்களால் இளைத்த என் உடலின்மீது அபிமானம் வைத்து என்றாவது, மன உணர்ச்சி அற்றுப்போயினதால்தான் என்றாவது நினையாதே. தன் இணையற்ற குணங்களையே தன் ஆபரணங்களாகக் கொண்ட புண்ணியமூர்த்தியாகிற என் கணவனை இந்த ஜன்மத்திலேயே காணலாம் என்கிற ஆசை ஒன்றினால்தான் நான் இன்னும் ஜீவனை வைத்துக்கொண்டிருக்கிறேன் என்று அறிந்துகொள்!'

**'கானின் அன்று இகற் கரன் படை படுத்த அக் கரியோன்**
**தானும், இந்திரன் தன்னை ஓர் தனுவலம் தன்னால்**
**வானின் வென்ற என் மதலையும், வரிசிலை பிடித்த**
**யானும் அல்லவர் யார் உனக்கு எதிர்?'★**

என்று சொல்லி இந்திரசித்தனது போர்த்திறத்தைப் புகழ்கிறான். அவனது போரும் இப் பெரும் புகழைப் பொய்ப் படுத்தவில்லை. அவன் ஒருவனே ராவணனை எதிர்த்துப் பேசும் திறலை உடையவன். 'அதிகாயனை யார் கொன்றார்?' என்று அவன் கேட்டதற்கு 'லக்ஷ்மணன் கொன்றான்,' என்று ராவண்ன் பதில் சொன்னபோது,

**'கொன்றார் அவரோ? கொலை சூழ்க என நீ கொடுத்தாய்!'**

என்று, அவனையே இந்திரசித்தன் கண்டிக்கிறான். பிறகு பெரிய சபதங்கள் செய்து, பெரும் படையோடு சென்று, வானரப் படையை நூறி, நாகபாசத்தை விட்டு லக்ஷ்மணனைக் கட்டிவிட்டு, ஜயகோஷத்தோடு திரும்புகிறான். ஆனால்,

**விசையால் அனுங்க வடமேரு, வையம்**
**ஒளியால் விளங்க, இமையாத்**
**திசையானை கண்கள் முகிழா ஒடுங்க,**
**நிறைகால் வழங்கு சிறையான்**

ஆகிய கருடன் தோன்றி அப் பாசக்கட்டை அவிழ்த்துவிட்டான். இது தெரிந்ததும் உடனே இந்திரசித்தன் போர்க்களத்துக்குத் திரும்பி வருவதானால் வேறுபாட்டினால் வரும் அழகு குன்று மாதலால், கம்பன் அவனது இரண்டாம் போருக்கு முன் படைத் தலைவர் போரையும் மகரக் கண்ணன் போரையும் இடைப் புகுத்தி வைத்திருக்கிறான். மகரக் கண்ணன் இறந்த பிறகு ராவணன் அழைக்கிறான் என்று தூதன் வந்து சொல்ல, இந்திரசித்து,

**'போயின நிருதர் யாரும் பொன்றினர் போலும்!'**

---

★ 'ராமனையும், என் மகன் இந்திரசித்தனையும், என்னையும் விட்டால் போரில் உனக்கு நிகரானவர் வேறு யார்?'

என்று சொல்லிக்கொண்டு ராவணனிடம் சென்று, 'இன்று அனைவரையும் அதஞ்செய்கிறேன்' என்று சங்கற்பித்துக் கொண்டு களம் செல்கிறான். அங்கே லக்ஷ்மணன் முதனாள் தோற்ற தோல்விக்குப் பரிகாரமாக, 'இன்று நானே சென்று இந்திரசித்தனை எதிர்ப்பேன்!' என்று சொல்லி அண்ணனிடம் உத்தரவு பெற்று வருகிறான். போரில் எத்தனை விதமான வேறுபட்ட வர்ணனைகளைக் கொட்ட முடியுமோ அத்தனைவித வர்ணனைகளையும் கம்பன் கொட்டுகிறான். கடைசியில் லக்ஷ்மணனும் ராமனும் பிரம்மாத்திரத்தால் கட்டுண்டு வீழ்கிறார்கள். இந்திரசித்தனும் தன் வீரர் அனைவரும் களத்தில் பட்டுப் போயினமையாலும், சத்துருக்கள் அனைவர்களும் அழிந்தார்கள் என்று நினைத்தும், லங்கை திரும்பித் தன் வெற்றியை ராவணனிடம் சமர்ப்பிக்கிறான். ஆனால் அனுமன், சாம்பவான், விபீஷணன் ஆகிய மூவரும் அவ் அஸ்திரத்திற்குத் தப்பினவரானதால், சாம்பவானது யோசனையின்மீது அனுமன் மருத்து மலையைக் கொண்டு வந்ததும் வானர சைனியமும் ராம லக்ஷ்மணரும் விழித்தெழுகின்றனர்.

இதைக் கேள்வியுற்றதும் இந்திரசித்தனுக்கு, முதல் தடவையாக, பயம் என்பது தோற்றத் துவக்கிற்று. பிரம்மாத்திரம் கூட அவர்களைக் கொல்லலாம் ஆற்றல் படையாத போது ராமன்,

> *'மானிடன் அல்லன், தொல்லை வானவன் அல்லன், மற்று*
> *மேல் நிவர் முனிவன் அல்லன், வீடணன் மெய்யின் சொன்ன*
> *ஏனவன் எண்ணின் தீர்ந்தார் எண்ணுறும் ஒருவன் என்றே,*
> *தேன் நகு தெரியல் மன்னா, சேகு அறத் தெரிந்தது, அன்றே!'*

என்று தந்தையிடம் சொல்லுகின்றான். இருந்தும், அன்னது பகர்தல் ஆண்மை வினை அன்றாகையால் நிகும்பலை சென்று, யாக பலத்தினால் புதிய ஆயுதங்கள் பெற்று அவர்களை வெல்ல முயலுதலே காரியமென்று தீர்மானித்து, அவ் யாகம் முடியும் வரையில் சத்துருக்கள் தன்னைத் தாக்காதிருப்பதற்காக மாயையினால் சீதையின் உருவம் ஒன்று செய்து, அவ் உருவத்தை வாளால் வீசிக் கொன்று, 'ராம லக்ஷ்மணரைச் செயலறச் செய்து வெல்வேன்' எனச் சங்கற்பித்துக் கொண்டு அவன் போர்க்களம் செல்கிறான்.

(இத்துடன் இந்த ரசனைச் சுவை ஆராய்ச்சி முற்றுப் பெறாமல் நிற்கிறது. இந்திரசித்து மாயா சீதையைப் படைத்து வாளால் வெட்டுவதும், அதைக் கண்டு அனுமன் மயங்குதலும், விபீஷணன் உதவியால் சீதை உயிரோடிருப்பது தெரிந்து பின் நிகும்பலையிற் புகுந்து லக்ஷ்மணன்இந்திரசித்தை வதைப்பதும், இடையில் இந்திரசித்து ராவ்ணனை அடைந்து சீதையை விட்டு விடும்படி வேண்டித் தோல்வியுறுவதும், ராமன் தன் வீர வெஞ்சிலையிலிருந்து 'கண கண கண' என்று அம்பு மழை பெய்து மூலபலத்தை அவிப்பதும், கடைசியில் முறைதுறந்தானான ராவணனே ராமனுடன் வீரப் போர் புரிந்து மடிவதும், மூவுல கிற்கும் கங்குல் விடிவதற்காகத் தான் சிறையிருந்த தேவி மீட்சி பெறுதலும், பதினான்கு வருஷம் கல்லும் கனியும்படி கனிந்த துயரத்தனான பரதன் அக்னிப் பிரவேசம் செய்யப்புகும் சமயத்தில் ராமன் திரும்பிவிட்ட செய்தி கேட்டு ஆனந்தித்தலும், பிறகு ராமன் திருமுடி சூட்டிக்கொள்ளலும் அளவற்ற ரசனைத் திறனுடன் எவ்வளவு ரஸ புஞ்சங்களாக அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதை யெல்லாம், மேதாவிலாஸம் ததும்பிப் பிரகாசிக்கும் அய்யரவர்களுடைய ஆராய்ச்சியின் முற்பகுதிகளை வைத்துக் கொண்டு, நாமாக ஓரளவு ஊகித்துக் கொள்ளவே வேண்டி யிருக்கிறது.)

*காமர் பூவுதிர் கற்பகக் காக்கொலோ?*
*பூமகள் செவ்வி பொங்கும் பயோதமோ?*
*நாமகள் மெய் நடஞ்செயும் ரங்கமோ?*
*பாமகார் பதி கம்பன்நற் பாடலே.*

# கம்ப ராமாயணத்து ஒரு செய்யுட்குக் கூறப்படும் சிறப்புப் பொருள்

வை.மு. கோபாலகிருஷ்ணமாசாரியர்

ஒரு மொழிக்குச் சிறப்பு, அம்மொழியிலுள்ள நூல்களினாலேயே யென்பது யாவரும் உடன்படும் பொருளாகும். பலருடைய மனத்தையும் கவருந் தன்மை வாய்ந்திருப்பது தான் நூல்கட்கு ஏற்றம். நம் தமிழ் மொழியிற் பல நூல்களிருப்பினும், எப்படிப்பட்டவருடைய மனத்தையும் கவரும் வல்லமை வாய்ந்தவை, திருக்குறளும் கம்ப ராமாயணமுமே என்றால், இதனை மறுத்துரைப்பவர் எவரும் இராரென்பது திண்ணம்.

யாவர்க்கும் உதவும் முறையில் அறம் முதலிய மூன்றையும் எடுத்தோதுவதால், திருக்குறள் பலமொழியாளராலும் போற்றப்பட்டுத் தத்தம் மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அந்நூலிற் கூறப்படும் பொருள் உலகியலுக்கு ஏற்றனவாதலாலும், மொழிபெயர்க்குமிடத்துச் சுவை கெடுதலென்பது நேராதாகையாலும், அதனை அங்ஙனம் பலமொழிகளில் மொழிபெயர்த்தல் இயலுவதாயிற்று. கம்ப ராமாயணமென்னும் பெருங்காப்பியமோ, எங்குஞ் சுவை ததும்புவதால் அந்தச்சுவை கெடாது மொழிபெயர்த்தல் இயலாதென்ற காரணத்தாலேயே பலராலும் போற்றப்படினும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்படவில்லை.

ஆயினும் இந்நூல் கற்றோர் இதயத்தைக் கரைவிக்குந் தன்மையதென்பது கண்கூடாகக் கண்ட பொருள். தமிழ் மொழி யிற் பேசும்போது பொருளுணர வல்லராய்ப் பிறமொழிகளிற் புலமை வாய்ந்தோரிடத்து, இந்தக் கம்பராமாயணத்து ஒரு பாடலைச் சொல்லிச் சொற்பொருளைச் சொல்லு மிடத்தும் அவர்கள் நெஞ்சை அந்தப் பாடல் கொள்ளை கொண்டு விடுகின்ற தென்பதும் கரதலாமலகமாகும். ஆங்கிலங்கற்றுப் புலமை வாய்ந் தோரும் இந்தக் கம்ப ராமாயணத்தைக் கற்று, ஷேக்ஸ்பியர், மில்டன் முதலியோர் நூல்களினும் இதில் மிகவும் ஈடுபடுவத னாலும், தமிழ் மொழியே யறிந்தோர் இதன் மேம் பாட்டை நன்று ணரலாம். நாமே 'நம்முடையது நன்று' என்று பாராட்டுவதை விடப் பிறர் பாராட்டுவதன்றோ மேம்பாடு விளைப்பது! இது நிற்க.

கல்வியிற் பெரியன் கம்பனென்று கூறுமாறு தலைசிறந்து விளங்குங் கவிஞர் பெருமானால் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற இந்த மாபெருங் காப்பியம் இயற்றிய நாள் முதல் அறிஞர் பலராலும் போற்றப்பட்டுப் பெருங்குழுவில் தத்தம் பேரறிவுக்கு ஏற்றவாறு ஆங்காங்குஅரும்பொருள் விரித்துச் சொற்பொழிவு நிகழ்த்தி வரப்பெற்றுள்ளது.

இந்த முறையிலே இந்தக் கம்பராமாயணத்து அயோத் தியா காண்டத்தில் ஒரு செய்யுளுக்குச் சிறப்புறப் பொருள் விரிக் கப்படுவதை ஈண்டுக் காட்டுவாம். இப் பொருளைப் பற்றி அறிஞர் ஆராய்ந்து கொள்வாராக.

அப்பாடல் வருமாறு:

**அருப்பேந்திய கலசத்துணை யமுதேந்திய மதமா**
**மருப்பேந்திய வெனலாமுலை மழையேந்திய குழலாள்**
**கருப்பேந்திர முதலாயின கண்டாளிடர் காணாள்**
**பொருப்பேந்திய தோளானொடு விளையாடினள் போனாள்.**

இச் செய்யுளில் மூன்றாம் அடியில் கருப்பேந்திரம் என்பதற்குச் சாதாரணமாகக் கரும்பாலை யென்று பொருள் கூறுகின்றனர். யானும் அயோத்தியா காண்டத்தின் உரையில்

இங்ஙனமே எழுதியுள்ளேன். இதற்கு இவ்வாறு பொருள் கூறுவதைவிட்டு, 'கர்ப்பேந்த்ரஸ் ஸிம்ஹபக்ஷக:' (கர்ப்பேந்திர மென்பது சிங்கத்தை யுண்ணவல்லதொரு விலங்கு) என்று கொண்டால், விலங்குகளுக்கெல்லாந் தலைவனாகிய சிங்கத்தை யும் கொன்று உண்ணவல்ல விலங்கு முதலிய கொடிய விலங்கு களைக் கண்டவிடத்தும், சீதாபிராட்டி, மலையையொத்த மாண் பமைந்த தோளின் வலிமையைக் கொண்டவனான ஸ்ரீராமபிரா னோடும் கானகத்துச் செல்வதால், மனத்தில் அச்சத்தினால் துன்புறுதலென்பது இல்லாமல், அச்சமற்று விளையாடுபவளாய்ச் சென்றாளென்று பொருள்பட்டு இச்செய்யுள் சிறப்புறுதல் காண்க. ஸ்ரீ வால்மீகி பகவான், 'கஜம்வா வீக்ஷ்யஸிம்ஹம்வா- வ்யாக்ரம்வா வநமாஸ்ரிதா நாஹாரயதி ஸந்த் ராஸம்—பாஹூ ராமஸ்ய ஸம் ஸ்ரிதா' என்றார். இதன் பொருள்: 'இராமபிரானுடைய தோளை அரணாகக் கொண்ட சீதை வனத்தை யடைந்திருந்த போதிலும் யானையை யேனும் சிங்கத்தையேனும் புலியையேனும் பார்த்து அச்சத்தை ஏறிட்டுக் கொள்வது மில்லை' என்பது. அச்சத்தை ஏறிட்டுக் கொள்ளாமைக்குக் காரணம் இராமனுடைய தோள் வலியைத் தனக்கு அரணாகக் கொண்டமையேயென்று இந்த ஸ்லோகத்தில் அருளிச்செய்திருத்தல் நோக்குக.

இவ்வண்ணம் ஸ்ரீவான்மீகி பகவான் அருளிச் செய்திருப் பதை ஸ்ரீ கம்பநாட்டாழ்வார் மனத்துக்கொண்டு, இன்னும் நயம்படக் கூறக் கருதியவராய், சீதாபிராட்டி இராமபிரானுடைய தோள் வலியை யண்டைகொண்டு நிற்றலால் அச்சமாகிய இடரைக் கொள்ளவில்லை யென்பதனோடு நிற்க வில்லை: காட்டில் திரியும் கொடுவிலங்குகளைக் காண்பது ஒரு வினோத மாகவும் அப் பிராட்டிக்கு இருந்தது என்ற கருத்துப் பட,

> **கருப்பேந்திரம் முதலாயின கண்டாளிடர் காணாள்**
> **பொருப்பேந்திய தோளானொடு விளையாடினள் போனாள்**

என்றார். இவ்வகையாக, நம் கவிஞர் பெருமான் ஸ்ரீ வால்மீகி யினும் நயம்பட உரைத்துப் போவதைக் கம்ப ராமாயணத்துப் பலவிடத்தும் காணலாம்.

[illegible]

திகழ்த்தி வாய்ப்பெற்றுள்ளது.

[illegible]

இச் செய்யுளில் மூன்றாம் அடியில் [illegible]

என்பதற்குச் சுதாரணமாகக் கரும்பாலை வென்று பொருள் கூறுகின்றார். வாறும் அயோத்தியா காண்டத்தின் உரையில்

# சேர நாடும் செந்தமிழும்

# பழைய சுவடிகள்

ஒரு நாட்டில் வழங்கிவந்த பழைமையான ஏட்டுச் சுவடிகளின் இயல்பு கொண்டும் அந்நாட்டு மொழிவழக்கினை உணரலாமல்லவா? தென்றமிழ்ச் சேரநாடாக இருந்த இதில் ஆதிநாளில் தமிழ்ச் சுவடிகளன்றி வேறெம்மொழிச் சுவடிகள் வழங்கியிருக்க முடியும்? ஆம்; நாடெங்கணும் அவையே பரவிக் கிடந்தன. மிகப் பிற்பட்டு மலையாளம் தனி வடிவம் பெற்றுத் தலையெடுத்த காலத்திலுங்கூட பண்டைய தமிழ்த் தொடர்பு ஒரேயடியாக அற்றுப் போகவில்லை. மொழி ஒன்று தோன்றிய காலத்திலேயே எல்லாவித நூல்களும் ஒருங்கே அதில் தோன்றி விடுமா? பக்திப் பாடல்களோ, காவியங்களோ, புராணங்களோ கதைகளோ, வைத்தியம், மந்திரம் முதலானவைகளோ தமிழி லிருந்தன்றி வடமொழிப் பயிற்சியற்றவர்களுக்கு எவ்வாறு கிடைக்க முடியும்? அவர் முன்னோர் சேர்த்து வைத்திருந்த பழந்தமிழ்ச் சுவடிகளோ அவர் வீடுகளில் இடம்பெற்றிருந்தன. அவைகளே அவர்களுக்குப் பயன்பட்டிருக்க வேண்டும். மிகச் சமீபத்தில் கூட மலையாளிகள் எனப்படுவோரில் பலரும் தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல் முதலிய பக்திச்சுவை ததும்பும் பாடல்களில் நல்ல பயிற்சி யுடையவர்களாயிருந்தார் களெனப் பலரும் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

ஒரு காலத்தில் திருவிதாங்கூரிலுள்ள அம்பலப்புழை யிலும் அரசகுலமொன்று இருந்தது. அங்கும் ஏட்டுப் பிரதிகள் பல சேமித்து வைக்கப்பட்டிருந்தன. அம்பலப் புழை திருவிதாங்

கூருக்குச் சொந்தமான காலத்தில் அங்கிருந்த ஏட்டுப்பிரதிகளுக்கும் ஏனைய பொருள்களுக்கும் உரிய இடம் திருவனந்தபுரமாயிற்று. இங்கே கொண்டு வரப்பட்ட ஏடுகளுள் கம்பராமாயண ஏடும் ஒன்று. இது மிகப் பழைமையானதும் சுத்தமானதுமாகுமென்றும், இதனைத் தாம் சோதித்து ஒப்பிட்டுப் பார்த்ததுண்டென்றும் ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளையவர்கள் கூறினார்கள்.

இம் மலை நாடெங்கணும் பழந் தமிழ்ச் சுவடிகள் பரவிக் கிடந்தன என்பதற்குப் பலப்பல ஆதாரங்கள் இருக்கின்றன.

க. திருவாய்மொழிப் பாசுரங்கள் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டிருந்த ஏட்டுப் பிரதி ஒன்று கொஞ்சக் காலத்துக்குமுன் மலபாரிலிருந்து கிடைத்ததாகத் தெரிகிறது. இதைத் தாம் நேரில் பார்த்ததாகத் திருவனந்தபுரம் உயர்தர நீதிமன்றத் தலைவராயிருந்து காலஞ்சென்ற கே.ஜி. சேஷையரவர்கள் கவிமணியவர்களிடம் கூறியுள்ளார்கள்.

உ. மலை நாட்டில் 'பாடகம் சொல்வது' என்னும் ஓர் வழக்கம் உண்டு. அஃதாவது, காவியம், இதிகாசம், புராணம் என்பவற்றில் யாதேனும் ஒன்றன் பகுதியை எடுத்துக்கொண்டு ஆடிப்பாடி அபிநயித்துக் காட்டுவதாகும். இங்ஙனம் பாடகம் சொல்வதற்குக் கம்பராமாயணப் பாடல்களைப் பயன்படுத்தி வந்ததாகப் பழங்கால ஏடுகள் கொண்டு அறிகின்றோம்.

ங. திருவிதாங்கூர் அரசாங்கம் 'வலைவீசு புராணம்' என்றோர் ஏட்டுச் சுவடியை அண்மையில் பதிப்பித்தது. இதனை மலையாளிகள் எவரும் வாங்குவதில்லை. ஏன்? படித்தால் அவர்களுக்கு எதுவும் புரியாது. தமிழர்களும் வாங்குவதில்லை, மலையாள புத்தகம் என்ற எண்ணத்தால். உண்மையென்ன? பாடல்களெல்லாம் தூய தமிழ்; எழுத்து மட்டும் மலையாளம். மலையாள எழுத்தில் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்துவிட்டு மலையாளம் தான் என்றெண்ணிப் பதிப்பித்து விட்டார்கள். கதையோ என்றால் திருவிளையாடற் புராணத்திலுள்ள வலைவீசு படலத்தைப் பெரும்பாலும் தழுவியது.

இவ்வேடும் இம்மலைநாட்டிலிருந்து கிடைக்கப் பெற்றதேயாகும். இன்னும் தேடிப் பார்த்தால் திருவிதாங்கூர், கொச்சி, மலபார் என்னும் மேலைக் கடற்கரை நாடுகளிலிருந்து பழந்தமிழ் ஏடுகள் பல கிடைக்கப்பெறலாம். அங்ஙனம் தேடிக் காண்டல் பயன்தரு செயலாகவும் இருக்கும்.

மலையாளம் ஒரு தனி மொழியின் தன்மையைப் பெற்றது கி.பி. 13-ஆம் நூற்றாண்டுக்கு மேலேதான். அம்மொழியில் எழுந்த முதல் நூல் ''உண்ணி நீல சந்தேசம்'' என்றும், அதன் காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு என்றும் கூறுவர். ஆனால் பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே 'இராம சரிதம்' என்னும் கிரந்தம் தோன்றியுள்ளதாகத் தெரிகிறது. அதுபற்றிப் பின்னர்க் கூறுவோம். பதினான்காம் நூற்றாண்டில் அதாவது கி.பி. 1350ஐ ஒட்டி எழுந்த இன்னொரு மலையாளக் கிரந்தம் 'கண்ணச்சராமாயணம்.' இதன் ஆசிரியர் கண்ணச்சப் பணிக்கர். இவர் ஒருவரல்லர்; மூவராவரென்றும், மூவருமே கண்ணச்சன்மார் என்று அழைக்கப்பட்டனர் என்றும் கூறுவர், இப்புத்தகத்தைப் பதிப்பித்த மலையாள மகாகவி உள்ளூர் எஸ். பரமேசுவர ஐயர் அவர்கள். அஃது எங்ஙனமாயினுமாக. அவ்வாசிரியர் கருதிய – மொழிந்த – மொழிநடை எவ்வாறிருக்கிறது என்பதைச் சுவைத்துப் பார்ப்பதற்கு, அஃதாவது பதினான்காம் நூற்றாண்டு மலையாளத்தின் அமைப்பு எவ்வாறிருந்ததென்று பார்ப்பதற்கு அதிலிருந்து ஒரு பாட்டுத் தருகின்றோம்.

ആർകലിമീതുതാവി മുഥിന്നുലങ്ക പുകന്തു ചെന്താ
    രാർമകലെന്നും മെന്നടയാളെ യമ്പൊടു കണ്ടു മീള്വൻ
വേകമൊടെന്നതുള്ളിൽ നിനന്തു വെന്നികലന്ന നീടാർ
    മേനികിളിന്ന വാനരവീരൻ മാരുതി താനുഴറ്റാൽ
ആകമ മീന്നിനിന്നു കതിച്ചെഴും പൊഴുതിന്മലയ്ക്കു—
    സ്സായ്‌വരുമോ കലുക്കവെുമെന്ന തോത്തറിവാനുലച്ചാൻ
മേകകലങ്ങള് ചെന്നമരും കൊടും ചികരങ്ങളോടും
    മീതിലകും മഹേന്ദ്രമെന്നും മഗാമസാചന്നെമുന്നെയ

இது சுந்தர காண்டதிலுள்ள முதற்பாட்டு, இதனை அப்படியே தமிழெழுத்தில் எழுதிக் காட்டுகின்றோம்.

ஆர்கலிமீதுதாவி முதிர்ந்நுலங்க புகுந்து செந்தா
ரார்மகளெந்நும் மெந்நடயாளெ யம்பொடுகண்டு மீள்வன்
வேகமொடெந்நதுள்ளில் நிநந்து வெந்நி கலர்ந்த நீடார்
மேனி கிளர்ந்நவாநர வீரன் மாருதி தானுழற்றால்
ஆகுலமீந்நி நிந்நுகுதிச் செழும் பொழுதின் மலய்க்கு(ண்)
டாய்வருமோ குலுக்கவுமெந்ந தோர்த்தறிவானுலச்சான்
மேககுலங்ஙள் செந்நமருங்கொடும் சிகரங்ஙளோடும்
மீதிலகும் மகேந்திர மெந்நும் மகாமலதந்நெமுந்நெ.

தமிழ்ச்சொற்களாக இருந்தும் மலையாளமாக்கத் துணிந்த காரணத்தால் அன்பு, வென்றி முதலான பல சொற்களும் பொருளிழந்தவையாய்ச் சிதைக்கப்பட்டிருக்கின்றன. எதுகையாக அமைந்து நிற்கும் 'வேகம்' 'மேகம்' என்னும் சொற்களை வடமொழியாகவே 'வேகம்', 'மேகம்' என எழுதிக் காட்டுகின்றார் பதிப்பாசிரியர். அக் காலத்தில் அதிகரம், மிருது, கோஷம் முதலான உச்சரிப்பு வேறுபாடுகளைத் தரும் வருக்க எழுத்துக்கள் மலையாளத்தில் தோன்றியிருக்கவே நியாயமில்லை யென்பதை நாம் நன்கு உணரவேண்டும். இவ்விரு சொற்களையும் இவ்வாறு பதிப்பித்தஐயரவர்கள் 'சிகரம்' என்னும் சொல்லை 'ശിഖരം' எனப் பதிப்பிக்காததற்குக் காரணம் விளங்கவில்லை. அக்காலத்தில் வடமொழிச்சொற்கள் ஏராளமாக வந்து வழங்கினவேனும் அவை தமிழிற் போலப் பொதுவெழுத்தாலேயே எழுதப்பட்டன. இதனை இன்னோரிடத்தில் வைத்தும் கூறுவோம். இப்போது, மேற்கூறிய பாடலைத் தமிழ் மரபுப்படிச் சீர்பிரித்து எழுதிக் காட்டுகின்றோம்.

ஆர்கலி மீது தாவிமு திர்ந்து
லங்கைபு குந்து செந்தா[1]
ரார்மக ளென்னும் மென்னடை யாளை
யன்பொடு கண்டு மீள்வன்
வேகமொடென்ற துள்ளில்நி னைந்து
வென்றிக லந்த நீடார்

---

1. மாலையை உணர்த்துகின்ற 'தார்' என்னும் சொல், மலைநாட்டில் பூவைக் குறிப்பிடும் சொல்லாகப் பல இடங்களிலும் வந்துள்ளது. இன்றும் இவ்வாட்சி வழக்கத்தில் இருக்கிறது.

மேனிகி ளர்ந்த வானர வீரன்
மாருதி தானு ழற்றான்[2]
ஆகுல மின்றி நின்றுகு திச்செ
ழும்பொழு தின்ம லைக்குண்
டாய்வரு மோகு லுக்கமு மென்ற
தோர்த்தறி வானு லைத்தான்
மேககு லங்கள் சென்றம ருங்கொ
டுஞ்சிக ரங்களோடும்
மீதில கும்ம கேந்திர மென்னும்
மாமலை தன்னை முன்னே.

'கடலின்மீது தாவி விரைந்து சென்று இலங்கையை யடைந்து செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின் அவதார மான மெல்லிய நடையையுடைய சீதையை அன்புடனே கண்டு விரைந்து மீண்டு வருவேன், என்பதைத் தன் மனதில் நினைத்து, வெற்றியோடு கூடிய - நீண்ட மேனி படைத்த வானர வீரனான அநுமன் சிறிதும் வருந்தாதவனாய் (அநாயாசமாய் என்றபடி. இது உலைத்தான் என்பதனோடு இயையும்.) மனக்கலக்கமின்றி நின்று குதித்துச் சாடும்போது இம்மலைக்கு யாதேனும் அசைவு ஏற்படுமோ என்பதை ஆராய்ந்தறிவதற்காக, மேக கூட்டங்கள் சென்று தங்குகின்ற உயரிய சிகரங்களோடு ஆகாயமளாவ உயர்ந்து விளங்கிக் கொண்டிருக்கிற மகேந்திரம் என்னும் பெயரையுடைய அப்பெரிய மலையை முதலில் அசைத்துப்பார்த்தான்' என்பது இதன் பொருள்.

இது, பதினான்குசீர்க் கழிநெடிலடி யாசிரியச் சந்த விருத்தம். இந்நூற்கண் அமைந்த பாடல்களெல்லாம் அறுசீர் ஆசிரிய விருத்தம், எழுசீர் ஆசிரிய விருத்தம், எண்சீர் ஆசிரிய விருத்தம், பதினான்குசீர் ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம் முதலான சிறந்த யாப்பமைதியுடையவை. எந்த ஒரு பாடலையும் அதன் யாப்பியல்பு உணர்ந்தன்றிப் பிரித்துப் பொருள் காண்டல் அருமை. இப்புத்தகத்தின் யாப்பமைதி மலையாள இலக்கணத்

---

2. உழற்றால் எனக் கொண்ட மலையாளப் பாடமும் பொருளும் பொருத்தமல்ல. வருந்தாதவனாய் என்னும் பொருளில் உழற்றான் என இருக்க வேண்டும்.

துக்கு முற்றிலும் மாறுபட்டது. ஆகவே, குரு, லகு என்ற எழுத் தெண்ணிக்கைப் படி ஏதோ ஓர் சட்டக்கூட்டுக்குள் அமைக்கப் பார்த்துப் பெரிதும் குழப்பமடைந்திருக்கிறார் பதிப்பாசிரியர். சில இடங்களில் பதங்களைச் சேர்த்தும் சிதைத்தும், விட்டும் விழுங்கி யும் உருத்திரித்தும் பாடல்கள் பதிப்பிக்கப் பட்டிருக்கும் முறையைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கும். பாடல்களின் திருந்திய வடிவத்தை உணரமுடியாமலிருப்பதற்குத் தடையா யிருப்பது தன்னபிமானத்தைத் தவிர வேறெதுவுமேயல்ல. அதனை நீக்கிவிட்டுத் தமிழறிவு, இலக்கணப் பயிற்சி என்பவற்றின் துணை கொண்டு உண்மை காணவேண்டும் என்னும் நல்லெண்ணத்தோடு நூலை நெருங்குவதாயிருந்தால் வெள்ளிடை மலைபோல அதனைக் காண்பார்கள். அல்லாதவரையில் வெளிச்சமுள்ள அறையில் கண்ணடைத்துத் தேடும் பிள்ளை விளையாட்டாகத் தான் இருக்கும்.

மேற்கூறிய இராமாயணம் எழுதிய கண்ணச்சப்பணிக்கரே 'பிரம்மாண்ட புராணம்' என்றோர் நூல் எழுதியிருக்கிறார். அதில், இதனை நான், 'தமிழாய்க் கொண்டறியிக்கின்றேன்' என்று அவரே கூறியுள்ளார். இப்படி அவர் கூறியும்கூட மலையாள அன்பர்களுக்குக் கண் திறக்கவில்லை. இந்நூல் அன்றைய தமிழில் -மலைநாட்டுத் தமிழில் அமைந்தது என்பதை ஒப்புக்கொள்ள மறுக்கின்றார்கள். மட்டுமல்ல; தமிழ் என்பதற்குப் 'பாஷை' என்றோர் புதுப்பொருளும் கற்பிக்கின்றார்கள். இது 'கண்ணால் கண்டேன்' காதால் கேட்டேன்' என்பவற்றைவிடப் பயனற்ற பேச்சல்லவா? அவற்றிலேனும் கண்டது உண்மை, கேட்டது உண்மை என்ற அழுத்தமாவது தோன்றுகிறது. 'பாஷையால் சொல்லுகின்றேன்' என்பது யாதேனும் ஓர் பயன்தோன்ற நிற்கின்றதா? இப்படிப் பயனற்ற பேச்சை ஓர் ஆசிரியர் பேசுவாரா? பேசுவாராயின் 'பயனில் சொல் பாராட்டும் பதடி' என்ற ஏளனத் துக்கு உள்ளாவரேயன்றி அரும் பொருட்களைச் சிறுசெஞ்சொற் களில் சித்திரித்துப் பொருளாழம் காட்டுகின்ற கவிஞர் வரிசையில் வைத்தெண்ணப்படுபவராவது எங்ஙனம்? ஆசிரியருக்கு வரும் இழிவைக்கூடப் புதுப் பொருள் காணும் அன்பர்கள் கவனிக் கின்றார்களில்லை.

கண்ணச்சப்பணிக்கர் காலத்துக்குச் சற்று முந்தியதென்று கருதப்படுகிற ஒரு கிரந்தம் 'இராம சரிதம்' இதன் சில பகுதி களையும், 'இராம கதைப்பாட்டு' என்பதன் சில பகுதிகளையும் சேர்த்து പ്രാചീന മലയാള മാത്രികള് ഭാഗം - 1 (பிராசீன மலையாள மாதிரிகள் பாகம்1) என்ற பெயரால் மேற்கூறிய கவிஞர் பரமேசுவர ஐயரவர்களே பதிப்பித்திருக்கிறார்கள். ராமசரிதம் ஆசிரியர் சீராமன் எனப்படுபவர். பெயரொப்புமையை வைத்துக் கொண்டு இவர் கொல்லம் 371-ல் வேணாட்டை ஆண்ட ஸ்ரீவீர ராமவர்ம மன்னராயிருக்கலாம் என்று ஊகிக்கின்றார் பதிப் பாசிரியர். அப்படியானால் இந்நூலின் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு என்றாகிறது. ஆனால் பதிப்பாசிரியரோ நூல் முகவுரையின் பிறிதோரிடத்தில் இதன் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு என்று குறிப்பிடுகின்றார். ஆகவே முற்கூறிய கொள்கைகளுக்கு மாறுபாடில்லாத முறையில் பதின்மூன்றாம் நூற்றாண்டே இதன் காலம் என நாமும் கொள்வோம்.

இந்நூலின் தொடக்கத்தே நூலாசிரியர் நூற்பயன் கூறும் சில அடிகளைத் தருகின்றோம்.

> ...................................... മീകവൊൻള് നിനവാൽ
> ആതി തേവനി ലമിഴ്ന്ത മലകാബുടയ ചീ
> മാമലൻ വിനോടിയബിന തമിഴ്കവി വല്ലോർ
> വോതിൽ മാതിനിട മാവരുടൽ വീഴ്വളവുചിൻ
> വോകിപോക ചയനൻ ചരണമാരടവരേ.

'மிக ஒன்றிய நினைவோடு ஆதி தேவனிடத்தில் அமிழ்ந்த பேரன்புடைய சீராமன் அன்போடு பாடிய இத்தமிழ்க் கவியைக் கற்று வல்லராயினோர் இப்பிறப்பில் உடல் வீழுமளவும் திருமகள் நோக்குப் பெறுவர்; இறந்த பின்னர் அனந்த சயனனான திருமாலி னுடைய திருவடித்தாமரைகளை அடைவர்' என்பது இதன் கருத்து. அதில் ஆசிரியரே தாம் பாடுவது தமிழ்க்கல்வி என்று குறிப்பிட் டிருக்கின்றமை காண்க. இன்னும் இந்நூலின் மொழிச்சுவை யுணர்தற்கு வேறு சில பாடல்கள் தருகின்றோம்.

മന്നാ മിന്നേർ മെല്ലിടയാളെ വഴക്കിനെന്നി രാമൻ വരും
മുന്നേ നല്ക്കിടെന്നു വിപീഴണൻ മുന്നിൽനിന്നിരന്തളവേ
ലിന്നോടാരേ നല്ലതുകേട്ടതു? നീതികഞ്ഞപണ്ഡിതനാ
യെന്നോടുണ്ടോ പേചുമതെന്നെഴുനിൻറി രാവണൻ
നടത്താൻ.[1]

നടന്തിട മരന്തവനുണർന്തിരവിൽ നാചം
തുടങ്കിനതു കണ്ടരിയ തുമ്പമുള്ളിലേറി
അടങ്കിയിങ്ങു ചേന്നരചനെത്തൊഴുതു ചൊല്ല -
ത്തുടങ്കിനൻ വിപീഴണന്നു ണന്തുതുയ രെല്ലാം.[2]

இனி இவை தமிழெழுத்தால் எழுதிக் காட்டப்படும்.

'மன்னா மின்னேர் மெல்லிடை யாளை
வழக்கினென் றிராமன் வரும்[3]
முன்னே நல்கீ டென்றுவி பீழணன்
முன்னில் நின்றிரந் தளவே
நின்னோ டாரே நல்லது கேட்டது
நீதி கைந்தபண் டிதனா?
யென்னோ டுண்டோ பேசும தென்றே
எழுநின் றிராவணன் நடந்தான்.'

'நடந்திட மறைந்தவ னுணர்ந்திரவில் நாசம்
துடங்கினது கண்டரிய துன்பமுள்ளி லேறி
அடங்கியிங்கு சென்றரசனைத்தொழுது சொல்லத்
துடங்கினன்வி பீழணனு ணர்ந்ததுய ரெல்லாம்.'

இவை, விபீடணன் இராவணனிடம் சீதையை விட்டு விடுமாறு கூறுவதைத் தெரிவிக்கும் பாடல்கள். முன்னது எழுசீர் விருத்தம். பின்னது கலிவிருத்தம்.

---

1. பாட்டு 55, ஐந்தாம் படலம்
2. பாட்டு 56, ஆறாம் படலம்.
3. இஃது ஓரசைச் சீராகக் காணப்படுகிறது; பாடம் பிழையாக இருக்கலாம்.

இந்நூலோடு சேர்த்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கும் 'இராம கதைப் பாட்டு' என்னும் புத்தகத்தினின்றும் ஒரு பாட்டுத் தருகின்றோம். இதன் ஆசிரியர் அய்யப்பிள்ளை ஆசான் என்பவர். இவர் பிறப்பிடம் தென்திருவிதாங்கூரைச் சேர்ந்த நெய்யாற்றின் கரையிலுள்ள ஒரு சிற்றூர். கண்ணச்சப் பணிக்கருடைய இராமாயணத்தைப் பார்த்து இவர் ராமகதைப் பாட்டுப் பாடியிருக்க வேண்டுமென்று பதிப்பாசிரியர் கருதுவதனால் இவர் காலம் பதினான்காம் நூற்றாண்டுக்குப் பிந்தி என்றேற்படுகிறது. இவர் பாடிய ராமசரித பாலகாண்டடத்தின் முதல் விருத்தம் இது —

'ആലമുണ്ടരൻതൻ മൈന്താ! അൻകരത്തോനേ യമ്പാൽ
ചീലമുന്നടികള് പോററി ച്ചിറുപയർ തിരളി തേങ്കായ്
കോലമുൻ കടവയിററിൽ കാവറയമുതു ചെയ്തു
വേലയിൽ തീരപോലെന്തൻ മേതയിൽ തോൻറുവായേ.'

இதில்— 'ஐங்கரன்,' 'அன்பால்' என்னும் சொற்களை 'அன்கரன்' என்றும், 'அம்பால்' என்றும் பொருளறச் சிதைத்திருக்கிறார்கள். இவ்வின்றமிழ் ஆசிரிய விருத்தத்தைத் தமிழில் எழுதிக் காட்டுகின்றோம்.

***'ஆலமுண் டரன்றன் மைந்தா! ஐங்கரத் தோனே! யன்பால்***
***சிலமுன் னடிகள் போற்றி; சிறுபயறு திரளி தேங்காய்***
***கோலமுன் குடவ யிற்றில் குறைவற அமுது செய்து***
***வேலையில் திரைபோ லென்றன் மேதையில்***
***தோன்று வாயே!***

இது விநாயகர் வணக்கம். தமிழ் தெரிந்தார்க்கு இப்பாடற் பொருளை விரித்துரைக்கத் தேவையில்லை. இப்பாடலிலும் முந்திய பாடல்களிலுமுள்ள சொல்லமைதி, பொருளமைதி, இலக்கண முடிபுகள் என்பவற்றைப் பாருங்கள். இவையே அக்காலத்திய மலையாளமென்றால் தமிழுக்கும் மலையாளத்துக்கும் இருந்த தூரம் எவ்வளவு என்பது புலனாகும்.

இப்பாடல்களை வாசித்துப்பார்த்த திரு. டி.ஏ. கோபிநாத ராயரவர்கள் 'இராம சரிதம்' ஒரு தமிழ் நூலென்றும், அதனை மலையாளக் கிரந்தமென்று சொல்வது சரியல்ல வென்றும்

பலவாண்டுகளுக்கு முன் செந்தமிழ்ப் பத்திரிகையில் எழுதினார்கள். அவர் கூறியது தவறு என்று இப்புத்தகத்தின் முகவுரையில் அதனைக் குறிப்பிட்டுக் கண்டிக்கின்றார் பதிப்பாசிரியர் பரமேசுவரய்யரவர்கள். இப்படி இரு பேரறிஞர்கள் தமிழ் நூலென்றும் மலையாள நூலென்றும் விவகரிக்கின்ற முறையில் அமைந்துள்ள நூல் இருமொழிக்கும் அக்காலத்திருந்த மிக நெருங்கிய ஒற்றுமையைத் தானே புலப்படுத்துகின்றது!

இராம சரிதத்தினால் 13ஆம் நூற்றாண்டு மலையாள மொழிநடையும், கண்ணச்ச ராமாயணத்தினால் 14ஆம் நூற்றாண்டு மொழி நடையும், இராமகதைப் பாட்டினால் 14,15 ஆம் நூற்றாண்டு மொழிநடையும் விளங்கின. இந்நூற்றாண்டுகளில் அம்மொழியில் ஸம்ஸ்கிருத உச்சரிப்பு ஏறவில்லையென்பது மேற்காட்டிய பாடல்களைப் பார்த்தாலே தெரியவரும். இராம சரிதத்தில் வருகின்ற 'ஆதி', 'தேவൻ', 'ഭോഗി ഭോഗ ശയനൻ', 'ശരണം' என்பவற்றைத் தமிழில் எழுதுகின்றாற்போல முறையே 'ஆதி' 'தேவன்' 'போகிபோகசயனன்' 'சரணம்' என எழுதியிருக்கின்றமை கொண்டு இதனை உணரலாம். மலையாளத்துக்கு வடிவம் கிடைத்தது 16-ஆம் நூற்றாண்டிலேதான். அதற்கு லிபி அமைத்துக் கொடுத்த தந்தை எழுத்தச்சன் ஆவர். அக்காலத்துக்குப் பின்னரே அது ஸம்ஸ்கிருத உச்சரிப்போடு கூடிய சொல்லையும் பொருளையும் அப்படியே தழுவத் தலைப்பட்டது. இவ்வாறு தமிழினின்று அகன்று அகன்று சென்று அது நாளடைவில் ஸம்ஸ்கிருதத்தின் ஒரு கிளை மொழிபோல ஆயிற்று. இதுவே உண்மை நிலையாம்.

## அரண்மனை ஏடுகள்

திருவனந்தபுரம் அரண்மனையைச் சார்ந்து பழைய ஏட்டுப் பிரதிகளடங்கிய சுவடிச்சாலை ஒன்று உண்டு. அதில் தமிழ், மலையாளம், ஸம்ஸ்கிருதம் என்னும் மூன்று மொழிகளிலும் அமைந்த ஏடுகள் ஏராளமிருக்கின்றன. அவற்றில் தமிழேடுகள் பலவும் கவனிப்பாரில்லாமையால் அழிந்து போயின. எஞ்சி இருப்பவற்றுள் 'அரிச்சந்திர வெண்பா' என்றோர் சுவடி உள்ளது. இதனைக் கண்டு பிடித்தவர் ராவ்சாகிப் எஸ். வையாபுரிப் பிள்ளை அவர்களாவர். அவர் இதுபற்றிச் 'சக்தி' என்ற வெளியீட்டில் அப்போது கட்டுரை ஒன்றும் எழுதியிருந்தார்கள்.

திருவிதாங்கூர்ப் பல்கலைக் கழகத் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராயிருக்கும் ராவ்சாகிப் மு. இராகவையங்கார் அவர்கள் இந்த ஏட்டை இப்பொழுது பதிப்பித்துள்ளார்கள். இது வெண்பாவும் இடை இடையே வசனமுமாக அமைந்த உரை யிடையிட்ட பாட்டுடைச் செய்யுள். இதுவே வீரகவிராயரால் பாடப்பட்டிருக்கும் இப்போதைய அரிச்சந்திர புராணத்துக்கு முதனூலாயிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. அரிச்சந்திர புராணப்பாயிரச் செய்யுட்களால் இஃது ஒருவாறு அறியப்படும். அப்பாடல்கள் அடியில் வருவன:—

'தண் கவிகைக் குரிசிலரிச் சந்தி ரன்றன்
சரிதமிதைத் தாரணியோர் விருப்ப மெய்த
வண்கவிஞர் வகைவகையே வகுத்து ரைத்த
வடமொழியுந் தென்மொழியின் வழுவி லாத
வெண்கவியுங் கண்டரங்கின் மாத ராடல்
விதங்கேட்டு மழையெனவே வெருண்டு சோலைக்
கண்கவிகள் குதிபாயு நல்லூர் வீரைக்
கவிராச னேவிருத்தக் கவிசெய் தானே'

விதியினர சிழந்தவரிச் சந்தி ரன்றன்
வியன்கதையாம் வெண்கவியை விருத்த மாக்கி
அதிவிதமாங் கலியுகத்தில் வருச காத்தம்
ஆயிரத்து நானூற்று நாற்பத் தாறில்
சதுமறைதேர் புல்லாணித் திருமால் முன்னே
சக்கரதீர்த் தக்கரைமேல் மண்டபத்துக்
கதிதருசீர் நல்லூர்வாழ் வீரன் ஆசு
கவிராசன் கவியரங்க மேற்றி னானே.'

இவ்வாசிரியர் அரிச்சந்திர புராணம் பாடுவதற்கு முதனூலாயிருந்த 'அரிச்சந்திர வெண்பா' இங்குள்ள சுவடிச் சாலையைத் தவிர வேறெங்கும் கிடைப்பதாகத் தெரியவில்லை. தமிழ்த்தாய் களி நடம் புரிந்த செந்தமிழ் நாடெங்கும் கிடைக்காத ஒரு ஏட்டுப்பிரதி இந்நாட்டில் மட்டும் காணப்படுகின்றதென்றால் இங்குத் தமிழ் எவ்வாறு பயிலப்பட்டு வந்ததென்பதும், தமிழ் ஏடுகள் எவ்வளவு அருமையாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு

வந்தன என்பதும் தெரியப்படுகின்றனவல்லவா? இன்னும் துருவிப் பார்த்தால் அருந்தமிழ் ஏடுகள் பல இங்குக் காணப்படலாம். அவற்றை ஆராய்ந்து வெளிக்கொணர்தல் அறிவுடையார் கடன்.

இதுகாறும் கூறப்பட்டவை கொண்டு ஆதிகாலம் முதல் தமிழ்மொழி மலையாள மொழியாக மாற்றுருவம் எடுத்த கி.பி. பதினான்காம் நூற்றாண்டுவரை இஃதோர் செந்தமிழ் நாடாகவே திகழ்ந்த தென்பது ஒருவாறு விளக்கப்பட்டது. இதன் தென்பாற் பகுதிகள் இன்றும் தமிழ் வழக்குடையவையாகவே இருக்கின்றன என்பது நேரில் கண்டறியத் தகுந்த உண்மை. இனி, இந்நாட்டின் தென்கோடியிலுள்ள நாஞ்சில்நாடு, தொன்றுநாள்தொட்டுத் தூய தமிழ்நாடாகவே துலங்கிக் கொண்டிருக்கிறதென்பதை விளக்கப் புகுவோம்.

# கால்டுவெலும் அவர் வாழ்ந்த காலமும்

**நீ. கந்தசாமிப்பிள்ளை**
*பள்ளியகரம், தஞ்சை*

சென்ற நூற்றாண்டில், தமிழ் மொழிக்குத் தொண்டு செய்த மேல்நாட்டு அறிஞருள், பலவழியாலும் முன்னணியில் வைத்து எண்ணக் கூடியவர், போதகர் தலைவர், அறிஞர் இராபர்த் கால்டுவெல் (Bishop Dr. Robert Caldwell) என்னும் பெரியாராவார். இவருடைய, அறிவியற் கட்டளைகட்குட்பட்ட காய்தலுவத்தலில் லாத நுண்ணிய ஆராய்ச்சியால், தமிழ் மொழியின், தொன்மை யையும் தூய்மையையும், தொன்றுதொட்டு தொடர்ந்து வாழ்ந்து வரும் வன்மையையும், எம் மொழியின் கூட்டும் வேண்டாது இயங்க வல்ல தனிமையையும், அறிஞருலகம் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. தமிழகத்தின் தொன்மை, வரலாறு, மக்கட் பண்பு, வழிபாட்டுமுறை முதலிய பல துறைகளிலும், இவர் ஈடுபட்டுச் சில அரிய கருத்துக்களை வெளியிட்டிருந்தாலும், இவருடைய தனிச் சிறப்புக்கு, இவர், இன்றைக்கு நூறாண்டுகளுக்கு முன்னர், 1856-ஆம் ஆண்டில், ஆய்ந்து வெளியிட்ட திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் சிறந்த மொழி நூலே காரணமாகத் திகழ்கின்றது. இந்நூல், இப் பெரியாராலேயே பலவாறு விரித்து 1875-ஆம் ஆண்டில்

இரண்டாவது முறை வெளியிடப்பெற்றுள்ளது. *1913*-ஆம் ஆண்டில் இவருடைய மருகர், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் வியத் (Rev. J.L. Wyatt) என்பவரும், சென்னைப் பல்கலைக் கழகத் திராவிட மொழிப் பாடதிட்டக் குழுத் தலைவர், தோ. இராமகிஷ்ண பிள்ளையும் சேர்ந்து இந்நூலின் மூன்றாவது பதிப்பை, சில மாறுதல்களுடன் பதித்தார்கள். இது, நூறாண்டு களுக்கு மேலாகத் தன் துறையில், தனி நூலாகத் திகழ்ந்து வருகின்றது.

கால்டுவெல், *1814*-ஆம் ஆண்டில், அயர்லாந்து தேயத்தில் ஒரு சிற்றூரில் பிறந்தார். இவர் பிறந்த சில ஆண்டுகளில், இவ ருடைய பெற்றோர்கள், தங்கள் தாய்நாடாகிய சுகாத்லந்துக்குத் (Scotland) திரும்பி, கிளாஸ்கோ (Glasgow) நகரத்தில், தங்கள் வாழ்க்கையைத் தொடங்கினார்கள். இவர், பதினாறாவது வயதுவரை பெற்றோருடனிருந்து கல்வி பயின்றார். பின்னர், அயலூரிலிருந்த ஒரு கலைத் தொழிற் பள்ளியிற் சேர்ந்து பயின்று ஓவியத்துறையில் தேறி, பரிசும் பெற்றார். எனினும், ஓவியத் தொழிலையே தன் வாழ்க்கைக்கு உரிய தொழிலாகக் கொண்டு வாழ மனம்கொள்ளாது, தெய்வப் பணியில் தொண்டு செய்வதே வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு, இருபதாவது வயதில், இலந்தன் சமய சங்கத்தில் ( London Mission) தொண்டராகச் சேர்ந்தார். பின்னர், அச்சங்க ஆதரவில் கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் மாணவனாகச் சேர்ந்து பயின்று கலை -மாணிப் பட்டமும் (Bachelor of Arts) பெற்றார்.

இவர், மாணவராகப் பயிலுங்காலத்தில், ஐரோப்பாவில் மொழி நூற்பயிற்சி சிறப்பாகப் போற்றப்பெற்று வந்தது. மொழி நூற்பயிற்சியால், மக்கள் வரலாற்றிலும் வாழ்க்கையிலும் பல உண்மைகளைக் காணவியலும் என்ற கருத்து, அறிஞர் உள்ளத்தில் இடம்பெற்று வளர்ந்தது. மொழி ஆராய்ச்சி, அறிவியலுக்குட் பட்ட வரையறைகளுடனும், முறையுடனும், நெறிப்படுத்தப் பெற்றுத் தொடங்கிய காலம் அது. அக்காலத்தில், இத்துறையில் ஜர்மனியரே (Germans) முன்னேறி வந்தார்கள். ஆங்கிலப் பல்கலைக் கழகங்களில் இத்துறையில் வல்லவர்கள் அருகியே காணப்பெற்றனர். ஆனால், கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில்

கிரேக்கமொழிப் பேராசிரியராக இருந்த தானியேல் சாந்த்போர்த் (Sir Daniel Sandford) என்பவர், ஒப்பியல் மொழி நூலில் (Comparative Philology) சிறந்த புலமையுடையவராக விளங்கித் தம் மாணவர்களுக்கும் இப்புதிய துறையில் ஊக்கம் பிறப்பித்துப் பல மொழிகளின் பண்புகளையும் பயிற்றிவந்தார். இயற்கையிலேயே இத்துறையில் விருப்பம் கொண்டிருந்த கால்டுவெலுக்கு, இப்பேராசிரியருடைய ஆர்வத்தாலும் பழக்கத்தாலும், ஏதேனும் வாய்ப்பு நேருமானால், தானும் இத்துறையில் சிறந்ததொரு தொண்டு செய்ய வேண்டும் என்ற வேட்கை தோன்றி, உள்ளத்தில், உறுதியாக இளமையிலேயே உறைவதாயிற்று. அந்த நாட்களில், ஆங்கில நாட்டில், தமிழ் மொழியின் இலக்கணத்தைத் தெரிந்து கொள்ளுவதற்குப் போதிய நூல்கள் கிடையாது. 1828ஆம் ஆண்டில் வெளிவந்த ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற தமிழ் இலக்கணம் ஒன்றுதான் கிடைக்கக்கூடியதாக இருந்தது. அந்த இலக்கணத்தை எழுதியவர், அந்தர்சன் (Robert Anderson) என்பவர். (இவர் சென்னை அரசாங்கத்தில் வேலை பார்த்தவர். உடல் நலம் குன்றியமையால் 1819-ஆம் ஆண்டில் ஓய்வுபெற்று, இங்கிலாந்தில், கிழக்கு இந்திய வணிகக் குழுவினர் நடத்திவந்த கல்லூரியில் கீழைநாட்டு மொழி களின் துணைப்பேராசிரியராகப் பணியாற்றி வந்தார்.) மற்றொரு தமிழ் இலக்கணம், ஜர்மனிலும், ஆங்கிலத்திலும் எழுதப்பெற்று 1836-ஆம் ஆண்டு வெளிவந்தது. இது வீரமாமுனிவர் இலக்கண நூல்களை அடிப்படையாகக் கொண்டு தெளிவாகவும், கற்போருக்குப் பயன்தரும் முறையிலும் எழுதப்பெற்றிருந்ததேனும், சொற்றொடரியல் நன்கு எழுதப் பெற வில்லை. இலக்கண விதிகளுக்கு எடுத்துக்காட்டுகளும் இலக் கியங்களிலிருந்து காட்டப்பெறாமல், விதிகளுக்கேற்பப் புதுவ தாகப் படைத்துக் காட்டப்பெற்றிருந்தன. இதன் ஆசிரியர் இரேனியூஸ் (Rhenius) என்பவர் ஜர்மனியில் புரஸ்யா (Prussia) வைச் சேர்ந்தவர்; ஆற்றலும் அஞ்சா நெஞ்சமும் கொண்டவர்; உலையாத ஊக்கமுடையவர்; 1814-ஆம் ஆண்டு, அதாவது கால்டுவெல் பிறந்த ஆண்டு சென்னைக்கு வந்து சமயப் பணி தொடங்கியவர்; சென்னையில் 1817ஆம் ஆண்டு தங்கசாலைக்கு அருகில் ஓர் இடத்தை வாங்கிக் கிறிஸ்தவக் கோயில் ஒன்று கட்டத் தொடங்கினார்; அம்முயற்சி, அருகிலிருந்த இந்து சமய மக்களால் தடைசெய்யப்பெற்று, அக்கோயில் போபாம் பெருவழியில் பின்னர் கட்டப்பெற்றது. திருநெல்வேலிப் பாளையங்கோட்டை

யிலேயே நீண்ட நாளிருந்து, தமிழ்ப் புலவர்களிடம் கல்வியையும் அன்பையும் பெற்றார். தமிழ் மக்கள், நல்ல நெறியுடையவர்கள் எச்சமயத்தாராயினும், எவ்வாறு அவர்களை வியந்து பாராட்டி னார்கள் என்பதை, இவர் இறந்த போது, திருநெல்வேலி, நெல்லை யம்பலப் புலவர், திருப்பாற்கடனாதக் கவிராயர் பாடிய கையறு நிலையுள்,

> 'வேதங்கள் யாவும் அறிந்தவர் போலும் மெய்மையாம்
> தன்மையை விளக்கும்
> போதகர் போலுங் கோலத்தாற் காட்டிப் பொருட்படாத்
> தீமையே யியற்றும்
> பாதக ரிருக்க விரேனியூ சென்போன் பண்புள்ள குருவென
> வறிந்தும்
> ஏதமில் லாத மரணமே யவனை யேற்றதா லென்பய
> னடைந்தாய்?'

என்னும் செய்யுள் காட்டுகின்றது.

பல்கலைக்கழகப் பயிற்சி முற்றுப் பெற்றவுடன், 1837ஆம் ஆண்டில், இவரை, இலந்தன் சமய சங்கத்தார், தென் இந்தியாவில் சமயப்பணி செய்வதற்காகத் தேர்ந்தெடுத்து, கப்பலில் ஏற்றி விட்டார்கள். அக்காலத்தில் ஆங்கிலத் துறைமுகங்களிலிருந்து இந்தியாவிற்கு வரும் கப்பல்கள் எல்லாம் ஆப்பிரிக்காவின் தென் முனையைச் சுற்றிவர வேண்டியிருந்ததால், கப்பல்கள் சென்னை வந்து சேருவதற்குக் குறைந்தது நான்கு மாதமாகும். கப்பலில் தங்க வேண்டிய காலத்தையும் வீண்போக்காது ஏதேனும் கற்க வேண்டும் என்று விரும்பிய இளைஞன் கால்டுவெலுக்கு ஒரு நண்பர் அகப்பட்டார். அவர் சென்னை அரசாங்கத்தில் பணியாற்று பவர்; பிரவுன் (Charles Philip Brown) என்னும் பெயரினர்; ஆரியம் நன்கு கற்றவர்; ஆந்திரமொழியில் சிறந்த பயிற்சியுடையவர்; அம்மொழியின் யாப்பமைதியை ஆராய்ந்து 1827ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் தெலுங்கு யாப்பிலக்கணம்' ஒன்று எழுதி வெளி யிட்டிருந்தார். இந்த ஆராய்ச்சிக்காகச் சென்னை அரசாங்கக் கல்விக் கழகத்தார் இவருக்கு ஓராயிரம் வராகன் பரிசளித்தார்கள். வேமன்னாவின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த் திருந்தார்; இன்னும் பல அரிய வேலைகளைச் செய்து சிறந்த

ஆந்திரமொழி அறிஞராக விளங்கினவர். இவருடைய துணை யால், கால்டுவெல், ஆந்திரம், ஆரியம் இரண்டின் பல பண்பு களையும் விளக்கமாகத் தெரிந்துகொண்டார். இவர்கள் ஏறிவந்த கப்பல், 1838ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சென்னைத் துறைமுகம் வந்துசேர்ந்தது.

அக்காலத்தில், சென்னை, செல்வவளம் பெருகிய பட்டினமாகவும், பெருக்கும் பட்டினமாகவும் திகழ்ந்தது. தென்னாட்டில் ஆட்சிக்கேயன்றி காட்சிக்கும் தலைநகராக விளங்கியது. இவற்றுக்கு மேலாக தமிழ்ப்பயிர் தழைத்தோங்கும் செழும்புலமாகவும் இலங்கியது. இங்கு கிறிஸ்தவச் சமயத்தைப் பரப்ப வந்த அயல்நாட்டாரும் ஆட்சித்துறையிலமர்ந்துள்ள ஆங்கி லேயரும், தாம் தாம் மேற்கொண்ட பணி இனிது நிறைவேறு தற்குத் தமிழ் மொழியைத் திறம்பெற கற்க வேண்டிய நெருக்கடியும் ஏற்பட்டிருந்தது. செல்வவளம் பெற்றிருந்த தமிழ் மக்கள், பண்டுபோல் புலவர்களைப் போற்றினார்கள். பலவேலை களிலும் அமர்ந்து பகல் எல்லாம் உழைத்து இல்லம் திரும்பிய பொதுமக்கள், தங்கள் உள்ளத்திற்கும் உணர்வுக்கும் ஆறுதலாக வும் பயனாகவும் சமயத் தொடர்பான பெருநூல்களைத் தக்கோர் வாயிலாகக் கேட்டு இனபுற விழைந்தனர். எனவே, பலவழி யாலும், பல திறப்பட்ட புலவர்களுக்கும் சென்னை நல்வர வளித்தது. தொன்று தொட்டு வந்த தமிழ்ப் பயிற்சியும் மறையாமல், அங்கங்கு உயிர் வைத்துக் கொண்டிருந்தது. திருவாவடுதுறைச் சிவஞான முனிவருடைய மாணவ வழியினர் பலர் சென்னையில் தங்கினார்கள். அவ்வாறே திருவாரூர் வைத்தியநாத நாவலர் மாணவ மரபினருட் சிலரும் சென்னையை இருப்பிடமாகக் கொண்டனர். எடுத்துக்காட்டாக, இராமாநுசக் கவிராயர், மழவை மகாலிங்க ஐயர் முதலியவர்களை முற்கூறிய பகுதிக்கும், சிதம்பரப் பண்டாரம், கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், முதலியோரைப் பிற்கூறிய பகுதிக்கும் கூறலாம். இவர்க ளெல்லாம், பழைய முறையைக் கைவிடாது பாதுகாத்தவராவார்.

1812ஆம் ஆண்டில், நாட்டு மொழிகளின் பயிற்சிக்காக, சென்னை அரசங்கத்தார் ஒரு கல்விச்சங்கம் (Colleges of the Fort St. George) அமைத்தார்கள். இக்கல்விச் சங்கக் கல்லூரிகளின் நோக்கம், முதன்மையாக, அரசாங்கப் பணியாளர்களுக்கு நாட்டு

மொழிகளில் தேர்ச்சிபெறத்தக்க பயிற்சியளிப்பதே யெனினும், இம்மொழிகளின் பொதுவான இலக்கண முறைகளைக் காணலும், இம்மொழிகளுள், ஒன்றுக்கு ஒன்றுள்ள தொடர்பை அறிதலும், இம்மொழிகளின் மூலத்தை ஒருவாறு பார்த்தலும், இதன் நோக்க மாகவும் கொள்ளப்பெற்றிருந்தது. அகராதி, இலக்கணம், மொழி பெயர்ப்பு முதலிய பணிகளுக்குப் பொருளுதவி செய்வதையும் மேற்கொண்டிருந்தனர். இக்கல்விச் சங்கத்தைத் தோற்றியமைத்த வர்களில், மொழிநூற் புலமையும் தமிழ்ப் புலமையும் மிக்க எல்லீசும் (Francis White Ellis) தெலுங்கு மொழியில் வல்ல காமெலும் (A.D. Campbell) குறிப்பிடத்தக்கவராவார். இந்த இரு பேரறிஞர்களுடைய கட்டுரைகளாலும், அதிலும் சிறப்பாக எல்லீசின் மொழிநூற்புலமையாலும், பதினெட்டாவது நூற்றாண் டில் நிலவிவந்த, 'எல்லா இந்திய மொழிகளும் சமஸ்கிருதத் திலிருந்து தோன்றியவை என்னும் கொள்கை,' தென்மொழிகளுக் குப் பொருந்தாது என்பதை அறிஞருலகம் தெரிந்துகொண்டது. இக் கல்விச் சங்கம் புதிய முறையில் தமிழை வளர்க்கத் தொடங் கியது. 1814ஆம் ஆண்டு, மநுநூலின் இரண்டு பகுதிகளைத் தமிழில் மொழிபெயர்த்த இக்கல்விச் சங்கத் தலைமைத் தமிழாசிரியர் சிதம்பரப் பண்டாரத்துக்கு, ஓராயிரம் வராகன் பரிசு வழங்கியது. இவ்வாசிரியர், தமிழ் மொழியின் அமைப்பை விளக்கி ஒரு சிறு நூலும் செய்திருந்தார். இப்புலவர், தாம் பெற்ற பரிசைத் தமக்குப் பயன்படுத்திக் கொள்ளாமல் ஒரு சத்திரத்தைக் கட்டிவைத்தார். இச்சங்கம், மேலும் 1825ஆம் ஆண்டில், தாண்டவராய வாத்தியார் தொகுத்த 'அமரகோசம்' முதலிய மூன்று நூல்களுக்கு ஒரு பரிசு அளித்தது; ஞானமுதலி மொழி பெயர்த்த 'அராபிக் கதைகளுக்கு' ஆதரவளித்தது; தமிழ்ப்புலவர்களுக்குப் புதுமுறையில் பயிற்சி யளித்து நற்சான்று வழங்கிவந்தது. கம்பராமாயணத்தை முதன் முதலாகப் பதிப்பித்த திரு. வேங்கடாசல முதலியார், இச்சங்க நற்சான்று பெற்றவர்களுள் ஒருவராவார். இச்சங்கத்தில், இரண்டு சிறந்த தமிழ்- ஆங்கில அகராதிகளும், வீரமாமுனிவர் அகராதி, இலக்கண நூல்களும், வேறு சில சிறு இலக்கண நூல்களும் வெளி வந்துள்ளன. இச்சங்கம், 1812-ஆம் ஆண்டு தோன்றி, தனக்கு எனத் தனியாக ஓர் அச்சுக்கூடம், நூல்நிலையம், நூல் வெளியீட்டுப் பகுதி முதலிய எல்லா உறுப்புக்களும் பெற்று அரசாங்க ஆதரவும் பெற்று 1854ஆம் ஆண்டுவரை நிலைத்திருந்தும், தமிழ் மக்களின் ஊக்கக் குறைவால் தக்கவாறு, பயன்தராது மறைந்தது. கொட்டை

யூர் சிவக்கொழுந்து தேசிகர், தாண்டவராய முதலியார், விசாகப் பெருமாளையர் முதலிய சிறந்த புலவர்கள் இச்சங்கத்தில் வேலை பார்த்திருக்கிறார்கள். என்ன பயன்? ஆதரவும், வாய்ப்பும், கொடையும் பெருகிவருங்காலங்களில், கண்ணை மூடிக் கொள்ளு வது நம்மவர் பழக்கமாகவிருந்து வருகிறது. (இப்போது மொழி வளர்ச்சிக்கு ஓர் ஆக்கமான காலம்; பலவழியாலும் ஆதரவும் கொடையும் கிடைக்கின்றன. தமிழ் வளர்ச்சியை சிறு எண்ணங்கள் கூடி சிதைக்குமா? பேரெண்ணம் கூடிப் பெருக்குமா? தமிழறி ஞர்கள் விழித்திருக்க வேண்டிய நாள் இது!)

கால்டுவெல், சென்னையில், 1838ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திலிருந்து மூன்றாண்டுகள் தங்கி, தாம் மேற்கொள்ள விருக்கும் பணிக்குத் தக்கவாறு தம்மைப் பண்படுத்திக் கொண் டார். அப்போது, இவருக்கு, தக்க தமிழறிஞர்களும், கல்வித்துறை யில் வல்லவர்களும், அரசாங்க அலுவலிலுள்ள அறிஞர்களும் உற்ற நண்பராயினர். இவருடன் நெருங்கியிருந்தவர்களில், சமயத் தொண்டர்களாகிய துரு (Rev W.H. Drew), பவர் (Rev. Dr. Henry Bower), அந்தர்ஸன் (John Anderson) என்பவர்களும் அரசாங்க அலுவலிலிருந்த தாம்ஸன் கிளார்க் (Thomson Clarke) என்பவரும் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இவர்களுள், துரு, சிறந்த தமிழறிஞர். இராமானுஜக் கவிராயரிடம் தமிழ் பயின்றவர். திருக்குறளில் அறுபத்து மூன்று அதிகாரங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருந்தார். திருக் குறளை பரிமேலழகர் உரைக்கு விளக்கத்துடனும், நன்னூலைப் புதிய உரையுடனும், கவிராயர் வெளியிடுவதற்குத் துணையாக விருந்தவர். சிந்தாமணியை வெளியிடுவதற்குச் சில பகுதி வரை யில் செப்பம் செய்து வைத்திருந்தார். பவர், சிறந்த தமிழறிஞர். சிந்தாமணியை நச்சினார்க்கினியர் உரையுடனும், ஆங்கிலத்தில் சுருக்கமான தலைப்புக்களுடனும், சமண சமயத்தைப் பற்றிய தெளிவான கட்டுரையுடனும், நாமகளிலம்பகம் வரையில் அழகான முறையில் 1864-ஆம் ஆண்டில் வெளியிட்டவர். இவர் சிந்தாமணிக் கருத்துக்களையும், சமய நுட்பங்களையும், இலக்கியப் பண்புகளையும் தஞ்சையிலிருந்த ஒரு சமண சமயப் புலவரிடம் தெரிந்து கொண்டார் என்று, ஐம்பது ஆண்டுகளுக்கு

முன்பு, கரந்தை இராசாராம் முதலியார் என்னும் ஒரு முதியவர் தெரிவித்தார். பவர், விவிலிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பையும், புகழ் நூலையும் இறுதியாகச் செப்பனிட்டவர். கால்டுவெலுக்கு இலக்கியத் தமிழிலும், வழக்குத் தமிழிலும் பயிற்சியளித்தவர். இவருடைய சமயப் பண்பையும் தொண்டையும் போற்றி, கந்தர்புரி தெய்வமாக்குரவர் (Archbishop of Canterbury) 'தெய்வ நூலாசிரியர்' (Doctor of Divinity) என்னும் சிறப்பை இவருக்கு அளித்தார். அந்தர்ஸன் என்பவர், சென்னையில் கல்விப் பெருக்கத்துக்குத் தொண்டாற்றியவர். இவர் 1837-ஆம் ஆண்டு நிறுவியதும் அந்தர்ஸன் பள்ளிக்கூடம் என்று வழங்கப் பெற்றதுமான கல்வி நிலையந்தான் இப்பொழுது ''கிறிஸ்தவக் கல்லூரி'' என்று புகழ்பெறச் சென்னையில் விளங்குகின்றது. கிளார்க் அரசாங்க அலுவலிலிருந்தவர். இராமானுஜக் கவிராயரிடம் தமிழ் பயின்றவர். மதுரை மாவட்டத்தில் துணைத் தண்டற்றலைவராக வேலை பார்த்தவர். கொடைக்கானலில் முதல் முதலாக வீடு கட்டிக் குடியிருந்தவர்களில் ஒருவர். இவருடைய வீட்டில்தான் கால்டுவெல் கொடைக்கானலில் குடியிருந்தார்; இறுதி எய்தியதும் அங்குதான்.

சென்னையில், இவர், தங்கியிருந்த நாட்களில், தென்னாட்டு கல்வி வரலாற்றில் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. கிழக்கு இந்திய வணிகக் குழுவினர், மக்களுடைய கல்விப் பெருக்கத்தைக் குறித்துப் போதிய ஏற்பாடுகள் செய்யவில்லை என்பது இந்திய மக்களுக்கும், ஆங்கிலப் பாராளுமன்றுக்கும் (British Parliament) ஒரு பெருங்குறையாகவே இருந்து வந்தது. சென்னை அரசாங்கமும், சிறுபான்மை கல்வித்துறையில் ஏற்பாடுகள் செய்ததேயன்றி நிலைத்த திட்டம் வகுத்து ஒன்றும் செய்யவில்லை. இதனால் மனப்புழுக்கம் கொண்ட சென்னை மக்கள் எழுபதினாயிரவர் கையெழுத்திட்டு, அப்போது மா-மன்றாடி (Advocate General) யாகவிருந்த ஜியார்ஜ் நார்த்தன் (George Norton) என்பவரை முன்வைத்து, மாநில ஆட்சித் தலைவரிடம், ஒரு பெருவிண்ணப்பத்தின் வழியாகத் தங்கள் குறைகளை, 1839-ஆம் ஆண்டு நவம்பர் 14-ஆம் நாள், அறிவித்தார்கள். அவ்விண்ணப்பத்தில், கல்வியின் பயனால் எல்லா நாடுகளும் முன்னேறுவதைக் கண்கூடாகக் காணும் தங்களுக்கு அக்கல்வியை உயர்ந்தபடியிலும் பரந்த நோக்கிலும் பயிற்றிவைக்க நிலையங்கள் வேண்டும் என்பதை

யும், இந்தியாவின் ஏனைய பகுதிகள் கல்வியின் பயனைத் துய்த்துப் பல்வளமும் பெருக்கிக்கொண்டிருக்க, சென்னை மக்கள் இருளிலிருத்தல் முறையல்ல என்பதையும் வற்புறுத்தினார்கள். அக்காலம், இந்திய அரசினர், ஆங்கிலமுறைக் கல்வியைப் பரப்ப முடிவுசெய்த காலம். இவற்றின் பயனாக, ஒரு தமிழ்ப் புது ஆண்டு நாளில், *(1841-ஆம் ஆண்டு ஏப்ரல் 14-ஆம் நாள்)* சென்னையில், மாநில ஆட்சித் தலைவருடைய தலைமையில், செல்வர்களும், அறிஞர்களும், ஆட்சிப் பகுதி, நீதிப் பகுதிகளின் தலைவர்களும் கூடிய ஆயிரத்தைந் நூறுவர்கட்கு மேற்பட்ட ஒரு சிறந்த கூட் டத்தில், உயர்நிலைக் கல்வியைப் பயிற்றுவதற்கான ஒரு கல்வி நிலையம் நிறுவப்பெற்றது; இது, முன்னரே அமைந்திருந்த ஆசிரியர் பயிற்சிப்பள்ளியை அடிப்படையாகக் கொண்டது; சென்னை மாநிலக் கல்லூரிக்கும், சென்னைப் பல்கலைக் கழகத் திற்கும், அடிப்படையாகவுள்ளது. இந்த உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியராக, திங்கள் ஒன்றுக்கு எழுநூறு ரூபா ஊதியத்தில், பவல் (Eyre Burton Powell) என்னும் அறிஞர் நியமிக்கப்பெற்றார்; மழவை மகாலிங்கம் ஐயர் தமிழ் ஆசிரியராக நியமனம் பெற்றார். ஆங்கில மொழி வழியாகவே கல்வி பயிற்றப் பெற்றது. இந்தக் கல்வி நிலையத்திற்கும், முன்னர், எல்லீசு, காமெல் முதலியவர்கள் முயற்சியால் நிறுவப்பெற்ற கல்விச் சங்கத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை; மேலும் அக்கல்விச்சங் கத்தின் புலமை மரபு இப்பள்ளியில் பின்பற்றப்பெறவில்லை என்றும், நாட்டு மொழிகளின் வளர்ச்சிக்கு இப்பள்ளியின் திட்டம் அவ்வளவு பயனளிக்காது என்றும், சில மேல்நாட்டு அறிஞர்கள் கருதினார்கள்.

சென்னையில் தங்கியிருந்த காலத்தில், கால்டுவெல், தமிழ்ப் புலமையின் பண்டைய மரபையும், புதுமுறைப் புலமை யையும், கல்வியில் மக்களுக்குள்ள கருத்தையும் நன்கு தெரிந்து கொண்டார். தமிழ் மொழி, பண்பு, நாடு முதலியவற்றைப்பற்றி, நூல்கள், கட்டுரைகள் வழியாகவும், அறிஞருடன் பழகிய பழக் கத்தாலும், தாமே நேரில் ஆய்ந்தும், பல செய்திகள் தெரிந்து கொண்டார். பிறகு தாம் சமயத்தொண்டாற்ற வேண்டிய திருநெல் வேலி மாவட்டத்துக்குப் புறப்பட்டு, கால்நடையாக நடந்து சென்றார். இவ்வாறு நடந்து செல்லுவதில் வழியிலுள்ள பல இடங்களையும் அமைதியாகப் பார்க்கலாம் என்பதும், மக்

களுடைய பழக்க வழக்கங்களையும் பண்புகளையும் நேரிலேயே தெரிந்துகொள்ளலாம் என்பதும், இவருடைய நோக்கம். சோழ நாட்டிலுள்ள சிதம்பரத்தையும் கோயிலையும் கண்டார்; பின்னர், தரங்கம்பாடியில் சில நாள் தங்கி, அங்கு தேனியச் சங்கத்தாரது (Danish Mission) சமயத் தொண்டையும், தமிழ்ப் பணியையும் அறிந்தார்; பின்னர், தஞ்சையில் சில நாள் தங்கி, பெருவுடையார் கோயிலைக்கண்டு வியந்தார்; அங்கு, அரசனது அதரவு பெற்ற வரும், கிறிஸ்தவ சமயத்தொண்டருள் உயர்ந்தவருமான சுவார்த் (Rev. Schwartz) என்பவர் பணிகளைக்கண்டு பணிந்தார். சுவார்த் தொகுத்து வைத்திருந்த ஒன்பதினாயிரம் சொற்கள் அடங்கிய தமிழ்-இலத்தீன் அகராதியை, இவர் பார்க்க நேர்ந்ததோ இல்லையோ என்பது தெரியவியலவில்லை. அடுத்தபடி, நீலகிரி மலைக்குச் சென்று, அங்கிருந்த, போதகர் தலைவர் ஸ்பென்ஸர் (Bishop Spencer) என்பவருடன் ஒரு திங்கள் வரை தங்கியிருந்தார். பிறகு, கோயம்புத்தூர் வழியாக மதுரை வந்து சேர்ந்தார்; வழியில் இவருற்ற இடர்கள் பல.

பாண்டியர் பழம்பதியாகிய மதுரை மூதூர் இவருக்கு ஆறுதலளித்தது; கோயிலின் சிறப்பும் கோமகன் மாளிகையும் இவர் உள்ளத்தைக் கவர்ந்தன. அப்பொழுதுதான், சில ஆண்டு களுக்கு முன்னர் *(1834)*, அதுவரை யாழ்ப்பாணத்தில் சமயப்பணி செய்து கொண்டிருந்த அமெரிக்க சமய சங்கத்தார் (American Mission) தங்கள் நிலையம் ஒன்றை மதுரையில் நிறுவிப் பணி செய்து கொண்டிருந்தார்கள். இந்த அமெரிக்க சமய சங்கத்தாருள் பலர் சிறந்த தமிழறிஞர்களாக இருந்தார்கள். முதன் முதலாக வந்தவர்களில் ஹாய்சிங்டன், (Hoisington) சைவ சித்தாந்த நூல் களுள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்; திரேசி (Rev. Dr. W. Tracy) என்பவர், செந்தமிழும், வழக்குத் தமிழும் தெளி வாகத் தெரிந்தவர், கிரேக்க மொழியில் புலமைமிக்கவர். அப்போது திருமங்கலத்தில் தங்கிப் பணியாற்றிவந்தார்; பிற்காலத் தில், விவிலிய நூல் மொழிபெயர்ப்பில் சிறந்த தொண்டாற்றியுள் ளார். கால்டுவெல், இவருடன் ஒரு நாள் திருமங்கலத்தில் தங்கியிருந்தார். இந்த திரேசியின் மகனார் திரேசி (Rev. J.E. Tracy) பழங்காசுகள் பல சேர்த்து வைத்திருந்தார். அவைகளைக் கொண்டு நாட்டு வரலாற்றை ஆராய்ந்து 'பாண்டியர், சேதுபதிகள் காசுகள்' என்ற ஒரு கட்டுரை ஆங்கிலத்தில் எழுதி எழுபது ஆண்டு

களுக்குமுன் வெளியிட்டார். இந்த அமெரிக்க சமய சங்கத்தாரால் *1842*-ஆம் ஆண்டு திருமங்கலத்தில் தொடங்கப்பெற்ற கல்வி நிலையம், நாளடைவில் வளர்ந்து இப்போதைய அமெரிக்கன் கல்லூரியாக மதுரையில் புகழ்பெற நிற்கின்றது. இச்சங்கத்தாருள், வழிவழி தமிழ்த் தொண்டாற்றியவர்களும் உண்டு. இதன் தொடக்கக் காலத்தில் புகழ்பெற பலவாண்டுகள் மதுரையில் தொண்டாற்றிய சாந்தலர் (Rev. Chandler) என்பவரின் மகனார் சாந்தலர் என்பவரே, சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதிக்கு முதல் பதிப்பாசிரியராகவிருந்து அப்பணியைத் தொடங்கி வைத்தவர். இச்சங்கத்தைச் சார்ந்த சத்தர்(Schudder M.D.) என்பவர், நூறாண்டுகளுக்கு முன்னரே சிந்தாமணியை வெளியிடுவதற்குப் பல சுவடிகளையும் ஒப்புநோக்கி உண்மைப் பாடங்களைக் கண்டு ஒரு நல்ல படி செய்து வைத்திருந்தார். இப்போது அந்தக் கையெழுத்துச் சுவடியும் குறிப்புக்களும் எங்கேனும் அமெரிக்க நூல்நிலையங்களிலிருக்கக் கூடும். இதைச் சார்ந்த தொண்டர்கள் வழியாகத் தமிழ் மொழியின் பெருமையை உணர்ந்த வித்னி (Wm. Dwight Whitney) என்னும் தலைசிறந்த அமெரிக்க மொழிநூற் புலவர் குறிப்பிடுவதிலிருந்து★ இத்தொண்டர்களின் தமிழ்ப் பற்றையும் ஆர்வத்தையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

இவ்வாறு, கால்நடையாகவே, மெய்வருத்தம் பாராது பசி நோக்காது மெல்ல நடந்து, பலவூர்களையும் பல திறப்பட்ட மக்களையும் பார்த்துக்கொண்டு, தான் பணியாற்ற வேண்டிய எல்லையாகிய நெல்லை நாட்டை, *1841*ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அடைந்தார். அந்நாட்டில், கிறிஸ்தவ சமயம் வேரூன்றி நின்ற நாசரத் என்னும் ஊரிலுள்ள கிறிஸ்தவக் கோயிலில்,

---

* The Dravidian tongues have some peculiar phonetic elements, are richly polysyllabic, of general agglutinative structure, with prefixes only, and very soft and harmonious in their utterance; they are of a very high type of agglutination, like Finnish and Hungarian; and the author has been informed by an American who was born in Southern India and grew up to speak its language vernacularly along with his English, a man of high education and unusual gifts as a preacher and writer, *that he esteemed the Tamil a finer language to think and speak in than any European tongue known to him.*

"The Life and Growth of Language."

அம்மாதம் 28-ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை.

"கங்குல் கழிந்தது காண்! காலையுங் கையது காண்!
காரிருட் செயல்களெலாங் கழற்றி எறிவோமே;
பொங்கொளி போர்க்கவசம் போர்த்து செயல் புரிவோம்;
புண்ணியன் ஏசுவினை நண்ணிய வாழ்விரே!"†

என்னும் பொருளுள்ள விவிலியத் திருமொழியை அடிப்படையாகக் கொண்டு, ஒரு ஞானப்பேருரை நிகழ்த்தினார். சில நாட்கள், அந்த ஊரிலும் அருகிலிருந்த முதலூரிலும் தங்கி, மறு ஞாயிற்றுக் கிழமை முதலூர் கிறிஸ்தவர்களுக்கு ஒரு ஞானப்பேருரை நிகழ்த்தி விட்டு, பின்னர், தாம் பணியாற்றுவதற்கெனத் திருவருள் வகுத்து வைத்த இடையன்குடிக்குப் போய்ச் சேர்ந்தார்.

இடையன்குடி, திருநெல்வேலிக்குத் தென்கிழக்கில் நான்கு காவதத் தொலைவில், பனங்காடுகள் அடர்ந்த செம்மணற் பரப்பில் பாலை நிலத்தின் பண்பெல்லாம் குறைவற நிறைந்த ஒரு சிற்றூர். கதிரவன் வெம்மையால், எப்போதும், அவ்வூர் கொடிய வெப்பம் மிகுந்ததாகவேயிருக்கும். கோடையும், கடுங்கோடையுமான இருபருவங்களேயன்றி வேறு பருவங்கள் அங்கு நுழைவதில்லை. குளிர்மிக்க நாட்டிற் பிறந்து வளர்ந்த ஓர் இளைஞன், இத்தகைய கடுவெயில் மிக்க, எவ்வித இயற்கை வளனும், செயற்கை நலனுமில்லாத ஒரு பட்டிக்காட்டில், தன் வாழ்நாள் முழுவதும் கழிக்கத் துணிவு கொண்டதை, (பட்டிக்காட்டிற் பிறந்து வளர்ந்து சில நாட்கள் பட்டினங்களில் பழகியமையால் சிற்றூர் வாழ்க்கையை வெறுக்கும் இளைஞர்களைக் காணும்) நாம் கருதும்போது, இவருடைய உள்ளத்தின் உறுதியும், தெய்வப் பணியில் கொண்டுள்ள திட்பநிலையும், ஊன்நோக்கும் இன்பம் வேண்டி உழலாது வான்நோக்கும் வழிநிற்கும் வன்மையும், நம்மை அறியாமலே இவரையும் இவர் போன்ற உறுதியுடையாரையும், வணங்கி வாழ்த்துகிறவர்களாகின்றோம். இடையன் குடியாகிய பாலை, தமிழ்ப்புலவர்கள் உள்ளத்தில் தமிழ் வளரும் சோலையாக மாறிவிட்டது; இவரை வாட்டிய கோடை நம்மைக்

† The night is far spent, the day is at hand; let us therefore cast off the works of darkness, and let us put on the armour of light."
Romans XXX 12

குளிர்விக்கின்றது. எதனால்? இவரது செயற்கரும் தமிழ்ப் பணி யால். ஒவ்வொரு தமிழனும் தன் வாழ்க்கையில் ஒருநாளேனும் சென்று வணங்கவேண்டிய தமிழ்த்திருப்பதி இடையன்குடி என்றால் மிகையாமோ? மொழிநூற்புலவர் கூட்டம் ஐந்தாண்டுக்கு ஒரு முறையேனும் அங்கு நடைபெறாவிடில், நாம் நன்றியுடை யோமாவோமா?

இடையன்குடிக் கோயிலும், வேதியர் இல்லமும், குடியிருப்பும் சீர்கேடாகவுள்ளதைக் கண்ட கால்டுவெல், முதலில் அவற்றை அச்சூழலின் நிலைக்கு ஏற்ற முறையில், சீர்பெற அமைத்தார். கல்வியின் இன்றியமையாமையை அவ்வூர் மக்கள் நன்கு உணருமாறு செய்து, ஆண் மக்களும் பெண் மக்களும் கல்வி பயிலுவதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தினார். பெண் கல்வி யில் மக்களுக்கு இருந்த மாறுபாட்டைப் போக்கினார். சமயத் துறையில் மக்கள் ஈடுபட்டு உண்மையான பயனைப்பெற வேண்டி முயன்றார். தாம் இளமையிலேயே உறுதிகொண்ட மொழிநூல் வேலைக்கு ஆகவேண்டிய குறிப்புக்களை யெல்லாம், தம் வேலையோடு வேலையாகச் சேர்த்துவந்தார்.

இடையன் குடியில், இவர் பணிசெய்து கொண்டிருக் கும்போது அதற்கு மூன்று காவதத் தொலைவிலுள்ள சாயர்புரத்தில் போப்பையர் (Rev. G.U. Pope) தெய்வப்பணியும் கல்விப் பணியும் செய்து கொண்டிருந்தார். அங்கு ஒரு கல்விச்சாலை அமைத்து தமிழ், ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கம், எபிரேயம் முதலிய மொழிகளையும், எண், தத்துவம் முதலிய கலைகளையும் கற்பித்துக் கொண்டிருந்தார். பள்ளிக்கூடமும், மாணவர்கள் உண்ணும் காலமும் உறங்கும் காலமும் போக, மற்ற எல்லாக் காலத்திலும் நடந்து வந்தது. போப்பையரும் இரவு 11 மணிவரை கற்பித்து வந்தார். இவருக்குத் துணையாக, கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் முதன்மையாகத் தேறிய செய்மூர் என்னும் ஞானக்கண் ஒன்றேகொண்ட அறிஞர், கல்வி பயிற்றிவந்தார். அக்காலத்தில், இவ்வளவு மொழிகளும், கலைகளும் ஒரே இடத்தில், ஒருங்கே, நம் நாட்டில் எந்தக் கல்வி நிலையத்திலும் பயிற்றப்பெறவில்லை; மேல்நாட்டுப் பல்கலைக் கழகங்கள் போன்ற ஒரு கல்வி நிலைய மாக, சாயர்புரத்தைக் கொண்டுவரவேண்டுமென்பதே போப்பைய ரின் கனவு; இதன் திறமையைத் தெரிந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்

கழகத்தார், இதற்கு ஒரு நூல் நிலையம் அமைப்பதற்காக, 1848-ஆம் ஆண்டு, பொருளுதவி செய்தார்கள். சமயப்பணியிலும் சிறந்த தொண்டுகள் செய்தார். அவ்வூரில் புதிதாக ஒரு கோயில் கட்டினார்; சமய சம்பந்தமான சில சிறு நூல்கள் வெளியிட்டிருந்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் தொண்டுசெய்தோருள் முதலணியில் வைக்கக் கூடியவரென்றும், கல்வித் தொண்டில் இவரே முதல்வரென்றும் பாராட்டினார்கள். எனினும் இவர் 1850-ஆம் ஆண்டில் அவ்வூரை விடும்படியாயிற்று. மக்கள் பண்பையும் மாணவர் தகுதியையும் நன்கு உணராமல், அளவுக்கு மேற்பட்ட அறிவைப் புகட்டியமையாலும், மாணவரை வரையறைகட்கு உட்படுத்தும் வகையிலும் கற்பிக்கும் வகையிலும், தவறு கண்டவிடத்துக் கொடிய தண்டனைகளைக் கையாண்டுவந்தமையாலும், பலரும் இவரிடம் வெறுப்புக்கொண்டனர்.

''நன்றாற்றலுள்ளும் தவறுண்டு அவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை''

என்னும் தமிழ் மறையின் பொருளை, அவர் நன்குணராக் காலம்.

இடையன்குடிக்கு ஐந்து மைல் தொலைவில் சுவிசேஷபுரத்தில் சச்சந்தர் (Edward Sargent) என்பவர் சமயப்பணி ஆற்றி வந்தார். பல இனிய பண்புகள் வாய்ந்தவர். தமிழ் மொழியை நன்கு பயின்றிருந்ததோடு தமிழர்கள் போலவே தமிழ் பேசும் பழக்கமுடையவர். நாட்டுப் பழக்க வழக்கங்கள், மக்கள் பண்புகள், கருத்துக்கள் முதலியவெல்லாம் நன்கு தெரிந்திருந்தார். இவருடன் அடிக்கடி கலந்து பேசிப் பல செய்திகளைத் தெரிந்து கொண்டது, தாம் பணிதொடங்கிய நாட்களில் பெரிதும் பயனுடையதாக விருந்ததென கால்டுவெல் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நாட்களில், நாகர்கோயிலில், கிறிஸ்தவச் சமயத் தொண்டர்களின் நிலையம் சிறந்த பணியாற்றி வந்தது. அதில், இலந்தன் சமய சங்கத்தைச் சார்ந்தவரான மால்த் (Rev. Charles Mault) என்பவர் ஓர் அச்சுக்கூடம் வைத்து, பல தமிழ் நூல்களை வெளியிட்டு வந்தார். அவருடைய மனைவியார், ஆங்கில நாட்டில் முடிசூடா மன்னனாக அரசு செலுத்திய வரலாற்றுப்புகழ் பெற்ற ஆலிவர் கிராம்வெலின் (Oliver Cromwell) மகள் மரபில் வந்தவர்.

இவர்களுடைய முதல் மகள் எலிஜா (Eliza) என்பவரும், தந்தையாருடைய தொண்டில் ஈடுபட்டு, தமிழ் நூல்கள் அச்சுக் கோப்பதைப் பார்த்தல், பிழை திருத்தல் முதலிய தமிழ்த் தொடர்பான வேலைகளைச் செய்து வழக்குத் தமிழில் வல்லவராக இருந்தார். கால்டுவெல் தம்முடைய இருபத்தொன்பதாவது ஆண்டில், இருபத்தொரு ஆண்டு நிரம்பிய அந்த எலிஜா அம்மையாரை மணம் செய்து கொண்டார். இருவரும் மனையற வாழ்க்கையை மாண்புடன் இடையன்குடியில் தொடங்கிச் செம்மையாக யாவரும் போற்ற நடத்திவந்தார்கள்.

இடைவிடாது உள்ளத்தானும், உடலாலும், உழைக்கும் கால்டுவெலுக்கு, கடுங் கோடையில், இடையன் குடியின் வெம்மை தாங்க முடியாதாயிற்று; இவருடைய உள்ளமோ, உழைப்பின்றி, வெயிலுக்கு அஞ்சி அயர்ந்திருக்க இடந்தரவில்லை. அருகே, உவரிக்கரையில், தண்ணிய இடமாக அமைந்திருந்த இளஞ்சுனை என்னும் இடத்தில், தம் மாணவர்களுடன் சென்று தங்கி காலத்தை வீண் போக்காது வேலைசெய்து வந்தார். கோடையைக்கழிக்கப் பல இடங்களைக் கருதினார்; இவர் பார்த்த இடங்களிற் சில நச்சுக் காற்றும் நீரும் உடையனவாகத் தோன்றினமையில், கொடைக்கானலைக் குடியிருப்பாகக் கொள்ளும் காலம்வரையில் வெம்மையினின்று விடுதி பெறவியலவில்லை. சாரற் காலங்களில் குற்றாலம் இவரைக் குளிர்வித்தது.

உலகத்தின் பழ இலக்கியங்களாகிய எபிரேயம், கிரேக்கம் இரண்டினும் காணப்பெறும் பல செய்திகள், தமிழகத்தோடு தொடர்புடையனவாக இவருக்குத் தோன்றின. உவரிக்கரையைப் பார்த்தவுடனே எபிரேய இலக்கியத்தில் பழமையாகக் காணப் பெறும் ஓபர் (Ophir) இவருடைய நினைவுக்கு வந்தது. எபிரேயம், அராபியம் முதலிய செமிதேய மொழிகளில் சிறந்த அறிஞராயும், ஐரோப்பிய இலக்கிய வுலகில் புகழ்பெற்றவராயும் விளங்கிய ரெனான் (Ernest Renan) என்னும் பிரஞ்சு நாட்டுப் பெரியார் 'பலர் எண்ணுகிறபடி ஓபர் என்பது ஆபிரிகாவிலுள்ளதன்று, இந்தியாவின் மேற்கரையிலுள்ளதே என்பது என் துணிவு' எனப் பேசியுள்ளதையும் எண்ணித் தொடர்புபடுத்தினார். தமிழகத்தின் தெற்குக்கோடியில், கோட்டாறு, குமரித்துறை, பண்டைய கொற்கையிருந்த இடம், முதலியவற்றுள், ஒருவகைப் பெரிய

மரங்களைக் கண்டார்; அவை ஆபிரிக்காவைச் சேர்ந்தவை என்பதையும், நீண்டகாலம் இருக்கக் கூடியவை என்பதையும் உணர்ந்திருந்தமையாலும், அம்மரவகையின் பெயர்கூட இந்தியாவில் வழங்கப் பெறாமையாலும், பண்டை நாட்களில் தமிழகத்தோடு வாணிகம் செய்த அயல் நாட்டார் கொணர்ந்து தங்கள் தங்கிய இடங்களில் பயிர் செய்ததாக இருக்கலாம் என்று துணிவுகொண்டார்; அவ்வாறு கொணர்ந்தோர், கிரேக்கரோ, பொனேசியரோ, அல்லது விவிலிய நூலின் பழம் பகுதியில் புகழ் பெற்ற சாலமன் மன்னனின் தூதர்கள்தாமோ என்று ஐயுற்று, பண்டைய தமிழகத்தை மனக்கண்ணில் கண்டுகளித்தார். எபிரேய மொழியில் மயிலுக்கு வழங்கப்பெறும் 'துகி' என்னும் சொல் தமிழ்மொழியின் 'தோகை'யே என்பதைக் கண்டார். 'அரிசி' 'இஞ்சிவேர்' முதலிய சொற்கள் மேல்நாட்டு பண்டைய மொழிகளில் பயின்றுள்ள பாங்கையும் அறிந்தார். மலையாளக் கரையில் கிடைத்தனவும், திருவாங்கூர் மன்னரால் தொகுத்துவைத்திருந்தனவுமான பழங்காசுகளையும் சின்னங்களையும் பார்த்து ஆய்ந்து, அவை, ரோம் சக்ரவர்த்தி அகஸ்ட்டஸ் காலத்திலிருந்து நீரோ ஆட்சி வரையிலுள்ளன என்பதை விளக்கமாகக் கண்டு 1851-ஆம் ஆண்டு ஒரு சிறு நூல் எழுதி, திருவாங்கூர் மன்னர் மூலமாக வெளியிட்டார். இவையெல்லாம், மேலும் மேலும் பண்டைய தமிழகத்தின் உயரிய நிலையை அவர் உள்ளத்தில் பதிவித்தன. சமயத் தொண்டிலேயே பெரும் பொழுதையும் கழிக்க வேண்டிய கடமையுடையவரானமையால், இவற்றை எல்லாம் தொகுத்து வெளியிடற்கேற்ற ஓய்வு கிடைக்கவில்லை; தாம் கண்டவை, கற்றவை, கேட்டவைகளை எல்லாம் முறையாக குறித்துச் சேர்த்துவைத்தார். மேலும், அக்காலத்தில், இந்தியாவைப்பற்றிய பழஞ் செய்திகளைத் தெரிந்துகொள்ளுவதற்கான நூல்களும் வெளியீடுகளும், ஜர்மன் மொழியில் அதிகமாக இருந்தபடியால், அந்தமொழியை நன்கு கற்று, அதிலுள்ள நூல்களை எல்லாம் வாங்கி, தெளிவாகப் பயின்று குறிப்பெடுத்துவைத்தார். மொழியியல், இனவியல், வரலாறு, இவைகளில் மிகவும் ஈடுபட்டு அப்பகுதி நூல்களை இடைவிடாது பயின்றார். மொழியியல், வரலாறு முதலியவைகளைப் பொருளாகக் கொண்டு எழுதும் நூல்களிலும் கட்டுரைகளிலும் நேர்மை, தெளிவு, வரையறை முதலிய தகுதி ஒரு சிறிதும் குறையக்கூடாதென்பதும், இத்தகுதி பெறுவதற்கு, பரந்த பயிற்சியும், தெளிந்த நோக்கமும், உண்மை

யில் ஊக்கமும், இவைகளுக்கெல்லாம் மேலாக, மாசில்லாத அன்பும் இன்றியமையாதன என்பதும் இவருடைய கொள்கை. அறிவும் ஆற்றலும் உடையார் செய்யும் ஆராய்ச்சி அன்பு இல்லாத இடத்து உண்மை காண இயலாது ஒழிவதும், அன்பு ஒன்றே உடையார் ஆராய்ச்சி அறிவும் ஆற்றலும் இல்லாத இடத்து நகைக்கு இடமாதலும், நாம் என்றும் காணும் உண்மைக ளல்லவா?

இடையன்குடியில் பணியேற்ற முதல் நாளிலிருந்தே அவ்வூர்க் கோயிலை அழகுபெற அமைக்க வேண்டும் என்ற எண்ணம், கால்டுவெல் உள்ளத்தில் வளர்வதாயிற்று; பலவாறு முயன்று, 1847-ஆம் ஆண்டில் தாம் எண்ணிய கோயிலுக்குக் கால் நாட்டினார். பின்னர், இந்தக் கோயிலைச் சிறப்புறக் கட்ட வேண்டிய முயற்சியிலேயே பெரிதும் ஈடுபட வேண்டியதாயிற்று. இதற்கான அமைப்புகள் ஒவ்வொன்றையும் தாமே வரைந்தும், தொழிலாளர்களுக்கு நேர் நின்று காட்டியும் இடைவிடாது வேலை செய்தார். இவர் வேண்டுகோளுக்கு இயைந்து, இலந்தனிலுள்ள ஒரு 'கட்டிடக் கழகத்தார்', கோயில் அமைப்பதற்கான படம் ஒன்று, எல்லா விளக்கப் படங்களுடனும் அனுப்பி வைத்தார்கள்; அக்கழகத்தாருள் ஒருவரேனும் இவருக்கு அறிமுகமுடையவர் களல்லர்; எனினும், இவர் கடிதம் பெற்ற மறு அஞ்சலிலேயே கோயிலமைப்புக்கான படங்களை அனுப்பிவைத்தது, இவருடைய உள்ளத்தை உருக்கியது; 'இதுவன்றோ ஆங்கிலேயர் பேருள்ளம்' என வியந்து பாராட்டினார். அந்தப் படங்களை வரைவதற்கு அக்காலத்தில் ஐம்பது பவுனுக்கு மேலாகும் எனக் கருதினார்.

இடைவிடாத உழைப்பும், பதினாறு ஆண்டுகளாகவெப்ப மிகுந்த நாட்டில் தங்கியதும், இவருடைய உடல் நலத்தை நலிவித்தன. உடல் நலத்தைக் கருதியும், சமய சங்க வேலைகளைக் கருதியும், 1854-ஆம் ஆண்டு, ஆங்கில நாட்டுக்குச் சென்று மூன்று ஆண்டுகள் தங்க வேண்டியதாயிற்று. குளிர்ந்த, தம் தாய் நாட் டுக்குச் சென்றவுடனேயே, தாம் இதுவரை குறித்துவைத்திருந்த தென் இந்திய மொழிகள், வரலாறு முதலியவற்றைப் பற்றிய குறிப்புக்களை எல்லாம் தொடர்புபடுத்தி ஒரு நூலாக எழுதத் தொடங்கினார். ஒய்வு கிடைக்கும் என்று எண்ணிச் சென்ற

தாய்நாட்டிலும் சமயப் பணிகள் இவரைச் சூழ்ந்துகொண்டன. எனினும், அந்த வேலைகளுக்கு இடையே இவ்வேலையையும் விடாது செய்வதற்கு அந்நாட்டின் குளிர்ச்சி இவருக்கு இடங் கொடுத்தது. இந்நூலைத் தொடங்கி ஓராண்டு பத்துத் திங்களில் முற்றுவித்து, *1856*-ஆம் ஆண்டு ஜூன் மாதம் இரண்டாம் நாள், இலந்தன் நகரத்தில், இதன் முகவுரையையுங் கையெழுத்திட்டு வெளியிட்டார்.

இதன் முன்னுரையைக்கண்ட அறிஞருலகம், தமிழ் நாட்டின் பழமையையும் பெருமையையும் தெரிந்துகொண்டது. இந்திய வரலாற்றில் இருண்டிருந்த ஒரு மூலையில், இதன் ஒளிவீசிப் பல உண்மைகளை விளக்கியதோடு, இன்னும் ஆராய்ந்து காணவேண்டியன பலவுள என்பதையும் அறிவுறுத்தியது. 'திராவிட, அல்லது தென் இந்தியக் கொத்து, மொழிகளின் ஒப்பியல் இலக்கணம்' (A Comparative Grammar of the Dravidian or South Indian Family of Languages) என்ற தலைப்புப் பெயரில், இந்நூலை வெளியிட்டார். நூலுட் செறிந்துள்ள பல உண்மைகளும், அவைகளை ஆயும் முறைகளும், கண்டவற்றை வகைப், படுத்திய நெறியும், மொழி நூல் உலகத்துக்கே ஒரு விருந்தாய்த் திகழ்ந்தன.

தென் இந்திய மொழிகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்பதும், சமஸ்கிருதத்தினின்று தோன்றியவையல்லவென்பதும், இவை ஆரிய மொழிக் கூட்டத்தைச் சேர்ந்தனவல்லவென்பதும், தென்மொழிச் சொற்கள் வடமொழிகளில் பல கலந்துள்ளன வென்பதுமான எண்ணங்கள் இவரிடம் தோன்றிய போது இவ்வெண்ணங்கள் இவரிடமே முதன் முதலாகத் தோன்றியனவென்று எண்ணினர். பின்னர் இவ்வெண்ணங்களை ஆராய்ந்து சான்றுகளைக்கண்டு முறைப்படுத்தும்போது, தாம் பிறப்பதற்கு முன்னரே, இத்தகைய தோற்றம் சில சிறந்த மொழிநூலறிஞர்களுக்கு உண்டாகியிருந்ததை அறிந்தார்; ஐரோப்பாவில், பாப் (Franz Bopp-1791-1867) என்னும் மொழிநூல் முதல்வர்களில் ஒருவர் ஒப்பியல் இலக்கண முறைகளை வகுத்துக் கொண்டிருக்கும்பொழுது, சென்னையில், எல்லீசு, தென்மொழி ஒப்பியற்பண்புகளை வகுத்துத் தமிழ் முதலிய தென்மொழிகள் ஆரியத்தில் வேறானவை எனக் கண்டிருந்தார்; இவர்

கருத்துக்களுட் சில *1816*-ஆம் ஆண்டு வெளிவந்த காமல் தெலுங்கு மொழி இலக்கண நூலின் முன்னுரையில் குறிக்கப்பெற்றிருந்தன. மொழிநூல் முதல்வர்களுள் ஒருவரும், மற்றொரு முதல்வராகிய, ஜர்மானியப் பேரறிஞர், கிரிம் (Jacob Grimm 1785-1863) என்பவருடன் கூடிப் பல ஆராய்ச்சிகள் செய்தவரும், பழஞ்சுவடிகளைத் தேடி *1819*-ஆம் ஆண்டிலிருந்து *1822*-ஆம் ஆண்டு வரை, பம்பாய் முதல் கொழும்புவரை சுற்றிக் கொண்டிருந்தவருமான இராஸ்க் (Rasmus Kristian Rask 1787-1832) என்னும் மொழிநூல் முதல்வர், 'திராவிட மொழிகள், இந்தேயீரோப்பிய மொழிகளோடு சேர்க்கப்படக்கூடியனவல்ல, சிதேய மொழிக் கூட்டத்தில், அதிலும் பின்னிஸ் அல்லது அக்ரீயன் (Finnish or Ugrian) தொகுப்புக்கு நெருக்கமாகச் சேர்க்கப்பெற வேண்டியன' எனக் குறிப்பிட்டிருந்தார். இவர் தேடித் தொகுத்த சுவடிகளெல்லாம் கோப்பன்ஹேகன் நூல் நிலையங்களிலிருக்கின்றன. துருவிப்பார்த்தால் அரிய தமிழ்ச் சுவடிகளும் காணக்கூடும். பம்பாயிலிருந்த ஸ்டீவன்ஸன் (Rev. Dr. Stevenson) என்பவர், வடநாட்டில் வழங்கும் மொழிகளில், ஆரிய மொழிப் பண்புகளோடு ஒட்டாத மொழிப் பண்புகளும், ஆரியத் தொடர்பற்ற சொற்களும் தென்னாட்டு மொழிகளோடு தொடர்புடையனவே எனக் காட்டி சில கட்டுரைகள், பம்பாய் ஆசியச்சங்க வெளியீடுகளில் எழுதியிருந்தார். இவைகளைப் பார்க்கும்போது, இத்தோற்றங்கள் தமக்குத் தான் முதல் முதல் தோன்றியனவென்ற எண்ணம் கால்டுவெலுக்குக் குறைந்தது எனினும், இத்தோற்றங்களை உருப்படுத்தி அறிவுலகம் ஐயமறக் கொள்ளும்படிச் செய்தது இவருடைய எழுத்துக்களே என்பதை அறிந்தார். ஏனையோரும் அவ்வாறே ஒப்புக்கொண்டு மகிழ்ந்தார்கள். பிற்காலத்தில், நாளது வரையில், இவருடைய 'ஒப்பியல் இலக்கணமே' திராவிட மொழித் தொகுதிக்கு ஒரு தனி நூலாக, உலகத்தில், ஆங்கில மொழியில் விளங்கிவருகின்றது. இதன் வரையறைகளை மாக்ஸ்மூலர் (Max Muller) முதலிய மொழி நூலறிஞர்கள் வியந்தார்கள்; தங்கள் நூல்களில் ஆதரவாகவும் காட்டினார்கள். ஐரோப்பிய மொழிநூற் புலவர்களுள் சிலர், திராவிட மொழி வரையில் இவர் கூறியுள்ளவற்றை மிகவும் வியந்து போற்றினார்களெனினும், இம்மொழிக் கொத்துக்கு ஒரு மொழிக் கிளையை நாடிய முயற்சி அவ்வளவு பயனுடையதன்று வெனவும், அதற்காக இவர் இவ்வளவு பாடுபட வேண்டியதில்லையென்றும் கருதினார்கள். எவர் எவ்வாறு கூறினும், திராவிட மொழிக்கு இவர் நூலே

வேதமாக நாளதுவரையில் நிற்கின்றமையின், இவரே, திராவிட மொழித் துறைக்குத் தலைவரும் வழிகாட்டியும் என்பதில் ஐயமில்லை. இந்த, அரிய ஆராய்ச்சியின் பயனாகத் தோன்றிய, ஒப்பியல் இலக்கணத்தை வியந்து, இவர், இளமையில் பயின்ற கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தார், இவருக்குப் பேரறிஞர் (L.L.D.) என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தனர்.

இந்நூல் வெளிவந்த காலத்தில், தமிழ் இலக்கணத் துறையில் வேலை செய்துள்ள, வேறு சில அறிஞர்களையும் ஒரு சிறிது கருதுவோம். 1856-ஆம் ஆண்டில், ஜெர்மனியில், கிரால் (Dr. Graul) என்னும் அறிஞர். 'தமிழ் மொழி இலக்கணம்' ஒன்று ஆங்கிலத்திலும் ஜெர்மன் மொழியிலும் வெளியிட்டார். இவர் செய்த ஒரு வரையறையால், தமிழ் மொழியைக் கற்கும் அயலார்க்கு ஒரு நன்மை உண்டாயிற்று. இலக்கண வரம்பு நன்கு கட்டப்பெற்ற இம்மொழியில், வினைப் பகுதிகள், முக்காலங் களைக் காட்டும்போது, அவை பெறும் காலக் குறிகளையும் மாறுபாடுகளையும் அடிப்டையாகக் கொண்டு அவற்றை வரை யறை செய்து வகைப்படுத்தப் பெறாமலிருந்தது, இம்மொழியைக் கற்கும் அயலாருக்கு ஒரு குறையாகத் தோன்றிற்று. நம் இலக்கண ஆசிரியர்களோ, இந்த இடர்ப்பாட்டை உணர்ந்தார்களேனும், விளக்கி வகைசெய்ய முயலாமல் 'கா, சா, தா இவை முறையே காத்தான், செத்தான், தந்தான் எனவும், கல், நில், புல், சொல் இவை கற்றான், நின்றான் புல்லினா்ன், சொன்னான் எனவும் ஒரு நிகராகிய பகுதிகள் பலவிதமாக விகாரப்படுதலால், அவையெல்லாந் தனித்தனி சொல்லப்புகின் விரியுமாதலால், செய்யுள் வழக்கத்தையும் உலக வழக்கத்தையும் பார்த்துச் செய்யுள் விகாரமும் புணர்ச்சி விகாரமுங்கொண்டு அமைத்துக்கொள்க' எனக் கட்டளையிட்டுப் போயினர். ஆனால், வினைப் பகுதிகள் அடையும் மாறுபாடுகள் அயலாரை மிகவும் இடர்படுத்தின; 'தொழு' என்பது 'தொழுதான்' எனமாறுவதைத் தெரிந்த அயல் மாணவர், 'விழு என்பதை 'விழுதான்' என்றும், 'ஆள்' ஆண்டான் ஆனால் 'கேள்' கேண்டானாகும் என்றும், 'கொடு' கொடுத்தான், 'சுடு' சுடுத்தான் என்றும் எண்ணி இடர்பட்டனர்; இக்குறையை நீக்க வீரமாமுனிவர் முயன்றார். ஆனால், கிரால்தான், தன் இலக்கணத்தில் இந்த வினைப் பகுதிகளை எல்லாம், அவை

முக்காலங்களைக் காட்டுவதற்குப் பெறும் குறிகளைக் கொண்டும், அக்குறிகளைப் பெறும்போது அடையும் வேறுபாடுகளைப் பார்த்தும், (சமஸ்கிருதம், இலத்தீன் முதலிய மொழிகளில் பிரித்துள்ளதுபோல்) பன்னிரு கணங்களாகப் பிரித்து, 1. செய்—, 2. ஆள்—, 3. கொல்—, 4. அறி—, 5. ஆக்கு—, 6. நடு—, 7. உண்—, 8. தின்—, 9. கேள்—, 10. கல்—, 11. தீர்—, 12. நட—, என்ற வாய்ப்பாடுகளில் அமைத்தார். இம்முறையையே சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியிலும், அதன் முதல் பதிப்பாசிரியர் சாந்தலர் பின்பற்றி, இப்பன்னிரு கணத்துள்ளும் அடக்கவியலாத வினைப் பகுதிகளாகிய, த—, சா—, காண்— போன்றவற்றை பதின்மூன்றாவது கணமாக அமைத்தார். சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும், வினைப் பகுதிகளைக் கணங்களாகப் பிரித்துப் பயிற்றுவிக்கும் இலக்கண முறை, சில ஆங்கிலப் பள்ளிகளிலிருந்ததேனும், தமிழைத் தாய்மொழியாகவுடையவர்களுக்கு இம்முறை வேண்டப்பெறுவதில்லையென விட்டுவிட்டார்கள். எவ்வாறாயினும், ஒரு மொழியின் இலக்கணத்துக்கு இம்முறை வேண்டப்பெறுவதுதான் என்பதை உணர்ந்த தமிழ்ப் பேராசிரியர், இராவ்சாகேப், மு. இராகவையங்காரவர்கள், இவ் வினை விகற்ப முறையை, தமிழ் இலக்கண மரபுக்கேற்ப சூத்திரங்களாகச் செய்து விளக்கவுரையும் எழுதியுள்ளார்கள். விரைவில் வெளிவரக்கூடும். பேராசிரியர், தெ.பொ. மீனாக்ஷிசுந்தரம் அவர்களுடைய மேற்பார்வையில், அவர்களுடைய ஆராய்ச்சி மாணவர் ஒருவர் தமிழிலுள்ள வினைப் பகுதிகளையெல்லாம் இந்தப் பிரிவின்படி அட்டவணை செய்துவைத்திருக்கின்றார். இனி, தமிழ் இலக்கணத்திற்கு அயலார் கூறும் இக்குறை குறைவதாகும். கிரால் தமிழைப் பற்றி பல அரிய கட்டுரைகள் ஜர்மன் மொழியில் எழுதியுள்ளார்; திருக்குறளையும் ஜர்மனில் மொழிபெயர்த்துள்ளார். இவர் நூலெல்லாம் நூறாண்டுகளுக்கு முன் வெளிவந்தவை.

*1855*-ஆம் ஆண்டில், தஞ்சையிலிருந்து, போப்பையர், ஆங்கிலம் அறிந்தார் பயிலுவதற்குத் துணையாக ஒரு கைச்சுவடி வெளியிட்டார்; அது பல பதிப்புக்கள் வெளிவந்துள்ளது; இன்றும், அதுதான் அத்துறையில் சிறந்து விளங்குகின்றது; பின்னர், 1857-ஆம் ஆண்டில் ஒரு தமிழ் இலக்கண நூல் வெளியிட்டார். அதில், முதலில் எளிமையாக இலக்கணவிதிகளை

வினாவிடையாகவும், பின்னர், நன்னூலை உரையுடனும், யாப் பெருங்கலம் மூலமும், இலக்கண அகராதியும், ஆங்கிலக் குறிப்புக்களும் சேர்த்து, அழகிய முறையில் அச்சிட்டும் கொடுத் திருந்தார். இந்த இலக்கணநூலை, அப்போதுதான் தொடங்கிய சென்னைப் பல்கலைக்கழக முதல் தலைவர், ஹாரிஸ் பெரு மகனுக்கு (Lord Harris) உரிமை செய்து,★''பெருமகனாகிய தாங்கள் தலைமைதாங்கும் பல்கலைக்கழகத்தில் பயில விருப்போரில் பெரும்பாலர் (தமிழர்), அவர்கள் தாய் மொழியை— இனிமையில், குழைவில், நிறைவில், ஆற்றலில் எதற்கும் குறைவுபடாததொரு மொழி— நிறைதவிராது அறிவியல் முறையில் பயில்வது, ஏனைய உலக நூற் பயிற்சியோடு ஒத்த பயன்தருவதோடு, அப்பயிற்சி, உள்ளத்தைப் பொறுமையான ஆராய்ச்சி முறையிலும் நுணுகிய நோக்கத்திலும் இயல்பாகவே பழக்கிவைக்கும் பண்பு, எண்நூல் போன்று, இளைஞர்களுக்கு நலம்தரும் நெறியையும் நல்கும்'' என இலக்கணப் பயிற்சியின் இன்றியமையாமையையும் குறிப்பிட்டிருந்தார். தமிழ் இலக்கணப் பயிற்சியை, நூறாண்டுகளுக்கு முன்னர் அறிஞர் இவ்வாறு கருதிப் பணிசெய்தனர்.

*1858*-ஆம் ஆண்டில், சிறந்த தமிழ்ப் புலவர் ஒருவர், ஒப்பியல் முறைகளில் மேற்கொண்ட முயற்சியையும் பார்ப் போம். தஞ்சை மாவட்டத்தில், தரங்கம்பாடிக்கு அருகிலுள்ள பிறையாறு என்னும் ஊரில், சோழிய வேளாளர் மரபில், சைவ சமயத்தைச் சார்ந்தவரும் வழிபாடு முதலியவற்றை முறையாகச் செய்பவருமான தாண்டவராய பிள்ளை (வாத்தியார்?) என்ற ஒரு சிறந்த தமிழ்ப் புலவர் இருந்தார். அவருடைய மகன் சிறந்த

---

* To The Right Honourable George Francis Robert Lord Harris, Governor of Madras, First Chancellor of the Madras University.

I believe you share in the conviction that to the majority of those who shall be trained there, the accurate and scientific study of their own language, —a language hardly inferior to any in sweetness, flexibility, copiousness and force, —is calculated to be as useful as any other secular study, while its tendency to train the mind to habits of patient research and close analysis must render it as beneficial a discipline to the young as a study even of the mathematics themselves. (G.U.Pope)

இலக்கணப் புலமை வாய்ந்தவர். தாம் பிறந்த சமயத்தைவிட்டு, கிறிஸ்தவராக மாறி சாமுவேல் பிள்ளை என்று பெயர் வைத்துக் கொண்டார். தரங்கம்பாடியிலிருந்த ஜர்மானிய அறிஞர்களுடனும் சென்னையிலிருந்த ஆங்கில அறிஞர்களுடனும் பழகி, மேல் நாட்டு மொழிநூல் முறைகளை நன்கு தெரிந்திருந்தார். வீரமாமுனிவர், இரேனியூஸ், கால்டுவெல் முதலியோர்களுடைய இலக்கண ஆராய்ச்சிகளில் கண்ட சில கருத்துக்களும் முறைகளும் இவருக்கு புதிய முறையில் ஊக்கம் அளித்தன. பழைய முறைகளிலும் புதிய முறைகளிலும் உள்ள நற்பண்புகளை ஒன்று சேர்த்து இலக்கண இலக்கியப்பணி செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் ''கிரந்த மந்தண கூடம்'' (Tamil Museum and Review of Oriental Philology) என ஒன்று நிறுவி, தாம் வெளியிட விருப்பனவற்றை; பன்னிரண்டுவகையாகப் பிரித்து வேலை செய்யத் தொடங்கினார்; தாம் நன்கு தெளிந்த துறைகளிலே அமைந்த நூல்களையே வெளியிடப்போவதாகக் கூறினார்; அவருடைய பன்னிரண்டு பிரிவுகளில், ஒப்பியல் மொழிநூற் பகுதியும் ஒன்று. இருக்வேதத்தை தமிழில் மொழிபெயர்த்தலும் ஒன்றாக இருந்தது; இந்த முயற்சியில் இவருக்கு துணையாக விருந்தவர், வால்ற்றர் ஜாயீஸ் (Walter Joyes) என்பவர். இந்த கலைக்கூடத்தின் முதல் வெளியீடாக 1858ஆம் ஆண்டில் ''தொல்காப்பிய நன்னூல்'' என்னும் அரிய இலக்கண நூல் வெளி வந்தது; அதில், இரண்டு இலக்கண நூல்களுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் காட்டியிருந்ததோடு, பலவகையான குறிப்புக் களும், அட்டவணைகளும் கொடுத்திருந்தார்கள். ஆங்கிலத்தில் விளக்கமும் தரப்பெற்றிருந்தது. இந்நூலை, ''ஐந்திரபாணிநீயம் என்றும் சமரசபாஷியசித்தாந்தம் என்றும் இனிப்பெயர்பெறும் பெற்றிக்கேற்ப உத்தேசித்து, வடமொழி வழக்கும் தமிழ்மொழி வழக்கும் ஐங்கிலிய வழக்குங்கொண்டிருக்கின்ற சம்பந்தா சம்பந்தங் காட்டிப் பூரணவிருத்தியா யெழுதப் புகுந்திருக்குமுரை நூலுக்கு முதற்பிரயத்தன''மாக வெளியிட்டார்கள். தொல்காப் பியத்தின் சொல்லதிகாரமும் பொருளதிகாரமும் முதன் முதலாக இந்த நூலில் தான் அச்சிடப்பெற்றிருந்தது. சூத்திரங்களின் அடைவும், பொருட் சுருக்கமும், மிகத்தெளிவாகக் காட்டப் பெற்றிருந்தன. அறிவுடைய மாணவன், உரைகளின்துணையின்றி, தொல்காப்பியத்தையும் நன்னூலையும் ஒருசேரத் தெரிந்து கொள்ளுவதற்குப் பெரிதும் துணை செய்தது. இந்த ஆசிரியர்

சாமுவேல் பிள்ளையுடைய திட்டங்களை, இங்கு எழுதுவ தென்றால், அது ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையாகப் பெருகிவிடுமாகை யால், சுருக்கமாகக் கூட எழுதவில்லை; எனினும், அக்காலத்தில், இலக்கணம், மொழிநூல், தமிழுக்கு ஆற்ற வேண்டிய பணி முதலியவற்றைப் பற்றி ஒருசார் அறிஞர் எவ்வாறு கருதினார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுவது மொழியாராய்ச்சி வரலாற்றுக்கு இன்றியமையாதது என்பதை எண்ணி, சாமுவேல் பிள்ளை, தன் நோக்கத்தைப் புலப்படுத்திய இரண்டு ஆசிரியப் பாக்களை மட்டும் இங்கு தருகின்றோம். இந்த எண்ணங் களெல்லாம் நூறாண்டுகளுக்கு முற்பட்டவை.

"மன்பதைத் தொகுதிவாழ் வளாகவையகந்
தன்னிடை முந்துநூன் மன்னிய பன்மொழி
ஒருங்கெலா மொருபகுதிய தெனுந் துணிபினை
மருங்குலாமொற்றுமை நயவளம் வல்லுநர்
கண்ணடு சமரச பாடியங் கண்டனர்
அண்டர் நாட்டதுவெனு மாரிய மாதியாங்
கூரிய பழமையின் கோட்பா டுடைய
ஆரிய மொழிகளு மமிழ்துறள் தமிழார்
கிளைபடு மொழிகளுங் கிழக்குரி யனவும்
விளைந்தியல் விரிந்த மேற்கிடைப் பட்டவும்
முற்றியன் மொழிக்கொடுஞ் சேமியன் மொழிக்கொ
உற்றுணர்ந் துய்த்துணர் வைப்பெனு முத்தியான்டும்
ஒற்றுமை வேற்றுமை தம்முண் முடித்தனர்
பட்டபல் பாடைக் கொடுப்பட வொன்றா
இலக்கண சித்தாந்த மெனவிரித் தியற்றிய
இலக்கணங்களையே யியற்றமிழ் முதலிய
பஞ்ச திராவிடம் பாற்படு வொருநெறி
யெஞ்சலி லிளம்பூ ரணமொடு சேனா
வரையமு நச்சினார்க் கினியமு மாறாத்
திரைபுரை யுரைபுத் தம்புதுரைத் தேம்
நமச்சி வாயனு ஞான தேசிகனும்
அமச்சவுந் தீக்கத னறைஞ்ச விவேகமும்
நன்னூனி றுத்த முறைக்குன் னடக்கும்
பன்னூற் றொல்காப்பியம் படர் பதார்த்தம்
வெளிப்பட விரிந்த வேற்றிலக் கணங்களும்

வெளிப்பட விரிந்த வேற்றிலக் கணங்களும்
தெளிதமிழ்க் கண்ணுந் தெரிந்து விளங்கச்
செந்தமிழ் நடைமற் றேனைய நடைக்குப்
பிந்திய தன்மை பெரிதுஞ்ஞ் சிறப்பத்
தொல்காப்பிய நன்னூ லெனுந்தொல் பெயர்க்
கெல்லாங் கொள்கையி னிதுபெய ராகச்
சமரச விருத்தி சாலத்
தமிழ்மொழிப் படுவதாஞ் செயப்படு பொருளே.

---

உலகம் விரிந்த வொருசொல் லதுபோற்
பலகம் பலைப்படப் பட்டபல் பாடையும்
ஆதியி னாதியா னருளுபு மானவர்க்
கோதிய வொருமுதல் வழிப்பிறந் தனவவ்
வாதிநூ லொருசா ரறிவின ரம்மதம்
வாதநூல் வழாஅ மரபின ருணர்த்தின்
பகுதிய தொருமையும் விகுதிய தொருமையும்
பகுதிவேற் றுமையும் விகுதிவேற் றுமையும்
திரிபது மரபுந் தெரியா விகாரமும்
உரிமையும் பொதுமையும் பாற்பட வோர்ந்து
பன்மையாப் படர்ந்தவற் றினஞ்சில கண்டு
சின்மை யிலக்கணந் திறப்படத் தெரிந்தாங்
கவ்வத் தொகைவகை விரிகளை யவையவை
யெவ்வெவ் வழிகளி னியலுமவ் வழிகளிற்
சேர்த்தித் தெளிந்த திறன்மூ வகைய
பாத்தவை யாகிய வைரவப் பாலன; —
ஓரசை யொருமொழி யுள்ளசை முழுமொழி
ஓரிரு மொழியுஞ் சேமியஞ் சீனமா
ஆரியம நாரிய மாமிரண் டொருபொது
வாகிய வுறுப்பியன் மொழிகளிப் பரதமா
நிலன்பெற நிகழ்வன வனைத்தையு முணர்த்திய
இலக்கண மொருகலை யெனும்பொது வாய்பாட்
டியற்கையே சமரசஞ் சிறப்பிலக்கணங்கள்
வயின் வயினொழிய மாறா மரபுடை
வாய்மையு முன்மையு நிலைஇய வழக்காற்
சேய்மையின் முனைவன் றெரித்தது மொன்றே

***அவனு மொருவனே யவனருண் மனுவோ
ரவர்முத லதுவுமா ரொன்றவர் குலமும்
பாடையி னிலத்திற் கொள்கையிற் படர்ச்சியிற்
கூடிய பிரிந்தன கொண்டன விண்டன
பலவும் பலவாய்ப் பல்கியு மவற்போல்
நிலவிய வொருமையே நிறுப்புணர்த் திந்நூன்
முடிவினை மொழிவது சமரச பாடியம்,
கடைப்பிடிக் கருவிகள் கருதிய நிறுத்திற்
சித்தாந்த மென்னுஞ் செம்பெயர் பெறுமால்,
உத்தியு மூகமு மொருமுத லனந்தன்
செப்புமா பாடியஞ் செப்பிய பதஞ்சலி
யிப்புவித் தமிழி னியற்கையுந் தழீஇக்
கொண்டகோள் பிழையாகக் கூரிய தாகலின்
வண்மையந் திராவிட மாபாடி யமெனா
வகத்திய முதலாச் சான்றோ ரறைந்தவை
யிகத்திக லாமை யியலும் பாலதென்
றறி வறி யாரிய ரரீறீர்த்
திறையு மிலேன் செய லினிதுகொள் குவரே.***

கால்டுவெல், *1857*-ஆம் ஆண்டு, தம் தாய்நாட்டிலிருந்து, தமிழ் நாட்டுக்குத் திரும்பினார். அவர் ஆற்றவேண்டிய சமயத் தொண்டுகள் பெருகிவிட்டன. கோயிலைக் கட்டிமுடிக்க வேண்டிய வேலையில் இடைவிடாது ஈடுபடவேண்டியவராயினார்; பொருள் தேட வேண்டியதும், கிடைத்த பொருளைச் சிக்கனமாகச் செலவிட வேண்டுவதும், திருப்பணியைத் தொடர்ந்து நடத்திக் கோவிலைக் கவின்பெற அமைக்க வேண்டுவதும், இவர் பொறுப்பாயின. மேலும் விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்க்கும் குழுவில் உறுப்பினராக அமர்ந்து பதினோராண்டுகள் அந்த வேலையையும் செய்ய வேண்டியதாயிற்று; அப்பணி முடிந்தவுடன் மேற்கொண்டு ஓராண்டு, 'வழிபாட்டு நூலைத்' தமிழிலாக்கும் வேலையில் நிற்கவேண்டியதாயிற்று. வேறு வேலைகளைப் பார்க்கவியலவில்லை யென்றாலும் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், எப்போதும் போலவே, வரலாறு, பழமை, மொழியியல், பண்பாடு முதலியவைகளைப் பற்றிய செய்திகளைச் சேர்த்துக் கொண்டே வந்தார். கிரேக்க

நூலாசிரியர்கள் குறிப்பிடும் இடங்களில் ஏதாவது ஒன்றையேனும் அகழ்ந்து பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தால் 'கொற்கை,' 'காயல் முதலிய இடங்களில் சிறிது அகழ்ந்து பார்த்தார். போதிய வாய்ப்பின்மையின் இவர் எண்ணப்படிப் பார்க்கவியலவில்லை. வரலாற்றுக் குறிப்புக்கள் பல இடங்களிலிருந்தும் சேர்த்து வைத்தார். இவையெல்லாம் ஓய்வு கிடைத்தபோது செய்தனவே.

1868-ஆம் ஆண்டில், சென்னை மாநில ஆட்சித் தலைவர், பெருமகன் நேப்பியர், பெருமாட்டியுடனும், பரிவாரங் களுடனும், இடையன் குடியில் தங்கினார். பெரும் பட்டினங் களிலும் செல்வவளம் நிறைந்த இடங்களிலுமே ஆட்சித் தலைவர்கள் தங்குவது வழக்கம். அவ்வாறிருந்தும், எங்கோ ஒரு மூலையிலிருக்கும் சிற்றூராகிய இடையன்குடியில் தங்கியது, கால்டுவெலின், கல்வியின் பெருமையும் கடவுட்பணியுமே யாகும். பெருமகன் பல செய்திகளைக் கால்டுவெலுடன் ஊசாவித் தெரிந்து மகிழ்ந்தார்; இவர் கட்டும் கோயில், இவரே தம் சிற்பத்தினால் ஓவியப்படுத்தியிருந்த பலகணிகளின் அழகு, பெருமகனைக் கவர்ந்தது; ஒரு பலகணி செய்வதற்காகும் செலவாகிய ஐந்நூறு ரூபாவை நன்கொடையாகக் கொடுத்தார். நற்றாமரைக் கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல் கற்றோரிரு வரும் உளங்கலந்துபேசி ஒரு வாரத்துக்கு மேலாக மகிழ்ச்சியாகப் பயனுடன் பொழுது கழித்தனர்.

1872-ஆம் ஆண்டில் கால்டுவெலுடைய, மகிழ்ச்சி நிறைந்த குடும்பத்தில் ஒரு துன்பம் நிகழ்ந்தது. கால்டுவெலின் மனைவி, இளமையிலேயே சமயத் தொண்டில் ஈடுபெற்றவ ரானமையால், இடையன்குடியிலும், பெண்களுக்கென பள்ளிக் கூடம் ஒன்று வைத்துப் பெண்களுக்கு வீட்டிற்காக வேண்டிய வேலைகளிலும் எழுத்து எண் முதலியவற்றிலும் பயிற்சியளித்து ஊரெங்கும் தாய் எனப்போற்றுமாறு வாழ்ந்து வந்தார்; நோயுற்ற மக்களுக்கு மருந்து அளித்தும் நோயடையா வண்ணம் வாழும் வகைகளைக் கற்பித்தும், அந்த ஏழை மக்களின் வாழ்க்கையை முன்னேற்றி ஊரெங்கும் மகிழ்ச்சி நிலவுமாறும் செய்துவந்தார். இவர்களுக்கு ஓர் ஆணும், இரு பெண்ணுமாக மூன்று குழந்தைகள் பிறந்தனர். ஆடிங்தன் (Addington) என்பது ஆண் குழந்தையின் பெயர்; இம்மகன் மருத்துவக் கல்லூரியிற் பயின்று, ஆஸ்திரேலியா

வில் சிறந்த மருத்துவராகப் பணியாற்றி வந்தார். மூத்த மகள், திருச்சிராப்பள்ளியில், சமயப் பணியாற்றி வந்த வியத் என்பவரை மணந்து, தம் அன்னைபோன்று பெண் மக்களுக்குக் கல்வியைப் பெருகச் செய்யும் பணியை மேற்கொண்டு, யாவரும் புகழும் வண்ணம் சிறப்பொடு வாழ்ந்து வந்தார்; இளைய மகள், லூயிசா (Louisa) என்பவர் பொறிவலாளர் பயிற்சி பெற்று விளங்கிய செப்பர்டு (Lt. Shepherd.R.E.) என்பவரை மணந்து, சில ஆண்டு களுக்குள், தம்முடைய இருபத்து மூன்றாவது ஆண்டுக்கு இரண்டு திங்கள் முன்னரே 1872 ஆண்டு அக்டோபர் மாதம் 28-ஆம் நாள் இறைவன் திருவடியை அடைந்தார். இப்பிரிவு, மகிழ்வுற வாழ்ந்த ஒரு குடும்பத்தில் மாறாத துன்பத்தை உண்டுபண்ணிவிட்டது. கடந்த ஞானியும் கடப்பரோ தம் மக்கள் மீது காதல்?

ஓயாத உழைப்பாலும், வெப்ப மிகுந்த பகுதியில், நெடு நாள் தங்கியமையாலும் இடையே நோய்வாய்ப்பட்டு, இனி, ஒரு பணியும் செய்யவியலாது என்ற நிலைமைக்கு வலு குறைந்து விட்டமையாலும், இவற்றுக்கெல்லாம் மேலாகத் தம் இளைய மகளை இழந்த சோகத்தாலும் நலிவுற்று வாட்டமடைந்த கால்டுவெல் 1873-ஆம் ஆண்டு, தம் தாய்நாடு சென்று இரண்டு ஆண்டுகள் தங்கினார். தம் நாட்டின் குளிர்நிலை, உடலைச் சிறிது வலுவுறச் செய்தமையின் இலக்கணப் பணியை மேற்கொள்வ தற்குத் துணிவு பிறந்தது. இவருடைய 'ஒப்பிலக்கணம்' முதற் பதிப்பு, வெளிவந்த சில நாட்களில் செலவாகிவிட்டமையால், அதைக் கற்க விரும்புவோர்க்குக் கிடைப்பதரிதாயிற்று. இரண்டா வது பதிப்பை வெளிகொணரத் தொடங்கி, முதற்பதிப்புக்குப் பின்னர், இடைப்பட்ட பத்தொன்பது ஆண்டுகளில், தாம் தொகுத்துவைத்துள்ள குறிப்புக்களையும், பெருக்கிக் கொண்ட மொழியாராய்ச்சி அறிவையும் கொண்டு, இரண்டாவது பதிப்பைப் பெருக்கியும், சில இடங்களில் புதுக்கியும், பயில்வோர் எளிமையாகச் செய்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டிப் பல வாய்ப்பாடுகளையும், அட்டவணைகளையும், பிற்சேர்க்கைகளையும் சேர்த்து, 1875-ஆம் ஆண்டில் வெளி யிட்டார். இப்பதிப்பில் இலக்கிய வரலாற்றைக் குறித்தும், காலத்தைக் குறித்தும் கூறிய சில செய்திகள் பிற்காலத்து ஆராய்ச்சிகளால், பிறப்பட்டனவாகத் தெரியினும், இலக்கணப் பகுதிவரையில் ஈடும் எடுப்புமற்றதென்று எளிதாகக் கூறி

விடலாம். கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய மொழிகளின் அமைப்பைக்கொண்டு தமிழ் மொழியின் இலக்கணத்தை நன்கு தெரிந்து கொள்ளலாம் என்று எண்ணி, முதன் முதல் அம்மொழிகளின் அமைப்பை ஆயத்தொடங்கிய இவர் பின்னர், தமிழ் மொழிப் பயிற்சியே, ஏனைய திராவிட மொழிகளைத் தெரிந்துகொள்ளுவதற்குப் பெருந்துணை புரிவதைக்கண்டு தமிழ் இலக்கணப் பண்புகளை மேலும் போற்றியதோடு, இத்தகைய இலக்கணம் தோன்றிய மக்கட் பகுதியின் பேரறிவையும் வியந்து புகழ்ந்தார்.

'ஒப்பிலக்கணத்தின்' முதற்பதிப்பு வந்த 1856-ஆம் ஆண்டிலிருந்து இரண்டாம் பதிப்பு வந்த 1875-ஆம் ஆண்டுக்குள் தமிழ்ப் பயிற்சியின் நிலைமையும், தமிழைப் பிற நாட்டார் பயிலும் முயற்சியும் பெரும் மாறுபாடு அடைந்துவிட்டது. 1858-ஆம் ஆண்டில், கிழக்கு இந்திய வாணிகக் குழுவின் ஆட்சி மாறி, இந்திய நாடு, பிரிட்டிஷ் அரசில் ஒரு பகுதியாகி ஆங்கில அரசின் ஆட்சிக்கு உள்ளாகிவிட்டது. கல்வியைப் போற்றுவது ஆட்சியாளரின் கடமைகளுள் ஒன்றாக வந்துவிட்டது. மூன்று பல்கலைக் கழகங்கள் நிறுவப்பெற்று தங்கள் வேலையைத் தொடங்கின. தமிழ் மொழியின் வளர்ச்சி சென்னை ஆட்சியாளர் கையிலும், பல்கலைக் கழகத்தார் பார்வையிலும், அகப்பட்டுக் கொண்டது. பாடத்திட்டங்களும், அவர்களே, மேல்நாட்டு முறைப்படி அமைத்துக் கற்பிக்கத் தொடங்கினார்கள். ஆங்கில மொழியே கல்வி கற்பிப்பதற்கு உரிய மொழியாகி, இளமை முதல் கற்போர் உள்ளத்தை ஆட்சி செய்யத் தொடங்கிவிட்டது. நாட்டு மக்களிற் கற்றவர்களெல்லாம் ஆங்கில மொழியைத் தெரிந்து அதன் வழித் தங்கள் அலுவல்களைப் பார்க்கும் நிலைக்கு வந்துவிட்டபடியால், அயல் நாட்டிலிருந்து, ஆட்சிப் பகுதியிலோ, சமயப் பகுதியிலோ, வாணிகப்பகுதியிலோ, இங்கு வருபவர்களுக்கு முன்போல, இந்நாட்டு மொழியைப் பயிலவேண்டாது போயிற்று. தமிழ் மொழி, பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் ஒதுக்கிடம் பெற்று புதிய முறையில் பயிற்றுவிக்கப்பெற்று வந்தது. ஆங்கில மொழிப் பயிற்சி, வாழ்க்கையில் பல நன்மைகளையும், சிறப்பையும் பெறுவதற்கு வாய்ப்பளித்தமையின், மக்கள் உள்ளம் அதையே நாடியது. தமிழ்ப் புலவர்களும், பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் குறைந்த ஊதியம்பெற்றுப்

பணியாற்ற வேண்டியவராயினர். பல்கலைக்கழக நிலையில், ஒரு காலத்தில், தமிழ்ப்பாடக் கேள்விகளெல்லாம் ஆங்கில மொழியிலேயே கேட்கப்பெற்றும், விரும்பினால், மாணவர்கள் தமிழில் விடை எழுதலாம் என்ற உரிமை கொடுக்கப்பெற்றும் வந்தது. கால்டுவெல், இங்கு வந்த காலத்தில், நாட்டில் பரந்து காணப் பெற்ற தமிழ்ப் பள்ளிகளும், கற்றுச்சொல்லி முறையும் பழமையான தமிழ்ப் பயிற்சியும், கல்விப் பயிற்சியும், சிறுகச் சிறுகக் குறைந்து கொண்டே வந்து மறைந்துவிட்டன. ஆங்கில மக்களின் ஆற்றலுக்கு அடிமைப்பட்ட நம் நாட்டு அறிஞர்கள், தமிழன்னையை அறவே மறந்தார்கள். ஒரு காலத்து, மூவேந்தரும் பணியச் செங்கோலோச்சிய தமிழ்த்தாயும், காலங்கருதி, தன்னகத்திலேயே துச்சிலிருந்து துயர் கூறுவாளாயினாள். பழைய முறையிலேயே பயின்ற தமிழ்ப் புலவர்களுக்கு, மடங்களும், குறுநில மன்னர் மாளிகைகளும், நிலக்கிழவர் இல்லங்களும், உழவர் குடில்களும், நிழலளித்து வந்தன.

இந்த இருபது ஆண்டுகளில் *(1856-1876)* மேல் நாட்டு அறிஞர்கள் தமிழ் மொழிக்குச் செய்துவந்த தொண்டுகளும் குறைவனவாயின. ஆனால், இரண்டு சிறந்த வெளியீடுகள், அவர்களால் வந்துள்ளதை தமிழகம் என்றும் மறக்க முடியாது. யாழ்ப்பாணத்தில் பல காலமாக, நைட் (Rev. J. Knight), ஸ்பால்டிங் (Rev. L. Spaulding) முதலிய, கிறிஸ்தவ சமயத் தொண்டர்கள் தொகுத்துவைத்திருந்த தமிழ் அகராதிக்கு வேண்டிய சொற்களையும் விளக்கங்களையும், வின்ஸ்லோ (Rev. M. Winslow) என்பவர் சென்னைக்குக் கொண்டுவந்து, மிக முயன்று, ஒரு, தமிழ்-ஆங்கில அகராதியை நன்முறையிற் பதித்து, *1862*-ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிட்டார். இது, வின்ஸ்லோ அகராதி என்று பெயர் பெறும். அமெரிக்காவில் வெளிவந்த வெப்ஸ்டர் (Webster) ஆங்கில அகராதிபோன்று, அக்காலத்தில் தமிழுக்கு விளங்கியது. தமிழ் மொழியின் சிறப்பை வின்ஸ்லோ குறித்திருந்தது எல்லோர் உள்ளத்தையும் கவர்ந்தது. இந்த அகராதி வேலையில், இவருக்குத் துணையாகச் சில காலம், பர்சிவல் (Rev. P. Percival) இருந்தார். இராமாநுசக் கவிராயர், விசாகப்பெருமாள் ஐயர், வீராசாமிச் செட்டியார் முதலிய சிறந்த தமிழ்ப் புலவர்கள், சென்னையில், இவ்வேலையில் கலந்துகொண்டிருந்தார்கள். இது, காலத்துக் கேற்பப் பதிக்கப்பெறின், எக்காலத்தும், தமிழ் மொழிக்கு ஒரு

சிறந்த அகராதியாகத் திகழும் சிறப்புடையது என்பதை எவரும் மறுக்கார்.

மற்றொரு சிறந்த நூல், பர்னல் (Dr. A.C. Burnell) என்பவருடைய 'தென் இந்திய பண்டைய எழுத்துக்கள்' (Elements of South Indian Palaeography) என்னும் அரிய நூல்; இந்நூல், நாம் பேசும் காலத்திலேயே எழுதப்பெற்றிருந்தும் 1878-ஆம் ஆண்டு தான் வெளிவந்தது. தமிழ் எழுத்துக்களின் வரி வடிவை, மிகத் தெளிவாக ஒவ்வொரு நூற்றாண்டிலும் இருந்தவண்ணம், அழகாகக் கட்டியிருந்தார். இதன், முகவுரை ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டிய, தென்னாட்டைப்பற்றிய, பல செய்திகளை வரையறையுடன் குறிப்பிட்டிருந்தது. பர்னல், 1840-ஆம் ஆண்டில் பிறந்தவர்; கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் தேர்ச்சிபெற்று அரசாங்க வேலையை மேற்கொண்டு 1860-ஆம் ஆண்டில் சென்னைக்கு வந்தவர். தென்னாட்டு மொழிகளிலும், பழஞ் செய்திகளிலும், கல்வெட்டு பண்பாடு முதலியவற்றிலும் ஈடுபட்டுப் பல அரிய வேலைகளைச் செய்தார். தஞ்சையிலேயே பல ஆண்டுகள் வேலைபார்த்தார். தஞ்சை சரபோஜி மன்னனின் நூல் நிலையத்திலுள்ள சமஸ்கிருத நூல்களுக்கு இவர் தொகுத்த அட்டவணை, யாவராலும், உலக முழுதும் புகழப்படுகின்றது. பரந்த நூற்பயிற்சியில், நுண்ணிய அறிவில், உள்ளத்தோடு உழைக்கும் தன்மையில், உண்மையைக் காணும் வேட்கையில் எவர்க்கும் எடுத்துக்காட்டாக நின்றார். பல அரிய கட்டுரைகள் எழுதி, தென்னாட்டின் உயர்வை, உலகம் அறியச்செய்தார். ஐந்திரவியாகரணத்தைப்பற்றி ஒரு கட்டுரை எழுதிச்சில இலக்கண நெறிகளைக் காட்டினார். தஞ்சையில் இலக்கணவாசிரியர், மருதமுத்து உபாத்தியாயரிடம் தமிழ் பயின்றார்; இவ்வாசிரியரே, போப் தஞ்சையிலிருந்தபோது, அவருக்குத் தமிழ் பயிற்றியவர். அக்காலத்தில், இலக்கண முறைகளை, இரண்டு வகையாக, ஒருசார் தமிழறிஞர்கள் கருதினார்கள். ஐந்திர முறை ஒன்று, பாணினி முறை மற்றொன்று. தொல்காப்பியம் முன்னையதைச் சார்ந்ததென்றும், நன்னூல் பின்னையதைச் சார்ந்ததென்றும், ஓர் எண்ணம் இவர்களிடம் பரவிவந்தது. சில இலக்கணவாசிரியர் களும் இருவகையாகப் பிரிந்துகொண்டனர். மருதமுத்து உபாத்தி யாயர் முன்னைய பிரிவைச் சேர்ந்தவர். இவ்வகைப் பிரிவு எல்லோ ராலும் கொள்ளப்பட்டதன்று. பர்னலுடைய கருத்துக்களில் ஒன்று,

தென்னாட்டில் தோன்றிய அரிய எண்ணங்களெல்லாம், வட நாட்டை வசப்படுத்திப்புகுந்து, பின்னர் வடநாட்டுக்கருத்துக் களென உலகெங்கும் பரவலாயின என்பது. தமிழ்நாட்டிலுள்ள கோயில்களின் அமைப்பையும் சிற்பச் சிறப்பையும் பார்க்கும் போதெல்லாம் 'கோயில்கள்' இங்கு இருக்கின்றன; ஆனால் இவைகளை அமைக்கும் முறைகளைக் கூறும் நூல் தமிழில் இல்லை; அத்தகைய நூல்கள் சமஸ்கிருதத்திலுள்ளன; ஆனால் அவைகட்கேற்ற கோவில்கள் அங்கில்லை; இலக்கியம் தெற்கே இருக்கின்றது; இலக்கணம் வடக்கே இருக்கின்றது. காரணம் என்ன?' என்று அடிக்கடி கேட்பதுண்டு என, அவரிடம் சில நாட்கள் வேலைபார்த்த என் தந்தையார் சொல்லுவார்கள். தமிழ்ப் பெயர்கள் சமஸ்கிருதப் பெயர்களாக மாற்றப்பெற்ற முறைகளை நான்கு வகையாக இவர், பிரித்துக் காட்டினார். முதலாவது தமிழ்ப் பெயர்களை நேரே சமஸ்கிருதத்தில் மொழி பெயர்ப்பது; மறைக்காடு: இடைமருது, என்பன வேதாரண்யம், மத்யார்ச்சுனம் என மாறியது போல், மொழிபெயர்க்கும்போது பொருளறியாமல், பொருளைப் பிழைபடக் கொண்டு மொழி பெயர்த்தல்; அரிசில்கிழான் வெட்டிய ஆறு அரிசாலாறு என்பதை அறியாமல் அரிசில் என்பதை அரிசி எனப் பிழைப்படக் கொண்டு அர்ஜீலநதி என மொழிபெயர்த்தல்; வெட்டாறு என்பதை வட்டாறு எனக்கொண்டு விர்த்த நதி என்றல்; விண்ணன் வெட்டிய ஆறு விண்ணாறு என்பதறியாது வெண்ணாறு எனக்கொண்டு ஸ்வேத நதி எனல். இரண்டாவது, தொகைபாக வரும் பெயர்களை ஒரு பகுதியை மொழிபெயர்த்து மற்றொரு பகுதியை ஒலிபெயர்த்தல்: அண்ணாமலை என்பதை அர்ணா-அசலம் எனல். மூன்றாவது, புராணங்களில் வரும் பெயர்களுக்கேற்ப ஒலிகளை மாற்றி வடமொழிக் கதைகளோடு தொடர்புபடுத்தல்: திட்டை என்ற ஒலியை வசிஷ்ட என மாற்றல்; இராஜராஜபுரம் என்பதின் மரூவாகிய தாராபுரம் என்பதை தாருகன் என்னும் அசுரனோடு இணைத்து தாராசுரம் எனல். நான்காவது இயல்பாகவுள்ள பெயரோடோ, அல்லது அங்குள்ள தெய்வப் பெயரோடோ, ஸ்தலம், புரம் என்பவற்றைச் சேர்த்தல். பல பழஞ் செய்தி களையும் சொற்களையும் தெரிந்துகொள்ளுவதற்குப் பயன் பெறுவதான ஹாப்ஸன் ஜாப்ஸன் (Hobson Jobson) என்ற ஒரு நூலை யூல் (H. Yule) என்பவருடன் சேர்ந்து தொகுத்தார். அந்நூல் 1886-ஆம் ஆண்டில்தான் வெளிவந்தது. 'ஹாப்ஸன் ஜாப்ஸன்' என்னும்

சொல், இப்போது மொழிநூல் குறியீடுகளில் ஒன்றாய் ஒலிச்சிதைவின் ஒருமுறையைக் குறிப்பிடுகின்றது. இவர் இளமையிலே, தமது, நாற்பத்திரண்டாவது வயதில் காலமாகிவிட்டார். இவர் தொகுத்திருந்த சுவடிகளையெல்லாம் இந்தியா ஆபீஸ் நூல் நிலையத்தில் சேர்ந்துவிட்டார். எல்லீசும், பர்னலும் சில ஆண்டுகள் உயிரோடு இருந்திருப்பார்களானால் தமிழும் தமிழ்நாட்டு வரலாறும் இன்னும் பல விளக்கம் அடைந்திருக்கும்.

அக்காலத்தில், அரசாங்கத்தாரின் கல்விப் பகுதியார் தமிழ் வளர்ச்சிக்குச் செய்ததாகச் சிறப்பித்துக் கூறக்கூடியது ஒன்றுமில்லை. சென்னை, நாட்டுமொழிப் புத்தகச் சங்கத்தாரால், *1870*-ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று, இருபது ஆண்டுகள் தொடர்ந்து நடந்துவந்த 'ஜநவிநோதினி' என்னும் திங்கள் வெளியீடு சிறப்பாகக் கருதத் தக்கது; அதில் வெளிவந்த கட்டுரைகளும், படங்களும் மக்கள் அறிவை வளர்ப்பதற்குப் பெரிதும் பயன்படுவன. உரைநடை, சிறந்ததெனக் கூறக்கூடியதன்று எனினும், தெளிவுடையது. தமிழ் வழியாகவே பலவகைப்பட்ட அறிவையும் அடையக்கூடும் என்பதற்கு, அது ஓர் எடுத்துக்காட்டு எனக் கொள்ளலாம். அக்கால உரைநடை எவ்வாறிருந்ததென்பதற்கு, ''அப்பாடசாலையில் *1841*-ஔ பிரவேசித்து, மாதவராயர் அப்போது அப்பாடசாலைக்கு அத்தியக்ஷராயிருந்த மேஸ்தர் பவல் துரையவர்களுடைய கற்பனையினால் மிகத் தேர்ச்சிபெற்று, அதில் முதல்தரமாய் தேறினவர்களுள் தாமும் ஒருவராகி, அங்கு அதற்கேற்ற வெகுமதியும் பெற்றார். அவர் அப்பாடசாலையை விட்டு நீங்கும்பொழுது பவல்துறை அவர்க்கு யோக்கியதா பத்திரிகையொன்று அளித்தார். அதைக்கேட்டால் அனைவரும் ஆனந்திக்கும்படியாகும். அதன் கருத்தாவது: 'த. மாதவராயருக்கு உள்ள கல்வித்திறம் இந்தியாவில் அநேகமாய் எந்த வாலிபர்க்கும் இல்லையென்னலாம். கணித சாஸ்திரத்திலும் பவுதிக சாஸ்திரங்களிலும் இவருடைய சாமர்த்தியம் மிகவும் அதிகமானது. இந்த விஷயங்களில் இவர்க்குள்ள சாமர்த்தியம் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையிலுங் கூட இவர்க்கு ஒரு கவுரவமான பதம் கிடைப்பிக்கத்தக்கதாய் அவ்வளவு சிறந்திருக்கின்றது.......... மேலும் மாதவராயருடைய குணங்களும் நடக்கைகளும் பெருந்தன்மையுடையவையாக வேயிருக்கின்றன. ஆதலின் இனி இவர்க்கு இவ்வுலகில் இதற்கேற்ற சிறப்பு உண்டாகுமென நான் உறுதியாக

நம்புகிறேன்'' என்னும் சொற்றொடர்களைப் பார்க்கலாம். எத்தனையோ பழைய நூல்களை மறுமுறையும் பதிப்பிக்கும் இக்காலத்தில் இந்த 'ஜநவிநோதினி' இருபது புத்தகங்களும் வருமாயின், தமிழ் மக்களுக்கு ஒரு நல்விருந்தாகும்.

அக்காலம், மரபாக வந்த தமிழ்க் கல்வியின் மாலைக் காலம் என்றே சொல்லலாம். பழமையான முறையைக் காப்பாற்றிப் பரவச் செய்துகொண்டிருந்தது ஒரே ஒரு பல்கலைக் கழகந்தான். இக் கழகத்திற் பயின்ற மாணவர்களே சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதி யிலும் பள்ளிக் கூடங்களிலும், கல்லூரிகளிலும் தமிழாசிரியராக வும், நாட்டுப்புறங்களில் தனிப்பட நின்று தமிழ் பயிற்றுவோ ராகவும், தமிழையும் தமிழ்ப் பண்பையும் உண்மை நிலையில் நிலைக்கச் செய்துகொண்டிருந்தார்கள். எந்த இடத்தில் தமிழ் பயின்றவர்களாயினும், இக்கல்லூரியின் நிழலில் சில நாள் தங்கியபின்னர்தான் தகுதியுடையவர்களாகத் தங்களை எண்ணிக் கொண்டார்கள். உலகமும் அவ்வாறே கருதியது. அப்பல்கலைக் கழகந்தாம் ஒரே இடத்தில் ஊன்றியதாகவில்லாது நாடெங்கும் உலவுவதாகவிருந்தது; உயிரற்றதாகவில்லாது உயிருடையதாக விருந்தது. அது எது? அதுதான் மகா வித்வான் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை. அவருடைய மாணாக்கர்களே சென்னை மாநிலக் கல்லூரி யில், பயிற்சிக் கல்லூரியில், குடந்தைக் கல்லூரியில், தஞ்சைக் கல்லூரியில், திருவனந்தபுரம் கல்லூரியில், இன்னும் பல கல்விச் சாலைகளில், தமிழாசிரியர்களாகவிருந்த, புரசை பொன்னம்பல முதலியார், சுப்பராயச் செட்டியார், தியாகராசச் செட்டியார், ஐயாசாமிப் பிள்ளை, சாமிநாத தேசிகர், முதலிய பெரும்புலவர் கள். பிள்ளையவர்களது கூட்டம் என்றால் தமிழ்ப்புலமை மட்டுமன்று, தமிழ்ப் பண்பும் நிறைந்த கூட்டம். சீலத்தால், நோன் பால், செறிவால், அறிவால் சிறந்த கூட்டம். ஆசிரியர்களுக்கு மாணாக்கர்களிடமிருந்த தாயனைய அன்பும், மாணாக்கர்களுக்கு ஆசிரியர்களிடமிருந்த நன்றியும் வணக்கமுங்கொண்ட பணிந்த அன்பும், உடன் பயின்ற மாணவர்கள் ஒருவருக்கொருவரிடத் திலுள்ள உள்ளங்கலந்த உலையா அன்பும், அப்பேரறிஞர் கூட்டத்தில் நிறைந்திருந்தது. இந்தக் கூட்டத்தால், தமிழ் கற்றவர்களுக்கு நாட்டிலிருந்த நன்மதிப்பு நிலைபெற்றிருந்தது. மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் நாம் இறைவனிடம் ஏதேனும்

ஒன்று பெறவேண்டுவோமானால், நம் வித்வான் தாண்டவராயத் தம்பிரானை மீண்டும் பெறவேண்டுவோம்' எனக் கூறினார் என்றால் தமிழ்ப் பண்பு எத்தகையது? அக்காலத்தில், குடந்தைக் கல்லூரியில் தியாகராயச் செட்டியாரிடம் தமிழ் பயின்ற, தஞ்சை ராவ்பகதூர் சீநிவாசம் பிள்ளை 'உலகத்தில் பலவாறு அலைப் புண்டு வறண்ட உள்ளம் குளிர்வதற்கு, எங்கள் ஐயா (தியாகராய செட்டியார்)வின் உருவத்தையும் உரையையும் நினைப்பேன்' என்பார். சீநிவாசம் பிள்ளையும், குடந்தை திவான் பகதூர் இராமாநுஜாச்சாரியரும், செட்டியாரவர்களைப்பற்றியும் அவருடைய தமிழ் வகுப்பைப்பற்றியும் ஒரு நாள் பேசிக் கொண்டிருந்த மகிழ்ச்சியை இன்று எண்ணும் உள்ளமும் மகிழ்கின்றது.

தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலி னினிதாயிற் காண்பா மகல்வானத்து
உம்ப ருறைவார் பதி.

என்ற வேளாண் வேதம் பொய்யாத காலம் அது. 1876ஆம் ஆண்டு மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தம் மாணவர் கூட்டத்தைத் தமிழ்ப் பணியைத் தொடர்ந்தாற்றுமாறு நல் வாழ்வில் வைத்து மறைந்தார்.

அக்காலம், இலக்கணத்துறையில், மாணவர்களுக்கான இலக்கண நூல்கள் வெளிவந்தனவேயன்றி, சிறப்புடையதாகக் கூறத்தக்க தொன்றுமில்லை. உறையூர் முத்துவீர உபாத்தியாயரும், திருவாவடுதுறையைச் சேர்ந்த சாமிநாதக் கவிராயரும் பழைய முறையில் எழுதிக்கொண்டிருந்தார்கள். முன்னையது சூத்திரங் களாகவுள்ளது; பின்னையது விருத்தயாப்பில் அமைந்தது. முத்து வீரியம் வெளிவந்துள்ளது; சாமிநாதம் முழுதும் வெளிவர வில்லை; அண்மையில் வரலாம். (தஞ்சை சரஸ்வதிமால் நூல் நிலையத்தில், வித்வான் கோவிந்தசாமிப் பிள்ளை ஏடுகளைப் பார்த்து வருகின்றார்.)

கால்டுவெல், கிறிஸ்தவசமயத்துக்குச் செய்த அளப்பருந் தொண்டினை வியந்து போற்றிய அச்சமயத் தலைவர்களும், சங்கங்களும் இவரைப்பாராட்ட வேண்டி, இவர் நிலையை

'போதகர் தலைவராக' (Bishop) உயர்த்தினார்கள். சீலத்தால், அத்தலைமைக்குரிய பண்புகளெல்லாம் நிறைந்த இவரைக் கோலத்தாலும் அணி செய்தார்கள். 1877ஆம் ஆண்டு, மார்ச்சு மாதம், கல்கத்தாவில், போதகர் தலைவர் பலரும் பெருங் கோயிலில் கூடிய ஒரு சமயக்கூட்டத்தில், இந்தியாவின் போதகர் மாத்தலைவரிடம், போதகர்தலைவர் என்ற பட்டமும், அதற்குரிய ஆடை அணிகலன் முதலிய சின்னங்களும் பெற்றுத் திரும்பினார். இவருடைய சமயப்பணியை வியந்த தர்ஹாம் (Durham) பல்கலைக் கழகம் இவருக்கு தெய்வநூலறிஞர்' (D.D.) என்னும் பட்டம் கொடுத்துப் பாராட்டியது. அந்த ஆண்டு, தமிழகத்தை ஒரு கொடிய பஞ்சம் அலைத்தது; அதன் கொடுமையைக் குறைக்க அரசாங் கத்தார் மேற்கொண்ட நற்பணியில் இவரும் கலந்து உழைத்து மக்களது அன்பை மேலும் பெற்று மகிழ்ந்தார்.

இவர், பொதுவாகக் கல்விக்கும், சிறப்பாகத் தென்மொழி களுக்கும் செய்துள்ள சிறந்த தொண்டை உளங்கொண்ட சென்னைப் பல்கலைக்கழகத்தார், அக்கழகத்தின் இருபத்திரண்டா வது ஆண்டு விழாவில், பட்டம்பெறும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்குவதற்குத் தேர்ந்தெடுத்தார்கள். 1879ஆம் ஆண்டு நடைபெற்ற அவ்விழாவில் அறிவுடையோர் ஒவ்வொருவரும் தங்கள் நாட்டின் பழைய நிலையை நன்குணரவேண்டுமென்பதை யும், பலமொழிகளையும் பயின்று மொழியியல் உணர்வதற்கு, திராவிட மொழிகளுக்குத் தாயகமாய், பதினான்கு பெருமொழி களும் முப்பது குறுமொழிகளும் பயிலும் சென்னைப் பல்கலைக் கழக எல்லையிலுள்ள இடங்களிலும் சிறந்ததோர் இடம் எங்கும் இல்லை என்றும்; இத்திராவிடமொழிகளுடன், ஆரியம், ஆங்கிலம், இந்துஸ்தானி மொழிகளும் இங்கு இயல்பாகவே பயிலக்கிடக்கின்றனவென்றும், இலக்கண அறிவின் நுண்மையில் இந்தியரிலும் சிறந்தார் பண்டும் இன்றும் என்றும் இலர் என்றும் இவர்களுடைய அறிவின் நுட்பத்திற்கு இலக்கண அறிவும், உள்ளத்தின் நேரியவளர்ச்சிக்கு பண்பமைந்த மொழிகளுமே அடிப்படையாக விருக்கின்றன வென்றும், பல மொழிகள்ள ஒத்துப்பார்த்து அறிவியல் வரையறைகளுடன் மொழியைப் பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், பல அரிய கருத்துக்களும், கொண்டொழுக வேண்டிய நெறிகளும் பொதிந்த ஒரு பேருரையை நிகழ்த்தினார். இப்பேருரை நிகழ்

வதற்குச் சில திங்களுக்கு முன்னர், மச்சேறித் தூங்கி மங்கிய பல நூல்களையும் அச்சேறுவித்தவரும், எளிய நூல்களாலும், சொற் பொழிவுகளாலும், சைவசமயத்தை மக்கள் உணர்ந்து பின்பற்ற அரிய பணிகள் செய்தவரும் சைவத் தொண்டரும் தமிழ்த் தொண்டருமாய்த் திகழ்ந்த ஆறுமுக நாவலர், ஏட்டுச்சுவடிகளை அச்சேற்றும் பொறுப்பை சில காலம், சென்னை மாநிலக் கல்லூரியின் தமிழாசிரியராகவிருந்தவரும், சென்னைப் பல்கலைக் கழகத் தேர்வுகள் தோன்றிய முதலாண்டிலேயே கலைமாணிப் (B.A.) பட்டம் பெற்றவரும், அப்போது அரசாங்க அலுவலி லிருந்தவருமான தமிழ்ப்பேரறிஞர் சி.வை. தாமோதரம் பிள்ளை யிடம் ஒப்புவித்துவிட்டு, தமிழகம்,

**“வேதம்வலி குன்றியது மேதகுசி வாகமவ் தங்கள்வலி குன்றினவடற்**
**சூதன்மொழி மூவறுபு ராணம்வலி குன்றியது சொல்லரிய சைவசமயப்**
**போதம்வலி குன்றியது பொற்பொதிய மாமுனிபு கன்றமொழி குன்றியதுநம்**
**நாதனிலை ஞாலமிசை நாடறிய ஆறுமுக நாவலரடைந்த பொழுதே”**

என இரங்கி ஏங்க மறைந்தார்.

கால்டுவெல், முப்பத்துமூன்று ஆண்டுகளுக்கு முன்னர், கால்கோள் விழா எடுத்த திருக்கோயில், *1880*-ஆம் ஆண்டில், எல்லா உறுப்புக்களும் இனிது அமைந்து முற்றுப்பெற்றது. இக்கோயில் கட்டுவதற்குப் பொருளுதவி செய்தாரையும், பணி செய்தாரையும் இறைவன் அருள் பெறுமாறு வாழ்த்தி, இப்பெருங் கோயிலின் ஒலி மணி பல்லாயிரம் மக்களை அழைக்க, ஆண்ட வனுக்கு உரிமையாக்கினார். இத்திருக்கோயில், செம்மணற் பாலையில், இவருடைய உலையா ஊக்கத்தையும் உண்மைப் பற்றையும் காட்டும் வெற்றித் தூணம்போல் நின்று பல்லாயிரம் மக்கள் ஆண்டவனை வழிபட்டு அருள்பெறுதற்கேற்ற நிலைய மாகத் திகழ்கின்றது.

*1881*-ஆம் ஆண்டில், இவர், நீண்ட நாட்களாகச் சேர்த்தும் ஆய்ந்தும் வைத்திருந்த பழைய வரலாற்றுச் செய்திகளை யெல்லாம் வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தது. அரசாங்க ஆதர வில், ‘திருநெல்வேலி மாவட்ட வரலாறு’ என்று ஒரு வரலாற்று நூல் வெளியிட்டார். அவ்வரலாற்றிலும் ஏறக்குறைய இரண்டா

யிரம் ஆண்டுகளில் நிகழ்ந்தனவற்றை ஒருவாறு தொகுத்துக் கூறினார். ஸ்ட்றாபோ (Strabo) என்னும் வரலாற்றாசிரியர், கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் பேசுகிற, அகஸ்த்தஸ் சக்ரவர்த்தி (Emperor Augustus)யிடம் வந்த இந்திய அரசாங்கத் தூதர்கள் பாண்டியர்களால் அனுப்பப்பட்டவர்களே என்பதையும், அலக்சாந்தர் என்னும் பேரரசனால் (Alexander, the Great) தொடங்கப்பெற்ற இந்தியத் தொடர்பு வடநாட்டு மன்னர்களால் கைவிடப்பெற்ற பிற்காலத்தில், மேல்நாட்டுத் தொடர்பின் பயனை உணர்ந்து தொடர்ந்து காப்பாற்றியவர்கள் பாண்டியர்களே என்பதையும் அக்காலத்திய முத்து வாணிபத்தையும் நன்கு விளக்கி யுள்ளார். பழங்காயலுக்கு அருகே கிடைத்த பொற்காசுகள், பதினான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டவை என்பதையும், அவற்றுள் ஆரகன் மன்னன் பீட்டர் (Peter Aragon) என்பவனது காசுகள் இருப்பதையும், காயற்பட்டினத்து அக்காலத்து நடந்த வாணிகத்தின் சிறப்பையும், விளக்கமாக எழுதியுள்ளார். இந்த நூலை எழுதும்போது தாம் ஒரு தமிழனாகவே உணர்ச்சி கொண்டு எழுதுகிறார் என்பதுமட்டுமன்று தாம் ஒரு நெல்லை நாட்டவ ராகவே எழுதுகிறார். சிறந்த தமிழ்ப் புலவர்களை எல்லாம் நெல்லை நாட்டவராகவே கொள்ள ஆசைப்படுகிறார். வீரமா முனிவரை நெல்லை நாட்டுக்கு உரியவராகக் கொள்வதற்கு, இவர் மன்றாடுவதைப் பார்க்கும்போது நமக்கே மனம் இரங்குகிறது; 'நெல்லை நாட்டில்தான் வீரமாமுனிவர் முதன்முதல் ஐந்தாண்டு கள், ஏன்? ஏழாண்டுகள் தங்கித் தமிழ் பயின்றார், ஆகையால், அவரைத் தமராகக் கொள்ள நெல்லை நாட்டுக்கு உரிமையுண்டு' என்கிறார். எவ்வளவு அன்பிருப்பினும், உண்மையிலேயே உறைத்த உள்ளமானபடியால், என்ன செய்வது, அவர், ஒரு செய்யுளோ, உரைநடையோ, நெல்லையிலிருந்து எழுத வில்லையே?' என்று கூறி விட்டுவிடுகின்றார். வரலாறுகளை நன்கு ஆய்ந்து, ஒரு முடிவுகட்டும் திட்பத்தை, மதுரை நாயக்கர்கள் ஆட்சியைப்பற்றி இவர் கூறும், ''நன்மை எது தீமை எது என்று, இப்போதைய ஐரோப்பிய வரையறைப்படி சீர்தூக்கினால் மட்டு மன்று, இந்துக்களுடையவும் மகமதியர்களுடையவுமான நெறி நூல்களில் கண்டபடியும், நாயக்கர்கள், அரசர்கள் என்ற தங்கள் கடமையிலிருந்து மிகவும் விலகி வீழ்ந்தவர்களாகவேதான் முடிவு செய்யவேண்டும். உள்ளத்தில் ஒரு நோக்கத்தை வைத்துக்

கொண்டு கோயில்களுக்கும் குருக்கள்களுக்கும் ஆரவாரமான கொடையைக் கொடுத்து, அதன் மூலமாக, பிராமணர்களுடைய வும் கவிராயர்களுடையவும் போலிப் புகழ்மொழிகளைப் பெற்று, திரளான மக்களைத் தங்கள் நெறிதவறிய ஆட்சியில் பொறுமை யுடன் தங்கும் வண்ணம் வைத்துக் கொண்டதேயல்லாமல், இவர்களுடைய ஆட்சி, மானமிழந்த காமக் களியாட்டமும், துரோகமும், கொள்ளையும், கொடுமையும், கொலையும், குழப்பமும் கொண்டபட்டியலைத் தவிர வேறொன்றுமில்லை'' என்னும் சொற்றொடர்களால் தெரியலாம்.

இது சிறந்த நூலாயினும், வரலாற்று உண்மைகள் பிற்கால ஆராய்ச்சிகளால் விளங்கியுள்ளமையின், சில செய்திகளை இதில் கண்டபடியே கொள்ளுவதற்கில்லை. இந்நூல் வெங்காசாமி ராயர், நெல்ஸன் (Nelson), லோகன் (Logan), என்னும் அறிஞர் தஞ்சை, மதுரை, மலையாளம் மாவட்டங்களைப்பற்றி எழுதிய வரலாற் றுக் கைச்சுவடி வரிசையில் வைக்கத் தகுந்தது.

இதுகாறும் வடநாட்டுப் பழம் பொருளாராய்ச்சியிலேயே ஈடுபட்டிருந்த இந்திய அரசாங்கத்தார், இந்த ஆண்டு *(1881)* தென்னாட்டையும் நோக்கத் தொடங்கினர்.இந்தியாவின் மேற்குப் பகுதிக்குப் பழம்பொருளாராய்ச்சித் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த பர்ஜஸ் (James Burgess) என்பவருடைய பார்வை யில் தென் இந்தியாவும் ஒப்புவிக்கப்பட்டது. இவருக்குத் தமிழ்ப் பகுதிக்குத் துணையாகவிருந்தவர், இராமநாதபுரம் அரசவைப் புலவர், அஷ்டாவதானம் முத்துசாமி ஐயங்காராவார்; இவர், தமிழ்ப் பேராசிரியர் மு. இராகவையங்காருக்குத் தந்தையும், மகாவித்வான், ரா.இராகவையங்காருக்கு அம்மானும் ஆசிரியரு மாவார். 1886-ஆம் ஆண்டு, பர்ஜஸ் இந்திய பழம் பொருளா ராய்ச்சிப் பகுதிக்குத் தலைவராக உயர்த்தப்பெற்றார்.

ஆங்கிலக் கல்வியைப் பரப்பவேண்டி, சாயர்புரத்தில் போப்பையர் நிறுவிய கல்லூரியை, தூத்துக்குடிக்கு மாற்றி மேல்வகுப்புப் பாடங்களைக் கற்பிக்க ஏற்பாடு செய்யப் பெற்றது. கால்டுவெலுடைய முயற்சியாலும், செல்வாக்கினாலும் அவர் பெயரால் தொடங்கப்பெற்ற இக்கல்வி நிலையத்துக்கு, கிறிஸ்தவ

சமயசங்கங்களிலிருந்து பெரும்பொருள் நன்கொடையாக வந்ததெனினும், இக்கல்வி நிலையம், கல்லூரியாக நில்லாது, 'கால்டுவெல் உயர்நிலைப் பள்ளி'யாகவே நின்றுவிட்டது.

முதுமை அணுகவும், கொடுமையான வெப்பத்தைத் தாங்க வியலாமல், ஆறுதலாக கொடைக்கானலில் தங்கத் தொடங்கினார். அங்கு ஆங்கில சிறிஸ்தவக்கோயில் ஒன்று இல்லாத குறையைத் தீர்க்க எண்ணினார்; அவ்விடத்திலேயே நிலையாகத் தங்கியிருந்த லெவிஞ்ச் (Vere Henry Levinge) என்பவர், இந்த முயற்சியில் இவருக்குப் பெரிதும் துணையாக விருந்தார். லெவிஞ்ச் 1860 முதல் 1867 வரை மதுரை மாவட்டத் தண்டற்றலைவராகவிருந்து ஓய்வு பெற்ற பின்னர் கொடைக்கானலிலேயே நிலையாகத் தங்கியவர்; அவ்வூர் சிறந்து முன்னேறுவதற்குப் பலவகையிலும் தொண்டாற்றியவர். 1883ஆம் ஆண்டு, கோவில் கட்டுவதற்காக நேபோ (Mount Nebo) என்னும் குன்றில் இடம் அடமானம் செய்யப் பெற்றது.

1883ஆம்ஆண்டு, மூன்றாம் முறை, தம் தாய்நாட்டிற்குச் சென்றார்; தமிழ்நாடே தமக்குத் தாய்நாடாகிவிட்டபடியால், ஆங்கில நாட்டிலேயே தங்கும்படி அவருடைய அன்பர்களெல்லாம் வேண்டியும் இயையாமல், எந்த மக்களுக்காக நான் இவ்வளவு நாள் பணியாற்றினேனோ அந்த மக்களிடையே விழியாத் துயில் கொள்ள விரும்புகிறேன் என்று சொல்லிவிட்டு 1884-ஆம் ஆண்டு, தமிழ் நாட்டுக்குத் திரும்பிவிட்டார். தாம் கொடைக்கானலில் கட்ட எண்ணிய கோயிலை, 1886ஆம் ஆண்டில் கட்டி முடித்துக் கர்த்தனுக்கு உரிமையாக்கித் தாமும் பிறரும் வழிபடுவதற்கு அந்த மலையில் ஓர் இடத்தை அமைத்து விட்டார். இந்தக் காலவெல்லையில், தமிழ்ச் செய்தியாகக் குறிப்பிடத்தக்கன, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில், 1885-ம் ஆண்டில் தமிழ்ப் பேராசிரியராக, போப் ஐயர் நியமனம் பெற்றமையும், அவருடைய திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு எல்லாக் குறிப்புக்களுடனும் முன்னைய மொழிபெயர்ப்புகளுடனும் வெளிவந்தமையுமேயாகும். பிற்காலத்தில் தமிழ்ப்பதிப்பாசிரியர்களின் தலைமணியாக விளங்கிய சாமிநாதய்யர் சிந்தாமணியைப் பதிப்பித்துக் கொண்டிருந்ததும் இக்காலமே; அப்பதிப்பு 1887ஆம் ஆண்டு வெளிவந்தது. தாமோதரம் பிள்ளை பல சிறந்த நூல்களைப்

பதிப்பித்துக் கொண்டிருந்தார். அரசாங்கத்தார், தென்மொழிகளிலுள்ள கல்வெட்டுக்களை ஆராய்வதற்கென ஒருவரை 1886-ஆம் ஆண்டு நியமித்தமையும் குறிப்பிடத் தக்கதாகும்.

மூப்பாலும், அரை நூற்றாண்டுக்கு மேல் வெப்பமிகுந்த நாட்டில் விடாது உழைத்தமையாலும், இவருடைய வன்மைமிக்க உடலும் தளர்ச்சியடைந்தது. தன்னுடைய போதகர் தலைவர் என்ற நிலையிலுள்ள சமயத்துறை கடமைகளை ஆற்றுவதற்குத் தக்க வலு இருக்குமோ என்று ஐயுற்று, கோடைக்கானலிடையே தங்கி, தாமும் கடவுளும் தனித்து நிற்கும் நிலையில் நின்று, ஆண்டவனை வழிபட எண்ணினார்; கோடைக்கானலிலேயே தங்கினார்; அமைதியாகத் தெய்வப்பணியை செய்து வந்தார். இவ்வாறு அமைதியாகத் தம் முதுமையைக் கழித்துவரும் நாட்களில் (1891) ஒரு நாள் குளிரால் பிணிப்புண்டு, சிலநாள் நோய்வாய்ப்பட்டு, மனைவியும் மைந்தனும் அருகிருக்க இவ்வுலக வாழ்வை விட்டு விலகினார். இவருடைய உடலத்தை இவர் தகுதிக்கேற்ற சமயச் சடங்குகளுடன் இடையன்குடிக்குக் கொண்டு சென்று அடக்கம் செய்தார்கள். பலவழியாலும் மக்களுக்கு நன்மை செய்துவந்த இவருடைய பிரிவு எல்லாமக்களையும் வருத்தியது. 1891-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19-ஆம் நாள் வெளிவந்த, இலண்டன் டைம்ஸ் (The London Times) என்ற ஆங்கில, நாள் வெளியீட்டில்,

'திருநெல்வேலியின் போதகர் தலைவர், வணக்கஞ்சால் அறிஞர் கால்டுவெலின் பிரிவால், திருநெல்வேலியில் கிறிஸ்தவ சமயம் போற்றுதற்குரிய சிறந்த தந்தையருள் ஒருவரை இழக்கின்றது; இந்தியக் கல்வி, அதன் முதற்படி தொண்டருள் ஒருவரை இழக்கின்றது. கால்டுவெல், ஒதுங்கி நிற்கும் இயல்புடையவராக விருந்தும், அரை நூற்றாண்டுக்கு மேலாக, கிறிஸ்தவ சமயப் பணியின் தலைவர், இயக்கும் உயர்நிலை, என்பதோடு மட்டுமல்லாது தம்முடைய தனிப்பட்ட அறிவுத் துறையில் இணையற்ற புலவர் என்றும், இந்தியாவிலுள்ள தம் நாட்டவரிடத்தே முதன்மைப் பதவியை அடைந்து வந்தார். இவருடைய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், இந்தக்காலத்தின் தலைசிறந்த பணிகளில் ஒன்றாய் என்றும் நிலைநிற்கும். ஆனால், இப்பணியிலும், இவர் தளராது பணியாற்றிய ஏனைய பணிகளையொப்ப, ஒரு சமயத்தொண்டு என்ற உறுதியிலே ஊக்கம் பெற்றுவந்தார்.

இவர், தாம் செய்த இலக்கியப் பணியாகப் பெரிதும் மகிழ்ந்தது, பதினோராண்டுகளாகத் தமிழ் மொழியிலுள்ள விவிலிய நூலைத் திருத்தியதிலும், அப்பணி முற்றிய பின்னர் தமிழிலுள்ள பொது வழிபாட்டு நூலைத் திருத்தியதிலும் தாம் ஈடுபட்டிருந்தமையே யாகும்'' என ஓர் இரங்கற் குறிப்பு வெளிவந்தது.

பிரிட்டிஷ் பேரரசின் முதலமைச்சர், கிளாட்ஸ்ஸன் (Glastone) பேரரசியின் நன்கொடையாக, நூற்றைம்பது பவுன், இவர் மனைவியாருக்கு அளித்துத் தன் இரக்கத்தைத் தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டத்தில், இவருடைய முயற்சி யால், கிறிஸ்தவ சமயம் மிகவும் பரவியது; கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கை நிலையும் வளம் பெற்றது. இவர் பணியாற்றத் தொடங்கிய காலத்தில் ஆறாயிரம் கிறிஸ்தவர்களே இருந்த ஓர் எல்லையில், இவர் பணி முற்றிய காலத்தில் நூறாயிரம் கிறிஸ்த வர்கள் வாழ்ந்தார்கள். ஆறாயிரத்தை நூறாயிரமாகச் செய்வது அருமையினும் அருமையன்றோ? இவர் பணியாற்றத் தொடங்கிய காலத்தில் நாட்டுக் கிறிஸ்தவர்களை, சோற்றுக் கிறிஸ்தவர்கள் என்று அரசாளும் ஆங்கிலர் எள்ளினார்கள்; ஏனையோர், அறியாமையும் பசிப்பிணியும் தோற்றி வைத்த ஒரு புதுமையான 'இழிகுலம்' எனத் தூற்றினர். இவருடைய முயற்சியால், நாட்டுக் கிறிஸ்தவர்களிடையே பரவிய கல்வி, பிற்காலத்தில் அரசாங்கக் கல்வித் தலைவரையும் திடுக்கிடச் செய்தது. 'இந்த கிறிஸ்த வர்களிடையே இதே முறையில் கல்வி வளருமானால், உலக வாழ்க்கையில் தலைமை இடங்களையெல்லாம் தங்களுக்கே உரிமையாகச் செய்துவிடுவார்கள்' என கல்விப் பகுதித் தலைவர் தெளிவாக எழுதினார். இவ்வளவு பெருக்கமும் எதனால்? கால்டு வெலின் அரிய உழைப்பால்!

ஆண்டவனின் உண்மையான ஊழியரா்க நின்று, தாம் பணியாற்றிய கிறிஸ்தவ மக்களின் உடல், உள்ளம், உயிர், வாழ்க்கை எல்லாம் வளம்பெறச் செய்வதே தம் ஒருபெரும் பணியாகக் கொண்டு, தமக்கென வாழாது, நெல்லைநாட்டு கிறிஸ் தவர்களுக்கெனவே வாழ்ந்தார். நலம் மிக்க இல்லங்களும், நேரான தெருக்களும், பள்ளிக்கூடங்களும், மருத்துவ சாலை களும், தெய்வ ஒளி வீசும் பெருங்கோயிலும், இடையன்குடியை

எழில்மிகு சிற்றூராகச் செய்தது இவருடைய பலதிறப்பட்ட தொண்டல்லவா? இத்தகைய உண்மைத் தொண்டரை, இவர் தொண்டால் வளம் பெற்று வாழும் மக்கள் நன்றியுடன் நினைத்துப் போற்றுகின்றார்களா? இவர் பெயராலும் முயற்சியாலும் கல்லூரியாகத் தோற்றப்பெற்ற கல்வி நிலையம், உயர்நிலைப் பள்ளியாகத் தாழ்ந்தல்லவா நிற்கின்றது?

கால்டுவெல், கட்டழகமைந்த உடலும், வனப்பும், எழிலும், தோற்றப்பொலிவும் உடையவர். ஆறு அடிக்குமேல் வளர்ந்தவர்; நூற்றறுபத்தெட்டு பவுன் எடையுள்ளவர். உழைப் பால் உறுதி பெற்ற உடலும் தெய்வப் பணியால் தூய்மைப் பெற்ற உள்ளமும் உடையவர். முதுமையில், இவருடைய வலம்புரி புரையும் வானரை முடியும், மாசற இமைக்கும் மேனியும், செற்றம் நீங்கிய மனமும், கற்றோர் யாவரும் அறியா அறிவும், ஞானம் கொழிக்கும் முக மலர்ச்சியும், கண்டோருள்ளத்திலெல்லாம் கடவுளுணர்ச்சியைப் புகட்டிக் கவின்பெற விளங்கின. ஒரு நாள், இவர், கோவிற் பூங்காவில் உலாவிக்கொண்டிருக்கும்போது, அங்கு கிணற்றில் தண்ணீர் இறைத்துக்கொண்டிருந்த வேலைக் காரன் கால் நழுவி கிணற்றில் விழுந்துவிட்டான்; அருகிலிருந் தோர் கிணற்றின் ஆழத்தைக் கண்டு அஞ்சி நின்றனர்; இவர் ஓடோடியும் வந்து உடனே கிணற்றில் குதித்து, தண்ணீரில் தடுமாறிய வேலைக்காரனைத் தூக்கி எடுத்துக் காப்பாற்றினார். ஒரு நாள், இவரும், இவருடைய விருந்தினராக வந்திருந்த வங்க நாட்டுப்போதகர் தலைவர் காட்டன் என்பவரும் (Bishop Cotton) குமரித் துறையில் நீராடிக் கொண்டிருந்த பொழுது, காட்டன், விரைந்துவந்த ஒரு பேரலையில் அகப்பட்டு நிலை குலை வாராயினர்; உடனே, இவர், அவரைத் தூக்கிவந்து காப்பாற்றினார். இவை இவருடைய உடல் வன்மையையும், பிறர் இடுக்கண் கண்ட விடத்து அஞ்சாது சென்று உதவி செய்யும் ஆண்மையையும் காட்டுகின்றன.

ஓயாது நூல்களைப் படித்தும், பொருள்களையும் நிகழ்ச்சி களையும் கூர்ந்து நோக்கி அவற்றின் உண்மைகளை உணர்ந்தும், அறிவைப் பெருக்கிக் கொண்டே யிருந்தார். பல மொழிகளைப் பயின்றிருந்தார்; பதினெட்டு மொழிகள் இவருக்கு நன்கு தெரியும் என்று இவரோடு நெருங்கிப் பழகியவர்கள் சொல்லுகின்றார்கள்.

உலகில் சிறந்த சமஸ்கிருத அகராதியாகிய சென் பீட்டர்ஸ்பர்க் அகராதியின் (St. Petersburgh Sanskrit Dictionary) பதிப்பாசிரியர், போதலிங்கர் (Otto Bohtlingh) கூறும் ''நாம் செம்மையாகவும் தெளிவாகவும் தெரிந்துகொள்ளாத மொழிகளைப்பற்றி எழுதுவது இடர்ப்பாடு விளைக்கும்'' என்ற அறிவுரையை உறுதியாக உள்ளத்தில் கொண்டிருந்தார். எவ்வளவு படித்தாலும் அவ்வளவையும் மறவாது உள்ளத்தில் வைத்திருக்கும் ஒரு பேராற்றலைத் தேடிக் கொண்டார். காலத்தை வீணாக்காது வேலை செய்யும் இவருடைய வன்மை எவரையும் மருளச் செய்யக் கூடியது; ஒப்பிலக்கணத்தின் முதற் பதிப்பை ஒழுங்குபடுத்திப் பதிப்பித்துக் கொண்டிருந்த இருபத்திரண்டு மாதங்களில், ஆங்கில நாட்டில் பலவேறு இடங்களிலுள்ள இருநூற்றைம்பது போதக வட்டங்களைச் (Parish) சுற்றிப் பார்த்தும், இந்தியாவைப் பற்றியும் இந்தியாவில் நடைபெறும் சமயப் பணியைப் பற்றியும் முந்நூற்றைம்பது விரிவுரைகள் நிகழ்த்தியுமிருக்கின்றாரெனின், இவர் உழைப்பையும் வன்மையையும் என் சொல்லுவது? இவ்வளவு நுணுக்கமாக, காலத்தை வீண் போக்காது அறிவுத்துறையில் பயன்படுத்தும் இயல்புடைய இவர், தம் சமயப் பணிகளைச் செய்யும்போது, தம் சமய மக்களால், எவ்வளவு காலம் வீணாகச் செலவாக நேர்ந்தாலும், பொறுமையுடனும் புன்னகையுடனுமேயிருப்பர். இவருடைய எல்லையிலுள்ள பல வட்டங்களையும் பார்வையிடச் செல்லும் போது, அந்தந்த ஆரவாரங்களையும், கொட்டு முழக்குகளையும், ஒவ்வோர் இடத்திலும் நிறுத்திவைத்து, தீவர்த்திகளோடும் மத்தாப்புக்களோடும் அதிர்வெடிகளோடும், ஊர்வலம் செய்து அழைத்துப்போவதையும், மணிக்கணக்காக, அவரவர்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ளுவதையும், வாழ்த்தி வணங்குவதையும், களியாட்டங்கள் ஆடுவதையும், பாடுவதையும், மிக அமைதியாகவே பார்த்துக் கொண்டிருப்பார். பல நாழிகையாக இவ்வாறு உட்கார்ந்திருப்பதி லுள்ள உடற்றளர்ச்சியையும் காலக் கழிவையும் ஒரு சிறிதும் கருதார். தம் மக்கள் மனம் மகிழவேண்டும் என்ற ஒரே எண்ணத்தையே கொண்டிருப்பார். தளர்ந்த பருவத்திலும் இவர் உடல் வளைந்து நிற்பதில்லை. வரவேற்போருடைய களியாட்டங் களெல்லாம் முடிந்த பின்னர், ஞானத்தூணம் என எழுந்து நின்று ஆசி கூறுவார். அப்போது, இவரது, வெண்நுரையன்ன குஞ்சியும் அணலும், தண்ணளி தயங்கும் திருமுகப்பொலிவும், உண்ணிறை காதலும், பண்ணமர்

மொழியும், 'விண்ணினின்றிழிந்த தேவ நற்றூதனோ இவன்' என, யாவரையும் போற்றச் செய்யும்.

இவருக்கு, எளிய மக்களிடமும் சிறுவர்களிடமும் பழகுவதிலும் அவர்களுடைய, மன நிலையைத் தெரிந்துகொள்வதிலும் மிகுதியும் ஆர்வம் இருந்திருக்கிறது. எங்கே, ஏழை மக்களைக் கண்டாலும், உடனே அவர்களுடன் வேற்றுமையின்றி உள்ளம் கலந்து பேசுபவராகவிருந்திருக்கிறார். திருச்சிராப்பள்ளியில், பொதுநல வேலைத் தலைமைப் பொறிவலாளராகவிருந்த (Engineer) இவருடைய நண்பர் ஒருவருடன் சிலநாள் தங்கியிருந்த போது, கல்லணையில் நடைபெற்றுக்கொண்டிருந்த, பழுது பார்க்கும் வேலை ஒன்றைப் பார்ப்பதற்கு அடிக்கடி வந்துகொண்டிருந்தார். வார முடிவில், கூலியாளர்களுக்குக் கூலி கொடுப்பதற்கான பட்டியலை, அவ்வேலையின் கண்காணிப்பாளர் (Overseer) எழுதியபோது, தானும் ஒன்றைத் தனியாக எழுதினார். மறுநாள் கூலி போடுவதற்குக் கண்காணிப்பாளர் வேலை செய்தவர்களைக் கூப்பிட்டபோது, இவர், அவர்கள் பெயரையெல்லாம் தாம் எழுதிக்கொண்டிருந்தபடியால், தாமே வேலை செய்தோரைக் கூப்பிட்டுக் கூலியைத் தம் கையாலே கொடுக்க விரும்பினார். கண்காணிப்பாளரிடம் ''நீங்கள் தொகையை மட்டில் எண்ணி என்னிடம் கொடுங்கள், நான் ஆள்களைப் பார்த்துக் கொடுத்து விடுகிறேன்'' என்றார். கண்காணிப்பாளர் 'தாங்கள் பெயரைத் தானே குறித்துக்கொண்டீர்கள், அந்தப் பெயருடையவன் எவன் என்பது தங்களுக்குத் தெரியாதே, ஆகையால் தாங்கள் சிரமப்பட வேண்டாம்' என்றார். இவர் 'எனக்கு ஒவ்வொருவரையும் அடையாளம் தெரியும், வேண்டுமானால் சோதித்துக்கொள்ளலாம்' என்றார். கண்காணிப்பாளர் இவரை சோதிப்பதற்காகவே, இவர் ஒருவன் பெயரைக் கூப்பிட்டபோது மற்றொருவனைப் போய் நிற்கும்படி செய்துவிட்டார். உடனே இவர் 'அந்தப் பெயருடையவன் இவன் அல்லன்' என்று சொல்லி, கூட்டத்திலிருந்த அந்தப் பெயருடையவனைக் குறிப்பிட்டுக் கையைக் காட்டினார். ஒரு நாளில், எவ்வாறு இவ்வளவு தெளிவாகத் தெரிந்துகொண்டார் என்று எல்லோரும் வியந்தார்கள். இவர், 'வியப்பு ஒன்றுமில்லை' எனச் சொல்லி தன் பட்டியலைக் காண்பித்தார்; அந்தப் பட்டியலில் ஒவ்வொரு பெயருக்கும் பக்கத்தில் அவ்வப் பெயருடையவருடைய உருவத்தையும்

(நெஞ்சளவில்) ஓவியம் வரைந்திருந்தார். இவருடைய நண்பர், இவ்வளவு விரைவில் எவ்வாறு ஓவியங்களை எழுதவியன்றது என்று கேட்டபொழுது, பெயர்களை எழுத்தால் எழுதுவதைவிட உருவத்தை ஓவியத்தால் குறித்துக்கொள்ளுவது ஒன்றும் கடினமானதன்று எனக் கூறினார். உடனிருந்த ஆங்கில நண்பர்கள், இத்தகைய ஓவியத் திறன் இப்பக்கங்களில் எவர்க்கும் இல்லை எனப் புகழ்ந்தபோது, உலகம் புகழத்தக்க ஓவியத் திறமை திருச்சிராப்பள்ளியிலேயே ஏசு சங்கத் தொண்டருள் ஒரு பிரஞ்சுக்காரரிடம் இருப்பதாகக் கூறினார். இவர் எழுதிய ஓவியக் குறிப்புக்களைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்த, அந்த கண்காணிப்பாளர் தம்பியைப் பார்த்து, அவர் உருவத்தையும் ஒரு துண்டுத் தாளில் வரைந்து கொடுத்து, 'நீ இப்படி எழுதவியலுமா?' எனக் கேட்டாராம். 'இயலும்' என்று விடையளித்த சிறுவரை வியந்து 'என்னைப்போல் ஒன்று எழுது' எனச் சொல்ல, அச்சிறுவரும் முயன்று ஒன்று வரைந்து காட்டினார்; அதைக் கண்டு மகிழ்ந்து ''நன்றாக எழுதிவிட்டாய்; இப்போது பயமில்லை; எனக்குக் கல்யாணம் ஆவதற்குமுன் உன்னைக்கொண்டு என் உருவத்தை எழுதச்சொல்லி வெளியிட்டிருந்தேனானால் ஒருத்தியும் என்னை மணந்துகொள்ளத் துணிந்திருக்கமாட்டாள்'' என்று நகைத்து, எல்லோரிடமும் காட்டினார், பின்னர், அச்சிறுவருக்கு ஒரு சிறு ஆங்கில நூலை (Spelling book Superseded) பரிசளித்தார்.★ அப்போது மிகச் சிறிய கடிகாரம் ஒன்று இவருடைய கைவிரல் மோதிரத்தில் பதித்து வைத்திருந்தார்.

சுகாத்லந்த் நாட்டினராகிய கால்டுவெல், அயர்லாந்தில் பிறந்தார்; ஆங்கிலத்தில் பயின்றார்; எபிரேயர்(Hebrews) சமயமும், கிரேக்கர்(Greeks) கலையும், ரோமவர்(Romans) நெறிமுறைகளும், பிற்கால (Modern) அறிவியலும் ஒன்றிக் கலந்து செழித்த ஒரு பண்பாட்டில் வளர்ந்தார். நிலையானது எது, நிலையாதது எது என்பதை, இளமையிலேயே, திருவருள் உணர்த்த ஐயத்தினின்றும் தெளிந்தார். வையகத்தினும் வானகத்தை இனிதாகவும் நணியதாகவும் கண்டார்; பிறவியின் பயன் அறவன் அடிக்கு ஆட்செய்வதே

---

★ இச்செய்தியைத் தெரிவித்தவர்கள், மேலே குறிப்பிட்டுள்ள கண்காணிப்பாளராகிய என் பெரிய தந்தையாரும், சிறுவராகிய என் தந்தையாருமே. நிகழ்ந்த காலம் 1871, 72 ஆக இருக்கலாம்.

எனத் துணிந்தார்; வையகத்து வாழ்க்கையை முறைப்படி வாழ்ந்தே வானுறையும் தெய்வத்திற்கும் பணிசெய்யவியலும் என்பதையும் கண்டார்; தாம் பிறந்ததும், தம் உள்ளத்திற்கு உகந்ததுமான கிறிஸ்தவ சமயத்தைப் பரவச்செய்வதே தமக்கு இறைவன் வகுத்த வழி என்று உறுதிகொண்டார்; இப்பணியையும் வாழ்க்கை வளம் மிகுந்த நகரங்களிலிருந்து செய்திருக்கலாம்; 'கொள்ளேன், புரந்தரன், மால், அயன் வாழ்வு' என, வாழ்க்கை இன்பம் தரவல்ல இடங்களை விடுத்தார்; 'நள்ளேன் நினது அடியாரோடு அல்லால்' என, சமயப் பணியாற்றும் அடியவர் கூட்டத்தையே விழைந்தார்; 'நரகம் புகினும் எள்ளேன், திருவருளாலே இருக்கப்பெறின்;' என, கனல்வீசும் வறிய இடையன்குடியில் புகுந்தார்; 'உள்ளேன் பிற தெய்வங்கள் உன்னையல்லாது; எங்கள் உத்தமனே' என, தம், தொண்டில், வாழ்க்கையின் இறுதிவரையில், உறைத்து நின்றார். சமயத்தைப் பரப்புவதற்காகத் தமிழ் மொழியைப் பயின்றார். பின்னர், மொழியாராய்ச்சியிலும் வரலாற்று ஆராய்ச்சியிலும் ஈடு பட்டார்; தன்னேரில்லாத் தமிழ் மொழியின் மாண்பை உணர்ந்து இன்புற்றார்; 'நான் பெற்ற இன்பம் பெறுக, இவ்வையகம்' என, உலகறிய வெளியிட்டார்.

இவருடைய ஆராய்ச்சிமுறையில், நாம், ஒன்று கூர்ந்து நோக்கவேண்டும். இவர் இங்கு வந்த நாட்களிலிருந்து, தென்னாட்டில், வளர்பிறையென்ன பிரிட்டிஷ் ஆட்சி, வளர்ந்து பேரரசாகி, உலகத்திலேயே உயர்ந்த வல்லரசு என்ற நிலைக்கு, இவருடைய இறுதிக் காலத்துக்குள் வந்துவிட்டது; இவருடைய நரம்புகளில் ஓடுகிற செந்நீரோ, ஆட்சி செலுத்தும் பிரிட்டிஷ் செந்நீர்; இவருடைய உள்ளத்தில் உறைந்துள்ளதோ, மேல்நாட்டு மொழிகளும் கலைகளும்; இவர் உயிரோ, கிறிஸ்துவின் திருவடி களில் கட்டுண்டது. இவ்வாறிருந்தும், இவையொன்றேனும், இவருடைய, ஆராய்ச்சிகளில் உண்மைகாணும் ஊக்கத்தையும், நெறியையும், தடைசெய்தனவல்ல; பிறழச்செய்தனவுமல்ல. எச்சமயமாயினும் என்ன? உண்மைத் தொண்டர்களுக்கு, இறைவன்,

'பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடர்' அல்லனோ?

தமிழகத்தின் பழமையையும், தமிழ் மொழியின் அமைப்பையும் ஆற்றலையும், சூழ்ந்து ஆராய்ந்து, அவற்றின் உண்மை நிலைகளில் சில பகுதியை நன்குணர்ந்த கால்டுவெல், நாளாக நாளாக, தமிழ்த் தாயின் உண்மை மகனாகவே மாறி விட்டார்.

இவர், தமிழ் மக்கள் ஊக்கமும் விடாமுயற்சியும் உடைய வர்களென்றும், குருட்டுக் கொள்கைகள் அதிகமாக இல்லாதவர் களென்றும், எங்கெங்கே வாய்ப்பிருக்கிறதோ அங்கெல்லாம் சென்று பொருள் ஈட்டும் துணிபு உடையவர்களென்றும் கருதி னார். பழைய முறையில் பயின்று வந்த இலக்கண நூல் முறை, எவ்வாறு மக்கள் உள்ளத்தைத் தெளிவுபடுத்தியுள்ளதென்பதை யும், மொழிகளைச் செம்மை படுத்தியுள்ளதென்பதையும் உணர்ந்தார். அக்காலப் புலவர்கள், ஒரு துறையிலே நின்று, அதில் ஆழ்ந்துசென்றிருக்கும் அறிவை வியந்தார். அவர்களுக்குப் பரந்த பயிற்சி இன்மையால் மொழிகளின் பொதுத் தன்மையையும், தொடர்பையும், உள்ளத்தே கொள்ளமுடியவில்லை என்பதையும் கண்டார். ஆங்கிலப் பயிற்சியும், மேல்நாட்டுக்கல்வி முறைகளும் இந்நாட்டில் புகுந்தவுடனே, அப்பயிற்சியைப் பெற்றவர்கள், மேல்நாட்டவருக்கு ஓரளவும் குறையாமல் பல துறைகளிலும் சிறந்த ஆற்றலுடன் வெளிவருவதைக் கண்டார். ஐரோப்பாவில், கலைநலம் பெற்றவர்கள், தங்கள் தங்கள் மொழிகளை ஆராய்வதிலும், ஊர், நாடு முதலியவைகளின் வரலாறுகளையும் பழமையையும் கண்டறிவதிலும் கொண்டுள்ள ஆர்வமும் முயற்சியும்போல தமிழகத்திலும், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு சிலரேனும் கருத்திற்கொள்வார்களானால், இதுவரை தெளிவு பெறாத பல செய்திகள் தெளிவுபெறுமே என எண்ணினார்.

'இந்தியப்பழமை' (Indian Antiquary) என்னும் பெயரால் பம்பாயிலிருந்து வெளிவரத் தொடங்கிய பழங்கலைத்தாளில் 'இந்தியர்களால் வடநாட்டுப் பழஞ்செய்திகள் எழுதப்பெற்று வந்ததைக் கண்டு மகிழ்ந்தார்; அக்கட்டுரைகளால், அதுகாறும் வரலாற்று உண்மைகளைக்காணும் வேட்கையும், எதையும் பாகுபடுத்தி அவற்றின் பொதுத்தன்மைகளைக் காணும் ஆற்றலு மாகிய இரண்டு பண்புகளும், ஐரோப்பிய உள்ளத்திற்கே தனி உரிமை என நிலவிவந்த எண்ணம் பொய்ப்பட்டதை உணர்ந்தார்.

வடநாட்டிற் காணப்பெறும் பழஞ்செய்திகளிலும் தென்னாட்டில் காணப்பெறுபவை குறைந்தனவல்லவே, வடநாட்டாரிலும் தென்னாட்டார் அறிவிலும் ஆற்றலிலும் குறைந்தவரல்லரே, அவ்வாறிருந்தும் தென்னாட்டைப் பற்றிய கட்டுரைகள், தென் நாட்டவரால், ஒன்றும் எழுதப்பெறவில்லையேயென, உள்ளத்தில் வருந்தினார். இத்துறையில், தென்னாட்டுச் செய்திகளையும் மொழிகளையும் பற்றி அயல் நாட்டு அறிஞர்கள் செய்துள்ள பணி, தென்னாட்டவருக்கு ஊக்கம் அளிக்கும் என்று எண்ணினார். மொழியை ஆராய்ச்சி செய்வார்களானால், 'மொழிக்கு என ஒரு தனி வரலாறு உண்டு. அவ்வரலாறு ஏனைய வரலாறுகளை விளக்கும் ஒளி' என்பதையும், 'மக்களினப் பண்பையும், பழமையையும் காட்டும் கருவி' என்பதையும் உணர்ந்து பயனடைவார்களே என்று எண்ணினார். உண்மை காணும் பண்பமைந்த உள்ளம், மொழியைத் தூய்மை செய்தலும், தூய்மையான மொழி உள்ளத்தைத் தூய்மை செய்தலும் ஒன்றுக்கொன்று செய்யும் உதவியாகவிருக்க, காணவியலாத உள்ளத்தைக் காட்டும் கண்ணாடியாகிய மொழியைக் கொண்டு உள்ளத்தை உணர்ந்து உயர்வடைய முயல வேண்டாமா? என வினவினார். மொழியாராய்ச்சியைச் செவ்விய முறையில் மேற்கொள்ளல் சீரிய இலக்கியம் வளர்வதற்குத் தோற்றுவாயாகவிருக்க, இம்மக்கள் இத்துறையில் உழைக்காதிருக்கின்றார்களே எனக் கவன்றார்.

தமிழ்மக்கள் இத்துறையில் ஈடுபடவேண்டும் என்பதை மிகத் தெளிவாகவும், இனிமையாகவும், ஒருவரையும் தாக்காமலும் இவர் சொல்லுவது வயதும் அறிவும் நிரம்பியும் கடமையை உணராத ஒரு மைந்தனுக்கு, அம்மைந்தன்பால் மாறாத காதலுடைய வயது சென்ற தந்தை பரிந்துரைக்கும் அறிவுரைபோல் குறிப்பாகவும் கனிவாகவுமிருக்கின்றது. ஓரிடத்தில் ''இந்நூல் எழுதும்போது.... அயல்நாட்டாருக்கு வேண்டப்படுவதைவிட இந்நாட்டாருக்கு வேண்டப்படுவதையே மிகவும் சிந்தித்தேன். திராவிடமொழிகள் வழங்கும் நாட்டிலுள்ளவர்களை, அவர்கள் மொழிகளை ஒப்பிட்டுப் பார்த்துப் பயில்வதில் அறிவும் கருத்தும் உடையவர்களாகும்படி ஊக்கவேண்டுமென்பதே என்னுடைய உளமார்ந்த இடைவிடா விருப்பமாக இருந்து வருகிறது' எனக் கூறினார். மற்றோரிடத்தில், 'இந்தியப்பழமை'யில் வெளிவரும் ஆராய்ச்சிகளைப் பற்றிப் பேசும்போது ''இக்கட்டுரைகள்,

தம்மளவில் பயனுள்ளனவாக விருப்பதோடு, புலமையுள்ள தென் இந்தியர்கள் இதே கருத்துடனும் ஆராய்ச்சியுடனும், இத்தகைய இதுகாறும் புறக்கணிக்கப்பட்ட, அவர்களுக்கே உரியதெனக் கருதலாமாகிய, இலக்கண இலக்கியத்துறைப் பணியில் புகுவார் களானால், எதிர்பார்க்கக்கூடிய பயனுக்கு உலகத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் பயன்படுகின்றனவென, எனக்குத் தோன்று கிறது'' எனக் கூறுகின்றார். இச்சொற்றொடர்களை ஆழ்ந்து பார்ப்போமானால் ஆங்கிலமும் செந்தமிழும் ஆர்வமுறக் கலந்து மணம் வீசுவதைக் காணலாம். எவ்வளவு சுற்று? எவ்வளவு கவலை? எவ்வளவு அன்பு? இச்சொற்களைப் பார்க்கும்போதும், அவர் எதிர்பார்ப்பதை நோக்கும் போதும், இராமகாதையில், சீற்றங்கொண்ட இளவலின் சீற்றந் தணிக்க இராமன் கூறிய, 'என் சொல் கடந்தால் உனக்கு ஆவதோர் ஈனமுண்டோ' என்ற சொற்களும், அச்சொற்களின் ஆற்றலை அறிந்த கம்பன் அத்தகைய சொற்களைக் கூறிய இராமனை 'தென் சொல்கடந்தான் வடசொற் கடற்கு எல்லை தேர்ந்தான்' எனப் புகழ்வதும் நினைவுக்கு வருகின்றன.

இவர் எண்ணியதும், எதிர்பார்த்ததும், எண்பத்து மூன்று ஆண்டுகட்கு முன்னர். இவருடைய மிக முதிர்ந்த வயதில், ஒரு நாள், ''நான் தமிழ் நாட்டில், தமிழில், முதன்முதல் என் இளமை யில் பேசியபோது 'கங்குல் கழிந்தது, காலையும் வந்தது' என ஆர்வத்துடன் பேசினேன். ஆண்டுகள் பலவாயின; இன்னும் காலை வரவில்லை; ஆனால், எப்படியும் வந்துவிடும் என்ற உறுதி என் உள்ளத்தினின்றும் அகலவில்லை'' என்று எண்ணாதிருந் திருப்பாரா? நமக்கோ, இன்னும் கங்குல் கழியவில்லை; கதிரவனும் வரவில்லை; என்னவாயினானோ தெரியவில்லையே?

> **அரவங் கரந்ததோ? அச்சு மரமிற்றுப்**
> **புரவி கயிறுருவிப் போயிற்றோ- இரவிதான்**
> **செத்தானோ? இல்லையோ? செந்தமிழ் தேர் நற்புலவீர்!**
> **எத்தால் விடியும் இரா?**

இந்த எண்ணங்களெல்லாம் வெளிவந்து ஓராயிரம் பிறை தோன்றி மறைந்தது; நாம், எவ்வளவு இத்துறைகளில் முன்னேறி யிருக்கின்றோம் என்பதை நன்கு அறிவோம். அப்போது, நம்மிடமிருந்து தோன்றும் ஆராய்ச்சிகள் எவ்வாறு இருக்கும்

என்று, கால்டுவெல் எதிர்பார்த்தார் என்பதைப் பார்த்தோம். இப்போது, நம் புலமையும் ஆராய்ச்சி முறைகளும் எவ்வாறுள்ளன என்பதைப் பற்றி ஓர் அயல்நாட்டு அறிஞர் கூறுவதையும் பார்ப்போம். ★ஜான் ஸ்பயர்ஸ் என்பவர் ''சமஸ்கிருதத்திலோ தமிழிலோ உள்ள புராணங்களிலிருந்து தோன்றும் கற்பனை நோக்கங்களை, உண்மை வரலாற்று ஆதரவுகளாகக் கொண்டு வருதல், வரலாற்றையோ, அந்த அந்த மொழிகளையோ, நடுநிலையோடு சீர்தூக்கியதாகாது... மற்றொரு புலமைக்குறை இந்திய வரலாற்று ஆராய்ச்சியில் காணப்படுவது, எழுதுவோரும், தனிப் புலமையுடையோரும், தங்களுக்குள்ளேயே ஒருவரை ஒருவர் ஆதாரமாகக் காட்டிக்கொள்ளும் தந்தோற்றத் தந்நலத் தம் பெருமை. அவன் உவனை ஆதாரமாகக் காட்டும் இவன் இவனை ஆதாரமாகக் காட்டலும், உவன், அவனையும் இவனையும் ஆதாரமாகக் காட்டலுமாகவே போய்கொண்டிருக்கிறது. உயர்ந்த புலமையாராய்ச்சியாக, தகுதியான கலைக் கழகப் போர்வைகளுடன் வெளிவந்து நடமாடுபவற்றுள் மிகுதியானவை ஒருவரை ஒருவர் போற்றிக் கொள்ளும் மடிமைப் புகழ்ச்சியின் வேறல்லாதனவும், அறிவுள்ள பள்ளிச் சிறுவன் ஆராய்ச்சிகளை விட உயர்ந்தனவல்லாதனவுமாகவே இருக்கின்றன.'' எனக் கூறுகின்றார். இது போதுமே? என்னதான் மறுமொழி கூறுவது? என்ன கூறினும் என்ன? மன்னன் மனைவி மாசுரைக்க வாழலாமா? இப்போது அன்போ நிறைந்துள்ளது; அடியாரோ மலிந்துள்ளார்; ஆற்றலோ சிறந்துள்ளது; அறிவுக்கோ குறைவில்லை. முன்னேறினோமோ? சொல்லவியலவில்லையே; எங்கேனும் குறையுளதோ?

இதுகாறும் கால்டுவெலைப்பற்றிப் பேசிய தென்றலில் திளைத்த நமக்கு மேலே கூறியவை வாடையாக வந்தது. வாட்டம் வேண்டுவதில்லை. முயற்சி திருவினையாக்கும். உண்மையன்போடு, ஒரு சிலராவது, புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் பொருட்படுத்தாது, தமிழ்ப் பணியே தலைப்பணியாகக் கொண்டு, உழைப்போமானால், நூறாண்டில் இயலாதவற்றை ஆறாண்டில் இயற்றி, நம் செந்தமிழ் அன்னையின் சீர் உலகெலாம் பரவச் செய்யலாம்.

---

* John Spiers. Vide "Tamil Culture", Caldwell Centenary Number.

''இந்த உலகத்தில் பழையனவாகப் போயின வற்றை யல்லாது புதியனவாகவுள்ளன ஒன்றும் இல்லை; முன்னரே நன்கு தெரியப் பெற்றனவாயிருந்து மறக்கப் பெற்றவைகளையே, அடிக்கடி நாம் புதிதாகக் கண்டுபிடிக்கின்றோம்'' என்று சான்போ (Saint Beuve) என்னும் மேல்நாட்டு அறிஞர் கூறுகிறபடி, இக் கட்டுரையில் ஒன்றும் புதியன அன்று; எல்லாம் பழஞ்செய்திகளே; ஆனால், பழஞ்செய்திகளைப் புதிதாகப் பார்க்கும்போது நமக்கு ஒரு புதுவுணர்வு உண்டாகிறது. அவ்வுணர்வினால் அறிவும் ஆற்றலும் பிறந்து, நம்மைப் பல நல்ல பணிகளில் புகுவிக்கின்றது.

இக்கட்டுரையும், பழஞ் செய்திகளே; ஆனாலும், இது யாரேனும் ஒருவரை, கால்டுவெல் வகுத்த பணிகளில் ஒன்றை யேனும் செய்யத் தூண்டினாலோ, அவருடைய நினைவை நிலை நாட்டும் வழிகளை வகுக்கச் செய்தாலோ, எவ்வழியிலேனும், அன்போடு திராவிட மொழிகளை ஆராய்ந்த அறிஞரிடம், அன்பை உண்டாக்கித் தமிழ்த் தொண்டில் இயக்கினாலோ, பயனுடைய தொன்றென்றே கருதலாம். தமிழ் மொழியும் இலக்கியமும், மக்களும், உலகில் உயர்ந்ததோர் இடத்தைப் பெற்றுச் சிறப்பும் பயனுமுறவேண்டுமென விழைந்த கால்டுவெலின் நினைவை வாழ்த்தி அவ்வாறே அருளுக என, அவருடன், எல்லாம் வல்ல இறைவன் திருவருளை வணங்கி நிற்போமாக.

**வாழ்க தமிழ்!**

# உடையார்குடி கல்வெட்டு ஒரு மீள்பார்வை

டாக்டர் குடவாயில் பாலசுப்ரமணியன்

தமிழக வரலாற்றில் குறிப்பாகச் சோழர் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக விளங்குவது உடையார்குடி கல்வெட்டாகும். தற்போதைய கடலூர் மாவட்டம், காட்டு மன்னார்குடியின் ஒரு பகுதியாக விளங்கும் உடையார்குடி சிவாலயத்தின் கருவறையின் மேற்குப்புற அதிட்டானத்தில் இச்சாசனம் இடம்பெற்றுத் திகழ்கின்றது. கோராஜகேசரிவர்மரின் (முதலாம் இராஜராஜ சோழனின்) இரண்டாம் ஆட்சியாண்டு குறிக்கப்பெற்றுள்ள இச்சாசனத்தினை எபிகிராபியா இண்டிகா தொகுதி 21இல் எண் 27ஆம் கட்டுரையாகத் தமிழ் ஒலிபெயர்ப் போடு கூடிய (ஆங்கிலத்தில் அமைந்த) விளக்க உரையுடன் வெளியிட்ட வரலாற்றுப் பேரறிஞர் கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார்; தம் 'சோழர் வரலாறு' (THE COLAS) எனும் நூலில் மேற்குறித்த உடையார்குடி சாசனத்தின் அடிப்படையில் ஆதித்த கரிகாலன் கொலை பற்றிய செய்திகளை விவரித்துள்ளார்.★ அப்பகுதியில் சுந்தர சோழனின் தலைமகனும், மாமன்னன் முதலாம் இராஜராஜ சோழனின் அண்ணனுமாகிய ஆதித்த கரிகாலனின் கொலை நிகழ்வின் பின்புலத்தில் மதுராந்தக உத்தம சோழனின் துரோகம் இருந்திருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியுள்ளார்.

---

* The Colas, K.A. Nilakanta Sastri, University of Madras, 1984, pp. 157-158

இக்கருத்தே மதுராந்தக உத்தம சோழன் மீது ஏற்றப்பெற்ற களங்கமாக அமைந்தது.

## வரலாற்று அறிஞர்களின் கருத்துக்கள்

பிற்காலச் சோழர் வரலாறு எனும் நூலினை எழுதிய வை. சதாசிவ பண்டாரத்தார் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியாரின் கருத்துக்கு மாறுபட்டு, ஆதித்த கரிகாலனின் கொலை நிகழ்வில் உத்தம சோழனின் பங்களிப்பு இருந்திருக்க இயலாது என்பதை வலியுறுத்தியுள்ளார்.★ இருப்பினும், சாஸ்திரியாரின் கருத்துக் களை மறுத்துரைப்பதற்கான தெளிவான சான்றுகள் எதனையும் அவர் முன்வைக்கவில்லை. 1971ஆம் ஆண்டு வெளிவந்த சென்னை விவேகானந்தா கல்லூரி மலரில் இராஜராஜ சோழன் பற்றிய கட்டுரை ஒன்றினை வரைந்த ஆர்.வி.சீனிவாசன் என்பார் ஆதித்த கரிகாலன் கொலையின் பின்புலத்தில் செயல்பட்டவர்கள் அருண்மொழியும் (இராஜராஜனும்) அவனது தமக்கை குந்தவை யும்தான் என்பதை வலியுறுத்துவதோடு, பல கேள்விக் கணை களையும் எழுப்பி தம் கருத்துக்களை மறுப்பவர்களுக்கு அறை கூவலும் விடுத்துள்ளார்.† சீனிவாசன் அவர்களின் கருத்துக்களை வன்மையாக மறுக்கும் டாக்டர் க.த. திருநாவுக்கரசு அவர்கள், அருண்மொழி ஆய்வுத்தொகுதி எனும் கட்டுரைத் தொகுப்பு நூலொன்றில் உத்தம சோழனுக்கு எந்த விதத்திலும் இக்கொலை யில் தொடர்பு இல்லை என்றும், கொலையாளிகளைக் கண்டு பிடிப்பதில் தாமதம் ஏற்பட்டு இராஜராஜனின் இரண்டாம் ஆட்சியாண்டில்தான் கண்டுபிடிக்க இயன்றது என்றும், பிராமணர் களாகிய கொலையாளிகளை மனுதரும சாத்திரத்தின் அடிப்படை யில் அரசன் தண்டனை கொடுத்திருப்பானேயன்றி கொலை தண்டனை அளித்திருக்க இயலாது என்றும் தம் கருத்துக்களை பல சான்றுகள் அடிப்படையில் கூறியுள்ளார்.‡ இவ்வறிஞர்களைத்

---

* *பிற்காலச் சோழர் வரலாறு, தி.வை. சதாசிவ பண்டாரத்தார், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், 1974, பக். 76 - 78.*

† A note on the Accession of Rajaraja, R.V. Srinivasan, Viveka, Vivekananda College Magazine, Madras, 1971, p. 13

‡ *ஆதித்த கரிகாலன் கொலை வழக்கு - ஒரு மறு ஆய்வு, க.த. திருநாவுக்கரசு, அருண்மொழி ஆய்வுத்தொகுதி, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை, சென்னை - 28, 1988, பக். 143 - 153.*

தவிர மேலும் பல வரலாற்று ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் மதுராந்தக உத்தம சோழனைக் குற்றவாளி என்றும், இல்லை என்றும் தங்கள் தங்கள் கோணங்களில் எடுத்துரைத்துள்ளனர். ஆனால் இவர்கள் யாரும் தெளிந்த சான்றுகளோடு தங்கள் கருத்துக்களை மெய்ப்பிக்க இயலவில்லை.

## புதின ஆசிரியர்கள் பார்வையில்....

'பொன்னியின் செல்வன்' என்ற வரலாற்றுப் புதினத்தால் தமிழகத்தில் தணியாத ஒரு வரலாற்றுத் தாகத்தை ஏற்படுத்திய அமரரான கல்கி (கிருஷ்ணமூர்த்தி) அவர்கள் ஆதித்த கரிகாலன் கொலை நிகழ்வை மையமாக அமைத்து புதினத்தைப் படைத்துக் காட்டியதோடு, அதில் கொலையின் பின்புலத்தில் செயல்பட்ட வர்கள் என ஊகிக்கத் தக்கவர்களாக வரலாற்றுப் பாத்திரங்கள் சிலரையும், கற்பனைப் பாத்திரங்கள் சிலரையும் உலவ விட்டு, உண்மையான குற்றவாளி யார் என்பதை வாசகர்களே ஊகித்து அறிவார்களாக என்ற தன் முடிவையும் கூறிச் சென்றுள்ளார். எழுத்துச் சித்தர் பாலகுமாரன் அவர்கள், ஆதித்த கரிகாலன் கொலையினையே முடிவாகக் கொண்டு கடிகை என்ற பெயரில் புதினமொன்றினைப் படைத்த போதும் கொலையாளிகளான பிராமணர்களுக்கு பின்புலத்தில் செயல்பட்டவன் மதுராந்தக உத்தம சோழன்தான் என்பதைத் தம் எழுத்தின் வன்மையினால் நிறுவியுள்ளார். புதினங்கள் வரலாற்று ஆய்வுக்கு துணை நிற்க மாட்டாவெனினும், ஆதித்த கரிகாலன் கொலையைப் பொறுத்த வரை பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் கண்ட முடிவு புதினப் படைப்பாளர்களுக்கு அடித்தளமாய் அமைந்தது என்பது மட்டு மல்லாமல் மதுராந்தக உத்தம சோழனை குற்றவாளியாகவே முன்னிருத்தினர் என்பதுதான் உண்மை. ஆதித்த கரிகாலனின் கொலைபற்றி குறிப்பிடும் வரலாற்றுச் சாசனமாக உடையார்குடி கல்வெட்டின் வாசகத்தினை இனிக் காண்போம்.

## கல்வெட்டு

1. ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ராஜகேசரிவர்மர்க்கு யாண்டு 2 ஆவது வடகரை பிரமமேயம் ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி பெருமக்களுக்கு சக்கரவர்த்தி ஸ்ரீமுகம்

பாண்டியனைத் தலைகொண்ட கரிகால சோழனைக் கொன்று துரோகிகளான சோமன்............ நம்பி

2. ரவிதாசனான பஞ்சன் பிரமாதிராஜனும் இவன்றம்பி பரமேஸ்வரன் ஆன இருமுடிச் சோழ பிரமாதிராஜனும் இவகள் உடப்பிறந்த மலையனூரானும் இவகள் தம்பிமாரும் இவகள் மக்களிடும் இவர் பிரமாணிமார் பெற்றாளும் இ...........ராமத்தம்

3. பேரப்பன் மாரிடும் இவகள் மக்களிடம் இவகளுக்குப் பிள்ளை குடுத்த மாமன்மாரிடும் தாயோடுடப் பிறந்த மாமன் மாமன்மாரிடும் இவகள் உடபிறந்த பெண்களை வேட்டாரினவும் இவகள் மக்களை வேட்டாரினவும் ஆக இவ்வனைவர் (முடமை) யும் நம் ஆணைக்குரி யவாறு கொ

4. ட்டையூர் பிரம்ம ஸ்ரீராஜனும் புள்ளமங்கலத்து சந்திரசேகர பட்டனையும் பெறத்தந்தோம். தாங்களும் இவகள் கண்காணி யோடும் இவகள் சொன்னவாறு நம் ஆணைக்குரியவாறு குடியோடு குடிபெறும் விலைக்கு விற்றுத்தலத்திடுக இவை குருகாடிகிழான் எழுத்து என்று இப்பரிசுவரஇ

5. ஸ்ரீமுகத்தின் மேற்பட்ட மலையனூரான் ஆன பாப்பனச்சேரி ரேவதாச கிரமவித்தனும் இவன் மகனும் இவன்றாய் பெரிய நங்கைச்சானியும் இம்மூவரிதும் ஆன நிலம் ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்து மீய்பிடாகை தேவமங்கலம் ஆன பட்டில நிலம் ஸ்ரீ வீரநாராயண சதுர்வேதி

6. மங்கலத்து சபையார் பக்கல் வெண்ணையூர் நாட்டு வெண்ணையூருடையான் நக்கன் அரவணையானான பல்லவ முத்தரைய மகன் பரதனான வியாழகஜமல்லப் பல்லவரை யனேன் இந்நில்ம் பழம்படி இரண்டே முக்காலே ஒருமாவும் அகமனை ஆறும் ஆக இந்நிலமும் இம்மனையும் நூற்றொரு பத்தி

7. ரு கழஞ்சு பொன் குடுத்து விலைகொண் டிவ்வூர் திருவனந் தீஸ்வரத்து பட்டாரகர் கோயிலிலே இவ்வாட்டை மேஷ

நாயற்று நாயற்றுக்கிழமை பெற்ற பூரட்டாதி ஞான்று சந்திராதித்தவத் ஆழ்வார்கோயில் முன்பு மூவாயிரத்தரு நூற்றுவனான நிலையம்பலத்து தண்ணீர் அட்டும் பிராமணன் ஒருவனுக்கு நிச

8. தம் படி நாழி நெல்லும் ஆட்டைவட்டம் ஒரு காசும் நிசதம் பதினைவர் பிராமணர் உண்பதற்கு ஆக பதினாறு இவறுள் ஐவர் சிவயோகிகள் உண்ணவும் வைத்தேன் அரையன் பரதன் ஆன வியாழகஜமல்ல பல்லவரையனேன் இதர்மம் ரக்ஷிக்கின்ற மகாசபையார் ஸ்ரீபாதங்கள் என் தலை மேலன.

## உடையார்குடி கல்வெட்டு குறிப்பிடும் கோ இராஜகேசரி வர்மர் யார்?

சோழப் பெருமன்னர்கள் மாறிமாறி புனைந்து கொள்ளும் இராஜேகேசரி, பரகேசரி எனும் பட்டங்களில் ஒன்றான கோ இராஜகேசரி எனத் தொடங்கும் இக்கல்வெட்டுச் சாசனத்தில் மன்னன் பெயரோ, மெய்க்கீர்த்தியோ இல்லாத காரணத்தால் ஆதித்த கரிகாலன் கொலை நிகழ்வுக்குப் பின்பு இராஜகேசரி எனப் பட்டம் பூண்ட சோழ மன்னர்கள் பலரில் யாருடைய சாசனமாக வும் இது இருக்கலாம் என்ற முடிவினை நாம் கொள்ள முடிந் தாலும், இக்கல்வெட்டில் குறிக்கப்பெறும் குருகாடி கிழான் என்ற சோழப் பெருந்தரத்து அலுவலன் மாமன்னன் இராஜராஜ சோழனின் அலுவலன் என்பதைப் பிற சாசனங்கள் எடுத்துரைப் பதால் இச்சாசனம் முதலாம் இராஜராஜ சோழனின் இரண்டாம் ஆட்சியாண்டில் பொறிக்கப் பெற்ற சாசனமே என்பது தெளிவு. மேலும் இச்சாசனத்தின் 7-ஆம் வரியில் குறிக்கப்பெறும் இவ்வாட்டை மேஷ நாயற்று ஞாயிற்றுக்கிழமை பெற்ற பூரட்டாதி நாள் என்ற வானிலைக் குறிப்பு இராஜராஜசோழனின் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த குறிப்பு என்பதால், இச்சாசனம் முதலாம் இராஜராஜ சோழனின் ஆட்சிக்காலத்தில் பொறிக்கப்பெற்றது என்பது ஐயம்திரிபற உறுதியாகின்றது.

## சாசனம் குறிப்பிடும் இரண்டு ஆண்டுகள்

மேலே கண்ட இக்கல்வெட்டுச் சாசனத்தில் குறிக்கப் பெறும் 'ஸ்வஸ்தி ஸ்ரீ கோராஜகேசரிவர்மனுக்கு யாண்டு 2

ஆவது.....' என்ற ஸ்ரீமுகம் அனுப்பப்பெற்ற தொடக்கப் பகுதி குறிப்பிடும் ஆண்டும், ஏழாவது வரியில் உள்ள 'இவ்வாட்டை மேஷ நாயற்று ஞாயிற்றுக் கிழமை பூரட்டாதி ஞான்று' என்ற வியாழ கஜமல்லன் என்பான் அறக்கட்டளை வைத்த நாளைக் குறிப்பிடும் ஆண்டும் ஒரே ஆண்டு அன்று. பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரியார் இவ்விரு நிகழ்வுகளும் ஒரே ஆண்டில் நிகழ்ந்தவை என்ற கருத்தில் தம் கட்டுரையினை வரைந்துள்ளார்.★

கல்வெட்டில் குறிக்கப்பெறும் மேஷ நாயற்று (சித்திரை மாதத்து) பூரட்டாதி விண்மீன் கூடிய ஞாயிற்றுக்கிழமை என்பது ஒப்பீட்டு ஆண்டுக்கணக்கீட்டின்படி (Indian Epimeris) கி.பி. 988 ஏப்ரல் 15 ஆம் நாளினைக் குறிப்பதாகும். எனவே முதலாம் இராஜராஜனின் ஸ்ரீமுகம் கி.பி. 986 அல்லது 987இல் உடையார்குடி சபையோருக்கு அனுப்பப்பெற்று, பின்னே, கி.பி. 988இல் வியாழ கஜமல்லன் என்ற தனியாரின் இச்சாசனம் பதிவு பெற்றுள்ளது.

## இராஜராஜனின் சாசனமன்று

இக்கல்வெட்டுச் சாசனத்தை முதன்முறையாக ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட சாஸ்திரியார் அவர்களும், பின்பு இச்சாசனத்தைப் பற்றி பேசிய அறிஞர்கள் அனைவரும் இது இராஜராஜ சோழனின் நேரிடையான ஆணையை வெளியிடும் சாசனம் என்றும், இச்சாசனம் பதிவு பெற்றபோதுதான் ஆதித்த கரிகாலன் கொலை கண்டுபிடிக்கப் பெற்று குற்றவாளிகளின் உடமைகள் கைப்பற்றப் பெற்றன என்றும் கருதி, கொலை பற்றிய தங்கள் தங்கள் கருத்துக்களை முன்வைத்துள்ளனர். இது தவறாகும். உடையார்குடி கல்வெட்டுச் சாசனத்தில் காணப்பெறும் முதல் நான்கு வரிகள் கி.பி. 986 அல்லது 987இல் (இராஜராஜ சோழனின் இரண்டாம் ஆண்டில்) வீரநாராயணச் சதுர்வேதி மங்கலத்துச் (உடையார்குடி) சபையோருக்கு மன்னனிடமிருந்து அனுப்பப் பெற்ற ஒரு அனுமதிக் கடிதமே ஆகும். அக்கடிதம் ஒரு நிலை விற்பனை ஆவணத்தில் மேற்கோளாகக் காட்டப்பெற்றுள்ளதே யன்றி, அதுவே குற்றவாளிகள் பற்றி அரசு எடுத்த முடிவு பற்றிய ஆணையன்று. கி.பி. 988இல் தனிநபர் ஒருவர் உடையார்குடி

★ No. 27, The Udayargudi inscription of Rajakesarivarman: K.A. Nilakanta Sastri, Epigraphia Indica, Vol. XXI, pp.165-170.

கோயிலுக்கு வைத்த அறக்கட்டளையைப் பற்றியும், அதற்காக வாங்கப் பெற்ற நிலங்கள் பற்றியும் விவரிப்பதே இச்சாசனம் என்பதால் இதனை இராஜராஜ சோழனின் நேரிடையான அரசுச் சாசனம் எனக் கொள்ளல் தவறாகும்.

## கல்வெட்டைப் பொறித்தவர் யார்?

''வெண்ணையூர் நாட்டு வெண்ணை யூருடையான் நக்கன் அரவனையானான பல்லவ முத்தரையன் மகன் பரதனான வியாழ கஜமல்லப் பல்லவரையனேன் இந்நிலம் பழம்படி இரண்டே முக்காலே ஒரு மாவும் அகமனை ஆறும், ஆக இந்நிலமும் இம்மனையும் நூற்றொருபத்திரு கழஞ்சு பொன்குடுத்து விலை கொண்டு இவ்வூர் திருவனந்தீஸ்வரத்து பட்டாரகர் கோயிலிலே இவ்வாட்டை மேஷ நாயற்று நாயற்றுக் கிழமை பெற்ற பூரட்டாதி ஞான்று சந்திராதித்தவற் ஆழ்வார் முன்பு மூவாயிரத்து அறுநூற்றுவ னான நிலையம்பலத்து தண்ணீர் அட்டும் பிராமணன் ஒருவனுக்கு நிசதம் படி நாழி நெல்லும் ஆட்டை வட்டம் ஒரு காசும், நிசதம் பதினைவர் பிராமணர் உண்பதற்கும், ஆக பதினாறு இவருள் ஐவர் சிவயோகிகள் உண்ணவும் வைத்தேன் அரையன் பரதன் ஆன வியாழ கஜமல்ல பல்லவரையனேன். இ.தர்மம் ரக்ஷிக்கின்ற மகாசபையார் ஸ்ரீ பாதங்கள் என் தலைமேலன'' எனக் காணப் பெறும் வரிகள் மிகத் தெளிவாக தனிநபர் ஒருவரால் இச்சாசனம் பதிவு செய்யப்பெற்றது என்பதைக் காட்டி நிற்கின்றன.

திருவெண்ணை நல்லூரினைச் சார்ந்த அரவனையான் பல்லவமுத்தரையன் மகன் பரதன் எனும்வியாழ கஜமல்ல பல்லவரையன் ஸ்ரீ வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து திருவனந் தீஸ்வரம் எனும் கோயிலில் தண்ணீர் பந்தலுக்காவும் பதினைந்து பேர் சிவயோகிகள் உட்பட்ட சிவபிராமணர் உண்பதற்காகவும் 2¾.... வேலி 1 மா நிலத்தையும் ஆறு மனைகளையும் 112 கழஞ்சு பொன் கொடுத்து வாங்கி அறக்கொடையாக அளித்தான். அதற்காகத் திருக்கோயிலில் கல்வெட்டாகப் பதிவு செய்யப் பெற்றதே இச்சாசனமாகும். இச்சாசனத்திற்குரிய கர்த்தா திருவெண்ணை நல்லூர் பரதன் எனும் வியாழ கஜமல்ல பல்லவரையனே அன்றி மாமன்னன் இராஜராஜன் அல்லன் என்பதை ஈண்டு நோக்குதல் வேண்டும்.

## சாசனம் குறிப்பிடும் நிலம்

இச்சாசனம் இரண்டே முக்கால் வேலி 1 மா நிலத்தையும், அகமனை ஆறையும் வாங்கியதாகக் குறிக்கின்றது. வியாழ கஜமல்லனால் இவையனைத்தும் ஸ்ரீ பராந்தக வீரநாராயண சதுர்வேதி மங்கலத்து பெருங்குறி மகாசபையோரிடமிருந்து வாங்கப் பெற்றது என்பதை இச்சாசனத்தின் ஆறாம் வரி ''சபையார் பக்கல்'' என்று தெளிவாக உரைக்கின்றது. பக்கல் எனும் எழாம் வேற்றுமை உருபு பற்றி சோழர் கல்வெட்டொன்று (S.I.I. VI.356) ''யானிவர் பக்கல் விலைக்குக் கொண்டுடையன'' என்று கூறுவதை நோக்கும்போது இங்கு நிலத்தை விற்றது பெருங்குறி சபையே என்பது உறுதியாகின்றது. ஸ்ரீவீரநாராயண சதுர்வேதி மங்கலம் பிரமதேயமாகவும், அது பெருங்குறி பெருமக்கள் நிருவாகத்திற்குரிய ஒரு சதுர்வேதிமங்கலமாகவும் திகழ்ந்தது என்பதை இச்சாசனத்தின் முதல் வரி தெள்ளத் தெளிவாக உரைக்கின்றது.

நிலத்தைத் தனிநபர் ஒருவரின் அறக்கட்டளைக்காக விற்ற பெருங்குறி மகாசபையோர் அந்நிலத்தின் முன்னைய வரலாற்றை மேற்படி விற்பனைச் சாசனத்தில் குறிப்பிட்டுள்ளனர். ஆதித்த கரிகாலனைக் கொன்ற இராஜ துரோகிகள், அவர்களின் தாயத்தார் கள், நெருங்கிய உறவினர்கள் ஆகியோருடைய நிலங்கள் முழு வதும் முன்பு அரசு ஆணைக்கு ஏற்ப ஸ்ரீபராந்தக வீர நாராயண சதுர் வேதி மங்கலத்து பெருங்குறி மகாசபையால் கையகப்படுத்தப் பெற்று, அவர்கள் பொறுப்பில் அந்நிலங்கள் முழுவதும் இருந் துள்ளன. இது எந்த சோழ அரசரின் ஆணையின் பேரில் எப்போது கையகப்படுத்தப் பெற்றது, அந்த நிலங்களின் அளவு எவ்வளவு என்பன போன்ற விவரங்கள் இச்சாசனத்தில் குறிக்கப்படவில்லை. அச்செய்திகள் சபையோர் ஆவணத்திலும், அரசு ஆவணங்களிலும் பதிவு பெற்ற செய்திகளாகும்.

கொலைக் குற்றம் புரிந்தவர்கள், தாயத்தார், உறவினர் எனப் பலரிடமிருந்தும் கையகப்படுத்தப் பெற்று சபையின் மேற்பார்வையில் இருந்த நிலங்களில் ஒரு பகுதியாக இரந்த மலையனூரான் ரேவதாச கிரம வித்தன், அவன் மகன், அவன்தாய் பெரிய நங்கைச் சானி என்ற மூவரின் உடைமையான 2¾ வேலி

1 மா நிலம், அகமனை 6 ஆகியவற்றை மட்டுமே 112 கழஞ்சு பொன் விலையாகப் பெற்றுக் கொண்டு வியாழ கஜமல்லனுக்கு விற்றனர். எனவேதான் அந்நிலத்தின் முந்தைய உரிமையாளர் பற்றிய விவரங்களை இக்கல்வெட்டுச் சாசனத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

குற்றவாளிகளின் உடமை என அரசு கையகப்படுத்திய நிலங்களை சபையோர் விற்பனை செய்வதற்காக இரு கண்காணிப் பாளர்களை மாமன்னன் முதலாம் இராஜராஜன் தன் இரண்டாம் ஆட்சியாண்டில் நியமித்தான். கொட்டையூர் பிரம்ம ஸ்ரீராஜன், புள்ளமங்கலத்து சந்திரசேகர பட்டன் ஆகிய இருவரும் அப்பணியை மேற்கொள்ளவும், ஸ்ரீவீரநாராயண சதுர்வேதிமங் கலத்துப் பெருங்குறி மகாசபையோர் அந்நிலங்களை விற்று அவ்வூர் நிதியில் சேர்க்க வேண்டும் (தலத்திடுக) என்றும் ஸ்ரீமுகம் (ஆணைக்கடிதம்) அனுப்பியிருந்ததைத்தான் இச்சாசனம் முற்பகுதியில் முந்தைய அனுமதியாகவும், மேற்கோளாகவும் சுட்டுகின்றது.

இவ்வாறு குறிப்பிடப் பெற்றுள்ள ஸ்ரீமுகத்தினை சாஸ்திரியார் அவர்கள் இராஜராஜனின் இரண்டாம் ஆட்சி யாண்டில்தான் குற்றம் கண்டுபிடிக்கப் பெற்றதாகவும், குற்றவாளிகளின் நிலங்கள் கையகப்படுத்தப் பெற்றதாகவும் கருதுவது ஏற்புடையதன்று. இச்சாசனத்தில் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப் பெற்றது பற்றியோ, அவர்களிடமிருந்து கையகப்படுத்தப் பெற்ற நிலங்களின் முழு விவரங்களோ பதிவு செய்யப் பெறவில்லை என்பதை நோக்குதல் வேண்டும். சுந்தர சோழரின் ஆட்சிக் காலத்திலோ, மதுராந்தக உத்தம சோழரின் ஆட்சிக் காலத்திலோ கையகப்படுத்தப் பெற்ற நிலங்களைப் பின்னாளில் சபையோர் இருவர் கண்காணிப்பில் விற்பதற்குரிய உரிமையை இராஜராஜன் வழங்கியதைத்தான் இச்சாசனம் குறிப் பிடுகின்றது. அவ்வாணையை பெற்ற ஊர் சபையோர் அதன்பின்பு ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகள் கழித்து விற்பனை செய்த ஒரு சிறு கூறு நிலம் பற்றியே இச்சாசனம் பேசுகின்றது. குற்றவாளி களின் நிலங்களைக் கையகப்படுத்த இராஜராஜன் வழங்கிய மூல ஆணையாக இந்த ஸ்ரீமுகத்தைக் கருதியதால்தான் பல வரலாற்றுக் குழப்பங்களை ஆய்வாளர்கள் சந்திக்க நேர்ந்தது.

## கொலையாளிகளும் சுற்றத்தாரும்

உடையார்குடிக் (ஸ்ரீபராந்தக சதுர்வேதி மங்கலத்து திருவனந்தீஸ்வரத்துக்) கல்வெட்டு ஆதித்த கரிகாலனைக் கொன்ற துரோகிகள் மற்றும் அவர்தம் உறவினர்கள் பற்றிப் பின்வருமாறு குறிக்கின்றது.

''பாண்டியனைத் தலைகொண்ட கரிகால சோழனைக் கொன்று துரோகிகளான சோமன்.........றம்பி ரவிதாசனான பஞ்சவன்பிரமாதிராஜனும் இவன் றம்பி பரமேஸ்வரன் ஆன இருமுடிச் சோழபிரமாதிராஜனும், இவகள் உடப்பிறந்த மலையனூரானும், இவகள் தம்பிமாரும் இவகள் மக்களிடும், இவர் பிரமாணிமார் பெற்றாளும் இ........ராமத்தம் பேரப்பன் மாரிடும், இவகள் மக்களிடும், தாயோடுடப் பிறந்த மாமன் மாமன்மாரிடும் இவகள் உடப்பிறந்த பெண்களை வேட்டாரினவும், இவகள் மக்களை வேட்டாரினவும் ஆக இவ்வனைவர் முடைமையும்....''

என்று கூறும் கல்வெட்டுச் செய்தியினை ஆழ்ந்து நோக்கும் போது சோமன், அவன் தம்பி ரவிதாசனான பஞ்சவன் பிரமாதிராஜன், அவன் தம்பி பரமேஸ்வரன் ஆன இருமுடிச்சோழப் பிரமாதிராஜன் ஆகிய மூவர் மட்டுமே ஆதித்த கரிகாலனைக் கொன்ற துரோகிகள் என்பதும், மற்ற அனைவரையும் இக்கல்வெட்டு கூறும் போது இவகள் (இவர்கள்) என்ற சொல்லோடு தொடர்வதால் அவர்கள் குற்றவாளிகளோடு உறவின்முறையில் தொடர்புடையவர்கள் மட்டுமே என்பதும் புலனாகின்றது.

இச்சாசனத்தில் விற்கப் பெற்ற நிலத்திற்குரியவனான மலையனூரான பாப்பனச்சேரி ரேவதாச கிரம வித்தன் என்பான் கொலையாளிகள் மூவருடைய தம்பி என்பதும், அவன் கொலையில் ஈடுபட்டவன் அல்லன் என்பதும் நன்கு விளங்கும். தாயத்தார் அனைவரும் குற்றமுடையவர்களே என்ற அடிப்படையில்தான் அவனது நிலமும் அவன் குடும்பத்தார் நிலமும் இங்கு விற்பனைக் குள்ளானது. எனவே கொலையில் நேரடித் தொடர்புடையவர் களாக சோமன், ரவிதாசன், பரமேஸ்வரன் ஆகிய மூவருடைய நிலம் பற்றியோ அல்லது அகமனைகள் பற்றியோ இக்கல் வெட்டில் விற்பனை நிலமாகப் பேசப்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பிரமாதிராஜன் எனும் விருது அரசனால் உயர்நிலை வகிக்கும் (பெருந்தரத்து அலுவலர்) அந்தணர்களுக்கு மட்டுமே வழங்கப் பெறுவதாகும். இங்குக் கொலைக் குற்றவாளியாகக் கூறப்பெற்றிருக்கும் மூவரில் சோமன் பெற்ற விருதுப் பெயர் கல்வெட்டில் சிதைந்துள்ளது. இரண்டாமவன் ரவிதாசனான பஞ்சவன் பிரமாதிராஜன், மூன்றாமவன் பரமேஸ்வரனான இருமுடிச் சோழ பிரமாதிராஜன். பஞ்சவன் பிரமாதிராஜன் என்ற விருது பஞ்சவர் என அழைக்கப்பெறும், பாண்டிய அரசர்கள் தங்கள் பிராமண அதிகாரிகளுக்கு அளிக்கும் விருதாகும். இருமுடிச்சோழ பிரமாதிராஜன் என்ற விருது சோழப் பேரரசனால் வழங்கப் பெற்றதாகும். இவ்விருவர் விருதுகளை வைத்து நோக்கும் போது முதலாமவனாகிய சோமன் நிச்சயம் பாண்டி நாட்டு பிரமாதிராஜன் விருது பெற்றவனாகவே இருந்திருத்தல் வேண்டும்.

ஆதித்த கரிகாலனின் கொலைக்குரிய திட்டம் பாண்டிய நாட்டிலேயே உருவானது என்பது திண்ணம். கொலையுண்ட ஆதித்த கரிகாலன் தன் கல்வெட்டுக்களில் ''வீரபாண்டியன் தலைகொண்ட கோப்பரகேசரி வர்மன்'' எனக் கூறிக் கொள்வதை ஆராய்ந்த நீலகண்ட சாஸ்திரியார் கரிகாலன் வீரபாண்டியனின் தலையை துண்டித்திருக்க மாட்டான் என்றும், அவனை வெற்றி கொண்டதையே இவ்வாறு குறிப்பிட்டிருப்பான் என்றும் கூறுகிறார்.★ ஆனால் நீலகண்ட சாஸ்திரியார் மறைவிற்குப் பின்பு அண்மையில் எசாலம் (விழுப்புரம் வட்டம்) எனும் ஊரில் புதையுண்டு வெளிப்பட்ட முதலாம் இராஜேந்திர சோழனின் செப்பேட்டுத் தொகுதியில் ஆதித்த கரிகாலன் பாண்டியனின் தலையைக் கொய்து, ஒரு கழியில் சொருகி தஞ்சாவூர் அரண்மனை வாயிலில் நட்டு வைத்தான் என்று கூறுகிறது.† போர்த் தர்மத்தையும் மீறி ஆதித்த கரிகாலன் செய்த அடாத செயலுக்குப் பழி தீர்க்கும் வகையில்தான் இக்கொலை நிகழ்ந்துள்ளது.

---

* The Colas, K.A.N., p. 154

†Archaeological Finds in South India, Esalam Bronzes and Copper Plates, by Dr. R. Nagasamy, Bulletin DE 1' Ecole Francaise, D'Extreme Orient, Tome LXXVI, Paris, 1987, p. 14.

ஸ்ரீ பராந்தக வீரநாராயண சதுர்வேதி மங்கலத்தில் (உடையார் குடியில்) பிறந்து பாண்டிய மன்னர்களிடமும் சோழப் பேரரசர்களிடமும் உயர்நிலை அலுவலர்களாக விளங்கிய உடன் பிறந்தோர் மூவரும் தங்கள் திட்டம் நிறைவுற்ற பிறகு, அவர்கள் நிச்சயம் சோழ நாட்டில் இருந்திருக்க வாய்ப்பே இல்லை. அதுவும் பாண்டிய அரசுக்காக இச்செயலை செய்ய முன் வந்தவர்கள் பாண்டிய நாட்டில் அல்லது அவர்களுக்குச் சார்புடைய கேரள நாட்டிற்குச் சென்று சிறிது காலமாவது தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்திருக்க வேண்டும். அவர்களது தாயத்தாரும், நெருங்கிய உறவினர்களும் புலம் பெயர்ந்து சென்றிருக்க வேண்டும். அதனால்தான் சோழ அரசு அவர்களுடைய நிலத்தையும் அகமனைகளையும் கையகப்படுத்தி இருந்திருக்கிறது. இந்நிகழ்வு சுந்தர சோழனின் இறுதி நாட்களிலோ அல்லது மதுராந்தக உத்தம சோழன் முடிசூடிய சின்னாட்களிலோ நிகழ்ந்த செயலாக இருக்க வேண்டும் என்பதில் ஐயமில்லை.

மதுராந்தக உத்தம சோழனின் ஆட்சிமுறை, அவன்பால் மாமன்னன் இராஜராஜ சோழன் கொண்ட பெருமதிப்பு, தன்புதல்வன் இராஜேந்திர சோழனுக்கு மதுராந்தகன் எனப் பெயர் சூட்டி அழைத்தது, செம்பியன் மாதேவியார் இராஜராஜ சோழன் பால் பேரன்பு கொண்டு அவனுடன் வாழ்ந்தது ஆகிய வரலாற்று நிகழ்வுகளின் சான்றாதாரங்களை ஆழ்ந்தும் கூர்ந்தும் நோக்கு வோமாயின் அவன்மீது கொலைப்பழி கொள்ளல் எவ்வகையிலும் ஏற்புடையதாகாது.

இராஜராஜ சோழன் குற்றம் செய்த பிராமணர்களை கொல்லாது விடுத்தான் என்பதும் சான்றுகள் இன்றி கூறப்பெறும் கூற்றாகும். அவனது தானைத் தலைவனான கிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழ பிரமமாராயன் போர்க்களத்தில் போரிட்டவனே, இராஜராஜன் மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாச்சரியனுடன் போரிட்டதைக் கூறும் சாளுக்கிய நாட்டுக் கல்வெட்டுக்கள் அவன் அந்நாட்டில் பிராமணர்களைக் கொன்ற வன் என்று குறிப்பிடுகின்றன. எனவே அவன் காலத்தில் பிராமணர்கள் வாளெடுத்துப் போர் செய்வதும், பிராமணர்களைப் போரில் கொல்வதும் இயல்பாக நடைபெற்ற செயல்களாகவே இருந்துள்ளன. அவ்வகையில் நோக்கும் போது இராஜராஜ

சோழன்மீது வீண்பழி சுமத்துவது வரலாற்று அடிப்படையில் ஏற்புடையதாகாது.

உடையார்குடி கல்வெட்டுச் சாசனம் என்பது ஆதித்த கரிகாலனைக் கொலை செய்தவர்கள் யாவர் என்பதை ஒரு வரியில் கூறும் ஒரு கல்வெட்டேயன்றி அக்கொலை பற்றிய பிற செய்தி களையோ அல்லது அவர்களுக்கு கொடுக்கப் பெற்ற தண்டனை பற்றியோ விவரிக்கும் சாசனமாகாது. தனி நபர் ஒருவர் (வெண்ணையூருடையார் பரதன் எனும் வியாழ கஜ மல்லன்) தான் வாங்கிய நிலம் பற்றியும், வைத்த அறக்கொடை பற்றியும் பதிவு செய்த சாசனமேயாகும்.

ஸ்ரீ பராந்தக வித்தாராயண சதுர்வேதி மங்கலத்தில் (உடையார் [illegible] பேராசர்களிடமும் உயர்நிலை அலுவலர்களாக விளங்கிய [illegible] பிறந்தோர்களையும் தங்கள் திட்டம் நிறைவுற்ற பிறகு, அவர்கள் [illegible] வும் [illegible] அவ்வாணையை [illegible] வெளிப்படுத்தி இருந்திருக்க [illegible] கண்ட சோழனின் ஆட்சியிலோ அல்லது மதுராந்தக உத்தம சோழன் ஆட்சியின் தொடக்கத்திலோ நிகழ்ந்த செயலாக இருக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை.

மதுராந்தக உத்தம சோழனின் ஆட்சிமுறை, அவன்பால் மாமன்னன் இராஜராஜ சோழன் கொண்ட பெருமதிப்பு, தன்புதல்வன் இராஜேந்திர சோழனுக்கு மதுராந்தகன் எனப் பெயர் சூட்டி அழைத்தது. செம்பியன் மாதேவியார் இராஜராஜ சோழன் பால் பேரன்பு கொண்டு அவனுடன் வாழ்ந்தது ஆகிய வரலாற்று நிகழ்வுகளின் சான்றுகளையெல்லாம் ஆழ்ந்தும் கூர்ந்தும் நோக்கு வோமாயின் அவ்விருவரையும் பழிகொள்ளல் எவ்வகையிலும் ஏற்புடையதாகாது.

இராஜராஜ சோழன் [illegible] செய்த பிராமணர்களை கொல்லாது விடுத்தான் என்பதும் சான்றுகள் இன்றி கூறப்பெறும் கூற்றாகும். அவனது தானைத் தலைவனான கிருஷ்ணன் இராமனான மும்முடிச் சோழ பிரம்மராயன் போர்க்களத்தில் போரிட்டவனே, இராஜராஜன் [illegible] சாளுக்கிய மன்னன் சத்தியாச்சிரயனுடன் போரிட்டதைக் கூறும் சாளுக்கிய நாட்டுக் கல்வெட்டுக்கள் அவன் அந்நாட்டுப் பிராமணர்களைக் கொன்றவன் என்று குறிப்பிடுகின்றன. எனவே அவன் காலத்தில் பிராமணர்கள் வாளெடுத்துப் போரிடுவதும், பிராமணர்களைப் போரில் கொல்வதும் இயல்பாக நடைபெற்ற செயல்களாகவே இருந்துள்ளன. அவ்வகையில் நோக்கும் போது இராஜராஜ

# ஷேக்ஸ்பியரும் சைவ சித்தாந்தமும்

சேக்கிழார் அடிப்பொடி
முதுமுனைவர் டி.என். இராமச்சந்திரன்

*சைவ சித்தாந்தம் வல்ல சகமுணர் சான்றோராகும்*
*மெய்வளர் சுவீடன் பார்க்கும் மேதகு ஹாய்சிங்டன்னும்*
*பொய்தபு புலமை போப்பும் போற்றுகௌதி ஷோமாரசும்*
*மையறு மோக்ஷமூலர் மாக்நிகோல் பார்னெட் மார்ஷல்*

*என்றசர் ஜானும் ஏன்ற குட்விலும் மில்டனாரும்*
*ஒன்றிய சகப்பிரி யன்னும் ஓங்குமேல் நாட்டாரோடு*
*நன்றறி புலமை சான்ற நம்பியாம் நல்லசாமி*
*துன்றிய ரமண சாஸ்திரியும் துதி எனது ஏற்பாராக.*

சொற்களின் மர்மங்களை உணர்ந்த மஹான்கள் உதிர்க்கின்ற சொற்கள் வஜ்ர சரீரம் உடையன. இவற்றை சாதாரண வ்யாக்யானங்கள் ஊடுருவ மாட்டா. இவற்றின் பொருளை அனுபூதிமான்கள் மட்டுமே உணர்வர். அங்ஙனம் அனுபூதி மான்களால் உணர்ந்து இவை உரைக்கப்பட்டாலும், உரைக்கப்பட்டனவற்றையும் உணர்வதற்கு அனுபூதி தேவைப்படும். அனுபூதி இன்றி, அறிவுத் திறம் மட்டுமே கொண்டு அச்சொற்கள் மீது படை எடுத்தல் பயன் பயவாத வெற்றுச் செயலாகி ஒழியும்.

பெற்ற அறிவே இடையூறாக மூண்டு குறுக்குச் சுவராகப் படர்ந்து விடும்.

கற்பின் அதற்குத் தக நிற்றலே நெறியாகும். இதைத் தான் மகாகவி பாரதியார், 'யான் கற்ற கல்வி எல்லாம் பலிக்கச் செய்தான்'' என்ற வாசகத்தில் சூசிப்பிக்கின்றார். பலித்த நிலையில் கற்பனவும் இனி அமையும்.

ஆணவமலம் சிவணிய ஆன்ம நிலையை, பொற்காசுப் புலவர் இப்படி வருணிக்கின்றார்.

***''..............செய்கை ஒன்றறியேன்***
***சிறுமை மடமை சினம் பொய் காமம்***
***விலங்குகள் வாழும் வேட்டைக் களமாய்***
***வெறியாட்டயரும் வேதனையல்லால்***
***உலைத்திடும் நெஞ்சத்து ஒளி சிறிதேனும்***
***ஒட்டுவதுண்டோ? உற்றதிங் கிருளே!''***

இவ்விருளை அருள்தான் கடிய முடியும். அருளைப் பெற்றால்தான் ''செற்றில் என்? செஞ்சாந்து அணியில் என்?'' என்று பேச முடியும். இச்சமநிலை பெற்றார் அரியதில் அரியர். அவ்வரியாரே வழிபடத் தக்கவர். ஆகவே ஷேக்ஸ்பியர் கூறுகிறார்,

"A man that fortune's buffets and rewards
Hath ta'en with equal thanks; blest are those
whose blood and judgement are so well commingled
That they are not a pipe for Fortune's finger
To sound what stop she please. Give me that man
That is not passion's slave, and I will wear him
In my heart's core; ay. in my heart of hearts."

விதி தந்த தாக்குதல்கள், மற்றவ்விதியே தந்த வெகுமதிகள் (buffets and rewards of Fortune) அனைத்துமே சரி நிகர் சமானமான உள்ளமொடு (hath taken with equal thanks) கொள்ளுமவன் இருக்குமிடம் யாதோ?

வேட்டபடி விதி ஊதும் குழலாக மாறாமல் (a pipe for Fortune's finger), உணர்வும் அறிவும் கலந்த அத்துவிதக் கலவையாய் (whose blood and judgement are so well commingled), திகழுமவன் இருக்கும் இடம் யாதோ? ராக விராகங்களுக்குக் கொத்தடிமை யாகாமல் (not passion's slave) ஒளிரும் ஒரு புருடன் இருக்குமிடம் யாதோ?

அன்னானைக் காட்டுதி. (Show me that man) என் இதயம் அவன் சிங்காதனமாம். என் உள்ளார்ந்த ஆனந்தப் பொந்திடை வைத்தவனைப் பேணுவன். I will wear him in my heart's core, ay, in my heart of hearts.

''குலக்குமரா! காடுறைப் போ'' என்று தசரதன் தன் தனயனிடம் சொன்னான்.

**''தாதை அப்பரிசு உரை செயத்**
**தாமரைக் கண்ணன்**
**காதல் உற்றிலன்; இகழ்ந்திலன்**
**'கடன் இது' என்றுணர்ந்தும்**
**'யாது கொற்றவன் ஏவியது**
**அது செயல் அன்றோ**
**நீதி எற்கு' என நினைந்தும் அப்**
**பணி தலை நின்றான்''**

**''பாதகங்கள் செய்திடினும் கொலை களவு கள்ளுப்**
**பயின்றிடினும் நெறியல்லா நெறிபயிற்றி வரினும்**
**சாதிநெறி தப்பிடினும் தவறுகள் வந்திடினும்**
**தனக்கென வோர் செயலற்றுத் தான் அதுவாய் நிற்கில்**
**நாதன் இவன் உடல் உயிராய் உண்டுறங்கி நடந்து**
**நானா போகங்களையுந் தானாகச் செய்து**
**பேதமற நின்றிவனைத் தானாக்கி விடுவன்''**

**அந்த அம்மையப்பன்.**

இதுவே வேறின்மை காணப்பெறுதல் என்று விதந்து ஓதப்படும். அணுவாகிவிட்ட ஆன்மாவிற்கு, இவ்வேறின்மையை நல்குதற்கே 'மஹத்' அருள் உள்ளம் கொண்டுள்ளது.

இதற்காக,

அவையே தானே யாய்இரு வினையின்
போக்கு வரவு புரிய -ஆணையின்
நீக்கம் இன்றி நிற்கும் அன்றே.

இங்ஙனம் ஆன்மாவோடு இறைவன் கொண்டுள்ள உறவை அத்துவிதம் என்ற சொல் கொண்டு, ஆன்றோர் துலக்கு கின்றனர். முன்னம் யாம் மொழிந்தது போல இந்த அத்துவிதம் என்ற சொல்லும் வஜ்ர சரீரம் கொண்ட ஒரு சொல்லாம். இதன் பொருளை ஷேக்ஸ்பியர் தரும் வெளிச்சத்தில் காண முனை வோம்.

''ந'' என்பதும் ''துவைதம்'' என்பதும் சேர்ந்து ''அத்வைதம்'' என்று ஆகியிருக்கிறது.

''நஞ்னுக்கு, சாமியம் - இன்மை - பேதம்- சிறுமை- இழிவு - மறுதலை, என்னும் ஆறு பொருள்கள் உண்டு.'' இது சப்தகற்பதுருமம் நுவலும் செய்தி.

சாமியம் - சாதிருசியம் என்பன ஒரு பொருட்சொற்கள். இவற்றிற்குச் சரியான தமிழ்ச்சொல் ''அன்மை'' என்பதாகும்.

மேலே கூறப்பட்ட ஆறு பொருள்களுக்குள்ளே நஞ்னுக்கு, ஏகான்ம வாதியரால் இன்மைப் பொருளும், மத்துவர்களால் பேதப் பொருளும், சிவாத்துவிதிகளாலும், சைவசித்தாந்தி களாலும் சாமியப் பொருளும் கொள்ளப் படுகின்றன. சாமியப் பொருளே அன்மைப் பொருளில் செல்வதாகும்.

''நஞி வயுக்த மந்ய சதிருசாதி கரணே
ததாஹ்யார்த்த கதி!''

என்னும் பாரிபாஷேந்துசேகர இலக்கணத்தால் இது உணரப்படுகின்றது என்பர் காசிவாசி செந்திநாத ஐயர் அவர்கள். இந்த பரிபாஷையை விளக்க வந்த ஐயர் கூறுவதாவது:

''அநசுவத்தைக் கொணர்க'' என்று தேவதத்தனுக்கு யஞ்ஞதத்தன் ஆஞ்ஞாபிக்குங்கால், தேவதத்தன் (அநசுவம்) அதாவது குதிரை அல்லாதது மண்ணாங்கட்டியுமாகலாம் என்று கொண்டு அம்மண்ணாங்கட்டியை எடுத்துக் கொடுப்பான் அல்லன். பின், குதிரை அல்லாததாயும் அதாவது குதிரையுடன் பேதப்பட்டதாயும், எனினும் குதிரை செய்யவல்ல பணி செய்ய வல்லதாயும், அந்தக் குதிரையின் தோற்ற முதலியன ஒருவாறு ஒப்பதாயும், அதாவது, அபேதமாயும் உள்ள கோவேறு கழுதையை கொணர்ந்து விடுவன் எனப் பொருள் கொள்ளப்படும்.''

இங்ஙனம் வேறாயும், வேறு அன்மையாயும் இருக்கும் அன்மைப் பொருளே சைவ சித்தாந்திகளால் அத்துவிதத்தில் உள்ள அகரத்துக்குப் பொருளாகக் கொள்ளப்படுகின்றது. மேலே கூறப்பட்ட ஆறு பொருள்களில், முதற்கண் நிற்கும் பொருள் இதுவே. சாமியம் என்றும், சாதிருசியம் என்றும், அன்மைப் பொருள் என்றும் பேசப்படும் இப்பொருளிலேயே இது விளக்கப்படுகின்றது. பதஞ்சலி மஹாபாஷ்யகாரரும் அன்மைப் பொருளையே எடுத்து ஆண்டிருக்கின்றார் என்று கூறுகிறார் ஐயர். இந்த சாமியப் பொருளே முண்டக உபநிடதத்திலும் கொள்ளப்படுகின்றது என்றும் அவர் அறிவிக்கின்றார்.

யஜுர் வேதமும், சுவேதாசுவதர உபநிடதமும், ''ஏகோ ருத்ரோ நதுவிதீயாய தஸ்து!'' (உருத்திரர் ஒருத்தரே; அவர் அத்துவிதீயராய் இருந்தார்) என்று பேசுகின்றன. மேலும், அத்துவிதம் என்ற சொல்லே பிறிது காரணம் வேண்டாமல் முதல்வன் உயிர்களோடு பிரிப்பின்றி நிற்றலை உணர்த்தி நிற்கும். இச்சொல் பிரிவு அற்றதான அரிய ஒருமையை உணர்த்தும் திறன் உடையது. இதை ''பிரிவு அரும் அத்துவிதம் ஆகும் சிறப்பினது'' என்பர் உமாபதி சிவாசாரியார்.

அத்துவிதம் என்ற சொல்லில் வருகின்ற அகரம், அன்மை-இன்மை - மறுதலை என்கின்ற மூன்று அர்த்தங்களை உணர்த்த வல்லதாகும். இதற்கு நூலாசிரியர்களே அப்பிராமணன், அமலம், அநீதி என்கிற மூன்று சொற்களை உதாகரிக்கின்றனர். இவற்றுள் அப்பிராமணன் என்னும் சொல், பிராமணன் அல்லாத ஏனையோரைக் குறிக்காது. ஆனால் பிராமணனாயிருந்தும்

பிராமணத் தன்மை இல்லாமையைக் குறிக்கும். இங்கு அதுவும் அன்மைப் பொருள் காட்டும்.

அமலம் என்ற சொல்லில் உள்ள அகரம் அடியோடு மலத்தன்மை இல்லாமையைக் குறிப்பதாகும். இங்கு அகரம் அபாவகமாம் இன்மைப் பொருளில் வந்தது. அபோசனம் என்பது உபவாசம் என்று பொருள்படும். உணவு இன்மை இங்கு பேசப்பட்டது.

அகரம் மறுதலைப் பொருளில் வரும் போது அதர்மம் என்பது தருமத்திற்கு மறுதலையாகிய பாவம் எனப் பொருள் படும். அநீதி என்பது நீதியின் மறுதலை. இதை விளக்க வந்த John H. Piat, "Theone *(அநீதி)* means righteousness and the other aniti *(அநீதி)* unrighteousness. One is the exact opposite of the other. This idea is used in English is in such words as typical and a typical where the 'a' stands for the contrary idea. Atypical is not the mere negation of typical but is a positive statement in which the presence of variant qualities is postulated".

அன்மைக்கும் ஆங்கிலத்தில் ஓர் உதாரணம் காண்போம். ந + துவைதம் அத்வைதம் ஆனாற்போலே நாமம் அநாமம் ஆயிற்று. நாமம் என்ற வடசொல்லிற்கு உரிய இலத்தீன் சொல் nomen என்பதாகும். இங்கு nomen என்பது anomen என்று ஆகும். இதன் அடியாகப் பிறந்த சொல்லே anonymous. அநாமதேயம் என்பதில் வருகின்ற அகரம் அன்மைப்பொருள் காட்டும்.

அன்மைப் பொருள் விளக்கமே இக்கட்டுரையின் நோக்கம். துவிதம் என்பது எண்ணுப்பெயர். It refers to number. துவிதம் என்னும் எண்ணுப் பெயருக்கு முன் அகரம் எய்தி, அத்துவிதம் என்று நிற்குங்கால், அது இன்மை, மறுதலைப் பொருள்களில் நிற்காமல் பொதுமையில் நிற்கும். காட்டு ஒன்று காண்பம்.

என்னிடம் இரண்டு மாங்கனிகள் இல்லை என்று நான் சொன்னால் இதற்குப் பின்வருமாறு பல பொருள்கள் கொள்ள முடியும். 1. என்னிடம் மூன்று நான்கு முதலிய அநேக மாங்கனிகள் உள. 2. என்னிடம் இருப்பது ஒரு மாங்கனியே. 3. என்னிடம்

மாங்கனி ஏதுமில்லை. அதாவது என்னிடம் ஒரு மாங்கனிகூட இல்லாததால், இரண்டு மாங்கனிகள் இல்லை.

ஆகவே, மாங்கனிகள் இரண்டு இல்லை என்றால் மாங்கனி ஒன்றுதான் என்று வரைவுபடுத்திக் கூற இடமில்லை. ஆகவேதான், நல்லசாமிப் பிள்ளை அவர்கள், "Advaitam means non-dualism and not monism" என்றார்.

எனவே, தொன்மைவாதிகள் அத்துவிதம் என்பதற்கு இன்மைப்பொருள்கூறி ஒன்று என்பதும், மத்துவர்கள் மறுதலைப் பொருள்கூறி இரண்டு என்பதும் ஒவ்வா. அத்துவிதம் என்ற சொல் மாத்திரையானே, ஒரு பொருள் என்று கொள்ளுதல் பொருத்த முடையதன்று.

தானே தன்னை ஒன்று என்று கருதவும், வேண்டுமோ? வேண்டாம். வேண்டாமையின், அவ்வாறு கருதும் பொருள் வேறு உண்டு என்று பெறப்படுகின்றது.

**''ஒன்று என்றது ஒன்றே காண்; ஒன்றே பதி, பசுவாம்**
**ஒன்று என்ற நீ பாசத்தோடு உளை காண்''**

என்பது மெய்கண்டார் அருள் வாசகம்.

கடவுளோடு ஆன்மா கொண்டுள்ள உறவு பேத, அபேத, பேதா பேதங்களில் ஒன்றாம் என்று கொள்ளுகின்றனர் சிலர்.

**மத்துவர் கொள்கை பேதம்.**
**சங்கரர் கொள்கை அபேதம்.**
**இராமாநுஜர் கொள்கை பேதாபேதம்.**
***மெய்கண்டார் கொள்கை யாது?***

**''புறச்சமயத்தவர்க்கு இருளாய், அகச்சமயத்து ஒளியாய்**
**புகல் அளவைக்கு அளவாகி பொன் பணிபோல் அபேதப்**
**பிறப்பிலதாய், இருள்வெளிபோல் பேதமும், சொல்**
**பொருள் போல்**
**பேதா பேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன**

**அறத்திறனால் விளைவதாய் உடல் உயிர், கண், அருக்கன்,**
**அறிவு ஒளி போல் பிறிவரும் அத்துவிதமாகும்**
**சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ**
**சித்தாந்தத் திறன்இங்குத் தெரிக்கல் உற்றாம்.**

சிவபிரகாசம் செப்பும் செய்தியிது.

மாயா இயந்திர தனுவினுள் இயங்குகின்ற ஆன்மா சுதந்திரஹீனன் 'அதாவது, ஒரு செயலைச் செய்வதற்கோ' அல்லது செய்யாமல் இருப்பதற்கோ, ஆன்மாவிற்குச் சுதந்திரம் இல்லை என்பதில்லை இதன் பொருள். வினைதொழில், கருமம் செய்ய, ஆன்மாவிற்குச் சுதந்திரம் உண்டு. இதை "Soul is the mistress of her ohoice" என்று ஷேக்ஸ்பியர் கூறுவார். ஆனால் வினையைச் செய்த பிறகு, வினை விளைவை புசிக்காமல் இருப்பதற்கு அதற்குச் சுதந்திரம் இல்லை.

சத்தும் அசத்தும் சிவணிய சதசத்து நிலையே ஆன்ம நிலை, இது சார்ந்ததன் வண்ணமாய் இருக்கும். பாசத்தால் பந்திக்கப் பட்டிருப்பதால், இதற்குச் சுதந்திர ஹீனம் ஏற்பட்டுள்ளது. பாசப்பட்டுக் கிடப்பதாலே ஆன்மா பசு என்று பேசப்படுகிறது. ''ஒன்றே பதி'' என்ற மெய் கண்டார், ''ஒன்று என்ற நீ பாசத்தோடு உளை காண்'' என்றும் அருளியுள்ளார். பாச நீக்கத்திற்குத் தரப்பட்டதே பதி வழிபாடு. அந்நியம் இன்மை உணர்தலே அரன் கழல் அடை'தற்கான உபாயம்.

தன்னை நேசிக்கும் பசுவை, பதியும் நேசிப்பன். நேயத்தே நிற்கும் நிலமலன் அவன். தாள் நயந்த தலைவியை தோள் நயக்கும் தலைவன் காதலிப்பன். இந்தக் காதல் இரு திறப்பட்டதாகவே இருக்கும். அன்பெனும் பிடியில் அகப்படும் மாமலையாம் இறைவனை பக்கபத்திமான் என்று பாகவதம் பேசும். இந்த நேசத்தை ஷேக்ஸ்பியர் வாசகம் கொண்டு,

"So they loved as love in twain" என்று வருணிக்கலாம்.

கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்பி, உடந்தையுடனே நின்றும்

எட்டுக் கொண்டார் தமைத் தொட்டுக் கொண்டே நின்றும்

ஆன்மா செயல்பட்டு வந்தால், சித்தமும் கரணமும் சித்திலே ஒத்துப்போம். தற்போதம் தொலைந்து, சிவபோதம் தலைப்படும். இந்நிலையை,

"So they loved as love in twain
Had the essence but in one"

என்ற ஷேக்ஸ்பியர் வாசகம் தெளிவுபடுத்தும்.

கண்டத்தைக் கொண்டு கருமம் முடித்த ஆன்மாவிற்குப் பிண்டத்தில் வேலையில்லை. அத்துவிதத் தித்திப்புக் கலப்பு அதற்குச் சித்தித்துவிடும். என்றாலும், முக்தியிலுங்கூட மும்முதல் உள என்னும் சைவ சித்தாந்தம். முக்தி நிலையிலும் பதி, பதிதான்; பசு, பசுதான். அப்படியாயின் இப்பசு- பதி கலப்பை எப்படித்தான் பேசுவது? இது அத்துவித கலப்பு என்று மட்டுமே பேசப்படும்.

அத்துவிதம் என்னும் சொல் தானே, வேறு காரணம் வேண்டாது வேறன்மையை உணர்த்தி நிற்கும். வேறன்மை does not mean non-difference; but only non-separateness. இந்நிலையை ஷேக்ஸ்பியரைப் போல் துல்லியமாக விளக்கவல்லார் யாரும் இல்லை போலும்! அவர் கூறுவதாவது

"Two distincts; division none".

திருவாளர் நல்லசாமி பிள்ளை கூறும் வாசகத்தையும் உடன் வைத்து ஓதுவோம்.

"The word (advaita) does not mean one, or non-existence of two or more, but is used to express the peculiar relation that exists between two distinct things which can become one....".

இவ்விருவர் மரபில் வருகின்ற நாம் கூறுவதாவது:—

Advaita relationship is not one of one oneness; but one of oned togetherness. It is losing oneself in a togetherness.

ஷேக்ஸ்பியர் பாஷையில் வருணிப்போம்

"Thou and I *am* one".

Advaitam postulates a unity, a union despite differences.

*பிள்ளை அவர்கள் கூறுவதாவது : —*

"Though in all these cases, an identity is perceived, a difference in substance is also felt. It is this relation which could not be easily postulated in words, but which may perhaps be conceived, and which is seen as two (Dvaitam) and at the same time as not two (Advaitam). It is this relation which is called advaitam, 'a unity in duality` and the philosophy which postulates it, the Advaita philosophy"

சைவசித்தாந்தத்தின்படி அத்துவிதம் என்பது ஓர் உறவு. ஆன்மா அத்துவிதப்பட்டிருப்பது. கேவல நிலையிலும், சகல நிலையிலும், முத்தி நிலையிலும் ஆன்மா பூண்டிருப்பது அத்துவித உறவே. கேவல, சகல நிலைகளில் ஆன்மா ஆணவ மலத்தோடு கட்டுண்டு கிடக்கும். ஆணவ மலம் என்பதை the ancestral blindness of the soul என்று வருணிக்கலாம். ஆணவ மலத்தோடு கூடியிருப்பதோ, பிரிந்திருப்பதோ ஆன்மாவின் சுதந்திரத்திற்கு விடப்பட்ட விஷயம்.Soul is the mistress of her choice. இருட்பாவையாம் ஆணவ மலத்தின் சக்தி பலதிறப்பட்டது. மாசறு காட்சி வேட்கின்ற ஆன்மாவே, இருளைக் கடக்க எண்ணம் பூண்டு செயல்படத் தொடங்கும். வள்ளுவர் பெருமானும்,

> ***"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி***
> ***மாசறு காட்சி யவர்க்கு"***

என்று அருளியுள்ளார். தவராஜ யோகியரான தாயுமானவர்.

> ***"ஆணவத்தோடு அத்துவிதம் ஆனபடி மெஞ்ஞானத்***
> ***தாணுவினோடு அத்துவித மாகுநாள் எந்நாளோ?"***

என்றார்.

தாயுமானவர் என்ற சொல்லைக் கவனியுங்கள். தாயும் ஆனவர் என்பதே அத்துவித நிலைதான்.

அத்துவிதம் என்ற சொல்லுக்குப் பொருள் ஒன்றா, இரண்டா என்றால், ஒன்று என்றோ, இரண்டு என்றோ, ஒன்றும் இரண்டும் இன்று என்றோ சொல்ல முடியாது. ஆகவேதான் ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்று மிரண்டுமாகாமல் என்றிந் நிலையை சர்வ ஜாக்ரதையுடன் பேசுகிறார் அருள்நந்தி சிவாசார்யர்.

அத்துவிதம் என்ற சொல்லை எண் என்ற சிறையில் இருத்தி வைக்க முடியாது. ஏகம், இரண்டு என்னாமல் சும்மாயிரு என்றார் ஒழிவிலொடுக்க ஆசிரியர். கேட்பான் புகில் அளவில்லை கிளக்க வேண்டா என்ற ஆளுடைய பிள்ளையார் மரபில் வந்தவர் அவர். ஆகவே ஏகம், இரண்டு என்னாமல் சும்மாயிரு என்றார் அவர்.

ஏன் அங்ஙனம் சும்மா இருத்தல் வேண்டும் என்பதற்கான காரணங்கள் ஷேக்ஸ்பியரிடம் தெரிந்து கொள்ளலாம். எண் என்ற பேச்சுக்கு இங்கு இடமில்லை என்பதே ஷேக்ஸ்பியரின் சித்தாந்தம்.

"Two distincts, division none
Number there in love was slain"

எண் என்பது இங்கு மாண்டு போகிறது; இல்லை, இல்லை, கொலையுண்டு போகிறது.

''தந்தது என் தன்னை கொண்டது உன் தன்னை''

என்பதை அடியொற்றிச் சொல்லுமா போலே, "Either was the other's mine" என்கிறார் ஷேக்ஸ்பியர்.

பதியினைப் போல், பசு, பாசங்களும் அநாதி. ஆகவே பாசத்தை அறவே ஒழித்தல் என்பது இல்லை. பாச க்ஷயமே உண்மை. பாச க்ஷயம் ஏற்பட பசுத்வம் நசுக்கப்படும். அதாவது பொருளுக்குப் பண்டு இருந்த தன்மை நசுக்கப்படுகிறது. இதை

"property was thus appalled" என்று பேசுகிறார் ஷேக்பியர். Property என்பது பொருளின் விசேஷகுணம்.

பசுபோதம் நீங்கப் பெற்ற ஆன்மா, புதிய ஆன்மா, ''இன்று புதிதாய்ப் பிறந்தோம்'' என்ற மஹாகவி பாரதியாரின் வாசகம் பொருள் பொதிந்தது. ''என்னைப் புதிய உயிராக்கி'' என்று அவர் வேண்டுவார். பழையது கழிய புதிது பிறக்கும்.

'Property was thus appalled that the self was not the same' என்பது ஷேக்ஸ்பியரின் கூற்று.

இந்த அத்துவிதம் ஒன்று என்றோ, இரண்டு என்றோ பேசப்படாது. பின் எப்படி? ஷேக்ஸ்பியர் கூறுகிறார்.

"Single nature's double name
Neither two nor one was called"

மதியில்லார் இதை ஆராயத் தலைப்பட்டால் இடருற்று, தட்டுண்டு, மாழாந்து போவர். "Reason, in itself confounded என்பதே ஷேக்ஸ்பியர் வாசகம். பதி, பசுக்கள் இரண்டாக இருந்தன. அத்து விதத்தில் இரண்டற்றநிலை. என்றாலும் பசு பதியாகிவிட வில்லை. பதி பசுவாகிவிடவில்லை. அப்படியோர் பேரதிசயக் கலப்பு.

"Reasonin itself confounded
Saw division grow together
To themselves yet either neither
Simple were so well compounded"

என்பதே ஷேக்ஸ்பியர் கண்டுணர்ந்த காட்சி.

இரண்டாக இருந்த பொருள்கள் ஒன்று போல் ஆகி விட்டன. ஒன்றுபோல் தோற்றம் என்பதே ஷேக்ஸ்பியர் தரும் குறிப்பு.

"How true a twain
Seemeth this concordant one!"

இந்தக் கலப்பே அத்துவிதக் கலப்பு.

பெத்த நிலையில் முதல்வன் உயிராய் ஒற்றுமைப்பட்டு நிற்பதும், முத்தி நிலையில் உயிர் சிவமாய், ஒற்றுமைப்பட்டு நிற்றலும் அத்துவித சம்பந்தம். இதன் நுணுக்கத்தை 'அகக்கண் ஒரு பதினாயிரம் உடையார்' என்று கவிவாணர் கோலரிட்ஜால் போற்றப்படும் ஷேக்ஸ்பியர் மிக அழகாகக் காட்டியுள்ளார். இந்த அத்துவிதக் கலப்பு காலாதீதமானது. ஆகவே, "To eternity doth rest" என்றிதை ஷேக்ஸ்பியர் விளக்குகிறார்.

பாசத் தோற்றத்துக்குத் தொடக்கம் இல்லை. என்றாலும் பாச க்ஷயத்திற்குத் தோற்றம் உண்டு. அந்த வகையில் பாசத்திற்கு முடிவு உண்டு. முக்திக்குத் தோற்றம் உண்டு. ஆனால் அதற்கு முடிவில்லை. இதை, the soul's state of bondage has no beginning; but has an end, while the soul's spiritual freedom has a definite beginning, but no end என்பார் ரமண சாஸ்திரிகள்.

ஆகவே அத்துவித முத்தி காலம் கொன்ற விருந்து காண்!

"To eternity doth rest" என்பது ஷேக்ஸ்பியரின் தரிசனம்.

சைவ சித்தாந்தம் வாழ்க!

---

## தாயுமானவர் பாடல்.

**ஒன்றிரண்டென் றுன்னா உணர்வுகொடுத் துள்ளபடி**
**என்றுமென்னை வையாய் இறையே பராபரமே.**

— *பராபரக்கண்ணி : 290*

அத்துவிதம், துவிதம் என்கின்ற பேதம் தோன்றுவ தொழித்து 'ஏகமேவாத்துவீதம்' என்னும் பேருணர்வளித்து எப்போதும் நான் ஒரே நிலை கொண்டு நிற்க நீ கிருபை வைத்தருள வேண்டும் என் இறைவனே என்றதாம்.

"property was thus appalled" ... Property

"Reasons in itself confounded
Saw division grow together
To themselves yet either neither
Simple were so well compounded

# குறள்நெறியும் அண்ணாவும்

எம்.எஸ். வேங்கடாசலம்
திருச்சி

*வள்ளுவர்செய் திருக்குறளை நன்கு உணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுஆதி ஒருகுலத்துக் கொருநீதி?*

-மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரனாரின் இந்த வைர வரிகள்கூட தேவையான தாக்கத்தை உருவாக்கிட இயலவில்லை, இருபதாம் நூற்றாண்டுத் தமிழகத்தில்! தமிழன் தன்னை மறந்த நிலையில், தன்னால் எதுவும் இயலாது என்று கைவிரிக்கும் நிலையில்- ''வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்'' என்ற உணர்வில்- இங்குள்ள சரக்கு எதுவுமே உயர்வானதல்ல, எங்கிருந்தோ இறக்குமதி ஆனவைதான். உயர்வானவை, உள்ளத்தே கொள்ளத் தகுந்தவை என்ற மாய்மால எண்ணத்தில் - உலவிவந்த காலத்தில் அவனைத் தட்டி எழுப்பிய பெருமையும் - அவனது எண்ணிறந்த இலக்கியக் கருவூலங்களை அவனுக்கு எடுத்தியம்பிய பெருமையும்- பேரறிஞர் அண்ணாவிற்கு உண்டு!

இத்தகு மறுமலர்ச்சி அந்தக் காலகட்டத்தில் தோன்றிடற்கு முக்கிய காரணம் திராவிட இயக்க வளர்ச்சியும், பேரறிஞர் அண்ணாவின் அரசியல் நுழைவும்தான். வள்ளுவரின் பெருமையைக் கூட மாற்றார்கள் - மேற்கு நாடுகளில் உள்ளவர்கள்- வெகுவாகப் பாராட்டினரே தவிர, தமிழர்கள் அந்தளவுக்கு அதன் பெருமையை உணர்ந்திட்டாரில்லை! தமிழ் படித்த பண்டிதர்களும்

பக்தி இலக்கியத்திற்குக் கொடுத்த முக்கியத்துவத்தைத் திருக்குறளுக்குத் தரவில்லை! திராவிட இயக்கத்தின் சின்னமாக விளங்கிய தந்தை பெரியாரோ தமிழிலக்கியம் எதையும் கண்டுகொள்ளவில்லை. அவரைப் பொறுத்தவரை ''தமிழே ஒரு காட்டுமிராண்டி மொழி'' என்று கூறி அதோடு விட்டுவிட்டார்.

எனவே, திருக்குறளின் மேன்மைதன்னை தமிழினம் உணர வைத்த பெருமை- இல்லந்தோறும் தமிழினத்து அறநூல் ஒலித்திடச் செய்த பெருமை- பேரறிஞர் அண்ணாவைத்தான் சாரும். திரு.வி.க. மறைமலை அடிகள், இரா.பி.சேதுபிள்ளை, கா.சு. பிள்ளை, தேவநேயப்பாவாணர் போன்றோர் இந்தத் தூய பணிக்கு அளித்திருக்கும் பங்கினைக்குறைத்து மதிப்பிடுவதற்கில்லை. எனினும் அண்ணாவின் பணி இந்த வகையில் பெரிதும் மிளிர்ந்ததற்குக் காரணம், அவரது இயக்கப் பின்னணிதான்!

திருக்குறளின் மேம்பாடுகள் பற்றி அண்ணா சொன்னார்-அதன்பின்னர் நூற்றுக்கணக்கான கழக முன்னோடிகள் சொல்லத் தொடங்கினர்—பின்னர் ஆயிரக்கணக்கான தொகண்டர்கள் கவிஞர்கள், இலக்கியவாதிகள் - அதன் பின்னர் நாடே அந்தத் திருமறையைக் கையில் எடுத்துக்கொள்ளத் தொடங்கியது! இது அண்ணா சாதித்த எண்ணிறந்த சாதனைகளில் தலையாயது என்று சொன்னால் மிகையாகாது.

அண்ணா வள்ளுவர் செய் திருக்குறளை அவனியெங்கும் பரப்பப் பாடுபட்டதற்கு உதாரணங்கள் மூன்று. ஒன்று போப் பாண்டவரைச் சந்தித்த நேரத்தில் அவருக்குத் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு ஒன்றினைப் பரிசாக அளித்தார். இரண்டாவது அமெரிக்க நாட்டினைச் சேர்ந்த யேல் பல்கலைக்கழகத்திற்குச் சென்ற நேரத்தில் அந்தப் பல்கலைக்கழக, மாணவர்கட்குத் திருக்குறளின் மேம்பாட்டினை எடுத்துரைத்தார். எல்லாவற்றிற்கும் மேலாக திருவள்ளுவர் வகுத்த நெறிமுறைகளை அவரது அரசியல் வாழ்வின் நெறி முறைகளாக அண்ணா ஏற்றுக்கொண்டார்!

''அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது'' -என்பது குறட்பா(45)

இல்வாழ்க்கையை நெறிப்படுத்துகின்ற குறட்பா இது! ஆனால் அண்ணாவைப் பொறுத்தவரை இந்த நெறியை அரசியலிலும் கடைப்பிடித்தார். அனைவரையும் ''தம்பீ! தம்பீ!'' என்று அன்பொழுக அழைத்தார். ''குடும்பப் பாச'' உணர்வினை ஊட்டினார், கழகத் தோழர்களிடையே! அரசியலில் இத்தகு பாசத்திற்கு இடமளித்த ஒரே தலைவர் அண்ணாதான் - உலக வரலாற்றிலேயே அவர் ஒருவர்தான்!

''குணம் நாடி, குற்றம் நாடி'' (504) என்று வள்ளுவர் வகுத்த நெறிமுறைக்கு இணங்க, அண்ணாவின் பொதுவாழ்வு அமைந்ததற்கு எடுத்துக்காட்டுதான் அவரைத் தாக்கிப்பேசிய ஈ.வெ.கி. சம்பத், கண்ணதாசன், ஆசைத்தம்பி ஆகியோர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட அவர் ஒப்பவில்லை என்ற உண்மை! ''அவர்கள் இன்று என்னைத் தாக்கிப் பேசுவதாலே நடவடிக்கை எடுக்கச் சொல்கிறீர்கள்! அவர்கள் என்னைப் பாராட்டியதை எண்ணிப் பார்க்கிறேன்! பாராட்டுவதற்கு இருக்கிற உரிமை, தவறு கண்டவிடத்தில் கண்டிப்பதற்கும் உண்டல்லவா?'' என்று அண்ணா வாதிட்டார். அவர்கள் மீதெல்லாம் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று எழுப்பப்பட்ட வாதத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய் வில்லை - செய்நன்றி கொன்ற மகற்கு'' என்ற குறட்பாவின்படி இந்த முடிவுகள் அமைந்தனவோ என்றுகூட எண்ணிடத் தோன்று கிறது.

அண்ணாவைப் பொறுத்தவரை, ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் முன்னணித் தலைவர்கட்கு என்ன இலக்கணமோ அதே இலக்கணம்தான் சாதாரணத் தொண்டர் தொடர்பான நடவடிக்கைகளிலும்! ''தொண்டனுக்கு நாம் என்னய்யா தருகிறோம்! வாய் வலிக்க வயிறு வலிக்க தொண்டை கிழியக் கத்துகிறான், 'தி.மு.க. வாழ்க' 'அண்ணா வாழ்க!' என்று தன்னுடைய உழைப்பைத் தருகின்றான் —வியர்வையைச் சிந்துகின்றான்! அவனுக்கென்ன மாதச் சம்பளமா தருகின்றோம்? மாதச் சம்பளம் பெறுகிற கடைசி மட்டத் தொழிலாளியின் மீது நடவடிக்கை எடுப்பதானால் கூடச் சில வரைமுறைகள், சட்டதிட்டங்கள் உண்டு! தொண்டனைப் பொறுத்தவரையும் கூட அத்தகைய வரைமுறைகளும் கட்டுப்

பாடும் தேவை'' என்று பல தடவைகளில் அண்ணா கூறியதை நான் கேட்டிருக்கின்றேன்.

## தாக்குதல் பாணங்கள்

பொதுவாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் அண்ணா சந்தித்த தாக்குதல் பாணங்கள் ஏராளம். மிகச் சிலரே அத்தகைய தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கக் கூடும்! மிகச் சிலரால் மட்டுமே அவற்றையெல்லாம் தாங்கிக் கொள்ள இயலும்!

''செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
சிவிகைக்கீழ்த் தங்கும் உலகு'' *(குறள்-389)*

மேற்சொன்ன குறட்பாவிற்கு இலக்கணமாகவே திகழ்ந்தது பேரறிஞர் அண்ணாவின் வாழ்க்கை! அரசியல் வாழ்வில் அவர் அடியெடுத்து வைத்தது முதல், இறுதிவரை அவர் சந்தித்த கேலிகள், தாக்குதல் கணைகள் ஏராளம் என்பது மட்டுமல்ல, தாக்கியோரின் எண்ணிக்கையும் மிகவும் அதிகம்- தாக்கப்பட்ட தரமும் மிகவும் தாழ்ந்தது, பற்பல தருணங்களில்!

அவருடைய பிறப்பு வளர்ப்பு முதல், அவர்தம் ஒவ்வொரு அசைவும், கேலி செய்யப்பட்டது - வேறு எவராக இருப்பினும் வேண்டாம் இந்த அரசியல் என்று ஒதுங்கியே இருப்பர்- துறவறம் பூண்டிருப்பர், பொதுவாழ்விலிருந்தே! ஆனால் அனைத்தையும் அண்ணா தாங்கிக் கொண்டார்! தான் தாங்கிக் கொண்டது மட்டுமன்றி, தம்பிமார்களுக்கும் அந்தத் தாரக மந்திரத்தை சொல்லிக் கொடுத்தார். ''எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'' என்று.

தூத்துக்குடியில் நடைபெற்ற திராவிடர் கழக மாநாட்டிற்கு அண்ணா செல்லவில்லை என்பதற்காக அவர்மீது ஏவப்பட்ட அவதூறுக் கணைகள் பற்பல! இதுதான் அத்தகு கணைகளின் துவக்கக் கட்டமேகூட! அப்படி அவரைத் தூற்றினால்தான் தங்களுக்குத் தகுதியான ஓரிடம் பெரியாரது நெஞ்சத்தில் கிடைத்திடும் என்ற எண்ணத்தில் போட்டி போட்டுக்கொண்டு இந்தத் ''தூய'' பணியில் ஈடுபட்டோர் பலருண்டு! பின்னர் அவர்

களில் பலரேகூடத் தமது செய்கைக்காக வருந்தி, வேதனைப்பட்ட தருணங்களும் உண்டு.

பிறகு, பெரியார் மணியம்மை திருமண ''ஏற்பாடு'' அடுத்த கட்டம்! அது ''பொருந்தாத் திருமணம் மட்டுமல்ல - புதிய மகுடாபிஷேகமும் கூட'' என்று அண்ணா அறிவித்தார். அதன் தொடர்பாக ''கண்ணீர் சிந்துவோர் பட்டியல்'' வெளியிடப் பட்டது, ''திராவிடநாடு'' இதழில்! விளைவு? ''கண்ணீர்த் துளிகள்'' என்று கேலி பேசப்பட்டனர், அண்ணாவும் அவருடைய கருத்தை ஏற்றுக் கொண்ட முன்னணியினரும், அதற்குப் பதில் சொல்லி காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கவில்லை அண்ணா அவர்கள். ''ஆம்! நாங்கள் கண்ணீர்த் துளிகள்தாம்'' என்று தெளிவாக ஒப்புக் கொண்டார். தனியானதொரு இயக்கம் கண்டார், ''திராவிட முன்னேற்றக் கழகம்'' என்னும் பெயரில். என்றாலும் ''இது, தந்தை பெரியாருக்கோ, அவர் தலைமையில் இயங்கி வரும் திராவிடர் கழகத்திற்கோ எதிரான இயக்கமல்ல - திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் இரட்டைக் குழல் துப்பாக்கி'' என்றார்.

அப்போதும், தன்னைத் தாக்கிப் பேசிய தந்தை பெரியாரை எந்தத் தருணத்திலும் அண்ணா தாக்கிப் பேசவில்லை என்பது மட்டுமல்ல! ''நான் கண்டதும் கொண்டதும் ஒரே தலைவர்தான்- அது தந்தை பெரியார்தான்'' என்று தெளிவாகக் கூறினார். அது உண்மை என்று நடைமுறையிலும் காட்டினார். 1967-இல் தி.மு.கழகத்திற்குச் சட்டமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை கிடைத்து, அண்ணா தலைமையில் அமைச்சரவை பொறுப்பேற்ற பின்னர், தந்தை பெரியாரை ஓடோடிச் சென்று, அவர்தம் நல்வாழ்த்துக்களை வேண்டிப்பெற்றார். ''நீங்கள் என்னைக் கூச்சப்பட வைத்துவிட்டீர்கள்'' என்று கூறி, மிகவும் நெகிழ்ந்துபோனார் தந்தை பெரியார் அவர்கள். ''இந்த அமைச்சரவையே தந்தை பெரியாருக்கு நாங்கள் தந்துள்ள காணிக்கை'' என்று எடுத்தியம்பி இறும்பூது எய்தினார் அண்ணா அவர்கள் ''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்'' என்னும் குறட்பாவிற்கு இலக்கணமாகவும் எடுத்துக் காட்டாகவும் விளங்கியது அண்ணாவின் இந்த நடவடிக்கை!

பெரியார் மட்டுமா தாக்கிப் பேசினார்? பொதுவுடைமைக் கட்சியினர் எவ்வளவு தூரம் அவரைத் தாக்கியும் தரக்குறைவாகவும் பேசினார்கள்! காங்கிரசுக் கட்சி என்ன செய்தது? அண்ணாவையும் தி.மு.க.வையும் தாக்கிப் பேசுவதற்கென்றே, ஒரு பெரும் பேச்சாளர் பட்டாளத்தையே உருவாக்கியது! அவர்களெல்லாம் மேடைகளில் நல்லுரைகள் பொழியவில்லை - நாராசமென வசை மாரி பொழிந்தனர். எதைப் பற்றியும் கவலைப்படவில்லை அண்ணா அவர்கள் - ''அது போன்ற நாலாந்தரப் பேச்சாளர்களுக்குப் பதில் சொல்லி உங்களது பொன்னான நேரத்தை வீணாக்காதீர்கள்!'' என்று தனது தம்பிமார்களுக்கு அறிவுரையும் நல்கினார்.

தி.மு.கழகம் ஆட்சிபீடத்தில் அமர்ந்தபின்னர் என்ன நடந்தது? தலையில் முக்காடு இட்ட வண்ணம் காங்கிரசார் ஒரு ஊர்வலத்தை நடத்தினார்கள், அண்ணாவைக் கேலி செய்கின்ற வகையில்! ஆனால் அதைப் பற்றிக் கவலைப்படாமல் ''நான் இறந்தபின்னர் அதற்காக எத்தனைப்பேர் வருந்துவார்கள் என்று புரிந்துகொண்டேன். மகிழ்ச்சி''. என்று பதிலளித்து, பிரச்சனையை முடித்துவிட்டார். அதுமட்டுமா? அவரது நண்பர் வினாயகம் அவர்களே ''அண்ணா! உங்களது நாட்கள் எண்ணப்பட்டுவிட்டன! (Anna Your days are numbered) என்று சட்டமன்றத்தில் கூறினார்! அண்ணா அவர்கள் புற்றுநோயின் பிடியிலிருந்த நேரம் அது! எனவே, அதை ஒரு அமங்கலச் சொல்லாகக் கருதினர் பலர்! அந்தச் சொல்லை அந்தத் தருணத்தில் அவர் பயன்படுத்தியிருக்கவே கூடாது என்று எண்ணியவர்களும், வெளிப்படையாகக் கூறியோரும் பற்பலர், அவர்தம் அணியிலே கூட!

என்றாலும் இதற்குச் சற்றும் தயங்காமல் அண்ணா சிரித்துக் கொண்டே கூறினார். ''ஆனால் மிகவும் எச்சரிக்கையோடு நான் அடியெடுத்து வைக்கின்றேன்!'' ("But my steps are measured)" என்றார். வினாயகம் எழுப்பிய கேள்விக்கு அரசியல் ரீதியாக உட்பொருள் உண்டு — அதே உட்பொருள் அண்ணா இறுத்த பதிலுக்கும் உண்டு.

சுயமரியாதைத் திருமணத்தைச் சட்டப்படி செல்லுபடி ஆகச் செய்தல்- இந்தி ஆதிக்கத்துக்கு இடம் கொடுக்கமாட்டோம்

என்னும் சூளுரை - நமது மாநிலத்துக்குத் ''தமிழ்நாடு'' என்று பெயர் சூட்டுதல் அனைத்தையும் காங்கிரசார் ஏற்றுக்கொள்ளும் நிலையில் அப்போது இல்லை. ''எனவே, அண்ணா அவர்களே உங்களது ஆட்சி எந்த நேரத்திலும் கலைக்கப்படக்கூடும்'' என்று அவர் விடுத்த மறைமுக எச்சரிக்கையாகக்கூட இதைக் கொள்ள லாம். ''அப்படி நடக்கின்ற சூழ்நிலையை நான் உருவாக்கிட மாட்டேன். மிகவும் எச்சரிக்கையோடுதான் இந்தப் பிரச்சனை களில் நடைபோட்டு வருகின்றேன்'' என்று மறைமுகமாக அண்ணா பதிலிறுத்திருக்கிறார் — இதுதான் உண்மை! ''செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்'' என்று அழைக்கப்படுவ தற்கான பண்புகள் அனைத்தும் அண்ணாவிடம் அமைந்திருந்தன என்பதற்கு, நல்லதோர் எடுத்துக்காட்டாக வேறெந்த நிகழ்ச்சி அமைந்திட இயலும்?

## மாற்றார்கள் தூற்றியபோதும்

**இனிய உளவாக இன்னாத கூறல்**
**கனியிருப்பக் காய்கவர்ந் தற்று** *(குறள்-100)*

இந்தக் குறள் காட்டும் நெறிதான் தன்னுடைய உரை களிலும் எழுத்துக்களிலும் கையாண்ட நெறி. மாற்றார் எவ்வளவு தான் தூற்றினாலும் இந்த நெறியிலிருந்து அண்ணா பிறழ்ந்த தில்லை!

பண்டித நேரு அவர்கள் தந்தை பெரியார் உட்பட தென்னகத் தலைவர்களையும், திராவிட இயக்கத்தையும், தரக்குறைவாக ஓரிரு தருணங்களில் பேசியதை நாட்றியும். அதைக் கண்டிக்கின்ற வகையில் ஒரு மாபெரும் போராட் டத்தையே தி.மு.க. நடத்த நேர்ந்தது. எனினும் எந்தத் தருணத் திலும் பண்டித நேரு அவர்களை இழித்தோ பழித்தோ அண்ணா பேசியதே இல்லை. அவரையும் தன்னையும் ஒப்பிட்டுக் கொண்டார். 1957-இல் நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது! அப்போதும் ''அவர் கட்டி முடிக்கப்பட்ட கோபுரம் — நான் கொட்டிக் கிடக்கும் செங்கல்!'' என்று குறிப்பிட்டாரே தவிர, தரம் தாழ்ந்து பேச வில்லை. கனியிருப்பக் காய் கவர்தலை எப்போதும் விரும்பிய தில்லை அவர்.

அதே போன்று இந்திராகாந்தி அம்மையாரும் ஒரு தடவை பேசியபின்னர் அண்ணா கடற்கரை கூட்டத்தில் கூறிய பதில் என்ன தெரியுமா? ''நான் அவரைத் தாயே என்கிறேன் - அவர் என்னை நாயே என்கிறார்!'' என்பதுதான் அண்ணாவின் பதில். எவ்வளவு பெருந்தன்மை! பண்டித நேருவோடு தன்னை ஒப்பிட்டுக் கூறிய விதம், தன்னடக்கத்துக்கு அடையாளம் — இந்திரா அம்மை யாருக்கு அவர் இறுத்த பதில் பொறுமையின் சிகரமென்று அவரைக் காட்டுகின்ற நிகழ்ச்சி!

அடுத்து சி. சுப்பிரமணியம் அவர்கள். அண்ணாவைத் தாக்கிப் பேசுவதில் அவருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி! அப்படிப் பேசிப் பேசியே தமிழகத்து அரசியலில் தனக்கு நிலையான இடத்தைப் பெற முயல்கிறார் என்று பலதடவைகளில் அண்ணா சுட்டிக் காட்டியும் கேலிபேசியும் இருக்கிறார். அப்படியொரு தருணத்தில், தம்பிக்கு தீட்டிய கடிதத்தில் அவரைப்பற்றி அண்ணா குறிப்பிட்டார். ''தம்பி! அவர் நெளியத் தெரிந்தவர்?'' என்று! எவ்வளவு உட்பொருள் உண்டு இந்தச் சொற்றொடருக்கு! ''வளைந்து நெளிந்து, குனிந்து, கூழைக்கும்பிடு போட்டு'' என்ற சொற்களிலுள்ள அனைத்துப் பொருளும் அண்ணா பயன்படுத்திய சொற்றொடரில் உள்ளது! அதுமட்டுமா? நெளிதல் என்னும் பண்பு புழுக்களுக்கு உண்டு. அந்தப் புழுக்களைப் போல் இவரும் முதுகெலும்பு அற்றவர் என்றும் வைத்துக் கொள்ளலாம்! நெளியும் பண்பும் திறமையும் நச்சரவுகளுக்கும் உண்டு அவற்றைப் போன்ற நச்சுத் தன்மை இருக்கிறது இவர்தம் உள்ளத்தில் என்றும் கொள்ள லாம். இவ்வளவையும் எவ்வளவு நளினமாகக் கூறிவிட்டார் அண்ணா! வியக்க வைக்கின்றன இந்தச் சொற்றொடர்கள் அனைத்தும்!

## உள்ளத்தால் பொய்யாதவர்

அண்ணா ஒரு உண்மையான ஜனநாயகவாதி. மக்களாட்சி யில் நம்பிக்கை வைத்த அதே நேரத்தில், மக்களாட்சியின் அடித் தளமாக விளங்கும் மக்கள்மீது, அளவு கடந்த பற்றுதலையும், நம்பிக்கையும் வைத்திருந்தார். ''கழகத்தை வளர்த்தேன் — மக்கள் கையில் கொடுத்துவிட்டேன் — இனி மக்கள் அதைப் பார்த்துக் கொள்வார்கள்'' என்று குறிப்பிட்டுள்ளார். பல தருணங்களில் அந்தளவு நம்பிக்கை மக்களிடம் — அசைக்கமுடியாத நம்பிக்கை!

அவர்தம் உள்ளங்களில் இடம் கிடைக்கின்ற வகையில் இடையறாமல் பொதுப்பணி ஆற்ற வேண்டும் என்பதுதான், அவர் கையாண்ட வழிமுறை! ''ஐக்கிய நாடுகள் சபையிலே, இடம் கிடைப்பதாக இருந்தாலும், அதைவிட உங்கள் உள்ளத்தில் கிடைக்கின்ற இடத்தைப் பெரிதாக மதிக்கின்றேன்'' — இது அண்ணா அவர்கள் அடிக்கடி வெளியிட்ட தெளிவான அறிவிப்பு உளப் பூர்வமான அறிவிப்பு!

***''உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்***
***உள்ளத்துள் எல்லாம் உளன்''*** *(குறள். 294)*

இந்தக் குறட்பாவிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் அண்ணல் காந்தி அவர்கள்! அதேபோன்ற எடுத்துக்காட்டுதான், ''தென்னகத்து காந்தி'' என்றழைக்கப்படும் அறிஞர் அண்ணா அவர்கள்.

உலகத்தில் வேறெந்தத் தலைவனுடைய இறுதி ஊர்வலத் திற்கும் இத்தனை இலட்சம் மக்கள் திரண்டு வந்ததில்லையென்று தெளிவாக எடுத்துக்கூறுகிறது, கின்னஸ் புத்தகம் — எந்தத் துறை யானாலும் உலகளாவிய நிலையில் முதல்நிலை பெற்றோரின் பட்டியலை உள்ளடக்கிய நூல் — (Guiness Book of World Records). இதன் வாயிலாக அண்ணா தான் உலக அரங்கில் உயர்ந்தது மட்டு மன்றி, ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தையே உயர்த்தி, உன்னத மானதோர் இடத்தில் அமரவைத்துள்ளார்! வாழ்க அண்ணாவின் புகழ்!